கொம்பறை



11805
PR

வன்னி விழா 2001 ஆண்டு மலர்

சிவாகமக் கிரியாபீடம்



ஆகமவிதிப்படி இந்துமத கிரிகைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கும் தோஷ நிவர்த்தி ஹோமங்கள் செய்வதற்கும் மற்றும் ஜனன ஜாதகம் கணித்தல், விவாஹ பொருத்தம் பார்த்தல் அத்துடன் திருமணத்திற்கும் தேவையான அனைத்து ஒழுங்குகளையும் பெற்றுக் கொள்ளவும் நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டியது.

சிவாகமக் கிரியாபீடம்

சிவஸ்ரீ ச.கு. ஸ்ரீதரக் குருக்கள் (கண்ணன் குருக்கள்)

குமாரபுரம் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆதீன குரு

திருமணப் பதிவாளர்

5 GREEN LEAF TERRACE
SCARBOROUGH, ON
M1B 4J6

(416) 724-7480

கொம்பறை

வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையம் - கனடா

நடாந்த வெளியீடு மலர்-5 இதழ்-1000 நவம்பர் 03, 2001.

எம்மினம் விடிவுபெற இம்மலர்

சமர்ப்பணம்

கொம்பறை மலர்
வாசகர்களை அன்போடு வரவேற்கின்றோம்.

ஆசிரியர் குழு:~

திரு ச. இராசேஸ்வரன் **BA (Hons) ,MCSE.**
மலர் ஒருங்கிணைப்பு, தட்டச்சு, பக்க வடிவமைப்பு, விளம்பர ஒருங்கிணைப்பு.

திரு சி. யோகராசன் **MCSE.**
மலர் ஒருங்கிணைப்பு, தட்டச்சு, பக்க வடிவமைப்பு, விளம்பர ஒருங்கிணைப்பு.

திரு சே. சிவாசீலன் **Bsc Eng.**
மலர் ஒருங்கிணைப்பு, தட்டச்சு, பக்க வடிவமைப்பு, விளம்பர ஒருங்கிணைப்பு.

திரு இ. தங்கேஸ்வரன்.
விடயதானச்சேகரிப்பு, பிரதி சரிசெய்தல்.

திரு சி. சிவலோகநாதன்.
விடயதானச்சேகரிப்பு, பிரதி சரிசெய்தல்.

அட்டைப்பட ஓவியம்:~

ஓவியக் கலைவாருதி திரு யே. மரியநாயகம்.

மலர்வெளியீட்டுத் தொடர்புகட்கு:~

மின் அஞ்சல்- vannitamil2001@hotmail.com

தொலைபேசி இல- (416) 291-4473 (905) 474-1307
(416) 421-0073 (416) 757-0333

வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையம்-கனடா.

VANNI TAMIL COMMUNITY AND CULTURAL CENTER CANADA.

இலாப நோக்கற்ற அமைப்பு - Non profitable Organization – Regis # 1333183
#2 Sirlou Drive, Unit 8, Brampton, ON, L6Y 5A8, Canada.

தலைவர்:
திரு பெ. வி. கெனடி
(905) 755-9292
செயலாளர்:
திரு ச. கேதீஸ்வரன்
(905) 456-9181
பொருளாளர்:
திரு வே. கணேசலிங்கம்
(905) 294-1520
துணைத் தலைவர்:
திரு க. பரமானந்தம்

துணைச் செயலாளர்:
திரு பா. நித்தியானந்தம்

நிர்வாக சபை
உறுப்பினர்கள்:

திரு க.தமிழ்ச்செல்வன்
திரு த.பாலசுப்பிரமணியம்
திரு சி.யோகராசன்
திரு கு.உதயகுமார்
திரு இ.தங்கேஸ்வரன்
திரு ச.இராசேஸ்வரன்
திரு எம்.சேவியர்
திரு க.பாலசிங்கம்
திரு ஐ.நாகராசா
திரு க.தில்லைநாதன்
திரு கா.யோகநாதன்
திரு க.பாலமனோகரன்
திரு சி.சிவலோகநாதன்
திரு தி.செல்வேந்திரராசா
திரு கே.தேவராஜ்

காப்பாளர்கள்:
வண!ச.ஸ்ரீதரக்குருக்கள்
திருமதி ஜெயா இன்பநாயகம்
திரு. பி.சூசைதாசன்
திரு. த.சிவபாலு
திரு யா.மரியநாயகம்
திரு இ.சிவராசா

கணக்காய்வாளர்கள்:
திரு. க. தவசீலன்
திரு க. அம்பலவாணர்

"வேற்றுமை களைந்து ஒற்றுமை ஓங்கி
உண்மையாய் உழைப்போம் வாரீர் இன்றே"

என்ற எம் உண்மைத் தத்துவத்திற்கமைய நாம் யாவரும் ஒன்றுபட்டு உழைப்போமாயின் உயர்வே நிட்சயம் கிட்டும்.

வன்னியில் பிறந்து அதனது வளங்களைப் பயன்படுத்தி அம் மண்ணிலேயே வளர்ந்து தம் வாழ்வை வளமாக்கியவர்கள் பலர் கனடாவில் வாழும் இவ்வேளையில் வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையத்தில் அங்கத்தவராக இணையாமலும் கொம்பறை மலரினைக் கண்ணால் காணாமல் இருப்பதும் அமையத்தின் மீது காழ்ப்புணர்ச்சி கொள்வதும் பெருமையானது என எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களுள்ளும் நாம் பிறந்த மண்ணிற்கு, எமது இனத்திற்கு எவ்வாறாக உதவி செய்யலாம் எனத் துடிப்பவர்கள் அமையத்தில் இணைந்து பல்வேறு செயற்திட்டங்களிலும் உதவுவதற்கு முன்வந்து கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறாக அமையத்தில் உண்மையான பொது நோக்குடன் அதனது முன்னேற்றத் திற்கும் எம்மக்களின் முன்னேற்றத்திற்குமாக உழைப்போமாயின், சரியானவற்றைச் செய்வதற்குச் சிந்தித்தலும் ஆலோசித்தலும் சிக்கனமான முறையில் அமையத்தினை இயக்கிச் செல்வதற்கும் பலமான அத்திவாரம் அமைக்கப்படும் என்பது திண்ணம்.

"ஒன்றுபட்டுளைப்போம் உயர்வினைக் கொடுப்போம்
வறுமைகள் நீக்குவோம் வளமுடைமுடை
மாணவராக்குவோம்."

நிர்வாகசபை
வ.த.ச.க.அமையம்
கனடா.
2001/2002

மாவீரன் குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியன்

கி. பி. 1777 - கி. பி. 1811

கற்சிலைமடுவில் அமைந்துள்ள கல்வெட்டு



பண்டாரவன்னியன் கொடிக்கீதம்

வீரந்திகழ் கொடி வெஞ்சமர் வாட் கொடி
வெற்றி மணிக் கொடியே!
பாரிலுயர் மன்னன் பண்டாரவன்னியன்
பண்பு நிறைக் கொடியே! உயர் பண்பு
நிறைக்கொடியே!

மங்கல மஞ்சள் நிறத்திரு வாளுடன்
மாண்பு பெறப் பறக்கும்
செங்கதிரோன் ஒளி வீசிய செந்தமிழ்
வீர இசை பரப்பும் தமிழ் வீர இசை பரப்பும்!

மேற்றிசை நாட்டின வெள்ளையர் வந்திங்கு
மேவு வாணிபம் செய்தனரே – அவர்
பார்த்துப் பயந்து நடுங்கியே ஓடும்
மணிக் கொடி வாழியவே மணிக் கொடி வாழியவே!

ஆயிரம் மாயிரம் வன்னியின் வீரர்கள்
அடிதனில் வந்து நின்றே
தாயின் மணிக் கொடி தனை வணங்கிடும்
தனயர்கள் வாழியவே! தனயர்கள் வாழியவே!

கொம்பறை வாழியவே!

வன்னி மண்ணின் வசந்தத்தை வந்த மண்ணில் புகழ்பாட
வாடா மலர்போல் மலர்ந்திட்ட கொம்பறையே நீ வாழ்க!

வெள்ளையனை விரட்டிடவே வீரமுடன் போரிட்டு
பண்புடனே ஆட்சிசெய்த பண்டார வன்னியனின்
நினைவதனைப் பறைசாற்ற வன்னிவிழா மலராக
வந்துதித்த வட்டக் கொம்பறையே நீ வாழ்க!

அழகான ஆலயங்கள் ஆடும் மயிலினங்கள்
பாடிடும் பறவையினம் அறுசுவை உணவுகளும்
இத்தனை சிறப்பதின் வளமான வன்னிதனை
மனத்திரையில் ஓடவைத்த கொம்பறையே நீ வாழ்க!

வளமான கனடாவில் வாழ்கின்ற வன்னியர்கள்
தம்மண் சுகந்தத்தை முக்கலை வடிவமாய்
தருகின்ற விழாவினில் மலரும் கைநூல்தான்
கதைகள் பல சொன்ன கொம்பறையே நீ வாழ்க!

உழவர் உழத்தியர் உழுதுண்டு வாழ்ந்திட்ட
வன்னி மண்ணின் தானியக் கழஞ்சியமான
கொம்பறையின் நாமத்தை உலகறிய வைத்திட்ட
வன்னித் தமிழ்க் கலாச்சார அமையமே நீ வாழ்க!

நெடுங்கேணியூர்சித்தர்

வன்னியதன் புகழ்பாட
என்றென்றும் வந்துவிடு கொம்பறையே

தாவடிக்குடில் கட்டி தறைகளிலே தாம் கிடந்து
வக்கடவை உமை மிதித்து-வயல்களுக்கு நீர் மறித்து
தாம் வளர்த்த பயிர்தனிலே தங்கமென கதிரறுத்து
உப்பட்டி தனைக் கூட்டி மாவக்கை போராக்கி
கட்டுக்கட்டாய் களத்தினிற்கே கெண்டு வந்து
பல நடையன் தனைக் கட்டி பொலி அடித்து
கட்டுமாறு தான் சமைச்சு கூழாங்கல் போக்கியபின்
முற்றம் கொண்டு பொலி துாற்றி பதர் நீக்கிப் பக்குவமாய்
குல்லங்கள் தனைக் கொண்டே பெருவாயன் தனில் நிரப்பி
மரக்காலால் அளந்தளந்து கொம்பறையில் நெல்குவித்தார்
வல்லமை மிகு வன்னியரே.

அன்னியரின் ஆட்சிக்கு அடிபணிய மறுத்துனின்று
கடும் போர் பூண்ட அடங்கா பற்றாண்ட பண்டாரவன்னியனும்
கொண்டவனின் துயர் தீர்க்க ஆனைதனை அடக்கி வந்த
அரியான் பொய்கை தந்த அரியாத்தை நாச்சியாரும்
வன்னி மண்ணில் உதித்தவர்தான்
இன்னும் பல இலக்கியங்கள் இம்மண்ணின் புகழ் கூறும்

வன்னியரென சொன்னாலே வல்லமையுடையோரென்று பொருள்
வன்னி யென்று சொன்னாலே வளம் கொழிக்கும் நாடென்றே கொள்
வன்னியரின் புகழ் பரப்ப இன்று வந்திட்ட கொம்பறையே
வன்னியதன் புகழ்பாட என்றென்றும் வந்துவிடு கொம்பறையே.

செல்லத்துரை வேதநாதன்.
பொருளாளர்
மு வித்தியானந்தக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
வெளிமாவட்டக்கிளை

ஆசிச்செய்தி....

தமிழீழத்தின் தானியக்களஞ்சியங்களிலொன்று வன்னிப்பெருநிலம், யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குத் தெற்கே விரிந்து பரந்திருக்கும் இந் நிலப்பரப்பு ஈழத்தமிழரின் தன்மானத்தின் காவல் அரண் என்ற தனிப்பெருமை உடையது. ஐரோப்பியர் ஆட்சிக்காலத்திலும் அது இப் பெருமையைப் பேணிநின்றது. இன்று தென்னிலங்கை அதிகார வர்க்கத்திற்கெதிராகவும் இப்பெருமையை அது பேணி நிற்கின்றது.

இம் மண்ணின் மைந்தர்கள் தாம் புலம்பெயர்ந்துறையும் நாடுகளில் தமது மேற்படி மரபுசார் பெருமையைப் பேணி நிற்பதை நினைக்கும்போது இம் மண்ணைச் சார்ந்தவன் என்ற வகையில் நான் மிகவும் மன நிறைவடைகிறேன்: பெருமிதம் கொள்கிறேன்.

வன்னிமண்ணின் தனி அடையாளங்களைப் பதிவுசெய்து பேணிக்கொள்ளும் நோக்கில் 'கொம்பறை' இதழ் கடந்த சில ஆண்டுகளாக ஆற்றிவரும் பணியை அறிவேன். இப்பணி மேலும் செழுமையுடன் தொடரவேண்டும் என விரும்புகின்றேன். கனடிய மண்ணிற் கால்கொண்டுள்ள இந்தப் பண்பாட்டுப் பதிவு முயற்சி 'கொம்பறை இதழ்' அனைத்துலக வன்னித்தமிழரையும் இணைத்த செயற்பாடாக உள்ளமை வரவேற்கத்தக்க ஒரு அம்சமாகும். இம் முயற்சி வாழ்க வளர்க.

நா.சுப்பிரமணியன்
பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

ஆசிச்செய்தி.....

2001ம் ஆண்டுக் கொம்பறை மலருக்கு வாழ்த்துக் கூறி ஆசிச் செய்தி அனுப்புவதில் அடியேன் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். அண்மையிற் கனடாவிற்குச் சமூகமளித்த நான், வன்னித் தமிழர்கள் பரவலாக இங்கு வசிப்பதையும் அவர்கள் ஒன்று கூடி விளையாட்டுப் போட்டிகள், விருந்துகள், தமிழ் அறிவுப் போட்டிகள், கலைவிழாக்கள் நடாத்துவதுடன் இவற்றின் பதிவேடாகவும் மேலும் வன்னி பற்றிய பழைய, புதிய காலச் சரித்திரங்கள், கலாச்சாரங்கள், பண்பாடுகள், வீரதீரங்கள், சுதந்திர வாழ்வு, புராதன ஆலயங்கள் பற்றிப் பலராலும் எழுதப்படும் ஆராய்ச்சிக் கட்டுரைகள், இடம் பெயர்ந்து வாழும் மக்களின் பாதிப்புக்கள், அவர்களுக்கு முன்னேற்றப் பாதைகாட்டும் கட்டுரைகளும், தமிழரின் தொன்மை, இலக்கிய வளர்ச்சி, நாட்டார் பாடற் புதையல்கள், வன்னி மன்னர்களின் சரித்திர வரலாறுகள் முதலிய பல உபயோகமான ஆராய்ச்சிக் கட்டுரைகள் பதியப்படுகின்ற கொம்பறை மலர்கள் பல படித்து அகமகிழ்ந்தேன்.

இந்தக் கொம்பறை மலரானது வன்னிப் பகுதிக்கும் வினியோகிக்கப் படுமாயின் மிகவும் நன்மை பயப்பதாக அமையும். அத்தோடு இலவசமாக வழங்கப்படும் இம்மலரைத் பெறுமதிமிக்க கொடுப்பனவுகளைப் பங்களிப்புச் செய்வோருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் மிகவும் சிறப்பானதாக அமையும்.

தற்போது வன்னிப் பகுதியின் முழுப்படியான நோக்குள்ள ஆராய்ச்சிகள், தகவல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. எதிர்வரும் காலங்களில் பல்வேறு பகுதிகளிலும் இருந்து விஷயங்கள் இடம்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் அவற்றை வழங்குவோரது எண்ணிக்கை அதிகரிக்கலாமென அபிப்பிராயப் படுகின்றேன். மேலும் மாணவர் பகுதி போன்றவையையும் சேர்த்துக் கொண்டால் வருங்காலச் சந்ததியினர் தமிழறிய தேடும் ஓர் ஏடாக இது மாற்றமடையும்.

இவ் அமையமானது வன்னிப் பகுதி ஏழை மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு உதவும் திட்டத்தினை வகுத்துச் செயற்படுத்தி வருவதனை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அதேநேரத்தில் மன்னாரைச் சேர்ந்த முன்னை நாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. பி. எஸ். சூசைதாசன் அவர்கள் வன்னி அமையத்தில் அதனது காப்பாளராக இருந்து பல நிகழ்வுகளிலும் தலைமை இடத்தில் கௌரவிக்கப்படுவதும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

மிகவும் ஊக்கத்துடனும் ஆர்வத்துடனும் தமது சிரமத்தையும் நேரச் செலவையும் பொருட்படுத்தாது அரும் பெரும் சேவை செய்கின்ற மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும் நிர்வாகசபையினர், காப்பாளர்கள், கணக்காய்வாளர்கள் ஆகியோரதும் சேவைகளைப் பாராட்டுவதுடன் மலர் வெளியீடும், வன்னிவிழா 2001ம் சிறப்புற அமைய மனம் திறந்து வாழ்த்துகின்றேன்.

மேலும் இவ் அமையமானது நற்பணிகள் பல செய்து வன்னியின் சிறப்பு வளர வேண்டுமெனப் பலமுறை வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

திரு. ச. முத்தையா.
ஓய்வு பெற்ற கனிஷ்ட அதிபர்.
வித்தியானந்தக் கல்லூரி.

மு/மல்லாவி மத்திய கல்லூரி
M/ MALLAVI CENTRAL COLLEGE

MU/MALLAVI CENTRAL COLLEGE

Yogapuram,
யோகபுரம்,
Sri Lanka,
இலங்கை

15.09.2001

கொம்பறை - 2001

ஆசிச்செய்தி -

"காலத்தாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

என்னும் மறை மொழிக்கேற்ப கடல்கடந்த தேசத்திலும் தாயக மண்ணையும் நம் உறவுகளையும் மறவாது பணியாற்றுகின்றது, வன்னித்தமிழ்ச் சமூக கலாச்சார அமையம். தேர்ந்து வாழ்ந்த தமிழன், இன்று ஊரிழந்து அகதியாய், நிர்க்கதியாய் கேட்பாரற்று அலையும் இக் காலகட்டத்தில் பணிபுரிதல் அதிலும் வறிய சிறார்களின் கல்விக் கண் திறக்கும் கல்விப்பணி புரிதல் விதந்துரைக்கத்தக்கது, மனமுவந்து போற்றுதற்குரியது.

செயற்கரிய செய்யும் வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையமே நின் பணி சிறக்க, எம் கல்லூரி தன் ஆசியினைத் தெரிவிக்கிறது.

"நன்றி"

அதிபர்

திருமதி. கோ. தேவராசா
அதிபர்,
மு/ மல்லாவி மத்தியகல்லூரி

மன்/சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி, மன்னார்.
(தேசிய பாடசாலை)

MN/Sithyvinayakar Hindu College, Mannar.
(National School)

☎: 023-32321 Date: 07.08.2001

<u>வாழ்த்துச் செய்தி.</u>

" உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு "

என்ற வள்ளுவனின் வாசகத்தைத் தங்களின் தார்மிக மந்திரமாகக் கொண்டு இலங்கையில் நடைபெறும் போர் அனர்த்தங்களினால்த் தங்களது பெற்றோரை, உறவுகளை இழந்து நிர்க்கதியாகிநிற்கும் குழந்தைகளுக்குக் கல்விச் செல்வத்தை அளித்துவரும் வன்னித் தமிழ் கலாச்சார ஒன்றியத்திற்கு எமது வணக்கங்களும் வாழ்த்துக்களும்.

தம்மிடமுள்ள சகல செல்வங்களையும் இழந்து தவிக்கும் எமது கல்லூரி மாண வர்களுக்கு தாங்கள் வழங்கி வரும் கல்விசார் உதவிகள் என்றும் தங்களது சேவையை உலகில் உயர்த்தும். கதியற்ற எமது குழந்தைகளுக்கு நல்ல எதிர் காலத்தை அளிக்கத் தங்கள் கழகம் எடுத்துவரும் முயற்சிக்கு என்றும் இறைவன் துணை நிற்பார்.

" தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் "

என்ற பாரதியின் வாக்கிற்கொப்ப கனடாவில் வாழும் தாங்கள் "கொம்பறை" என்ற சஞ்சிகையினை வெளியிட்டு தமிழ் வளர்ப்பதை பெருமையோடு தாங்கள் பிறந்த மண்ணில் இருந்து நினைத்துப் பார்க்கின்றேன். இதேபோலவே சேக்கிழார் பெருமான் பாடியது போல "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற பெரியபுராண வாசகத்திற்கேற்ப தாங்கள் சைவத்தையும் தமிழையும் ஒன்று சேர மேலைநாடுகளில் வளர்ப்பதையிட்டு உங்கள் அன்பன் என்ற வகையில் மேலும் மகிழ்வடைகின்றேன். உங்கள் சைவத்தமிழ் கல்விச் சேவைப் பணிகள் தொடர என்றும் இறைவனை வேண்டுகின்றேன். வன்னித்தமிழ் கலாச்சார ஒன்றியம் நீண்டகாலம் வளர்ந்து மேலும் சேவை புரிய எமது வாழ்த்துக்கள் .

வாழ்க வன்னித் தமிழ்க் கலாச்சார ஒன்றியம்,
மலர்க கொம்பறை.

ஓங்குக தங்களின் சீரிய பணிகள்.

உங்கள் அன்பன்

ஆ.ஐ.தயானந்தராஜா

அதிபர்
மன்/சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி

தலைவரின் சிந்தனையிலிருந்து.....

எமது வன்னித் தமிழ்ச் சமூகக் கலாச்சார அமையம் மிலேனியத்தின் தொடக்கமான 2001ம் ஆண்டினில் 5வது வருடமாக வன்னி விழாவையும் மற்றும் கொம்பறை மலரையும் வெளியிடுவது கண்டு பெருமிதமடைகின்றேன். அதேவேளை எமது அமையத்தின் செயற்பாடுகளையும் முன்னேற்றங்களையும் வன்னி மண்ணின் எனது பசுமையான நினைவுகளினூடே பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். வன்னிமண் பல சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டது. அதற்கு வணங்கா மண், அடங்காப்பற்று என்ற பெயர்களும் உண்டு. அத்தகைய வன்னிப் பிரதேசத்தைக் காத்து அந்நியருக்கு அடிபணியாது இறுதிவரை உலகின் கடைசி இராச்சியத்தை ஆண்ட பெருமைக்குரிய வன்னியின் வீரப்புதல்வன் மாவீரன் பண்டாரவன்னியன் நினைவாக ஆண்டுதோறும் நாம் கனேடிய மண்ணில் வன்னி விழா எடுத்து வருகின்றோம். அன்று மாத்திரமன்றி இன்றும் அந்தப் புறநானூறு வன்னி மண்ணில் நிலைத்து நிற்பது அம்மண்ணிற்கே உரித்தான சிறப்பியல்பாகும். அத்தோடு இங்கு வாழ்ந்துவரும் எமது பிரதேச மக்களின் கலை கலாச்சார நிகழ்வுகளுக்கு ஒரு மேடையாகவும் இவ்விழா அமைந்து வருகிறது.

கனடாவில் தத்தமது கலாச்சாரங்களைப் பேணவும் வளர்க்கவும் வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தையும் தனித்துவத்தையும் பயன்படுத்தி நாமும் எமது பிரதேசப் பண்பாடுகளைக் கட்டிக்காப்பதில் முன்னின்று உழைத்து வருகின்றோம். அவசரம் நிறைந்த இயந்திர மயமான கனேடிய வாழ்க்கைச் சூழலில் பலரும் மணித்தியாலங்களை டொலர்களாக்கத் துடிக்கின்ற வேளையிலும் எமது உறுப்பினர்கள் பலர் தமது பொன்னான நேரத்தையும் உழைப்பையும் எமது அமையத்தின் சமூகப் பணிக்காகவும் வன்னிப் பிரதேச வளர்ச்சிக்காகவும் செலவிட முன்வந்திருப்பதை மிகவும் நன்றியுடன் நினைவு கூர விரும்புகின்றேன்.

எமது அமையம் கனடாவில் விழாக்களை நடாத்துவதோடு மட்டும் நில்லாது வன்னிப்பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதிலும் தன்னாலியன்ற பணிகளைச் செய்து வருகின்றது. மேலும் நாம் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களை உள்ளடக்கிய பாரிய பிரதேசத்திற்குச் சேவையாற்ற வேண்டிய நிலையில் உள்ளோம். அதேவேளையில் போர்ச்சூழலால் ஏனைய மாவட்ட மக்களும் இடம் பெயர்ந்துள்ள நிலையில் வந்தாரை வரவேற்கும் வன்னிப்பிரதேசத்தின் தேவைகள் மிகவும் அதிகமாகவே உள்ளது. இருப்பினும் எமது வரையறுக்கப்பட்ட நிதி நிலைமைக்குள் நின்று வருடா வருடம் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கல்வியே கருந்தனம் என்பதற்கமைய அழிக்கமுடியாத கல்விச் செல்வத்தினை பெறுவதற்கு எம்மால் இயன்ற உதவிகளைச் செய்து வருகின்றோம். எமது புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் உதவி பெறும் மாணவச் செல்வங்கள் அனுப்பி வைத்துள்ள கண்ணீர் மல்கிய நன்றிக் கடிதங்கள் மேலும் இப்பணி தொடரவேண்டும் என்பதனை எமக்கு இடித்துரைக்கின்றது.

இவ்வருடம் நாம் ஈழத்தில் இருந்து கொம்பறை மலருக்காகப் பெறப்படுகின்ற ஆக்கங்களில் தரமான மூன்று ஆக்கங்களுக்குப் பரிசில்கள் வழங்கி ஈழத்து எழுத்தாளர்களையும் ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.

எங்களுக்கு கனடாவில் கிடைத்துள்ள பிரசாஉரிமை, வதிவிடஉரிமை அகதி அந்தஸ்த்து என்ற சலுகைகள் எல்லாம் தாயகத்தில் எமது மக்கள் படுகின்ற துன்பங்கள், அவலங்களினால் கிடைக்கப் பெற்ற பரிசுகள் என்பதனை ஒரு கணமேனும் நினைவில் நிறுத்தி வாழ்வுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் எம் மக்களின் துயர் துடைக்க ஒரு சிறிய உதவியையாவது வழங்க முன்வர வேண்டும் என்பதே எனது அவா.

நன்றி.

பெ. வி. கெனடி L L B, Attorney at Law.
தலைவர்
வ.த.ச.க. அமையம் - கனடா.



செயலாளரின் பேனா ஊடாகச் சில வரிகள்.....

வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையத்தின் "வன்னி விழா" ஐந்தாவது ஆண்டை நோக்கி நடை போட்டுக் கொண்டிருக்கும் இன் நன்நாளில் "வன்னி விழா 2001" வெளியீடான "கொம்பறை" மலருக்குச் செய்தி உரைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். வெறுமனே இம்மலருக்குச் செய்தி என்று சொல்வதிலும் பார்க்க, இந்த அமையத்தின் வளர்ச்சியில் ஆரம்ப காலத்தில் இருந்து தொடர்ந்தும் பங்களிப்புச் செய்து வருகின்றவன் என்று சொல்வதில்தான் பெருமையும் உண்மையான மகிழ்சியும் அடைகின்றேன். இந்த அமையத்தின் ஊடாக எமது வன்னியில் தாய் தந்தையரை இழந்து மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற சிறார்களுக்கு அவர்களின் கல்விக்காக புலமைப் பரிசில் திட்டம் ஒன்றை உருவாக்கி அதன் மூலம் அவர்களுக்கு உதவுகின்ற ஒரு பெரும் பணியைச் செய்துவருகின்றோம். ஆரம்ப காலங்களில் மக்கள் பெரும் அக்கறை காட்டாவிட்டாலும் கடந்த வருடத்தில் இருந்து கனடா வாழ் வன்னி மக்கள் மிகவும் ஆதரவு வழங்கிவருவது இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது ஒன்றாகும். இப்படி மக்கள் ஆதரவு அதிகரித்துக் கொண்டு வருவது நிச்சயம் அந்தச் சங்கத்திற்காக உழைக்கும் அத்தனை உள்ளங்களுக்கும் புத்துணர்ச்சியையும் ஊக்கத்தையும் அளிக்கும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை, நிச்சயம் இந்த அமையத்தின் குறுகிய கால வளர்ச்சிக்கு இந்தப் பனி படர்ந்த மண்ணில் இயந்திரமான வாழ்க்கையிலும் தங்கள் நேரத்தினை ஒதுக்கி அமையத்திற்காக உழைத்த அத்தனை நல் உள்ளங்களும்தான் காரணம் என்பது யாவரும் அறிந்த உண்மை. ஒரு அமையத்தினுள் எம்மை நுழைத்துக் கொள்ளும்போது அமையத்தின் நோக்கமும் எமது நோக்கமும் ஒன்றாக இருக்குமேயானால் நாம் எதிர்பார்த்த இலக்கை அடைவதில் எமக்கு எந்தவிதமான தடைகளும் வருவதற்கு இடமில்லை. நிச்சயம் எமது அமையம் எதிர்காலத்தில் நல்ல வளர்ச்சி அடையும் என்ற நம்பிகையோடுதான் அத்தனைபேரும் செயற்பட்டு வருகின்றார்கள். இதற்கு எடுத்துக் காட்டாக இவ் வருட ஒன்று கூடலில் நாம் எதிர் பார்த்ததைவிட அதிக அளவு மக்கள் கலந்து சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது. எந்தவொரு இலக்கையும் ஆரம்பித்தவுடன் அடைந்துவிட முடியாது. எப்படியும் குறைந்தது ஐந்து ஆண்டுகளாவது எடுக்கும். அப்படிப் பார்க்கும்போது நிச்சயம் இப்போதுதான் அந்த இலக்கை ஓரளவு அடைந்து இருக்கின்றோம். இனிவரும் காலங்களில் மேலும் எமது நோக்கங்கள் நிறைவேறும் என்ற நம்பிகையோடு எமது அமையத்திற்காக உதவியளித்து உழைத்த அத்தனை கனடா வாழ் மக்களுக்கும் நன்றி கூறி மேலும் உங்கள் அனைவரின் பங்களிப்பும் ஊக்கமும் தொடர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு விடைபெறுகின்றேன்.

"நன்றி"

கேதீஸ்வரன் சதாசிவம்
செயலாளர்
வ.த.ச.க அமையம் கனடா.



நிதியாளரின் நினைவிலிருந்து.....

சின்னச் சிறுமியென் வன்னிச் சிறுக்கி
கன்னச் சிவப்பி கனியூறு மொருத்தி
எண்ணம் விரும்பியென் பெருமை நிறுத்தி
வண்ணம் பரப்பிய மனநிறைவுச் சுரப்பி

வைகையில் வானின் கதிரோடு
பொய்கையில் மேனியுன் சிலகோடு
பெய்கையில் பூவினின் இதழோடு நீ சேவை
செய்கையில் தேனினின் ஒரு கூடு

விடிவற்று வாடும் விழிதுயிலற்றுப் போரின்
குடியேற்றவாசி முல்லை யோகபுரத்தூரான்
துடியாட்டமற்ற சொந்தமண்ணவலத்தைப் பாரேன்
கொடியேற்றி வாழ்ந்த மன்னன் பண்டாரனூரேன்

காரணிநானிந்த மன்றில் முறைந்திடல் - நம்
தூரணிச் சந்திரி தடையில் வளைந்துடல்
பூரணிதேன் தினை செல்வமும் விளைந்திடல்
போரணி தேசத்தில் ஓர் ஆத்ம திருப்தியில்
ஓரணி சேர்ந்ததில் ஓர் ஆத்மதிருப்தியில் காரணி
நானிந்த மன்றில் நுளைந்திடல்,

முல்லை வவுனியா மன்னார் மட்டும்
எல்லையென்றிரா எல்லோரைத்தொட்டும்
முல்லைக்குத் தேரிட்ட வேந்தனை முட்டும்
மெல்லச் சிரிப்போடு நின்சேவை வானெட்டும்

ஐஞ்சாறு வருசமாய் வன்னிவிழாவை நடத்துது
நெஞ்சாறத் தினமும் நிறையக் கதைக்குது
பஞ்சத்துப் பிள்ளைகள் பள்ளி படிக்குது
செஞ்சோற்றுக் கடனென்று என்நெஞ்சுநினைக்குது

ஆதிக்கப் பிடிக்குள் மாட்டி
சாதிக்கக் கூடியதமிழ்ப் பொடி சுட்டி
சோதிக்கப் புள்ளிகள் நூறினையெட்டி
சாதிக்கவிடாளாமே தடிச்சந்திரிக்குட்டி
குட்டி ஆதலால், . . .
பாதிக்கப்பட்ட மாணவர்பட்டி
பாதுகாத்திடக் கழகம் நீ கங்கணம் கட்டி-வைர
மோதிரமான கொள்கையை நீட்டி
சேதிசொல்கின்றாய் நேயக்கரங்களை நீட்டி,
தமிழ்ப்,
புவனம் முழுக்கயுத்தம் நடக்குது
கவனம் அழுது சிறார்கள் துடிக்குது
தீவனம் பழுது சில செத்துக்கிடக்குது,
ஓ. . . வனம் வன்னி மாறிக்கிடக்குது,

வாங்கம்மா என் மண்ணின் மக்கள் - மனம்
தாங்குமா அவர் படும் அவலத்தின் சிக்கல்
தாங்கம்மா பணம் பேசாது நக்கல் - கண்கள்
தூங்குமா பசியினால் வன்னியோ வைக்கல்,

வளங்களைத் தொலைத்தது வன்னியா-எம்
மனங்களை இணைத்தது அக்கன்னியா - கண்
குளங்களை நிறைத்தது வெறுந்தண்ணியா- எம்
குழந்தைகள் சிரிப்பது சேவையுன்மென்மையா,

சீரிய சமயகுரு சிவஸ்ரீ. ஸ்ரீதரக்குருக்கள் பாரிய
கொடையாளர் பண்புகொள்ஜெயா இன்பநாயகம்
சீராழுமைப்பண்பின் புத்திரன் திரு சூசைதாசன்,
கொத்தணி முதல்வன் கவிஞன் சிவபாலு,
கலைஞன் சித்திரவடிவோன் சீரோவிய
மரியநாயகவரைஞன் வித்தகன் முதல்வன்
சிவராசா, பத்திரம் மொத்தத்தில் மேன்மையாய்
கிடைத்ததன்சித்தமே எமைச்சிறப்புற நடத்தினன்

ஓடிவந்தபோது பணம்
கோடிதந்த ஊருசனம்
பாடியுந்தன் பாதம்தினம்
தேடிநிதம் பாட மனம்

பஞ்சுப் பாதங்கள் மண்ணிலாடிட- வன்னிப்
பிஞ்சுக்குழந்தையில் போற்றிவளர்த்திட்ட எம்முடன்
ஐஞ்சு நிருவாகக் குழுக்களும் பட்டிட்ட -துயரென்
நெஞ்சத்திருத்தினேன் பெருமிதம் சொட்டிட,

மண்ணினில் எத்தனைமடியுது பசியால்
கண்ணில் அத்தனைகொடியது புசியேல்
விண்ணினில் நித்தமும் வெடியதுநடுநிசியில்-
நம்உறவுகள்
உண்ணலேல் மொத்தமும் விடியுமா புவியில்,

மனிதம் மிகுந்தொரு மானிடராயின்று
புனிதம் படைத்தொரு புனிதராயென்றும்
கனிதரு பழமரங்களைவென்று
இனிது படைப்போம் எல்லோரும் நன்று,

வே. கணேசலிங்கம்
நிதியாளர்
வ.த.ச.கலாச்சார அமையம்

வன்னிப் பிரதேச நாவல் இலக்கிய முன்னோடி திரு த. கயிலாசபிள்ளை.

கலாபூசணம், தமிழ்மணி, முல்லைமணி வே. சுப்பிரமணியம்.

தமிழ் இலக்கியப் பரப்பில் ஈழத்துத் தமிழ் இலக்கியம் என்னும் தனிப்பிரிவு பற்றி அண்மைக் காலத்தில் பேசப்பட்டு வருகின்றது. ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு பல்கலைக்கழகப் பாடத்திட்டத்திலும் இடம்பெற்றுவிட்டது.

ஈழத்திற்கு தமிழகத்தினைவிட வித்தியாசமான சமூக அமைப்பும் வாழ்க்கை முறையும் வாழ்க்கை நோக்கும் இருப்பதனை நாம் அவதானிக்கலாம். இலக்கியம் மக்கள் வாழ்க்கையில் இருந்து தோற்றம் பெறுவதனால் ஈழத்துத் தமிழ் இலக்கியம் தமிழக இலக்கியத்தினை விட வித்தியாசமாக அமைந்திருப்பது தவிர்க்க முடியாத அம்சமாகும்.

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தை பிரதேசரீதியாகப் பிரித்து நோக்கலாமா? இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் அனைவரதும் வாழ்க்கைமுறை சமூக அமைப்பு மொழிப் பிரயோகம் என்பன ஒரேமாதியாக அமையவில்லை.

இலங்கைத் தீவு முழுவதனையும் சமூகப் பண்பாட்டுப் பிரதேசங்களாக வகுக்கும் பணியில் முதன் முதலில் ஈடுபட்ட பிறைஸ் றயான் (Bryce Rayan) என்னும் சமூகவியலாளர் இயைபுடைய சமூகக் குழுக்கள் என்ற அடிப்படையில் பிரித்தபோது வன்னிப் பிரதேசத்தை ஒரு பிரதேசமாகவும் யாழ்ப்பாணத் தீபகற்பத்தை ஒரு பிரதேசமாகவும், முஸ்லிம்களும் தமிழர்களும் இணைந்து வாழும் கிழக்குப் பகுதியை ஒரு பிரதேசமாகவும் பிரித்துக் கொண்டார்.1

எனவே வன்னிப்பிரதேசத்தை களமாகக் கொண்ட தமிழ் இலக்கியம், ஏனைய பிரதேச இலக்கியங்களைவிட வேறுபட்ட முறையில் அமைந்திருப்பதனை மறுக்கமுடியாது. எனினும் ஈழத்து இலக்கிய வரலாறு எழுதுவோர் வன்னிப் பிரதேச இலக்கியத்தின் மீது தமது பார்வையினைச் செலுத்தாதது கவலைக்கு உரியதே?

வன்னிப் பிரசே நாவல் இலக்கிய முன்னோடியாகத் திகழ்பவர் முல்லைத்தீவைச் சேர்ந்த திரு த. கயிலாசபிள்ளை அவர்களாவார். இவர் எழுதிய இன்பவதி என்னும் நாவல் யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தின் வெளியீடான கலாநிதி சஞ்சிகையில் தொடராக வெளிவந்தது. 1942ம் ஆண்டில் கலாநிதியின் நான்கு இதழ்களில் இந்த நாவலின் ஒரு பகுதி வெளியாகியது. ஆனால் நாவல் முற்றுப் பெறவில்லை. அந்தச் சஞ்சிகை ஆசிரியர் அறிமுக உரையில் இந்த நாவல் 40 ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டதாகக் குறிப்பிடுகின்றார். இதனை நோக்குமிடத்து திரு த. கயிலாசபிள்ளை அவர்கள் 1902ம் ஆண்டு வரையில் இதனை எழுதியிருக்க வேண்டும்.2

1895ல் திருகோணமலை தி. த. சரவணமுத்துப்பிள்ளை அவர்கள் மோகனாங்கி என்னும் வரலாற்று நாவலை எழுதித் தமிழ் நாட்டில் வெளியிட்டார். இலங்கையைச் சேர்ந்த ஒருவரே தமிழ் வரலாற்று நாவல் எழுதும் மரபை தொடக்கி வைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனை இருட்டடிப்புச் செய்த கலாநிதி க. அருணாசலம் வரலாற்று நாவல் எழுதும் மரபு கல்கியினாலேயே தொடக்கி வைக்கப்பட்டது எனக் கூறுவது விசனத்திற்குரியது. (தமிழில் வரலாற்று நாவலின் தோற்றமும் வளர்ச்சியும் - குமரன் புத்தக இல்லம் 2000) மோகனாங்கி என்னும் நாவலின் கதை தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளிப் பிரதேசங்களில் நாயக்க மன்னர்கள் ஆட்சிபுரிந்த 17ம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இரு நகரங்களில் ஆட்சிபுரிந்தவர்களுக்கு இடையில் நிகழ்ந்த அரசியல் போட்டியின் பின்னணியில் காதல், வீரம், சூழ்ச்சி என்பனவற்றைப் பொருத்தி இந்த நாவலைப் புனைந்துள்ளார்.3 திருகோணமலையைச் சேர்ந்த ஒருவரால் எழுதப்பட்டது என்பதைத்

தவிரக் கதையம்சத்தில் வேறு எந்தத் தொடர்பும் திருகோணமலைக்கோ அல்லது ஈழத்திற்கோ இல்லை எனலாம்.

எனவே இன்பவதியே வன்னிப் பிரதேசத்தைக் களமாகக் கொண்ட முதல் நாவல் எனலாம். இந்த நாவல் ஒரு வன்னி நாட்டின் கதை என்னும் குறிப்புடன் கலாநிதி சஞ்சிகையில் வெளிவந்தது என்பதுடன் வன்னிப் பிரதேச உணர்வுடன் எழுதப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தேசிய இலக்கியமும், மண்வாசனை இலக்கியம் என்னும் தொடர்கள் ஈழத்தில் அறுபதுகளில் பிரபலமாக்கப்பட்டது. இலங்கைத் தமிழ் அபிமானம் சிறீல சிறி ஆறுமுகநாவலர் (1822 - 1879) அவர்களில் நல்லறிவுச் சுடர் கொளுத்தல், மட்டுவில் வேற்பிள்ளை உபாத்தியாயர் (1930) அவர்களில் ஈழமண்டலச் சதகம் மானிப்பாய் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையின் ஈழமண்டலப் புலவர் மகாவித்துவான் சி. கணேசையரின் (1878 - 1958) ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம் என்பனவற்றுடன் முளை கொள்கின்றது. ஈழகேசரிப் பத்திரிகை 1930களில் இந்திய இலங்கையின் பாலமாக அமைந்தபோது சுதேசிய சிந்தனைகளைப் புறக்கணிக்கவில்லை. மறுமலர்ச்சிப் பத்திரிகை 1940களில் அந்நெறியினை முன்னெடுத்துச் சென்றது. மண்வாசனை வீசும் ஆக்கங்களுக்கு அது சிறப்பிடம் அளித்திருக்கின்றது. 1950களிலே இலங்கை ஒரு தனிநாடு அங்கு வன்னி, யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, மலைநாடு முதலாம் பிரதேசங்களிலே தனித்துவங்கள் உண்டு என்ற கருத்து உருவாகிக் கொண்டிருந்தது. (பேராசிரியர் பொ. பூலோகசிங்கம் - நேர்காணல் ஞானம் சஞ்சிகை கண்டி யூன் 2001)

பலகாலமாகப் பல்வேறு நபர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட மண்வாசனை இலக்கியம் என்னும் கோட்பாட்டினைப் பேராசிரியர் க. கைலாசபதி குழுவினர் பிரபலப்படுத்தினர்.

20ம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தத்திலேயே முல்லைத்தீவு த. கயிலாசபிள்ளை அவர்கள் வன்னிப் பிரதேச மண்வாசனையுடன் நாவல் ஒன்றை எழுதியுள்ளார் என்பது ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர்களின் பார்வைக்கு எட்டாதது வியப்பான செய்தி ஆகலாம்.

காதலையும், சொத்துடமை தொடர்பான பிரச்சனைகளையும் உட்பொருளாகக் கொண்ட கதையாக இன்பவதி திகழ்கின்றது. கதைப் பின்னணியிலும், கதையை வளர்த்துச் செல்லும் பாங்கிலும் கயிலாசபிள்ளை நவீன இலக்கியத் துறையில் கொள்கைத் தெளிவுடையவராகக் காணப்படுகின்றார்.

இக்கதை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள குமாரபுரத்தைக் களமாகக் கொண்டது. குமாரபுரம் சித்திர வேலாயுதர் ஆலயச் சூழலில் கதை நகர்கின்றது. குமாரபுரம் வன்னி மன்னர்களது இராசதானியில் ஒன்றாகும். பறங்கியர் சைவ ஆலயங்களை இடித்தழித்து வருகின்றார்கள் என்பதனைக் கேள்வியுற்ற ஆலயக் குருக்கள் மூல விக்கிரகத்தைப் பெயர்த்தெடுத்து கடல் மார்க்கமாக யாழ்ப்பாணம் கொண்டு சென்று பொலிகண்டிக் கந்தசுவாமி கோவிலில் வைத்தார். அந்த விக்கிரகம் பழையவர் என்னும் பெயருடன் ஆலயத்தின் உள்வீதியில் இன்றும் காணப்படுகின்றது. அந்நியர் படையெடுப்பாலும், மலேரியா நோயினாலும் குமாரபுரம் வாசிகள் இடம்பெயர்ந்து விட்டனர். குமாரபுரம் அழிநிலைப்பட்டது. இப்பிரதேசம் காடடர்ந்து வனவிலங்குகளின் இருப்பிடமானது. 1904ம் ஆண்டு நா. குமாரசாமிக் குருக்கள் இவ் ஆலயத்தினைச் சூழ்ந்த பகுதியினை ஆங்கில அரசிடமிருந்து விலைக்குப் பெற்று மீண்டும் ஆலயத்தினைக் கட்டுவித்தார்.4 ஏறக்குறைய இக்காலப் பகுதியிலேயே இந்த நாவல் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

வன்னிக் காட்டினுள் ஒருவன் அரை மைல் தூரம் பிரயாணம் செய்தால் அவ்விடம் முன்பு வயல், குளம், ஊர் ஆகிய இம் மூன்றில் ஒன்றாக இருந்திருக்க வேண்டும் என்று அனுமானித்துக் கொள்வான் சோழ மண்டலம் காவேரி முதலிய நதிகளால் சிறப்படைந்ததுபோல வன்னி நாடும் அனேக குளங்களால் சிறப்பெய்தி மாரி, கோடை என்ற பேதமின்றிப் பயிர்ச் செய்கை உடையதாய் வளஞ்சிறந்து விளங்கியது.

கதையின் இரண்டாம் அத்தியாயத்தில் கதைக்களமாகக் குமாரபுரம் மேற்கண்டவாறு சித்தரிக்கப்படுகின்றது. பிற்காலத்தில் வன்னிப்பிரதேசக் களத்தில் நாவல் எழுத முற்பட்டோருக்கு முன்னோடியாகக் கயிலாசபிள்ளை திகழ்கின்றார்.

தொழில் முறைகளையும் சமூகப் பழக்கவழக்கங்களையும் இந்த நாவல் படம் பிடித்துக் காட்டுகின்றது. பேச்சு மொழியை

அளவாகப் பயன்படுத்துவதன் மூலம் நாவலை உயிரோட்டம் உடையதாக ஆக்கியிருக்கின்றார்.

இவற்றை நோக்குமிடத்து கயிலாசபிள்ளை அவர்கள் ஈழத்தின் தரமான நாவல் ஆசிரியர்களில் ஒருவராகத் திகழ்கின்றார்.

நாவல் இலக்கியத் துறையில் மட்டுமின்றி பதிப்புத் துறையிலும் கயிலாசபிள்ளை அவர்களே முன்னோடி முயற்சியை மேற்கொண்டவர் எனலாம்.

தற்போது கதிரைமலைப் பள்ளு எனப் பிரபலமடைந்திருக்கும் கதிரையப்பர் பள்ளினை 1927ம் ஆண்டிற்குச் சமமான பிரபவ வருஷம் கார்த்திகை மாதம் திரு த. கயிலாசபிள்ளை அவர்கள் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

எட்டு ஆண்டுகளின் பின்னர் 1935ல் தெல்லிப்பளை வ. குமாரசாமி அவர்கள் (காலஞ் சென்ற கோப்பாய்ப் பாராளுமன்ற உறுப்பினர் கு. வன்னியசிங்கம் அவர்களின் தந்தையார்) கதிரைமலைப் பள்ளினைச் சென்னைப் புறோக்கிறசிவ் அச்சகத்தில் பதிப்பித்தார். 1933ம் ஆண்டுவரை கயிலாசபிள்ளையின் பதிப்புப் பற்றி அவர் அறிந்திருக்கவில்லை. கதிரைமலைப் பள்ளு ஏட்டுப்பிரதிகளைத் தேடிக் கொண்டிருந்தபோது Hindu Organ (இந்து சாதனத்தின் ஆங்கிலப் பதிப்பு) பத்திரிகையில் கதிரமலைப் பள்ளுப் பற்றி இரண்டு கட்டுரைகளை எழுதினார்.

இக்கட்டுரையை வாசித்த சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் 13.02.1933ம் ஆண்டில் Hindu Organ பத்திரிகையில் பின்வருமாறு எழுதினார்.

“It may not be exactly detracting from the credit due to Mr Coomarasamy in having made a valuable literary find” to mention that the Kathiraimalai pallu has already appeared in print under the name of “Kathiraiyappar pallu” here is the title page of the edition, I speak of: 5

கதிரைமலைப் பள்ளு ஏற்கனவே கதிரையப்பர் பள்ளு என்னும் பெயரில் அச்சில் வெளிவந்து விட்டதனைத் தெரிவிக்கும் அதேவேளையில் அதனை மீண்டும் அச்சிடவிருக்கும் குமாரசாமியை உற்சாகமூட்டும் விதத்தில் சுவாமி ஞானப்பிரகாசரின் கூற்று அமைகின்றது.

கதிரையப்பர் பள்ளின் முகப்புப் பக்கம்:

கணபதிதுணை

கதிரையப்பர் பள்ளு எனவழங்கும் உழத்திப் பாட்டு. இது கதிர்காமத்திலே எழுந்தருளி இருக்கும். சுப்பிரமணிய சுவாமிமேலது முல்லைத்தீவு ரேகு, என்றிக் கிளார்க்கால் எழுதப்பட்டு த. கைலாசபிள்ளையால் பரிசோதித்து யாழ்ப்பாணம் அச்சியந்திர சாலையில் பதிப்பிக்கப்பட்டது.

இப்புத்தகம் 43 பக்கங்களை உடையதென ஞானப்பிரகாசர் கூறுகின்றார்.

வ. குமாரசாமி அவர்கள் கதிரமலைப் பள்ளை மீள்பதிப்புச் செய்வதற்கு உபகாரமாக கயிலாசபிள்ளை பதிப்பும் குமுழமுனை, புதுக்குடியிருப்பு ஏட்டுப்பிரதிகளும் அமைந்துள்ளன.

“தேடினாலும் தியாகம் விளங்கும்
தியாக சூரியர் நாடெங்கள் நாடே”

என்னும் பாடலில் இடம்பெறும் தியாக சூரியன் முதலாம் விமலதர்மசூரியன் என்னும் கண்டி அரசன் எனக் கொண்டு பள்ளின் காலம் 1592 தொடக்கம் 1620ற்கு இடைப்பட்டதென வ.குமாரசாமி கூறுகின்றார்.6 நூலின் காலம் 16ம் நூற்றாண்டின் பிற்பகுதி ஆகலாம் என்பதைப் பேராசிரியர் பொ. பூலோகசிங்கமும் ஏற்றுக் கொள்கின்றார்.7

ஏட்டுப் பிரதிகளிலும் கயிலாசபிள்ளை பதிப்பிலும் இடம் பெறும் கடவுள் வாழ்த்துப்பாடல் முள்ளியவளைக் காட்டாவினாயகரைச் சுட்டுகின்றது.

“முன்பு போலெனை அன்புவைத் தாள்வாய்
முள்ளியவளை மூத்த நயிந்தை”

“முருகி வந்து பகவானைக் கும்பிட்டு
மூத்த நாதனைக் முத்தண்டம் பண்ணி”

என்னும் பாடல்களில் இடம்பெறும் மூத்த நயிந்தை, மூத்த நாதன் என்னும் தொடர்கள் காட்டுவினாயகரைக் குறிக்கும்.

கதிரமலைப் பள்ளு ஏட்டுப்பிரதிகள் முல்லைத்தீவுப் பிரதேசத்தைச் சேர்ந்த

கயிலாசபிள்ளை அவர்களாலேயே முதன் முதலில் பதிப்பிக்கப்பட்டது. முள்ளியவளை சி. ச. அரியகுட்டிப்பிள்ளை பதிப்பித்த அருவிச் சிந்து கதிரையப்பர் பள்ளு, பன்றிப் பள்ளு, குருவிப் பள்ளு என்னும் தொகுப்பில் கதிரையப்பர் பள்ளுப் பாடல்கள் இடம்பெறுகின்றன.

முல்லைத்தீவுப் பிரதேசம் பயிர்த்தொழிலில் முக்கியத்துவம் பெற்றது. இங்கு விவசாயத்தைப் பாடு பொருளாகக் கொண்ட பள்ளு இலக்கியம் தோன்றுவதற்குரிய சூழ்நிலை இருப்பதனால் முல்லைத்தீவிலேயே இப் பள்ளுத் தோன்றியது எனக் குறிப்பிடுவது தவறாகாது. இதனைப் பாடியவர் முல்லைத்தீவைச் சேர்ந்த ஒரு புலவர் என்பது கயிலாசபிள்ளையின் கருத்தாகும்.

வன்னிப் பிரதேச நாவல் இலக்கியத்திற்கும், பதிப்பு முயற்சிக்கும் முன்னோடியாகத் திகழ்ந்த த. கயிலாசபிள்ளை அவர்களது வாழ்க்கையும் பணியும் முழுமையாக ஆராயப்படவேண்டும்.

அடிக்குறிப்பு:-

1. பேராசிரியர் கா. சிவத்தம்பி - வன்னிவள நாட்டுப் பாடல் சிறப்புரை - 1980.
2. பேராசிரியர் நா. பாலசுப்பிரமணியன் - வன்னிப் பிரதேச நவீன இலக்கியம். பண்டாரவன்னியனின் நினைவு மலர் 1989.
3. பேராசிரியர் நா. பாலசுப்பிரமணியன் - ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம் - 1978.
4. கலைஞர் திலகம் வே. சு. குமாரபுரம் சித்திரவேலாயுதர் ஆலயம், வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் கருணைமலர் - 1978.
5. Rev S. Gnanapragasar: The Kathiraimalaippallu. Hindu Organ – 1933.
6. வ. குமாரசாமி முகவுரை கதிரமலைப் பள்ளு - 1935.
7. கலாநிதி பொ. பூலோகசிங்கம் கதிரமலைப் பள்ளு - வன்னிப்பிராந்தியத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுக் கட்டுரை - 1983.

நீதி என்பது இதுதான்...

நீதி என்பதற்கு அரசியல் மேதையும் தத்துவஞானியுமான அரிஸ்ரோட்டில் என்பவர் பின்வருமாறு விளக்கங் கொடுக்கின்றார்.

"பலவான் ஒருவனுக்குச் சாதகமாக அமைவதெல்லாம் நீதி" எனக் குறிப்பிடுகின்றார்.

இக் கூற்றில் எவ்வளவு பெரிய உண்மை உள்ளடக்கப் பட்டிருக்கின்றது என்பதனைக் கூர்ந்து அவதானிக்கும்போது விளங்கிக் கொள்ள முடிகின்றது. இதற்காகச் சில உதாரணங்களை இங்கு காட்டமுடியும்.
இன்றைய பாகிஸ்த்தான் அரசியல் தலைவர் இராணுவத் தளபதியாக இருந்தபோது தன்வசமாக எல்லாப் பலங்களையும் அதிகரித்துக் கொண்டதன் பின்னர் ஆட்சியைக் கவிழ்க்கும் சதியினை மேற்கொண்டு அரசைக் கைப்பற்றினார். அத்தோடு தான் இராணுவச் சதிமூலமாக ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டமைக்கு விளக்கம் ஒன்றினையும் கொடுத்திருந்தார்.

இன்று அமரிக்கா பலம் உள்ள நாடு எனச் சொல்லப்படுகின்றது. அந் நாடு ஈராக்கின் மீது போர்ப்பிரகடனம் ஒன்றினை ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டுவந்து அதன் மூலமாக அந்நாட்டின் மீது தக்குதலைத் தொடுக்கக் காரண கர்த்தாவாக அமைந்தது.

நாங்கள் இங்கு இத்தகைய பெரிய உதாரணங்களைக் காட்டத்தேவையில்லை. மிகச் சிறிய உதாரணமாக எங்கள் குடும்பங்களிலேயும் இதனைக் காணமுடிகின்றது. கணவன் குடும்பத்தில் பலமானவராக அமைவாராயின் அவர் தனக்குச் சாதகமாக எது அமைகின்றதோ அதனையே செயற்படுத்த முனைகின்றார். இது எல்லாக் குடும்பங்களுக்கும் பொருத்தமானதல்ல. மாறாகக் குடும்பத்தில் மனைவியார் பலமானவராக அமைவாராயின் அவர் தன்பால் சாதகமான அனைத்தினையும் செய்ய முற்படுவார்.

மேலும் நீங்கள் இக் கூற்றினைப் பொருத்தமான அத்தனை இடங்களிலும் பொருத்திப் பார்ப்பீர்களாயின் உண்மையினை இலகுவாகப் புரிந்து கொள்வீர்கள்.

Dr. Kirupa (Dentist)
பல் வைத்தியர்
Dr. K. Kirupakaran & Associates
DOWNTOWN
Tel: (416) 928 – 2827
Tel: (416) 928 – 9617
வாரத்தில் ஏழு நாட்களும்
240 Wellesley Street East
Toronto, Ontario
M4X 1G5
Wellesley/Parliament
Smile!

வீரம் விளைந்த மண்

2001 கவிதைப்போட்டியில் முதற் பரிசு பெற்றது

நால்வகை நிலங்களும் நலமாய் அமைந்திட
கதிர்மணி விளைய கனியுதிர் சோலைபாட
வளமெலாம் தன்னகத்தே கொண்டாட
வாழ்வளித்தே வசதி செய்தே
வந்தாரை வாழ வைக்கும் வன்னி புகழ்!
வரம்பு கடந்த வீரத்திற்கும்
வித்திட்ட மண்ணன்றோ!

ஆனைகட்டிப் போரடித்து
ஆண்டாண்டு காலம் வாழவென
விளைச்சலுடன் வீரமும் ஊட்டி
களம்பல கண்ட வீரம் நிறைந்த மண்ணன்றோ!

செந்தமிழர் மானம் காத்திட
தன்னுயிர் தன்னையே ஈந்திட்ட
வீரம் விளைந்த வன்னியின் மைந்தன்
மாவீரன் பண்டார வன்னியன் வாழ்ந்த மண்ணன்றோ!

அடக்கும் முறைகட்கு அடங்காத நிலம்
அன்னியர் ஆதிக்கத்திற்கு அடிபணிய மறுத்த நிலம்
வெள்ளைச் செருக்குக்களை விரட்டியடித்த நிலம்
கொள்ளைப் பரிசும் கொடுத்த நிலம்
வெற்றிகள் பல கண்ட நிலம்
புறங்காண வல்ல நிலம்

இன்று. . . .
சிறுமதியார் சிங்களத்தார் சிதைத்தாலும் - நீ
சிறந்து சீர்படை பலம் பெருக்குகின்றாய்!
செருக்களத்தின் போர்த்தந்திரத்தை
காலத்திற்கே கட்டளையிடும் கரிகாலன்படையணிகள்
கருக்கொள்ளும் கருவறையம்மா - நீ

அடங்காத் தமிழன் உருக்கொண்ட மண்ணில்
வேர் புதைத்த மரங்களும்
போர் தொடுக்கும் பொய்க்கவில்லையம்மா!
உறுதியின் உறைவிடம் நீ!

நிலத்தைப் பிடித்து பாதை திறந்து - தம்
பலத்தைக் காட்டித் தமிழ்க் குலத்தை அழிக்க
முன்னேறி வந்த படைதன்னை
மூங்கில் வளைத்துக் கொடுத்த அடிகளால்
பின்வாங்கிச் சென்ற பாண்மைகாண்!
தமிழன் புறங்காணும் மண்ணதில் - வீரம்
சோரம் போனதில்லைக கண்டீரோ!

அடங்காப்பற்று, வணங்கா மண்ணாம்
பனங்காம மண் கற்றுத் தந்த
பழைய வரறாற்றுப் பாதையிலே
வெட்டிச் சரிக்கஒண்ணா விடுதலைவிருட்சத்தை
வன்னி மண்ணின் வீழந்துபடா வீரியத்தை
முல்லை . . .. கிளிநொச்சி. . . .
ஆனையிறவு . . . என கொற்றவைத் தேவி
கொடிகட்டிப் பறக்கும் விந்தை கண்டீரோ!

கோதை நாச்சியார் படைநகர்த்திய
பனங்காம மண்ணதில் கவசம் பூண்டதாலோ
வீறுகொண்டெழுந்த பெண்ணினமும்
சரிசமமாய் போர்க்களம் பொருதி
கோடி வெற்றி வாகை சூடுகின்றனர்!

வீரம் விளைந்த மண்ணில்
வெங்களம் ஆடும் வேங்கைகள் வீரமது
வேங்கடம் ஈழம் அரசொடு தமிழன் ஆழ்வான்
என முழங்குவது கண்டீரோ! விரைவினில்
பேரிகை முழக்கமிட்டு
பூரிக்க முகம் மலர்வாள் ஈழத்தாயவள்!

வனிதா இராமஜெந்திரன்

விடிவு

புது ஆண்டுகளாக மலர்ந்து
புரண்டோடிச் செல்கிறது
புரியாத புதிர்களாக
பூபாளம் பாடும்
மனிதர்கள்!

இவ்வாண்டில் கிடைக்குமா?
சமாதானம்
என்றுதான் தேடுகிறேன்
கிடைக்குமோ என்பதுதான்
சந்தேகத்தின் சின்னம்
கிடைத்தால் சந்தோசம்
அமைதி என்று தேடி அலைந்தால்
கிடைக்காது அமைதி

மனிதனுக்குள்ளே பல
வேற்றுமைகள் பிரிந்துவிட்டது
ஏழைகள் அகதிகள் என்று
பாகுபடுத்தி மனிதனை
வேர் வேராகப் பிரித்து
சாதி என்னும் சின்னம் இட்டு
அடிமைகளாக வாழ்கின்ற
மக்களின் வாழ்வில் விடிவு
எப்போ மலரும்

அகதி யெனும் பட்டமளித்து
அலக்கழிந்து திரிகின்ற
எம்மக்களின் அவலநிலை
மாறிவிடக் கிடைத்துவிட்டதோ
விடிவு???

ச. சத்தியச்செல்வி
வவுனியா

வன்னியும்-வன்னியரும் - ஈழமும் .

செல்வி க. தங்கேஸ்வரி B.A (Hons)
கலாச்சார அலுவலர், கச்சேரி, மட்டக்களப்பு.

அறிமுகம்:-

வன்னியர் என்போர் தமிழகத்தில் படைத் தலைவர்களாகவும், குறுநில மன்னர்களாகவும் வாழ்ந்தார்கள். வன்னியர் பற்றிய குறிப்புக்கள் கி.பி 2ம் நூற்றாண்டு முதல் இலக்கிய நூல்களில் இடம் பெறுகின்றன.ஆனாலும் பல்லவர் காலத்தில் இருந்துதான் (கி.பி 7ம் நூற்றாண்டு) அவர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் கிடைக்கின்றன.

தென்னிந்தியாவில் சோழர் ஆட்சி கி. பி. 10ம் நூற்றாண்டு முதல் எழுச்சி பெற்றது. புகழ் பெற்ற சோழ மன்னனான ராஜாராஜன் (985 - 1015) காலத்தில் வன்னியர்கள் இலங்கைக்கு வந்தனர். ராஜராஜனின் தந்தையான சுந்தரசோழன் காலம் முதல் சோழர்களின் வெற்றிக்கும் சோழ மன்னர்களின் பாதுகாப்பிற்கும் உறுதுணையாக இருந்தவர்கள் விசேட பயிர்ச்சி பெற்ற வீரம் நிறைந்த படைவகுப்பினர். இவர்களை வேளைக்காரப் படையினர் என அழைத்தனர். (ஆபத்துதவிகள், தெரிஞ்சகைக்கோளப்படை என்றும் இவர்களை அழைப்பதுண்டு)

இத்தகைய வேலைக்காரப் படைப்பிரிவுகளின் தலைவர்களாக வன்னியர்கள் பணிபுரிந்தனர். ராஜராஜசோழன் காலத்தில் இலங்கையில் சோழர் ஆட்சி ஏற்பட்டது. அக்காலத்தில் வன்னித் தலைவர்கள் இலங்கையில் நிலை கொண்டனர்.

இலங்கை மன்னனான முதலாம் விஜயபாகு (1059 - 1114) சோழரை இலங்கையில் இருந்து விரட்டுவதற்குப் பெருமுயர்ச்சி செய்தான். இதற்காக அவன் கதிரமலைக் காடுகளில் ஒழிந்திருந்து படை திரட்டினான். தான் வாழ்ந்த நாள் முழுவதும் தமிழருக்கு எதிரான போராட்டத்தில் அவன், சோழர்களை இலங்கையில் இருந்து வெளியேற்றுவதில் ஓரளவு வெற்றியும் கண்டான். ஆனால் அதற்குப் பின் சிங்கள மன்னர்கள் தமது படைகளில் வன்னித் தலைவர்களையும் வைத்திருந்தனர்.

காலக்கிரமத்தில் இவ் வன்னித் தலைவர்கள் ஈழத்தின் சில பகுதிகளில் ஆட்சி செய்தனர். இது அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏற்பட்ட சில ஆட்சிகளாகும்.

கி. பி. 13ம் நூற்றாண்டில் கலிங்கமாகன் (1215 - 1255) இலங்கைக்கு வந்தான். மாகன் பொலனறுவையைக் கைப்பற்றி அங்கிருந்து ராஜரட்டை முழுவதையும் இலங்கையின் வேறு சில பகுதிகளையும் ஆட்சி செய்தான். இவனுடைய ஆட்சி 40 வருடங்களுக்குமேல் நீடித்தது. இவனது உபராஜனான குளக்கோட்டன் (ஜயபாகு) இவனுடன் இணைந்து செயற்பட்டான். இவர்களுடைய காலத்தில் தென்னிந்தியாவின் பல இடங்களில் இருந்து வன்னியர் வரவழைக்கப்பட்டு இலங்கையில் ராஜரட்டையின் பல்வேறு பகுதிகளில் ஆட்சியாளர்களாக அமர்த்தப்பட்டனர்.

புத்தளம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, திருக்கோயில் முதலிய பல்வேறு இடங்களில் இவர்கள் ஆட்சி செய்தனர். புத்தளத்து வன்னியர், திருகோணமலை வன்னியர், மட்டக்களப்பு வன்னியர் என இவர்கள் அழைக்கப்பட்டனர்.

வன்னியர்களின் பூர்வீகம்:-

வன்னியர் எனப் பெயர் பெற்ற இவர்கள் ஆதிகாலத்தில் காடு சார்ந்த இடங்களிலும் மலை சார்ந்த இடங்களிலும் வாழ்திருந்தனர் எனத் தெரியவருகின்றது. இவர்கள் வலிமைமிக்கவர்கள். எனவே பல்லவர் காலத்தில் இவர்களுக்கு படைக்கலப் பயிற்சி அளிக்கப்பட்டு, பல்லவா படைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

பிற்காலத்தில் இவர்கள் தமது பெருமையைப் பறைசாற்றும் வகையில் சில புராணங்களை இயற்றினர் என்பர். அவ்வகையில் வன்னியர் பெருமை கூறும் கல்லாடம், சிலை எழுபது, வன்னியர் புராணம், வன்னியர்குல நாடகம் முதலிய நூல்கள் எழுந்தன.

இந்த நூல்களில் புராணங்களுக்கே உரித்தான முறையில் வன்னியர் பற்றிப் பல கற்பனைகளும் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் வன்னியர்கள் அக்கினியில் இருந்து தோன்றியவர்கள் என்றும் பன்னிரண்டு பன்றிகளில் இருந்து தோன்றியவர்கள் என்றும் கதைகள் உள்ளன. இவை வெறும் கற்பனைகள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இக் கற்பனைகள் வன்னியர் பற்றிப் பல்வேறு எண்ணக் கருத்துக்களைத் தோற்றுவித்துள்ளன. அவை வருமாறு:

அக்கினியைக் குறிக்கும் வடமொழிச் சொல் "வ.்.நி" என்பது. எனவே வ.்.நி என்ற பதத்தில் இருந்து வன்னி என்ற சொல் தோன்றியிருக்கலாம் என கலாநிதி க. செ. நடராசா கருதுகின்றார். (வையாபாடல்: பக் 15)

"காடவர்" என்ற பொருள்படும் வடமொழிச் சொல் "வன்ய" என்பது. எனவே "வன்ய" என்ற

வடமொழிச் சொல்லில் இருந்து "வன்னியர்" என்ற சொல் தோன்றியிருக்கலாம் என கலாநிதி சி. பத்மநாதன் கருதுகின்றார். (வன்னியர்: பக் 19)

இவற்றுள் இரண்டாவது கூற்றே ஓரளவு பொருத்தமானதாகத் தோன்றுகின்றது.

வன்னியரைப் பற்றிய இலக்கியக் குறிப்புக்கள்:-

வன்னியைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் கி. பி. 7ம் நூற்றாண்டு முதல் கிடைத்தபோதும், அவர்களைப் பற்றிய இலக்கியக் குறிப்புக்கள் கி. பி. 2ம் நூற்றாண்டு முதல் கிடைக்கின்றன.

நாம் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் வன்னியர் பற்றிய புராணக் குறிப்புக்களும் இவற்றுள் இடம் பெறுகின்றன. அவை வருமாறு:

வன்னியர் புராணம்:-

வட மொழி நூலான அக்கினி புராணத்ததைத் தழுவி எழுதப்பட்ட இந்நூலில் வன்னியர்கள் அக்கினியில் இருந்து தோன்றியவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு உதாரணமாகப் பின்வரும் பாடல் சான்றாக அமைகின்றது.

"பொங்கமா மகத்தி லாததி யியற்றிட
புனிதனுக்கு வகையீந்தார்
வங்கண் வீர வன்னிய பூமன்னர்
பரிமீது தோன்றினனே". (பாடல் 2)

கல்லாடம்:-

இந்நூல் வன்னியர்கள் பன்னிரண்டு பன்றியில் இருந்து தோன்றியவர்கள் எனக் கூறுகின்றது. இதன் உட்பொருளினை நாம் வேறு விதமாகக் கொள்ளலாம். ஒரு காலத்தில் இவ்வன்னியர்கள் பன்றிக் கொடியை உடைய சாளுக்கிய மன்னர்களிடம் படைத் தளபதிகளாகப் பணி புரிந்தனராம். அதன் காரணமாக இக்கருத்து எழுந்திருக்கலாம். இக் கருத்தினைக் கொண்ட பாடல் பின்வருமாறு அமைகின்றது.

"கருமுகிற் கணி நிறத் தழற்கட் பிறையெயிற்
றரிதரு குட்டியாய பன்னிரண்டினைச்
செங்கோல் முளையிட் டருணீர் தேக்கிக்
கொலை கள வென்னும் படர்களைக் கட்டுத்
திக்குப் படராணை வேலி கோலித்
தருமப் பெரும்பயி நாமுபெற விளைக்கு
நாற்படை வன்னியராக்கிய பெருமான்" (பாடல்: 37)

சிலை எழுபது:-

இந்நூல் வன்னியர் சிறந்த படைத் தலைவர்கள் என வர்ணிக்கின்றது. அதன் காரணமாக இவர்கள் அக்காலத்தில் சிறந்த படைக்கலப் பயிற்சி பெற்று படைத்தளபதிகளாகவும் குறு நில மன்னர்களாகவும் இருந்ததே. இதனை விளக்கும் பாடல் பின்வருமாறு அமைகின்றது.

"படைத் துணைத் தலைவர் குலச் சிறப்பு
விடையுடையார் வரமுடையார் வேந்தர்க்கோ
வெனலுடையார் நடையுடையார் மிடியுடைய
நாவலர் மாட்டருள் கொடையார் குடையுடையார்"

பதிற்றுப்பத்து:-

சேர மன்னர் வரலாறு கூறும் சங்க நூலான பதிற்றுப் பத்து என்னும் நூல் வன்னியர்கள் மன்றம் என ஒன்று இருந்தமை பற்றிக் கூறுகின்றது.

இதனைக் காட்டவரும் பாடல் பின்வருமாறு அமைகின்றது.

"மன்னர் மறைத்த தாழி
வன்னி மன்றத்து விளங்கிய காடே" (பாடல்: 44)

ஈழத்து இலக்கியங்கள்:-

ஈழத்தில் வன்னியர் ஆட்சிபற்றி யாழ்ப்பாண வைபவமாலை, வையாபாடல், கோணேசர் கல்வெட்டு, மட்டக்களப்பு மாண்மியம் முதலிய நூல்கள் விரிவாகக் கூறுகின்றன. இந் நூல்களில் கற்பனைகள் விரவியிருந்தாலும் வேறு சான்றுகளுடன் ஒத்துப் போகும் பல வரலாற்றுகத் தகவல்களும் உள்ளன.

சிங்கள இலக்கியங்கள்:-

முக்கர கட்டன, பரக்கும்ப சிரித கிராசந்தோசய, ராஜாவலிய, ராஜரத்னாகாரய, முதலிய சிங்கள நூல்கள் இலங்கை வன்னியர்கள் பற்றிக் குறிப்பிடுகின்றன. இவை சிங்கள மன்னர்கள், வன்னி மன்னர்களை வெற்றி கொண்டதையும், அடக்கி ஆண்டதையும் கூறுகின்றன. இவற்றில் சிங்கள மன்னர்களின் வீரம் பற்றி மிகைப்படுத்தப்பட்ட கூற்றுக்கள் மிகுந்த கற்பனையுடன் இடம் பெறுவதை அவதானிக்கலாம்.

வன்னி பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள்:-

மேற் கூறிய குறிப்புக்களில் இருந்து வன்னியர் மிகப் பழங்காலத்தில் இருந்ததே படைக்கலப் பயிற்சி பெற்று பெரு மன்னர்களின் மெய்க் காப்பாளர்களாகவும் படைத் தளபதிகளாகவும் குறுநில மன்னர்களாகவும் புகழ் பெற்றிருந்தமை குறிப்பிடப்படுகின்றது. இப் பெருமை பின்னால் வரலாறுகளில் தொடர்வதனைப் பார்க்கின்றோம்.

அ)பல்லவர் ஆட்சியில்:-

கி. பி. 7ம் நூற்றாண்டு முதல் புகழ் பெற்றிருந்த பல்லவர்களுக்கு சாளுக்கியரும் ராஷ்டிரகூடரும் எப்போதும் தொல்லை கொடுத்து வந்தனர். எனவே காடவரான வன்னியரைத் தமது படைகளில்

சேர்த்து பகைவரை முறியடிப்பதில் பல்லவர் வெற்றி கண்டனர். கி. பி. 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த "ஐயடிகள்" என்னும் பல்லவ மன்னன் காடவர்கோன் என அழைக்கப்பட்டதாக கலாநிதி க. செ. நடராசா குறிப்பிடுகின்றார். (வையாபாடல்: பக் 17) (அம்மன்னனது உண்மைப் பெயர் பரமேச்சுரவன்மன் என்பதாகும்.)

ஆ) சோழர் ஆட்சியில்:-

கி. பி. 10ம் நூற்றாண்டு முதல் புகழ்பெற்றிருந்த சோழர் ஆட்சியில் வேலைக்காரப் படையினர் என்ற விசேட பயிற்சி பெற்ற போர்வீரர்களின் தலைவர்களாகவும் மன்னர்களின் மெய்ப் பாதுகாப்பாளர்களாகவும் வன்னித் தலைவர்கள் விளங்கியிருக்கிறார்கள். இவர்களிற் பலர் மன்னருக்கு ஆதரவான குறுநில மன்னர்களாவார்கள். அந்தவகையில் சம்புவரையர், மலையமான் போன்றவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள்.

இ) பாண்டியர் ஆட்சியில்:-

கி. பி. 13ம் நூற்றாண்டில் மேலெழுந்த பாண்டியப் பேரரசிலும் இவ்வன்னியர்கள் படைத் தலைவர்களாகவும் மெய்க் காப்பாளர்களாவும் விளங்கினர். இவர்களின் காலத்தில் வன்னியர் "பெரும்படையோர்" எனப் புகழ் பெற்றிருந்தனர்.

ஈ) நாயக்கர் ஆட்சியில்:-

கி. பி. 14ம் நூற்றாண்டில் மேல் எழுந்த விஜயநகர சாம்பிராஜ்யத்தில் நாயக்கர்கள் வன்னியர்களைப் புறக்கணித்து தெலுங்கர்களையும் கேரளர்களையும் தம் படைகளில் சேர்த்துக் கொண்டதனால் வன்னியர்கள் தமது பெருமைகளை இழந்து கால ஓட்டத்தில் விவசாயிகளாக மாறினர் என வரலாறு கூறுகின்றது.

உ) தொண்டை மண்டலத்தில்:-

தொண்டை மண்டலத்தில் ஆதியில் குறும்பரும் வேடரும் வாழ்திருந்தனர் என்றும் இவர்கள் வன்னியர்கள் என அழைக்கப்பட்டனர் எனவும் தெரிய வருகின்றது. (Analysis of the Mackenzie Manuscripts பக்: 78-79) மாகோன், குளக்கோட்டன் காலத்தில் இலங்கைக்கு வந்த வன்னியரில் பெரும்பாலானோர் தொண்டை மண்டலத்தில் இருந்தே வரவழைக்கப்பட்டனர். இன்றும் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் வன்னிர் பரம்பரையினர் வாழ்கின்றனர். தமிழ் நாட்டின் தெற்கே பாண்டி மண்டலம், கிளக்கே சோழ மண்டலம் முதலிய இடங்களில் வன்னியர் வாழ்ந்தபோதும் வடக்கே தொண்டை மண்டலத்தில்தான் அதிகமான வன்னிச் சிற்றரசுகள் இருந்தன.

ஊ) சூத்திரிய வன்னியர்கள்:-

ஒரு அரசன் தனக்குப் பின் வாரிசு இன்றி இருந்ததால் அவனுடைய படைத்தலைவனாக இருந்த வன்னி நாயகன் ஆட்சியைப் பொறுப்பேற்று அரசனான். அத்தகையவர்கள் சூத்திரிய வன்னியர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்களே வன்னியராயர், பாளையப்பட்டு வன்னியர், பள்ளிராசன் விருதுப் பெயர்களைப் பெற்றனர். (க. செ. நடராசா, வையாபாடல் பக் 17) இவ்வாறே போரில் ஒரு வீரன் தீரச் செயல் புரிந்தால் அவனுக்கும் "வன்னியர்" என்ற விருது பெற்று வன்னியர் ஆகினான்.

எ) குறுநில மன்னர்கள்:-

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல பல வன்னியர்கள் குறுநில மன்னர்களாக இருந்தனர். அவ்வகையில் கிழியூர் மலையமான், ராஜராஜசேதிராயன், வன்னிய மாதேவன், சோழேந்திரசிங்கன், செங்கேணி அம்மை அப்பன் போன்றோர் வரலாற்றில் இடம் பெறுகின்றனர். இவர்கள் சோழ மன்னர்களுக்கு விசுவாசமாக இருந்தனர். ஆனால் சிலர் தமது சோழ மன்னர்களின் பெயர்களையும் தமது பெயருடன் இணைத்து தமது விசுவாசத்தை வெளிப்படுத்தினர் என்பதனை நாம் அவர்களது பெயர்களில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

ஈழத்தில் வன்னியர்:-

இராஜராஜசோழன் (985-1015) காலத்தில் இலங்கை சோழர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தபோது வன்னியர் இலங்கைக்கு வந்தனர்.

முதலாம் விஜயபாகு (1059-1114) சோழரை இலங்கையில் இருந்து வெளியேற்றுவதில் வெற்றி கண்டபோதும் வேலைக்காரப் படைத்தலைவரான சில வன்னித் தலைவர்கள் இலங்கையிலேயே தங்கிவிட்டனர். அவர்களது சேவை சிங்கள மன்னர்களுக்குத் தேவைப்பட்டதுதான் இதற்கு முக்கிய காரணம். மேலும் இவ் வன்னித் தலைவர்கள் சிங்கள மன்னர்களை எதிர்க்குமளவு வலிமையும் பெற்றிருந்தனர் என்பது மற்றொரு காரணமாகும். (சூழவம்சம்: அத் Lx. குறிப்பு: 36-44). இவைபற்றிச் சில சான்றுகள் வருமாறு:

அ) பொலநறுவையில் இருந்த தந்ததாது மாளிகையைப் பாதுகாப்பதற்கு வன்னியர் தலைமையிலான வேளைக்காரப் படையினர் அமர்த்தப்பட்டனர்.

ஆ) இரண்டாம் கஜபாகு (1137-1153) பொலநறுவையில் ஆட்சி செய்தபோது முதலாம் விஜயபாகுவின் மகனான மானுபரணனும் அவனது தம்பிகளாகிய கீர்த்திசிறிமேவன், சிறீவல்லபன் ஆகியோரும் பொலநறுவையில் இருந்த வேளைக்காரப் படையினரின் துணை கொண்டு

இரண்டாம் கஜபாகுவிற்கு எதிராக கிளர்ச்சி செய்தனர். (சூழவம்சம் அத் Lx111 - குறிப்பு 24,29)

இ) லோகநாதன் என்ற தளபதி ஒரு விகாரை அமைத்து அதற்கு "வேளைக்கார விகாரை" எனப் பெயரிட்டு அவ்விகாரையைப் பாதுகாக்கும் பொறுப்பை வேளைக்காரப் படையிடம் ஒப்படைக்கப்பட்டதாக பதவியாவில் கண்டெடுக்கப்பட்ட ஒரு கல் வெட்டுக் கூறுகின்றது. (Journal of Royal Asiatic Society , Ceylon Branch Vol 111. Part 11, பக்: 261)

ஈ) சேதரையன் வேளைக்காரப் படைத்தலைவன் மாகோனின் உபராஜனான குளக்கோட்டன் என்னும் கஜபாகுவிற்கு உதவியமைபற்றி பொலநறுவை ரங்கோத் விகாரைக் கல்வெட்டுக் கூறுகின்றது. (Ceylon Tamil Inscriptions, Vol. 1. பக்கம் 24-26)

இக் குறிப்புக்கள் மாகோன் வருகைக்கு முன் ஈழத்தில் வன்னியர் பெற்றிருந்த செல்வாக்கையும் முக்கியத்துவத்தையும் எடுத்துக் காட்டுகின்றன.

மாகோன் வருகை:-

கி. பி. 13ம் நூற்றாண்டில் கலிங்கமாகோன் (கி. பி. 1215 - 1255) பெரும்படையுடன் இலங்கைக்கு வந்தான். அவன் பொலநறுவையைக் கைப்பற்றி இராஜரட்டை முழுவதையும் இலங்கையின் வேறு சில பகுதிகளையும் ஆட்சி செய்தான். இவனுக்கு உதவியாக இவனுடைய உபராஜன் குளக்கோட்டன் (கயவாகு) இவனுடன் இணைந்து செயற்பட்டான். இவர்களுடைய காலத்தில் தமிழ் நாட்டில் காரைக்கால், தொண்டை மண்டலம், காளிகட்டம், புத்தூர், மதுரை, திருச்சீராப்பள்ளி, மருங்கூர் முதலிய இடங்களில் இருந்து பல வன்னித் தலைவர்கள் அழைக்கப்பட்டு மாகோனின் ஆட்சிப் பொறுப்பில் இருந்த ராஜரட்டைப் பிரதேசத்திலும், மன்னார், சிலாபம், திருகோணமலை, தம்பலகாமம், வெருகல், மட்டக்களப்பு, திருக்கோயில் முதலிய இடங்களிலும் குடியமர்த்தப்பட்டனர். அவர்களின் தலைவர்களுக்கு வன்னிமைப் பட்டம் அளித்து வன்னித் தலைவர்களாக நியமித்தான்.

திருகோணமலையில் திருக்கோணேஸ்வர ஆலயத்திற்குப் பொறுப்பாக ஏழு வரிப்பத்தர்களும் இருபத்தியொரு தானத்தார்களும் நியமிக்கப்பட்டு இவர்களுக்கு நிவந்தங்கள் (காணி) வழங்கப்பட்ட விபரம் கோணேசர் கல்வெட்டு என்ற நூலில் இடம் பெறுகின்றது. இவர்களுக்குத் தலைவனாக தனியுண்ணாப் பூபாலன் என்னும் வன்னியன் நியமிக்கப்பட்டான்.

இவ்வாறே புத்தளத்திலும் பல வன்னியர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் முக்குவ வன்னிமை என அழைக்கப்பட்டனர். இவர்கள் மலையாளத்தைச் சேர்தவர்கள். மாகோனின் படையில் இருந்தவர்களும் இதில் அடங்குவர். (க. தங்கேஸ்வரி குளக்கோட்டன் பக்: 63)

இவ்வகையில் மாகோனின் இலங்கை வருகை (1215) இலங்கை வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. ஆட்சி முறையிலும் மாற்றம் ஏற்பட்டது. பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு ராஜரட்டை முழுவதும் மாகோனின் ஆட்சிக்கு உட்பட்டது. சிங்கள அரசின் ராசதானிகள் தெற்கு நோக்கி நகர்ந்தன. அவை தம்பதெனியா, கம்பளை, குருநாகல், கோட்டை என இடம்பெயர்ந்தன. (க. தங்கேஸ்வரி மாகோன் வரலாறு பக்:74)

மாகோன் ஆட்சிக்காலத்திலும் அதற்குப் பின்னரும் இலங்கையில் பல பிரதேசங்கள் அன்னியரின் ஆட்சிக்கு உட்பட்டன. இவர்கள் திருகோணமலை வன்னிமைகள், புத்தளத்து வன்னிமைகள், மட்டக்களப்பு வன்னிமைகள் என அழைக்கப்பட்டன. இவ் வன்னித் தலைவர்கள் மூலம் மாகோன் அதிகாரப் பரவலாக்கம் செய்து கட்டுக்கோப்பான ஆட்சி முறை ஒன்றை நிறுவினான். அதனால் அவன் 40 வருடங்களுக்கு மேல் நிலையான ஆட்சியை மேற்கொள்ள முடிந்தது.

மாகோன் உருவாக்கிய வன்னிப் பிரதேசங்களே பின்னர் வன்னிப் பற்றுக்களாக மாறின. அவை அன்னியரான போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத்திலும் நிலைத்து நின்று பின்னர் மங்கி மறைந்தன.

மட்டக்களப்பிலும் முக்குவ வன்னிமைகள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் மாகோனின் படையில் இருந்த கேரளா வீரர்கள். மாகோன் பொலநறுவையைக் கைப்பற்றிய பின் மட்டக்களப்பில் தனது படைவீரர்களுக்கு நிலம் கொடுத்து குடியமர்த்தினான் என்ற செய்தி சூளவம்சத்தில் இடம் பெறுகின்றது. மேலும் விபரங்கள் மட்டக்களப்பு மாண்மியம் என்ற நூலில் இடம் பெறுகின்றன.

இவ்வகையில் மாகோனின் இலங்கை வருகை (கி. பி 1215) இலங்கை வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. ஆட்சி முறையிலும் மாற்றம் ஏற்பட்டது. பொலநறுவை இராசதானி மாகோன் வசமாகியதைத் தொடர்ந்து சிங்கள அரசின் இராசதானி தெற்கு நோக்கி நகர்ந்தது. தம்பதெனியா, யாப்பகூவ, குருநாகல், கம்பளை, கோட்டை என அது இடம் மாறியது.

மாகோன் ஆட்சிக்காலத்திலும் அதன் பின்னரும் இலங்கையில் பல பிரதேசங்கள் வன்னியரின் ஆட்சிக்கு உட்பட்டன. இவைகள் திருமலை வன்னிமை, மட்டக்களப்பு வன்னிமை, புத்தளத்து வன்னிமை என அழைக்கப்பட்டன. இவ் வன்னித் தலைவர்கள் மூலம் மாகோன் அதிகாரப் பரவலாக்கம் செய்து கட்டுக்கோப்பான ஆட்சி முறை ஒன்றை நிறுவினான். மாகோன் காலத்தில் வன்னியர் ஆட்சிப் பிரதேசங்களாக இருந்தவை பின்னால் வன்னிப் பற்றுக்கள் என

அழைக்கப்பட்டன. இவ்வாறே மாகோன் காலத்திலும் மாகோனுக்குப் பின்னும் ஈழத்தில் வன்னியர் ஆட்சியும் செல்வாக்கும் சிங்கள மன்னர் ஆட்சியுடன் பின்னிப் பிணைந்திருந்தன.

கி. பி. 12ம் நூற்றாண்டுக்குப் பின்னர் மாகோன் ஆட்சி பொலநறுவையில் நிலைபெற்றது. இக்காலப் பகுதியில் சிங்கள மன்னர் தெற்கே தம்பதெனியா, கம்பளை, கோட்டை, குருநாகல் முதலிய இடங்களில் இராசதானி அமைத்து ஆட்சி செய்தனர். ஆங்காங்கே சில வன்னிச் சிற்றரசுகள் இருந்தன. இவர்களை அடக்கி ஆண்ட 3ம் விஜயபாகு (1232-1256) வன்னிராசன் என்ற விருதுப் பெயருடன் மாயரட்டையில் அதிகாரம் செலுத்தினான். (சூளவம்சம் Lxxx1- குறிப்பு 2)

இரண்டாம் பராக்கிரமபாகு (1236-1272) வன்னியரசர்கள் மீது அதிகாரம் செலுத்தினான் என்பதனையும் சூளவம்சக் குறிப்புக்கள் கூறுகின்றன. (சூளவம்சம் Lxxx111 குறிப்பு: 10)

இரண்டாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் இளவரசனான விஜயபாகு (IV) அனுராதபுரம் சென்றபோது வன்னியர்கள் அவனை வரவழைத்து கௌரவித்துத் திறை கொடுத்தனர் என்ற ஒரு குறிப்பும் சூளவம்சத்தில் காணப்படுகின்றது. (சூளவம்சம் Lxxxviii- குறிப்பு 87-89)

இக்குறிப்பில் இருந்து சில உண்மைகள் வெளிப்படுகின்றன.

அ) சோழர் காலத்தில் பொலநறுவையில் நிலைத்திருந்த வன்னியர்கள் படிப்படியாக ஏனைய பகுதிகளுக்கும் பரவினர்.

ஆ) மாயரட்டை, ரோஹண முதலிய பிரதேசங்களில் பல வன்னிச் சிற்றரசுகள் உருவாகின.

இ) இவர்கள் சிங்கள மன்னர்களுடன் பரஸ்பரம் நல்லுறவை வைத்திருந்தனர்.

ஈ) வன்னியரை வெளியேற்றமுடியாத காரணத்தினாலேயே இவ் வன்னிச் சிற்றரசுகளைச் சிங்கள மன்னர்கள் ஏற்றுக் கொண்டனர்.

உ) இவ் வன்னிச் சிற்றரசுகள் சிங்கள மன்னர்களின் அதிகாரத்தின் கீழ் இருப்பதாகச் சொல்லப்பட்டாலும் அவைகள் சுதந்திரமாகவே இயங்கின.

வன்னியர் பிரிவுகள்:-

மாகோன் குடியமர்த்திய வன்னியர் விபரம் வருமாறு.

அ) திருகோணமலை வன்னிமை:-

மாகோன் காலத்தில் அவனது உபராஜனான குளக்கோட்டன் என்னும் கஜபாகு திருகோணமலையில் ஆட்சிசெய்தான். மாகோன் பணிப்பின்பேரில் குளக்கோட்டன் இங்கு வன்னியரைக் குடியமர்த்தினான்.

கவிராஜவரோதயர் இயற்றிய “கோணேசர் கல்வெட்டு” என்னும் நூலில் பின்வரும் விபரங்கள் இடம் பெறுகின்றன.

குளக்கோட்டனால் தென்னிந்தியாவில் மருங்கூடலில் இருந்து அழைத்து வரப்பட்ட ஆறு சோழக் குடிகளும் இருபத்தொரு தானத்தாரும் திருகோணமலையில் குடியமர்த்தப்பட்டனர். இவர்களிடம் கோயில் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது. மதுரையில் இருந்து வரவழைக்கப்பட்ட தனியுன்னாப் பூபால வன்னியன் தலைவனாக நியமிக்கப்பட்டான்.

இவ்வாறே திருநெல்வேலியில் இருந்து அழைத்துவரப்பட்ட காராளவன்னியன் கட்டுக்குளப் பற்றிற்குத் தலைவனாக்கப்பட்டான். கட்டுக்குளப்பற்று பின்னால் வன்னிப் பிரதேசத்தில் முக்கிய இடம் பெற்றது.

ஆ) புத்தளத்து வன்னிமை:

புத்தளத்தில் ஆட்சி செலுத்திய வன்னியர்கள் முக்குவ வன்னிமை என அழைக்கப்பட்டனர். இவர்களும் மாகோன் காலத்தில் வரவழைக்கப்பட்ட கேரள வன்னியர்களே. மாகோன் இலங்கைக்கு வந்தபோது அவன் படையில் மலையாள வீரர்களும் இருந்தனர். முக்குவா என்னும் வம்சத்தினர் கேரளத்தில் (மலையாளம்) இன்னும் உள்ளனர். அவர்களுக்கும் மட்டக்களப்பு முக்குவ வன்னியர்களுக்கும் சம்பந்தம் இருப்பதாகக் கொள்ளமுடியும்.

ஆறாம் பராக்கிரமபாகு முக்குவ வன்னியர்களுடன் மூன்று மாதங்கள் கடும்போர் செய்து அப்பிரதேசத்தைக் கைப்பற்றியதாக “முக்கர கட்டன” என்ற சிங்கள நூல் கூறுகின்றது. ஆனால் அதற்குப் பின்னரும் அங்கு வன்னியர் ஆட்சி தொடர்ந்திருந்தது என்பது வரலாறு.

கி. பி. 16ம் நூற்றாண்டில் நவரத்தின வன்னியன் புத்தள வன்னியனாக நியமிக்கப்பட்டான். இந் நியமனம் 7ம் புவனேகபாகுவால் வரவழைக்கப்பட்டது என்பதனை ஒரு செப்பேடு குறிப்பிடுகின்றது.

இ) மட்டக்களப்பு வன்னிமை:

மட்டக்களப்பு வன்னிமை பற்றிய செய்திகள் “மட்டக்களப்பு மாண்மியம்” என்னும் நூலில் இடம்பெறுகின்றது. கலிங்கமாகன் காளிகட்டத்தில் இருந்து முக்குவரை அழைத்து வந்து அவர்களின் படைத்தலைவர்களை மட்டக்களப்பின்

வன்னியர்களாக நியமித்தான். மாகோன் பொலநறுவையைக் கைப்பற்றிய பின் தனது மலையாள வீரர்களை மட்டக்களப்புப் பகுதியில் குடியமர்த்தி அப்பிரதேசத்திற்கு வன்னித் தலைவர்களை நியமித்திருக்க வேண்டும். சுகதிரன் முதலிய கலிங்க சிற்றரசர் பரம்பரை மட்டக்களப்பில் ஆட்சி செய்தமைபற்றி மட்டக்களப்பு மாண்மியம் கூறுகின்றது.

மாகோன் தோம்பாவையை (பொலநறுவையை)க் கைப்பற்றி படை ஆட்சியை வன்னியருக்குக் கொடுத்தான் என்று மேலும் இந்நூல் கூறுகின்றது. (பக்: 54) எனவே மட்டக்களப்புப் பகுதியில் குடியமர்த்தப்பட்ட மலையாளப் படை வீரர்கள் "படையாட்டி" என்ற குடிப்பெயர் பெற்றனர். மாகோன் தன் படைவீரர்களுக்கு நிலங்களையும் சன்மானங்களையும் வழங்கியமைபற்றி சூளவம்சத்திலும் குறிப்பிடப்படுகின்றது. (சூளவம்சம் Lxxx - குறிப்பு: 61-71,74-79)

சீதவாக்கையில் இருந்து மட்டக்களப்புக்குச் சென்ற ஏழு வன்னியர்களைப் பற்றிய குறிப்பு நாடுகாடு பரவணிக் கல்வெட்டில் உள்ளது.

ஈ) அடங்காப்பற்று வன்னிமை:

வட இலங்கையில் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய பிரதேசம் முழுவதும் அடங்காப் பற்றில் அடங்கியிருந்தது. மன்னாரில் இருந்து திருகோணமலை வரை இப்பிரதேசம் பரந்திருந்ததென பாதிரியார் குவேறோஸ் என்பவர் கூறுகின்றார். ஏழு வன்னியர் பிரதேசங்கள் இதில் அடங்கியிருந்தன. இந்த ஏழு வன்னியர்கள் பற்றி வையாபாடலில் ஒரு கற்பனைக் கதை உள்ளது. இதை வரலாறாகக் கொள்வதற்கில்லை.

நாம் ஏற்கனவே கூறுதியது போல் இப்பிரதேசம் முழுவதும் மாகோனின் கீழ் இருந்தது. இப்பிரதேசத்தின் மேற்குக் கரையோரம் முழுவதும் மாகோனின் பாதுகாப்புப் படைகள் தளமிட்டிருந்தன. எனவே அவன் காலத்திற்கு முன் அவ்விடங்களில் வன்னி ஆட்சி ஏற்பட்டிருக்கும் என்று கூறமுடியாது. மாகோன் காலத்தில் யாழ்ப்பாணக்குடா தனியரசாக இருந்தது.

மாகோனிற்குப் பின்னரே யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கரவத்திகளின் ஆட்சி ஏற்பட்டது. ஆகவே அடங்காப்பற்று வன்னிப் பிரதேசத்தில் மாகோன் காலத்து வன்னியர்களே ஆட்சி செய்தனர் எனக் கொள்ளலாம்.

வன்னிப் பிரதேசத்து வன்னிமைகள்:-

வன்னியர்கள் யாழ்ப்பாணம் முதல் மட்டக்களப்புவரை குறுநில மன்னர்களாக ஆட்சி செய்தபோதும் வன்னிப் பிரதேசம் என நாம் இப்போது அழைக்கும் அடங்காப்பற்றுப் பிரதேசத்திலேயே அவர்களது ஆட்சி சுதந்திரத்துடனும், இறைமையுடனும் திகழ்ந்தது. மன்னார் முதல் திருகோணமலைவரை நீண்டு மிகப் பரந்த நிலப்பரப்பைக் கொண்ட இப்பிரதேசத்தில் ஆட்சி செலுத்திய ஏழு வன்னியரசர்களும் அரசர்களுக்குரிய இறைமையுடன் ஆட்சி செலுத்தியதை வரலாறு கூறுகின்றது. பிற்காலத்தில் போத்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரை எதிர்க்கும் அளவுக்கு வீரமும் தீரமும் கொண்டிருந்தனர்.

தற்போதைய மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய இவ் வன்னிப் பிரதேசத்தில் அன்று பின்வரும் ஏழு வன்னியர் ஆட்சிப்பிரதேசங்கள் அடங்கியிருந்தன. அவையாவன முள்ளியவளை, பனங்காமம், கருநாவல்பற்று, தென்னமரவாடி, மேல்பற்று, கரிக்கட்டுமூலை, செட்டிகுளம்பற்று ஆகியனவாகும்.

இவ் வன்னிப்பிரதேசத்தை அடங்காப்பற்று என்று அழைப்பதற்குத் தகுந்த காரணங்கள் இருந்தன. இவ் வன்னியர்கள் யாழ்ப்பாணத்து மன்னர்களுக்குத் திறை கொடுக்க மறுத்தனர். அவ்வாறே பின்னர் போத்துக்கேய, ஒல்லாந்த ஆழுனர்களுக்கும் திறை கொடுக்க மறுத்தனர்.

மேற்படி வன்னியர்கள் போத்துக்கேயர், ஒல்லாந்தர் காலம்வரை சுதந்திரமாகச் செயற்பட்டு அதற்குப் பின்னர் படிப்படியாகத் தமது நிலையில் தழர்ந்து போத்தக்கேயரின் பீரங்கிகளுக்கும் துப்பாக்கிகளுக்கும் அடிபணியும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாயினர். ஆனாலும் கயிலாய வன்னியன் (பனங்காமம்) பண்டாரவன்னியனின் (பனங்காமம்) முதலிய வன்னியர்கள் இறுதிவரை தமது இறைமையைப் பாதுகாத்தனர். உயிரைத் துச்சமாக மதித்து அன்னியருக்கு அடிபணிய மறுத்து வரலாற்றை உருவாக்கினர். அவ்வகையில் பனங்காம வன்னியனான கயிலை வன்னியனைப் பற்றிய பின்வரும் செய்தி கவனத்தில் கொள்ளத்தக்கது.

போத்துக்கேயர் இலங்கையின் பல பகுதிகளையும் கைப்பற்றி ஆட்சி செலுத்தினார்கள். ஆனால் வன்னிப் பகுதியைச் சுலபமாகக் கைப்பற்ற முடியவில்லை. டச்சுக்காலத்தில் வன்னியர்களின் இராசதானியாக விளங்கிய பனங்காமத்தை ஆண்ட கைலைவன்னியன் அஞ்சாநெஞ்சத்துடன் ஆண்டான். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், நீர்கொழும்பு, கோட்டை, திருகோணமலை யாவும் டச்சு ஆட்சிக்கு அடிபணிந்தது வரி செலுத்தின. பனங்காம வன்னியனும் திறை செலுத்த வேண்டுமென யாழ்ப்பாணத்தை ஆண்ட டச்சுக் கவர்ணர் 12 ஆண்டுகள் தொடர்ந்து ஓலை அனுப்பிக் கொண்டே இருந்தான். கைலை வன்னியன் கவர்ணரின் ஆணையை மீறி 12 ஆண்டுகள் வரி செலுத்த மறுத்து வன்னியின் சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாத்திருக்கின்றான். (சி. நவரெத்தினம் வன்னி அன் வன்னியாஸ்).

இதேவிடயம் டச்சுக் கவர்ணரான தோமஸ்வான்றீ (1692-1697) அறிக்கையிலும் இடம்பெற்றுள்ளது. அவர் கூற்று வருமாறு. They were a constarct source of irritation to the Dutch as they had been to the Portugugse. The chets would not of then pay their tribute of elephants and their land rents and some even would not appear at the annual durbar, when they were summoned by the Governors. This was specially the case with kaylavanniya of panankamam, who failed to appear before the Dutch Governor for Twelve consecutive years. (Report Dutch Governor Thomas Van Rhee 1692-1697)

தொடர்ந்து 12 வருடம் திறை கட்டாது தீரத்துடன் ஆட்சி செய்த மேற்படி கைலை வன்னியன் 1678ல் இறந்தபின் அவனது பேரனான காசியனார் என்னும் வன்னியன் டச்சுக் கவர்ணருக்கு திறை செலுத்த ஒத்துக் கொண்டான். இச் செய்தியை பெருமகிழ்ச்சிக்குரிய ஒரு விடயமாக அப்போதைய ஒல்லாந்த தேசாதிபதி தன் மேலதிகாரிகளுக்கு அறிக்கை செய்துள்ளான்.

பண்டாரவன்னியன்:-

கைலை வன்னியனைப்போலவே ஆங்கிலேயர் காலத்தில் அடிபணிய மறுத்து தற்துணிபாக ஆட்சி செலுத்தியவன் பண்டாரவன்னியன். இவனது வீரவரலாறு கிட்டத்தட்ட தமிழகத்தின் பாஞ்சாலங்குறுச்சி மன்னனான வீரபாண்டிய கட்டப்பொம்மனின் வரலாறை ஒத்திருக்கின்றது. இவன் ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் பனங்காமத்து வன்னியனாகப் பொறுப்பேற்றான். பனங்காம வன்னிப் பற்று அடங்காப்பற்றுப் பிரதேசத்தில் உள்ள 7 வன்னிமைப் பற்றுக்களில் பெரியதொன்றாகும். இதனால் அடங்காப்பற்று வன்னியர்களில் இவன் தலைவனாக மதிக்கப்பட்டான். இயல்பாகவே அன்னியர் ஆட்சியிலும் அடக்குமுறையிலும் வெறுப்புக் கொண்டிருந்த அடங்காப்பற்று வன்னியர்கள் ஆங்கிலேயருக்கு எதிரான நிலைப்பாடு கொண்ட கண்டி இராட்சியத்திற்குச் சார்பாக இருந்தனர். அன்னியரை எதிர்ப்பதில் கண்டி மன்னரும் அடங்காப்பற்று வன்னியர்களும் பரஸ்பரம் உதவி செய்தனர். இந்த நட்புறவு பண்டாரவன்னியன் காலத்தில் மேலும் வலுவடைந்தது. ஆங்கிலேயர்கள் முதல் முறை கண்டியைக் கைப்பற்றுவதற்காக படை எடுத்தபோது பண்டாரவன்னியன் தனது படைவீரர்களைத் திரட்டி கண்டி மன்னனுக்கு உதவியாக அனுப்பினான். இப்போரில் பண்டாரவன்னியன் படைவீரர்கள் காட்டிய வீரம் ஆங்கிலேயரை அதிர்ச்சி கொள்ளச் செய்தது. இப் போரில் கண்டி மன்னன் வெற்றிபெற ஆங்கிலப் படைகள் பின்வாங்க நேர்ந்தது. இப்போது அவர்கள் கவனம் பண்டாரவன்னியன் மீது திரும்பியது. வன்னிப் பிரதேசத்தைக் கைப்பற்றினால் வன்னியர்களை அடக்குவதுடன் கண்டி மன்னனுக்குப் படையுதவி கிடைப்பதையும் தடுக்கலாம் என அவர்கள் எண்ணினர். அதற்காக ஒரு சூழ்ச்சி செய்தனர்.

பண்டாரவன்னியன் கண்டி அரசனிடம் சென்ற சமயம் கரிக்கட்டுமூலை வன்னியனான காக்கைவன்னியனைத் தம்வசமாக்கி அவன் ஆட்சிப்பிரதேசத்தில் உள்ள முல்லைத்தீவில் ஒரு கோட்டையை அவசரமாகக் கட்டிமுடித்தனர். இரகசியமாக இவ்வேலை மேற்கொள்ளப்பட்டதால் காலம் தாழ்த்தியே இச்செய்தி பண்டாரவன்னியனுக்கு எட்டியது. உடனே அவன் தனது யானைப்படை, குதிரைப்படை, காலாட் படைகளுடன் அக் கோட்டையைத் தகர்ப்பதற்காகப் புறப்பட்டான்.

கப்ரன் வொன்றிபேக் தலைமையிலான ஆங்கிலப்படை பீரங்கிகள், துப்பாக்கிகள் கொண்டு போராடினர். ஆனாலும் பண்டாரவன்னியன் முல்லைத்தீவுக் கோட்டைத் தரைமட்டமாக்கினான். கப்பரன் வொன்றிபேக் தன் படைவீரர்களுடன் பின்வாங்கி ஓடினான். (இது நடைபெற்றது 1803 ஆகஸ்ட் மாதம் 24ம் திகதி)

இதன் பின்னர் ஆங்கிலேயர் யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை ஆகிய இடங்களில் இருந்து ஆங்கிலப்படைகளைத் திரட்டினர்.

ஆங்கிலேயரின் சூழ்ச்சி:-

பண்டாரவன்னியனைத் தோற்கடிப்பற்காக ஆங்கிலேயர் பின்வரும் முப்படைகளையும் திரட்டினர்.

1. திருகோணமலையில் இருந்து கப்டன் எட்வாட்மட்ஜ் தலைமையிலான படை.
2. யாழ்ப்பாணத்தில் இருந்து லெப்ரினன் யோன் ஜிவல் தலைமையிலன படை.
3. மன்னாரில் இருந்து கப்ரன் வொண்ட்றிபேர்க் தலைமையிலான படை.

இவ் ஏற்பாட்டின் படி மூன்று படைகளும் மூன்று திக்குக்களிலும் இருந்து பண்டாரவன்னியனைச் சுற்றிவளைத்துத் தாக்கவேண்டும் என்பது வொண்ட்றிபேர்க்கின் திட்டமாகும். இதன்படியாக படைகள் வன்னிநோக்கி நகரும்போது மன்னாரில் இருந்து படைகள் வரும் செய்தியைப் பண்டாரவன்னியன் அறிந்திருக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் இருந்தும், திருகோணமலையில் இருந்தும் படைகள் வரும் செய்தியையும் அவன் அறிந்திருந்ததனால் அவற்றை எதிர் கொள்ளத் தகுந்த நடவடிக்கைகளைச் செய்திருந்தான். திருகோணமலையில் இருந்து வரும் படையினை எதிர்ப்பதற்காகத் தனது மைத்துணன் குமாரசிங்கவன்னியன் தலைமையிலான படையை ஏற்பாடு செய்தான். யாழ்ப்பாணத்தில் இருந்தது வரும்படையை எதிர் கொள்வதற்காகத் தனது தலைமையில் ஒரு படையை ஏற்பாடு செய்தான்.

இப் படை ஒட்டுசுட்டானுக்கு அண்மையில் உள்ள கற்சிலைமடு என்னும் இடத்தில் முகாமிட்டிருந்தது. திடீரென எதிர்பாராதவிதமாகச் சுற்றிவளைத்த மன்னார் படை அவனை 1803ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31ம் திகதி அதிகாலை 5.00 மணியளவில் அவன் படைகள் நித்திரையில் இருந்த சமயம் மிகச் சுலபமாகத் தாக்கித் தோற்கடித்தனர். இத் தோற்கடிப்பின் நினைவாக வொண்ட்றிபேர்க் அமைத்த நடுகல்லினையே இன்றும் காண்கின்றோம். அதில் **"Here about captain Von Driberg defeated Pandaravaniya 31st October 1803"** எனப் பொறிக்கப்பட்டுள்ளது.

வன்னியின் வீழ்ச்சி:-

மாகோனின் ஆட்சிக்குப் பின் வன்னியர் ஆட்சி தளர்ந்தது. ஆனாலும் இலங்கையின் வடபகுதியில் உள்ள அடங்காப்பற்றின் வன்னிப்பற்றுக்கள் மட்டும் போதுக்கேய ஒல்லாந்த ஆங்கிலேய ஆட்சிவரையும் நீடித்தன. இவ்வன்னிப்பற்றுக்கள் யாழ்ப்பாணத்து மன்னர்களின் கீழ் இருந்தபோதும் பல வன்னியர் பற்றுக்கள் சுதந்திரமாக இயங்கின. அன்னிய ஆட்சியாளர்களுக்குத் திறை கொடுப்பதையும் ஆண்டு தோறும் அவர்கள் தர்பாருக்குச் செல்வதையும் தவிர்த்தனர். காலத்திற்குக் காலம் வன்னிமீது எடுக்கப்பட்ட படையெடுப்புக்கள் அனைத்தினையும் எதிர்த்த பண்டாரவன்னியன் இறுதியாக 1811ல் உடையாவூர் என்னும் இடத்தில் நடைபொற்ற போரில் காயமுற்று பனங்காமத்தில் உள்ள தனது சகோதரியின் இல்லத்தில் மரணமடைந்தான்.

பன்டாரவன்னியன் தனது 34ம் வயதில் வீரமரணம் எய்திய பின் வன்னியர் ஆட்சி தளர்வுற்று மங்கி மறைந்தது.

அடக்குமுறைக்கு எதிரான எழுச்சி:-

எதேச்சாதிகாரத்திற்கும் அடக்குமுறைக்கும் எதிரான எழுச்சி உலகில் எல்லா நாடுகளிலும் எல்லாக்காலத்திலும் ஏற்பட்டிருப்பதை வரலாற்றிலும் இன்றும் பார்க்கின்றோம். இந்தப் பின்னணியில் பண்டாரவன்னியனின் வீரவாழ்க்கை ஒரு முடிவில்லாத நீண்ட வரலாற்றின் ஒரு அத்தியாயம் என்றே கொள்ளவேண்டும்.

இந்தியாவில் வீர சாவர்க்கார், ஜான்சிராணி, நானாசாகேப் தாந்தியாதோபே, சுபாஷ் சந்திரபோஸ் - தமிழகத்தில் வீரபாண்டிய கட்டப்பொம்மன் இலங்கையில் கெப்பட்டிப்பொல, வீரபுரான் அப்பு வீரவாழ்க்கை ஒரேவிதமாக அமைந்திருப்பதைப் பார்க்கின்றோம்.

ஒரு சில வீர மன்னர்களின் வாழ்க்கையானது காட்டிக் கொடுக்கும் துரோகிகளினால் பாழாகிப்போனதை வரலாறு பதிவு செய்துள்ளது. அதுவும் ஒரு வரலாற்று நியதியாகவே தொடர்கின்றது.

அடங்காப்பற்று வன்னியில் அடங்காத வன்னியர்களும் அடங்கிப்போன வன்னியர்களும் இருந்திருக்கிறார்கள். ஏன் காட்டிக் கொடுக்கும் காக்கை வன்னியர்களும் இருந்திருக்கிறார்கள். ஆனாலும் ஒரு கைலைவன்னியன், ஒரு பண்டாரவன்னியன் போன்ற அஞ்சா நெஞ்சங் கொண்டவர்களின் வாழ்க்கையால் வன்னிப் பிரதேசத்தின் புகழ் குன்றின் விளக்காக ஏற்றி வைக்கப்பட்டது. (History repeats itself, வரலாறு மீண்டும் வரும்).

வன்னிமகள்

கொன்றைமலர் பன்னீராம் தேன்வதையோ பன்னீராம்
கொன்றைமலர் சோடனையாம் காட்டாறு முழவதுமாம்
பன்றியினம் அம்பெய்ய பாடல்களோ குயில்பாட
குன்றுகள் சிம்மாசனமாம் கோலோச்சும் வன்னிமகள்
நல்ல மயில் பரதநாட்டியத்தால் மகிழ்வூட்ட
கன்றுகளோ பால்சிதற கறவையினம் நடைபயில
கொண்டலவள் தூசுதட்ட கோலாட்டம் கொம்பன்கள்
என்றும் வேய்குழலூத இரவு பகல் தமிழாட்சி

புன்னுனிமேல் நீர்பனிக்கப் போதவிழ்த்தேன் மலர்சனிக்க
கன்னலென சிறாரிளிக்க காதலரோ சயனிக்க
மின்னலதோ மினுமினுக்க மேன்முகிலோ கர்ச்சிக்க
புன்னகையோ புவனிக்க புதுக்குகிறாள் வன்னிமகள்

அவிசொரிய ஆச்சொரிய அழகுநிலாப் பால்சொரிய
சிவிகையிலே கொம்பசைய சென்னெல்லுத் தலையசைய
கவிதையிலே ஏடசைய கருவண்டு தேன்நுகர
தவிசிருந்து தமிழிசைப்பக் கோலோச்சும் வன்னிமகள்

சிவமுருகன் வாசுதேவன்

மலைவாசி நண்பனுக்கு ஒரு கடிதம்

எழுந்த போராட்டங்களும்
விழுந்த உயிர்களும்
உடைந்த வரலாறுகளும்
நிகழ்ந்து கொண்டிருக்கையில்
தமிழ் எனும் உச்சரிப்பு
உயிர்த்துடிப்பில் இருக்கும்போது!

நாங்கள் நிற்பது
நாலாயிரம் மைல்கள் தூரத்தில் போலுள்ளது
வரலாற்றின் தூசி கூட
நம் சமுதாயமில்லாது போக.... போகிறது

ஆனால்.... !
இச்சையெனும் வட்டத்துள்
வெட்டிப் பேச்சுடன் இருந்து பயனென்ன !
நாங்கள் வரலாற்றில்
இல்லாவிடினும் பரவாயில்லை
வரலாற்றுக்கு உதவாவிடினும் பரவாயில்லை
வரலாற்றை கொச்சைப்படுத்தக் கூடாது

உங்களைப் போன்று - அந்த
மலை முகடுகளின் உச்சியிலிருந்து
இந்தப் போராட்டத்தையும்
சில சம்பவங்களையும்
ஏளனமாகப் பார்த்து ரசிக்க
என்னாலும் முடியவில்லை

ஆசையென்னும் அந்த
அந்தரங்க வட்டத்துள்
எனக்குத் தஞ்சம் தேட
அவசியமில்லை
எனது சந்தோசம்
என்னுடன் மரணித்து நாளாகிவிட்டது
என்மீது சந்தேகம் கொள்ளும்
உங்கள் உணர்வுகளுக்கு
அர்த்தமில்லை நான்- எமது
வரலாற்றை எழுதப்போகிறேன்
உடைந்து கிடக்கும் இந்த
சமுதாயத்தின் விழிப்புக்காக !
என் வசனங்களின் மீது
தங்களுக்குக் கோபமா - பரவாயில்லை
இனி நிகழ்கால தொழிலில்
ஒரு குறிப்பிட்ட தலைமுறைக்கு
என்னால் வழிகாட்ட முடியும்- ஆனால்
அதற்கு உங்களுக்குக் கோபமில்லையே !

நண்பா !
மலைமுகடுகளில்
மலைவாசியாக மட்டும் வாழாதீர்கள்
இறங்கி வந்து
இந்த அவலங்களையும் பாருங்கள்

இனியும் உனக்கு
கூறுவதாயின்.....
ஆசையை மறந்து
தமிழனாக வாழ வா......

எஸ். பி. பாலமுருகன்
பதுளை.

BALA SELVAM

Since 1987

தங்கநகை மற்றும்
பணமாற்றுச்
சேவையில்
தன்நிகரற்றவர்கள்



- JEWELLERY
- FOREIGN EXCHANGE
- EXPRESS MONEY TRANSFER

2480 Eglinton Avenue East #6
Scarborough, Ontario
M1K 2R5
(Eglinton/Midland)

Tel: (416) 264-4000
Fax: (416) 264-5596



மது ஒழிப்பு

மானிடப் பிறவி வாய்க்கப் பெற்ற-யாம்
மந்தைகள் போலொரு சிந்தை கொள்வதா
சிந்தையில் நேயமற்ற மானிடனே-நீ
சிதைவதனை யாருதான் பொறுப்பார்
முந்தையர் எம்முன்னோர் காட்டிய வழியில்
முனைப்புடன் செல்வதை விடுத்து-நீ
சந்தியில் விழுந்து சண்டைகள் செய்யும்
சங்கதி வாழ்க்கை வேண்டாம்.

எத்தனை இனிய இல்லற வாழ்வை
ஏற்றவர் நீவிர் நித்தமும் அதை
நிர்க்கதியாக்கும் நிலை கெட்ட மதுவை
நிட்சயம் ஒழிக்க வாரீர்
புத்தரைப் புனிதராய் யேசுவை மற்றும்
புலியுரு சிவனை முகமது நபியை
செப்பிய மக்கள் சேர்ந்திடும் வாழ்வை
செகத்தினில் அளிக்க வாரீர்.

காலை முதல் மாலை வரை-நீ
கடுமையாய் உழைத்து விட்டு
வீடு வரும் வேளை தனில் மதிகெட்டு
வீதியிலே இருக்கின்ற மதுக்கடையில்
விலை கொடுத்து குடிக்கின்ற மது வெல்லாம்
வியர்வையான குருதிக்கு விலையாகுமா?
எல்லோரும் ஓர் குரலில் அன்றோ
எடுத் துரைப்போம் மது ஒழிப்பை.

போதை தரும் போதைகளை-நாம்
போசாக்குப் பானம் போல்
வேளை தோறும் அருந்தி விட்டு
வெறுப்படையும் மனப் போக்கில்
வெறி என்ற பெயரெடுத்து- பின்பு
தறி கெட்டுப் பேசுகின்ற வார்த்தைகளை
தாரங்கள் படுகின்ற வேதனைக்கு
தட்சணையாய் ஏற்றிடுவோம் மது ஒறிப்பை.

சீரழியும் எம்மினத்தை-இன்று
சிதைப்பதில் மதுவுமொன்று
வள்ளுவனை பாரதியைக் காந்தியை
வாழ்ந்து காட்டிய கண்ணதாசனை
ஏடுகளில் எல்லோரும் கற்றுவிட்டு
ஏழைகளை ஏழையாக்கும் கொடிய
மது பற்றி எடுத்துரைக்க இங்கு
மக்களெல்லாம் வரவேண்டும் அணியாக.

அனுவொழிக்கக் குரல் கொடுக்கும்-ஐ.நா.
அழிகின்ற மானிடரை காப்பதென்றால்
அடுத்த குரல் எழுப்பவேணும்-மதுவுக்காய்
அதை விடுத்து மதுஒழிப்பு தினமென்றால்

மக்களெல்லாம் விழிப்பரோ! போதனைகள் போதும்
மகத்தான சாதனைகள் தான் வேணும்
மாளுகின்ற மானிடரை காப்பதென்றால்
மதுவுக்காய்த் தடைவேணும்-ஐ.நாவில்

இவ்வுலகின் வாழ்வு பற்றி-இரு
இதிகாசம் எடுத்துரைக்கும் முறை கண்டீர்
இராமனை சீதையை தருமனை வீமனை
வாழும் வழி சொன்ன-கீதையை யாம்
காதோடு காதாய் கன காலம் கற்ற பின்னும்
கசிப்பென்றும் கள்ளென்றும் மதுவென்றும்
கிடைத்ததெல்லாம் குடித்துவிட்டு
கீழான வாழ்க்கைக்கு கீறாதே கோடு.

நித்திலத்தில் நிம்மதியை-நிதம்
நித்திரையை குறைத்து விட்ட
மதுவென்ற போதைக்கு-சாவு
மணியடிக்க வேண்டுமெனில்
புரட்சியாய் வெடிக்கவேணும்-பின்பு
புவனமெல்லாம் கிளர்ச்சி வந்து
தடை என்ற உத்தரவு உலக
தடைச் சட்டமாக வரவேண்டும் மதுவுக்கு

அச்சமுள்ள நோயாக எயிட்ஸ்
அதையடுத்து நிற்கிறது போதைவஸ்து
இச்சையுள்ள இவ்வுலகில் இன்று
இளைஞர்களும் யுவதிகளும் அச்சமின்றி
அருந்தி நிற்கும் அபின் கஞ்சா கிரோயின்
அரும்பினிலே களையவேணும்
புத்தம் பூவுலகு இருபத்தியொன்றில்
புவனமெங்கும் எரியவேணும் மதுநெருப்பு.

மானிடனே வெடிலாக வீசுகின்ற மதுவோடு
வீறு கொண்டு அணைக்கிறாய் மனையாளை
போதை கொண்ட உன்னுடலை
பேதையிவள் பொறுப்பாளோ
சேதியற்ற இக்கதைக்கு செய்தியவள்
செய்கின்ற மரணம்தான்
பாவிகளே பறைசாற்றி கேட்கிறோம்
பாவமென்போம் மது வருந்தல் ஒழிக.

மதுவென்ற அரக்கனிடம்-எம்
மட்டுநகர் மக்களெல்லாம் மரணித்த காலமிதில்
மதுவொழிப்பு தினமென்ற மகுடத்தை
மாபெரும் இயக்கமாய் திரட்டி
மது வொழிக்க குரல் கொடுக்க
மக்களெல்லாம் வாரீர்! வாரீர்!
எம் நாட்டில் மதுவில்லை-என்ற நிலை கொண்டு
ஏற்றமுயர் இலங்கையைக் காத்திடுவோம்.

செல்வி சிந்து மணிமாறன்.வவுனியா

THARSHANAS

Sri Lankan, East Indian, Canadian Food Items, Fresh Fish,
Fresh Meat & Vegetables, Video & Audio Transfer

- இலங்கை இந்திய பலசரக்குச் சாமான்கள்
- எவர் சில்வர் பாத்திரங்கள்
- தமிழ், மலையாள, இந்தி வீடியோப் பிரதிகள்
- உடன் மரக்கறி வகைகள்
- உடன் மீன்வகைகள்
- பழவகைகள்

உங்கள் சகல தேவைகளையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்ய
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

தர்சனாஸ் சுப்பர் மார்க்கட்

3413 Fieldgate Drive
Mississauga, ON
Tel: (905) 625 8152

29 Dundas St. East
Mississauga, ON
(905) 2707576

2700 Kipling Avenue
Rexdale, ON
(416) 745 3317

Accident/Injuries

- Motor Vehicles Accident
- Slip & Fall

உங்களது இழப்பீட்டினை நியாயமான முறையில் சிறந்த சட்டவல்லுனரால் பெற்றுத்தர

அதுமட்டுமல்லாமல்



உங்களது மங்களகரமான வைபங்களை திறம்பட புகைப்படம் பிடித்துத் தரவும் நாடுங்கள்.

Rajh
Tel: (905) 855-6988 - Cell: (416) 889-3636

புலம் பெயர் இலக்கியம்

பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியன்
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்பாணம், இலங்கை.

தமிழிலக்கிய உலகில் அண்மையில் ஏறத்தாழ பத்தாண்டுகளாக ஒலிக்கத் தொடங்கிய ஒரு குரல் புலம் பெயர் இலக்கியம். இத் தொடர் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தின் புதியதொரு நீட்சியை (extension) குறிப்பதாக வழங்கி வருகின்றது. குறிப்பாகக் கடந்த ஏறத்தாள இருபது ஆண்டுகளில் ஈழத்தினை விட்டு அயல் நாடுகட்குப் புலம் பெயர்ந்தவர்கள் படைக்கும் இலக்கிய ஆக்கங்களையும் அத் தொடர்பில் நடாத்தும் செயற்பாடுகளையும் தொகுத்துச் சுட்டும் ஒரு தொடராக இது பயின்று வருகின்றது. அதிலும் குறிப்பாக ஈழத்தின் இனக்கொலைச் சூழலில் புலம் பெயர்ந்தவர்களின் புகலிட அனுபவங்கள் தொடர்பான இலக்கிய நிலைச் செயற்பாடுகளைக் குறிப்பிடுவதற்கான குறியீடாக இத் தொடரின் பொருட்பரப்பு, இவ்வகை இலக்கியங்கள் உருவான சமூக வரலாற்றுப் பகைப்புலம், இவ்வகை இலக்கிய முயர்ச்சிகளின் பொதுப் பண்பு, செல்நெறி மற்றும் இவை தொடர்பாக அண்மைக்காலத்தில் நிகழத் தொடங்கியுள்ள விமர்சனங்கள் முதலியன பற்றிய ஒரு அறிமுகம் ஆக இக் கட்டுரை அமைகின்றது.

புலம் பெயர் இலக்கியம் என்னும் தொடரின் பொருட்பரப்பை எப்படி வரையறுப்பது? தமிழ் இலக்கிய உலகில் இன்று முன்னிற்கும் வினா இது. (பார்க்க: தேவகாந்தனின் கட்டுரை. கணையாழி. அக். 2000.) இவ் வினா எழுவதற்குக் காரணம் ஈழத்தவர்களின் புலப் பெயர்ச்சி பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு நிலைகளில் பல்வேறு புகலிடங்களை நோக்கி நிகழ்ந்துள்ளமையே ஆகும். 19ம் நூற்றாண்டிலே ஈழத்துத் தமிழர் சிலர் மலேயா (இன்றைய மலேசியா) வுக்கு புலம் பெயர்ந்து சென்று குடியேறி உள்ளனர். 20ம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் (1950, 1960 களில்) ஐரோப்பிய நாடுகளை நோக்கி - குறிப்பாக இங்கிலாந்தை நோக்கி ஒரு புலப் பெயர்ச்சி நிகழ்ந்துள்ளது. 1970களில் மத்திய கிழக்கை நோக்கி ஒரு புலப் பெயர்ச்சி நடைபெற்றுள்ளது. இவ்வாறான புலப் பெயர்ச்சிகள் பொருள்தேடும் நோக்கிலும், உயர் அந்தஸ்த்துடைய வாழ்நிலை அமைத்துக் கொள்ளும் நோக்கிலும் மற்றும் உயர் கல்வி நோக்கிலும் மேற்கொள்ளப்பட்டவை ஆகும். 1980 - 1990களில் நிகழத் தொடங்கி இன்றுவரை தொடரும் புலப்பெயர்ச்சி ஈழத்தின் தமிழர் சமுதாயம் முழுவதையும் ஒட்டு மொத்தமாக உலுக்கி நிற்கும் பேரினவாத இனக் கொலைச் சூழலின் விளைபொருளாகும். உயிர் வாழ்வதற்கான அடிப்படை வசதி வாய்ப்புக்கள் மற்றும் பாதுகாப்பு என்பனவற்றை நாடித் தஞ்சமடையும் நோக்கிலான புலப் பெயர்வுகள் இவை. இவ்வகையான புலப் பெயர்வுகள் ஈழ மண்ணுக்குள்ளேயே பல முறை நிகழ்ந்துள்ளது. திருகோணமலைப் பகுதியின் எல்லையில் அமைந்த தொன்னமரவாடி என்ற கிராம மக்கள் ஒட்டு மொத்தமாக முல்லை மாவட்டத்திற்குத் தப்பியோடி அங்கேயே நிரந்தரமாகத் தங்கியுள்ளனர். யாழ்ப்பாணக் குடாநாட்டினர் பலர் தெற்கே புலம் பெயர்ந்து முல்லை மற்றும் கிளிநொச்சி மாவட்டப் பகுதிகளிலும் வவுனியாவிலும் வேறு பல பிரதேசங்களிலும் குடியேறி வாழ்கின்றனர். இவ்வாறு ஈழ மண்ணுக்குள்ளேயே புலம் பெயர்ந்து வாழாமல் நாட்டை முழுவதுமாகவே துறந்து அயல் நாடுகளில் தஞ்சமடையும் நிலையும் பலருக்கு ஏற்பட்டது. இவ்வகையில் அயலில் உள்ள இந்தியா, அவுஸ்திரேலியா, கனடா, ஐரோப்பிய நாடுகள் என்பன ஈழத் தமிழ் மக்களுக்குத் தஞ்சம் தரும் புகலிடங்களாயின.

ஈழத்தவர்களின் புலம் பெயர் நிலையின் பொது வரலாறு இது. இதில் இனக் கொலைச் சூழலில் தஞ்சங்கோரி புகலடைந்த புலப்பெயர்ச்சியாளர்களை மையப்படுத்தியே புலம் பெயர் இலக்கியம் என்ற எண்ணக் கரு கட்டமைக்கப் பட்டுள்ளமை தெரிகின்றது. அதிலும் ஈழ மண்ணுக்குள்ளேயே புலம் பெயர்ந்து வாழ்ந்து வருபவர்கள் கணிப்பிற்

கொள்ளப்படவில்லை. அவர்கள் தொடர்பான ஆக்கங்கள் ஈழத்து இலக்கியம் என்ற பொது வரையறைக்கு உட்பட்டது என்பது காரணமாகலாம். அயல் நாடான இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் - தஞ்சமடைந்து வாழ்பவர்களின் இலக்கிய ஆக்க முயர்ச்சிகளும் கவனத்தில் கொள்ளப்படவில்லை. தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் பண்பாட்டு நிலையில் பெரிதும் பொதுத் தன்மைகள் உள்ளததையும் தாய்நாடு - சேய்நாடு என்ற வகையில் பண்டு தொட்டு நிலவி வந்துள்ள உணர்வு நிலையின் தொடர்ச்சியும் இதற்குக் காரணமாகலாம். தமிழகத்தினின்று ஈழத்தவர் படைக்கும் இனக் கொலைப் பகைப்புலம் தொடர்பான மற்றும் புலம் பெயர் வாழ்வியல் தொடர்பான ஆக்கங்களும் ஈழத்து இலக்கியம் என்ற பொது வரையறைக்கு உட்படுவனவாக கொள்ளப்படுவதே இன்றைய நிலை.

இந் நிலையிற் புலம் பெயர் இலக்கியம் என்பதற்கான பொருட் பரப்பின் வரையறையானது அவுஸ்திரேலியா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகள், இவை தவிர்ந்த பிற நாடுகளில் வாழும் தமிழர்களின் - குறிப்பாக இனக் கொலைச் சூழலிற் புலம் பெயர்ந்தவர்களின் இலக்கிய முயர்ச்சிகளை மையப்படுத்தியதாகவே அமைகின்றது. இனக் கொலைச் சூழலிற்கு முன்பே பல்வேறு சந்தர்ப்பங்களில் குடிபெயர்ந்து அயல் நாடுகளில் குடியேறிய ஈழத் தமிழர்களின் சமகால - இனக் கொலைச் சூழல்களை மையப்படுத்திய ஆக்கங்களும் இந்த வரையறைக்குள் அமைகின்றன. (சான்று: ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்.)

(அண்மைக் காலம்வரை புலம் பெயர் இலக்கியம் பற்றி நிலவி வந்துள்ள எண்ணக் கருக்களை மையப்படுத்தியே இந்த வரையறை இங்கு பேசப்படுகின்றது. எதிர் காலத்தில் புலம் பெயர் இலக்கியம் என்பதன் பொருட் பரிமாணம் விரிவடையக் கூடும்.)

புலம் பெயர் இலக்கியங்கள் உருவான சமூக - வரலாற்றுப் பின்னணியை நோக்கும்போது முதலில் 1980க்கு முன்பு புலம் பெயர்ந்தோருக்கும் பின்பு புலம் பெயர்ந்தோருக்கும் இடையிலான வர்க்க நிலை, அனுபவ நிலை வேறுபாடுகள் என்பன தெளிவாகத் தெரிகின்றன. 1980களுக்கு முன்பு குடிபெயர்ந்து பிறநாடுகளுக்குச் சென்றோரிற் பெரும்பான்மையானவர்கள் உயர் நடுத்தர வர்க்கம் சார்ந்தவர்கள், ஆங்கிலம் கற்றவர்கள். மேலும் பொறியியல், மருத்துவம், கணக்கியல் முதலிய துறைகளில் வல்லுனர்களாக அமைந்தவர்கள். இத்தகையவர்கள் பெரும்பாலும் தலைநகராகிய கொழும்பில் வாழ்ந்தவர்களாக இருப்பர். குறிப்பிடத்தக்க தொகையினர் யாழ்ப்பாண நகரச் சார்பினரும் கூட. கல்வி மற்றும் வாழ்க்கையின் அந்தஸ்த்து என்பனவற்றை முதன்மைப்படுத்திய இவர்களுக்கு கலை, இலக்கியம் என்பன முக்கிய குறிக்கோளாக அமைந்திருக்க வாய்ப்பில்லை. 1980களிலும் அவற்றைத் தொடர்ந்தும் புலம் பெயர்ந்தவர்ளில் பெரும்பான்மையினர் - குறிப்பாக 1977 - 1983 காலப்பகுதியின் இனக் கொலை நிகழ்வுகளை அடுத்துப் புலம் பெயர்ந்தவர்களிற் பெரும்பான்மையோர் - ஈழத்தின் பல்வேறு கிராமப்பகுதிகள் மற்றும் குக்கிராமங்களைச் சார்ந்தவர்கள். யாழ்பாபணக் குடாநாட்டில் பல்வேறு கிராமங்கள், முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார் முதலிய மாவட்டப் பகுதிகளின் குக்கிராமங்களில் பாரம் பரியமாக வாழ்ந்து வருபவர்கள். பலர் அயற் கிராமத்தையே அறியாதவர்கள், உயர் கல்வி வாய்ப்புகள் பெறாதவர்கள். பலருக்குத் தமிழ் தவிர வேறு மொழியே தெரியாது. இவர்களிற் சிலர் கீழ் நடுத்தர வர்க்கத்தினர், சிலர் சிறு விவசாயிகள், சிலர் பல்வேறு சாதிசார் தொழில் வினைஞர்கள். இவ்வாறான வர்க்கநிலை, அறிவுநிலை, அனுபவ நிலை வேறுபாடுகள் புலம் பெயர் இலக்கிய உருவாக்கத்திற்கான அடிப்படைக் கூறுகள் எனக் கொள்ளப்பட வேண்டியன.

முன்பு புலம் பெயர்ந்தோர் திட்டமிட்டுச் செயற்பட்டவர்கள். புதிய சூழல்கள் பற்றி அறிந்து, அவற்றுடன் இசைவாக்கம் பெறுவதற்கான மனப்பக்குவம் எய்தியவர்களாகச் சென்றவர்கள். இதனால் மன அதிர்ச்சிக்கோ புதிய அனுபவங்கள் சார்ந்த மனக் கிளர்ச்சிகளுக்கோ அவர்கள் உள்ளாக வேண்டி சூழ்நிலைகள் மிகவும் குறைவாகவே இருந்திருக்கும். ஆனால் பின்னய புலப்பெயர்ச்சியாளர்கள் திட்டமிடல், புகலிட நாட்டில் எத்தகு பண்பாட்டுச் சூழலை எதிர் கொள்ளப் போகின்றோம் என்ற முன்னெச்சரிக்கை உணர்விற்கோ ஆய்வு நிலைத் தேர்வுக்கோ வாய்ப்பின்றி உயிர்பிழைத்தால் போதும் என அகதி நிலையிற் சென்றவர்கள், முற்றும் முழுதாகாத நிலையில் இருந்து வேரடி மண்ணோடு பிடுங்கி எடுக்கப்பட்ட பயிராகப் புதிய மண்ணில் வீசப்பட்டவர்கள். இப்பயிர்கள் புதிய நிலத்தில் அதன் சுவாத்தியத்திற்கு இசைவாக்கம் பெற்று வேருன்ற முற்படும் நிலையில் பல

படிநிலைகளில் அனுபவப் பரிமாணங்களை எய்த நேரும். இப் புதிய புலம் பெயர்வாளர்கட்கும் அதுதான் நேர்ந்தது, நேர்ந்து வருகின்றது. இலக்கியம் என்பது அனுபவத்தின் சாரம் என்றும் வாழ்க்கையின் விளைபொருள் என்றும் கொள்ளப்படும். இப் புதிய புலம் பெயர்ச்சியாளர்கட்கு முன்னையவர்கட்கு கிட்டாத புதிய அனுபவங்கள் நிறைவாகவே கிட்டின. முற்று முழுக்கப் புதியதொரு வாழ்வியற் சூழலை எதிர் கொள்ள வேண்டிய நிலையில் இவர்கள் இருந்தனர் என்பது தெளிவு. இவ்வாறான அனுபவங்களும் வாழ்வியற் சூழலுமே புலம் பெயர் இலக்கியம் என்ற பெயர் சூட்டக் கூடிய வகையிலான புதிய இலக்கிய முயர்ச்சிகளுக்கு அடிப்படைகள் ஆயின என்பது தெளிவு.

இவ்வாறான புதிய இலக்கிய வெளிப்பாட்டிற்கு வாய்ப்பாக அமைந்த இன்னொரு முக்கிய காரணி புதிய புலப்பெயர்வாளர்களில் குறிப்பிடத் தக்க தொகையினர் கலை மற்றும் இலக்கியத் துறைகளில் ஆர்வம் கொண்டவராகத் திகழ்ந்தமையாகும். இவர்களுட் சிலர் புலம் பெயர்வதற்கு முன்பே ஈழத்தில் படைப்பாளிகளாகத் திகழ்ந்தவர்கள் எஸ். பொன்னுத்துரை, வ. ஐ. ச. ஜெயபாலன், சேரன், இளவாலை விஜயேந்திரன் முதலிய பலர் இவ்வகையிற் சுட்டிக்காட்டத் தக்கவர்கள். தாய் மண்ணில் இலக்கிய வாதிகள் என்ற நிலையில் தாங்கள் எய்தியிருந்த அடையாளத்தைப் புகலிட நாடுகளிலும் இவர்கள் தொடர்ந்து பேணிக் கொள்ள முற்பட்டனர். இத்தகையவர்களின் முயர்ச்சிகள் மேற்படி புதிய சூழல் சார் அனுபவங்கள் இலக்கிய ஆக்கங்களாக உருப்பெறவும் பதிவு பெறவும் முக்கிய காரணிகள் ஆயின.

இவ்வாறு உருவான புலம் பெயர் இலக்கிய ஆக்கங்கள் அனைத்துலக மட்டத்தில் இன்று பேசப்படவும் அவை தொடர்பான இலக்கிய விவாதங்கள் உருவாகவும் வாய்ப்பாக அமைந்த காரணிகளையும் இங்கு கவனத்தில் கொள்வது அவசியம். மேற்படி புலம் பெயர் சூழலில் இலக்கியம் படைத்தோர் முதலில் தமிழகத்திலும் ஈழத்திலும் வெளிவரும் இதழ்களில் அவற்றை வெளியிட்டனர். அதேவேளை தாம் தாம் வாழ்ந்து வரும் நாடுகளில் இலக்கியக் குழுக்களாக இணைந்து இதழ்களைத் தோற்றுவித்தனர். இவற்றினூடாக இலக்கியக் கருத்துப் பரிவர்த்தனைகளில் ஈடுபட்டனர். இவ்வகையில் இணையம் (Internet) வரையான மின்னனுச் சாதனங்களைப் பயன்படுத்தி தமிழ் இலக்கியம் தொடர்பான - சொல்லாடல்களுக்கு ஒரு அனைத்துலகப் பரிமாணத்தை ஈட்டித் தந்தனர். அத்துடன் தமிழகத்திலும் ஈழத்திலும் உள்ள தமிழ் எழுத்தாளர்கள் மற்றும் திறனாய்வாளர்கள் ஆகியோருடனும் பதிப்பாளர்களுடனும் மிக நெருக்கமான நட்புறவை ஏற்படுத்திக் கொண்டனர். வசதி படைத்த புலம் பெயர் எழுத்தாளர்கள் தமிழகத்திற்குச் சென்று அங்கு நூல்களை அச்சிட்டுப் பெருமளவில் வெளியீட்டு விழாக்களையும் நிகழ்த்தினர். இவ்வாறான தொடர் செயற்பாடுகளின் ஒரு முக்கிய கட்டமாக அனைத்துலக மட்டத்திலான ஆய்வரங்குகள் நிகழ்த்தக் கூடிய சூழ்நிலை உருவாகியது. கடந்த ஆண்டிலே காலச்சுவடு இதழினரோடு சேரன் முதலியோர் இணைந்து நிகழ்த்திய தமிழ் இனி 2000 ஆய்வரங்கு இவ்வாறான இலக்கியத் தொடர்பின் ஒரு முக்கிய கட்டமாகும்.

புலம் பெயர் இலக்கியங்களின் பொதுப் பண்பு செல்நெறி என்பனவற்றை நோக்கும்போது முதற்கண் இலக்கியத்தின் பொதுப் பண்பு பற்றி இங்கு நினைவிற் கொள்வது அவசியமாகின்றது. இலக்கியம் என்பது சமூகத்தின் விளைபொருள். அது தான் பிறந்த சமூகத்தை எமக்குக் காட்டுகின்றது. இக்காட்சி கண்ணாடியில் தெரிவது போன்ற நேர்க்காட்சி அல்ல. நேர்ப்படி பிரதிபலிப்பு அல்ல. அனுபவங்களைப் பெற்றவர்களது உணர்வுநிலை, உலக நோக்கு என்பனவற்றினூடாகப் புதியதொரு பரிமாணம் கொண்டே அக்காட்சி நமக்குக் கிடைக்கின்றது. இந்த அடிப்படையில் நின்று புலம் பெயர்ந்தோரின் அனுபவங்கள் மற்றும் உணர்வுகள் எவ்வாறு பதிவாகி உள்ளன என்று நோக்குவோம்.

புலம் பெயர் இலக்கியம் என்ற வகையில் உருவான தொடக்கநிலை ஆக்கங்கள் முதலில் முக்கியமாகப் பிரயாண நிலை இன்னல்கள் அவலங்கள் என்பனபற்றிப் பேசின. புலம் பெயர்ந்து செல்வோரில் ஒரு சாரார் சட்ட திட்டங்களுக்கு உட்படாமல் - முறையான கடவுச் சீட்டு இல்லாமல் - சென்றவர்கள். இதனால் பல நாடுகளில் அவர்கள் தடைப்பட்டுத் தங்கிச் செல்ல நேர்ந்தது. குறித்த நாட்டை அடைந்தபின் அந்த நாட்டின் விதி முறைகளுக்கேற்ப அகதி முகாங்களில் அடைபட நேர்ந்தது. பிரயாணத்தைத் தொடங்கிய இடத்திற்கே திருப்பி அனுப்பப்படும் அவலமும் பலருக்கு ஏற்பட்டுள்ளது. இதற்கு - துன்ப - துயரங்களின் பதிவுகளாகப் பல கவிதைகள், சிறுகதைகள் என்பன

எழுதப்பட்டுள்ளன. இவ்வாறான பிரயாணங்களில் குடும்பங்கள் பிரிவது உறவுகள் சிதைவது போன்ற அவலங்களும் நிகழ்ந்தன. இவையும் இலக்கியவகை ஆக்கங்களிற் பதிவாகி உள்ளன. முறையற்ற வழிகளில் தத்தம் குடுபங்களுடன் இணைய முற்பட்டு அதனால் அடைந்த அல்லல்களையும் சில ஆக்கங்கள் பதிவு செய்துள்ளன.

புலம் பெயர் முயர்ச்சியிலே அடுத்து எதிர்கொள்ளப்படும் பிரச்சனைகள் புகலிட நாட்டில் - நாடுகளில் - வதிவிட அனுமதி மற்றும் குடியுரிமை என்பனவற்றைப் பெறுதல், தொழில் வாய்ப்பு என்பன தொடர்பானவையாகும். நாட்டிற்கு நாடு இப்பிரச்சனைகளின் இயல்பு, அதனால் அடையக் கூடிய அவலம் என்பன வேறுபடும். இவற்றில் படும் இன்னல்கள் பற்றியும் பல ஆக்கங்கள் எழுந்துள்ளன.

புதிய சூழலில் வாழ்வு பெற்றவர்கள் அடுத்து எதிர் கொள்ளும் மனச் சிக்கல்கள் இருவகை. பிரிந்து வந்த தாயகம் பற்றிய ஏக்கம் தாயக மண்ணின் பசுமை நிறைந்த நினைவுகள், பிரிந்து வந்ந உறவுகள் பற்றிய நினைவுக் கோலங்கள், பிரிந்து வருவதற்குக் காரணமாய் அமைந்த மரணச் சூழல் பற்றிய மன நடுக்கங்கள் என்பன ஒரு வகை. இன்னொரு வகையான மனச் சிக்கல் புதிய மண்ணோடு இசைவாக்கம் பெறுவது தொடர்பானது. முற்றிலும் அன்னியப்பட்டதாக அமைந்துள்ள சமூகப் பண்பாட்டுச் சூழலில் எவ்வாறு இணைந்து வாழ்வது? என்ற வகையில் எழும் வினாக்கள் இவ்வகையின. இவ்வினாக்களின் பொருட்பரப்பு மேலும் விரிவான முறையில் இங்கு சுட்டத்தக்கது. அவை பின்வரும் மூன்று வகைகளில் இனங்காணத்தக்கன.

அ. அடையாளச் சிக்கல்.

ஆ. பண்பாட்டுச் சிக்கல்.

இ. பாலுணர்வுச் சிக்கல்.

அடையாளச் சிக்கல் என்பது நிறவேறுபாடு சார்ந்த பிரச்சனையாகும். குறிப்பாகப் புகலிட நாடுகள் பலவும் வெள்ளையர், கறுப்பர் என்ற நிறவேறுபாட்டுணர்வு நிலவும் நாடுகளே. இவ்வுணர்வு சில நாடுகளில் கூடியும் சில நாடுகளில் குறைந்தும் - வெளியே புலப்படாமலும் இருக்கும். இவ்வாறான வேறுபாட்டுணர்வு புலம் பெயர் தமிழர்களை மிகவும் பாதிப்பதொன்றாகும். குறிப்பாக ஜேர்மனி போன்ற சில ஐரோப்பிய நாடுகளில் இதன் தாக்கம் அதிகம். ஜேர்மனியில் உருவாகி உள்ள புதிய நாஸிகள் என்ற இயக்கம் தமிழ் அகதிகளுக்கு எதிரான நிலைப்பாடு கொண்டது. இவ்வகையில் அங்குள்ள குடியரசுக் கட்சியின் பிரச்சாரக் கவிதை ஒன்று தமிழாக்கம் செய்யப்பட்டு புலம் பெயர் இலக்கியப் பதிவாகக் கிடைத்துள்ளது. அது

"தள்ளாடியபடியே நான் இங்கு வருகையில்
யாரது வீட்டு வாசலில் நிற்பது---ஓ-----
வீடு தேடும் கள்ள அகதித் தமிழன் ஒருவன்"

மேலும் அகதி வெள்ளம், பொருளாதார அகதிகள், வள்ளம் நிறைந்துவிட்டது போன்ற சொற்றொடர்கள் அங்குள்ள அரசியல் வாதிகள் மற்றும் பத்திரிகையாளர்களிடத்தில் பயிலத் தொடங்கிவிட்டன. இவை அகதிகளுக்கு எதிரான சுதேச நிலைப்பட்ட எதிர்ப்புணர்வின் வெளிப்பாடு என்பது தெளிவு.

பண்பாட்டுச் சிக்கல் என்ற வகையில் ஈழத்துத் தமிழர் தமது சொந்த மண்ணில் பேணிநின்ற விழுமியங்கள் எனப்படும் பலவற்றைத் தொடர்ந்து பேணிக்கொள்வதில் எதிர் கொள்ளும் பிரச்சனைகளைச் சுட்டலாம். பொதுவாக அயல் நாட்டினரோடு பழகும்போது பொது அம்சங்களில் ஒத்துப்போக முயன்றாலும் உறவு நிலைசார் தொடர்புகள் என்ற வகையில் சிக்கல்கள் சிலவற்றை எதிர் கொள்ள நேர்கின்றது. இளந் தலைமுறையினர் தாம் கற்கும் சூழல்களிலேயே பணிபுரியும் சூழல்களிலேயே ஆண், பெண், நண்பர்களைத் தேடிக் கொள்ளும் நிலையில் அந்நட்புக்களை எவ்வாறு அங்கீகரிப்பது என்பது புதிய தலைமுறையினர் எதிர் கொள்ளும் முக்கிய சிக்கல்களாகும். குறிப்பாக இனங்கடந்த காதல் மற்றும் நெருங்கி உறவாடும் நிலைகள் முதலியனவற்றில் மரபான பண்பாடு மற்றும் ஒழுக்க நிலைகள் எனப்படுவன சிதைக்கப்படுவதைக் கண்முன்னே கண்டும் அவற்றை விலக்கமுடியாத நிலை பல புலம் பெயர் குடும்பங்களில் நிலவுகின்றது. இவ்வகையில் பெண்பிள்ளைகள் தாங்கள் ஆண்நன்பர்களோடு வெளியே செல்வதும் இரவில் அவர்களோடு தங்கி மீள்வதும் பெற்றோருக்கு ஏற்படுத்தி உள்ள மனத் தாக்கங்ளைப் புலம் பெயர் ஆக்கங்களில் சில பேசுகின்றன.

பாலுணர்வுச் சிக்கல் என்பது புலம் பெயர் வாழ்வில் குறிப்பாக ஆண்கள் சார்ந்த பிரச்சனையாகும். பெற்றோரையும்

சகோதரங்களையும் ஈழத்தில் விட்டு விட்டு ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாகப் பிரான்ஸ், ஜேர்மனி, நோர்வே போன்ற நாடுகளில் - புகலடைந்து வாழும் ஆண்கள் பலர் உரிய வயதில் திருமணம் செய்து கொள்ள முடியாத நிலையில் தவிப்பது சில ஆக்கங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளது. தாய் மண்ணில் இருக்கும் பெற்றோரின் விருப்பங்களுக்குக் கட்டுப்பட்ட மனநிலை, சகோதரங்களுக்கு - குறிப்பாகச் சகோதரிகளுக்கு வாழ்வளிப்பதற்காக உழைத்து அனுப்பும் தியாக மனப்பாங்கு என்பன இத்தகைய பலரை ஒழுக்கங் கெடாமல் பாதுகாக்கின்றது என்பது தெரிகின்றது. ஆனால் சூழல் அவர்களை ஒழுக்கக் கேட்டிற்கு வலிந்து அழைப்பதாக உள்ளது. இத்தகு சூழலில் அவர்கள் எய்தும் மனத் தாக்கங்கள் மேற்படி கதைகளில் பதிவாகி உள்ளன. இவ்வாறு அமையும் சில கதைகளை வாசிக்கும்போது ஈழ மண்ணில் இருந்து கொண்டு அப்பிள்ளைகளின் உழைப்பைச் சுரண்டி வாழும் பெற்றோர் மீது வாசகர்களுக்குத் தார்மீக கோபம் ஏற்படுவது தவிர்க்கமுடியாதது. (பார்க்க: ஷோபாசக்தியின் தேவதை சொல்லும் கதை, சி. புஷ்பராஜாவின் நான் ஒரு கேள்வியாக. இதழ்: இனியும் சூல்கொள்)

ஈழநாடு

இலங்கேஸ்வரனாம் தீரமுடை தமிழ் மகன்
இலங்கிடும் மலை சூழ் இரத்தினதுவீபம் -தன்னை
இலக்கியம் புகழ்ந்திட வரலாறு படைத்தே
இலங்கிய மன்னனாய்த் திகழ்திட்ட நாடே

சைவமும் தமிழும் தனிப்பெருமமை கொண்டே
சைவத்தலமே எல்லையில் உயர்ந்தே - காத்திட
கோணேசர் மலையும் பாலாவி கேதீச்சரமும் முனீஸ்வரமும்
கோவில் கொண்ட கதிர்காமப் பதியும் அமைந்திட்ட நாடே

மானிடர் மனதில் அன்பும் அமைதியும் சமாதானம் நிலைக்க
மானிடம் போற்றிடும் புத்தனவன் சித்தம் அசோகனால்-பரவ
மாறியே புத்தம் சேர்த்துமே வாழ்ந்திடும் துறவியர்
மாற்றுடைக் கருத்தில் வாழ்ந்திடும் நாடே

தாய்க் கெனகோவிலை திருமலையில் மீட்டிட
தாய்க் கென இரங்கியே தன்வாள் கொண்டே -மலைதனை
தகர்ந்திட வெட்டியே கரந்தனில் தூக்கிட முனைந்த
தன்னிகர் இராவணன் வாழ்ந்திட்ட நாடே

மத்திய மலையினில் உருவகமாகி எண்திசை மேவிட
மத்திய நீரை மருவியே சேர்த்திடும் அருவிகள்- பாயும்
மதி மகிழ் இயற்கை வனப்புகள் மிளிரும் மந்தமாருத
மதியம் தோன்றியே ஒளி பெறும் நாடே

கடலோரக் கவிதையும் மலையோர மழலையும்
காட்டோர கனியும் வயலோர வாடையும்- தென்திசை
தினையும் தித்திக்கும் தேனும் வாவிபுகு எருமையும்
தீம்பால் சுவையும் பெருகிடும் நாடே

வ. ஐ. ச. ஜெயபாலன்

GLOBAL
EDUCATIONAL TRUST PLAN

RESP
Registered Education Saving Plan

CESG
Canada Education Savings Grant

Other Services Include
- Income Tax
- Bookkeeping
- Auto Insurance
- Life Insurance

Please Contact:

Saba Rajeswaran B.A. (Hons.) M.C.S.E
Entrollment Officer

Tel: (416) 750-9022 (416) 757-0333
Fax: (416) 757-7499 (416) 208-4817

9 Hancock Crescent, Scarborough, ON, M1R 2A2
Email: rajes2001@hotmail.com

சமாதானத் தோணி

ஓ. கே. குணநாதன்

சாமக்கோழி கூவும் நேரம்..... இரணை இலுப்பைக் குளக் கிராமம் அமைதியில் உறங்கிப்போய்க் கிடந்தது.

அந்தப் பேரமைதி நிரந்தரமான அமைதியல்ல புயலுக்கு முந்திய அமைதிபோல....

அந்த அமைதியைக் கலைத்துக் கொண்டு ஏதோ ஒரு இனம் புரியாத சத்தம். உறங்கிய பூமியைக் கிழித்துக் கொண்டு தெருநாய்கள் ஓலமிட, என்னவோ.... ஏதோ..... என்றெண்ணி நெஞ்சம் துணுக்குறத் திடுக்கிட்டுக் கண்ணை விழித்துக் கொண்டார் மாணிக்கம்.

ஆனால்...... எழும்பவில்லை.

நெஞ்சிலே ஏதோ ஒரு நெருடல்.

இரண்டு மூன்று நாட்களாகத் தொடர்ந்து பகல் முழுவதும் வயலிலே சூடடித்து அதைத் தூற்றிய களைப்பு வேறு.... அந்தக் களைப்பையும் தாண்டி...... மெதுவாக அரவம் எழும்பாவண்ணம் எழுந்து குந்திக் கொண்டார்.

நாய்கள் தொண்டை கிழியக் கத்தி ஊரைக் கூட்டின.

என்றும் இல்லாதவாறு நாய்கள் ஏன் குரைக்கின்றன? நாய்களின் ஓலங்கள் யமனின் வருகைக்குக் கட்டியங் கூறுவனவே! அப்படியானால்......

வாழ்க்கையின் அனுபவச் சிந்தனைகள் சக்கரங்களாகச் சுழலுகின்றன.

இது புலிகளாக இருக்கவேணும்.... !ச்சீ..... இது புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மண்ணென்றபடியால் அவர்களுக்கு நாய் குரைக்காதே!

ஒரு வேளை.... ஆமியாக இருக்குமோ! நெஞ்சு படபடத்தது. பயம் பற்றிக் கொண்டது.

பட்ட மரம் துளிர்த்திலலை. அதேபோல இந்த யுத்தத்திற்கும் முடிவும் இல்லை.

ரோச் லைற்றை அடித்துப் பார்க்கலாம்..... பற்றறி இல்லை. குப்பி விளக்கைக் கொளுத்திப் பார்க்கலாம்... மண்ணெண்ணை மருந்துக்கும் இல்லை.

இவை இந்த மண்ணுக்குத் தடை செய்யப்பட்ட பொருட்கள்.

மெதுவாகக் கதவைத் திறந்து வெளியே எட்டிப்பார்த்தார் மங்கிய நிலவொளியில்....

அவரால் அவரையே நம்பமுடியவில்லை. ஓடிய இரத்தம் உறைந்து மீண்டும் ஓடத் தொடங்கியது போல உணர்வு.

பொருளாதாரத் தடையினால் போசாக்கின்றி இளைத்த உடல்.... உடமைகளை இழந்து இடம் பெயர்ந்து வாழும் கவலை படர்ந்த முகம்... மகனின் எதிர் கால வாழ்வை எண்ணிக்கலங்கும் கலக்கமான கண்கள்... அந்தக் காட்சிகளையே வெறித்துக் கொண்டிருக்கின்றன.

யுத்த மேகங்களின் நிழல்களில் மரங்களுடன் மரங்களாக.... வேலியுடன் வேலியாக... இராணுவ வீரர்களின் நகர்வுகள்... ஆமை வேகத்தில் ஜீப்புக்கள்.. யானைபோலத் தும்பிக்கைகளைத் தூக்கியபடி கவச வாகனங்கள்.... டாங்கிகள்....

இவை கிராமத்தை நோக்கிய படை நகர்வின் அபாயச் சமிக்கைகள்.....

கல்லாச் சமைந்து போனார்.

எண்பத்திமூன்று ஆடிக்கலவரத்தில் இருந்து சொத்துக்கள் சுகங்களை இழந்து செந்தங்கள் பந்தங்களை மறந்து, குண்டு வீச்சுக்கும் - செல்லடிக்கும் - சுடுகுழலில் இருந்து சீறிப்பாயும் ஈயக் குண்டுக்கும் பயந்து உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இருக்க இடம்.... பசி ஆறச் சாப்பாடு....

இல்லாமல் கொழும்பு யாழ்ப்பாணம் - வன்னி..... என்று அநாதையாய் அகதியாய் நாடோடிகளாய் அலைந்து, இறுதியில் இங்கு வந்து வாழ்ந்தார்கள். ஏன்.... ? பிள்ளைகளின் உயிரைக் காக்க..... அவர்களின் நல்வாழ்வுக்காக.....

இப்பொழுது..... இவ்வளவு காலமும் ஓடியதன் பலன்? நினைக்கவே நெஞ்சம் கூசியது.

இனி... தப்பவே முடியாது. கூண்டினுள் அகப்பட்ட எலியின் பரிதாப நிலை.

இன்னும் சில நிமிடங்களில் அடிபாடுகள் தொடங்கும்..... குண்டோசைகள் செவிப்பறைகளைப் பிய்க்கும்.... போர் விமானங்களில் இருந்து விழும் கண்ணில்லாத பீப்பாக் குண்டுகளினால் மேடும் பள்ளமும்.... குன்றும் குழியுமாகப் பாடசாலைகள்.... தேவாலயங்கள்.... பாதைகள் சிதறிப்போய்க் கிடக்கும்.... மரஞ் செடி கொடிகள் எரிகுண்டுகளுக்கு இரையாகிக் கருகிப் போய்க் கிடக்கும்.... வட்டமிடும் போர் விமானங்களுக்கு அஞ்சி... உயிருக்குப் பயந்து.... அப்பாவி மனிதர்கள் மீது கண்மூடித்தனமாக நடாத்தப்படும் துப்பாக்கி வேட்டுக்களினால் நெல் மணிகள் விளைந்த வயல் வெளிகளில் மனித சடலங்களே நிறைந்து கிடக்கும்.... இறுதியில்..... கன்னிமை கழியாத இந்தக் கிராமம் கற்பிழந்த பெண்போல உருச் சிதைந்து..... பொலிவிழந்து ஷ..... யுத்த பூமியின் நினைவுச் சின்னமாகக் கிடப்பாள்.

அதன் பின்பு..... தினசரி சுற்றி வளைப்புக்கள்.. தேடுதல் வேட்டைகள் இளம் பிள்ளைகள் பலிக்களத்து ஆடுகள்தான். பின்னர் அவர்கள் எல்லாம் புலிகள். அவர்கள் காணாமல் போவார்கள் அவர்களைத் தேடித்தேடி அலுத்துக் களைத்து... கடைசியாக புதைகுழிகளில் தேடிப் பார்ப்பார்கள்.... வன்னி மண்ணின் இயற்கை அழிக்கப்பட்டு வளங்கள் சுரண்டப்பட்டு தறிக்கப்பட்ட பெறுமதி மிக்க மரங்கள் தென்னிலங்கை லொறிகளில் ஏறும். பனை வடலிகள் பங்கர்களாக மாறும். இளநரைபோல தப்பி நிற்கும் மரநிழல்களின் கீழே புத்தர் சிலைகள் முளைத்திருக்கும்.

காலங்காலமாக மக்களை மீட்பதற்காக... என்ற பெயரில் நில ஆக்கிரமிப்புக்காக நிகழும் நிகழ்வுகளின் நினைப்பு நிழலாகத் தொடர்ந்து வருத்தி வருத்தித் துரத்தியது.

பயத்தினால் கால்கள் நிலத்தை மறந்து தாளம் போட்டன.

அவரைப்பற்றிக் கவலை இல்லை. அவர் வயது வந்து அனுபவித்த கிளட்டுக் கட்டை. இன்றைக்கோ அல்லது நாளைக்கோ கூடச் செத்துப்போகலாம். ஆனால்.... உள்ளே அனுபவிக்க வேண்டிய வயதில் இன்னும் சில தினங்களில் திருமணத்தை எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கும் மகனை.... அதுவும் ஒரே மகனை நினைக்கையில்.... இதயம் ஏனோ துடித்த மறந்து.... மீண்டும் துடித்தது.

ரயர் எரிப்புக்கள் செம்மணிப்.... புதைகுளிகள், துரையப்பா... விளையாட்டரங்கு, களனி ஆறு..... எல்லாம் ஒரு கணம் தோன்றி மறைந்தன.

இனி என்ன செய்வது? நெஞ்சில் இனம் புரியாத பதட்டம்

மனைவி செல்லம்மாவையும் மகனையும் கூட்டிக் கொண்டு இருளொடு இருளாக அவர்களின் கண்ணில் படாமல் ஓடிவிடலாமா என்று கூட நினைத்தார்.

சிலவேளைகளில்.... அவர்களின் கண்ணில் பட்டுவிட்டால்

பொழுது புலர்ந்தும் ஈயங்கள் பதம்பார்த்த மூளைகளை வயல் வெளிகளில் எச்சில் காகங்கள் கொத்திப் பதம் பார்க்கட்டுமே! அவர்களின் பெயர்களும் பயங்கரவாதிகள் என்ற பட்டியலாகி நீண்டுபொயிருக்கும்.

நினைப்பு.... நிழலாகத் தொடர்ந்து தடுத்து நிறுத்துகின்றது.

அப்படியானால்.....

உடலில் உயிரைத் தக்கவைக்க வேண்டுமானால் இந்த மண்ணில் உயிர் வாழவேண்டுமானால் சந்தியில் இருக்கும் பிள்ளையார் கோவிலுக்குள் ஓடிப்போய் ஒழித்துக் கொள்வதைத்தவிர வேறு வழியில்லை.

பல தடவைகள் ஓடி ஒழித்த அனுபவம் பேசுகின்றது.

நேற்றுச் சூடடித்த நெல்லு மூடைகளும் மனைவியும் மகனும்தான் அவருடைய ஒரேயொரு சொத்து இவைகளையும்

இழந்தால் இனி அவரால் உயிர் வாழ முடியாது.

திரும்பி உள்ளே பார்க்கிறார். நேற்று சூடடித்தபோது நெல்லு மூடைகள் தாறுமாறாகக் கிடந்ததுபோல இருவரும் படுத்துக் கிடக்கின்றனர்.

அவர்களைப் பார்த்தும் நெஞ்சில் பயங்கரமானதொரு துயர உணர்வு இறங்கி அழுகை நெஞ்சைத் தொட்டுக் கொண்டு நிற்கின்றது.

அதற்கிடையில்..அடிபாடுகள் தொடங்கிவிட்டன. இருவரும் பதைபதைத்து எழுந்து கொண்டார்கள்.

"அப்பா....."

ஏதோ சொல்ல நினைத்தார். பயத்தினால் வாய் உலர்ந்தது. வார்த்தைகளை இழந்து தடுமாறினார்கள்.

அவர்களைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

"ஆமிக்காரங்கள் வந்திட்டாங்கள்... கெதியாய் வாங்கோ கோயிலுக்குள்ள ஓடுவம்"

ஒரு கணமும் தாமதிக்க முடியாது!

தாமதித்தால்..... உயிர் மிஞ்சாது.

மனைவியையும் மகனையும் இழுத்துக் கொண்டு இருளொடு இருளாக வெளியே வந்தார்.

அவரால் நடக்க முடியவில்லை.

பயத்தின் மத்தியிலும் உணர்வுகளை நொருக்கி.. .. .. கண்கள் கலங்கி வேதனையோடு வீட்டைத் திரும்பிப் பார்க்கின்றார்.

இதைப்பிரிந்து போகும் வெறுமையை நினைக்கையில் இதையம் நின்றுவிடும் போல இருந்தது.

புலம் பெயரும்பொழுது அவனுக்கு அடைக்கலம் கொடுக்க இந்த மண்ணும் அவனுடன் ஒட்டிக் கொண்டு இடம் பெயர்ந்த அவனுடைய மனைவியும் மகனும்தான் அவனுக்கு ஆறதல் கொடுத்தன.

இந்த மண்ணை விட்டுப் போவதென்றால்.... உயிரே அவரிலிருந்து பிரிவதுபோல இருந்தது.

இன்னும் தாமதிப்பதில் பயனில்லை.

வட்டமிடும் போர் விமானங்கள் பேரிரைச்சலுடன் தாழப் பறந்து குண்டுகளைப் பீச்சத் தொடங்கிவிட்டன.

தமிழர்களைப் போர்த்திருக்கும் இருள் போர்வைபோல எங்கும் வெடிமருந்தின் புகை மண்டலம்.... உயிரைத் தங்கவைக்க கோயிலைத் தேடிச் சிதறி ஓடும் சனங்கள். அவர்களின் அவலக் குரல்கள். ஊரெ அல்லோல கல்லோலம்.

இருட்டுகளுக்குள் புதைந்து கிடந்த முள்ளுவெலிகளால் பற்றைகளைக் கடந்து கேயிலை அடைந்தார்கள். அங்கே கோயிலைக் காணவில்லை. குண்டுவீச்சுக்கு இரையாகி சிதறிப்போய்க் கிடந்தது. பிள்ளையார் சிலை மட்டும் அகதியாகி மரத்தின் கீழே இருந்தது. அவர்களும் அம் மரத்தின் கீழே நின்றார்கள்.

செல்கள் விடிய வடியக் கூவிக் கொண்டு பறந்த வண்ணமே இருந்தன. அவர்களும் விடிய விடியப் பிள்ளையாரைச் சுற்றி சுற்றிக் களைத்துப் போனார்கள்.

இரவும் பகலும் சங்கமித்துப் பிரிகின்ற நேரம்...

பெடியன்கள் விக்ரோ பண்ணியிருக்க வேணும்.

ஒருவாறு அடிபாடுகள் மௌனமானபோது பொழுது மெள்ள மெள்ள புலர்ந்து கொண்டு வந்தது. நிலம் வெறிகாரனின் கண்களைப் போலச் சிவந்து கிடக்கின்றது.

அந்தநேரம் பார்த்தாற்போல -

"இப்பொழுது இந்தக் கிராமம் சிறீலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. எனவே சகல மக்களையும் வயல் வெளிக்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்."

என்ற வார்த்தைகள் ஒலிபெருக்கியில் இருந்து வந்து துப்பாக்கிச் சன்னம்போல செவிப்பறையில் பட்டுத் துளைத்துச் செல்கிறது.

தவிக்கும் வெயிலில் கிடந்து துடிக்கும் மண்புழுபோல இதையம் துடிக்கிறது.

மகன் அவரை ஒரு தடவை திரும்பிப் பார்க்கிறான். அவரைப்பார்க்க நாதியற்று கடைக்கண்ணால் ஒரு பார்வை பார்த்தார். அவனுடைய கண்கள் வவுனிக்குளம் போல நீர் நிறைந்து கிடக்கிறது.

அந்தப் பார்வையில்... அப்பா இப்படிக் கோழையாகப் போய்ச் சாகிறதைவிட இயக்கத்தில் போய்ச் சேந்திருக்கலாம் என்பதுபோல இருக்கிறது.

தாய்... தன்னந்தனியாக..... அனாதையாக விடப்பட்டது போன்ற உணர்வுடன் தலையைக் கவிழ்ந்தபடி குத்தியிருக்கிறாள்.

இனி என்ன செய்யலாம்....? மௌனம் இழையோடுகின்றது.

அந்த மௌனத்தைக் கலைத்துக் கொண்டு

"எல்லோரும் வயல் வெளிக்குப் போங்க.... போங்க...."

புரியாத மொழியில் அதட்டல்கள் துரத்துகின்றன. வேறு வழியின்றி நடக்கிறார்கள். தூக்கி வைக்கும் ஒவ்வொரு காலடியும் மிதி வெடிகளில் பொறி வெடிகளில் வைப்பதுபோல தயங்கித் தயங்கித் தயங்கி வைக்கிறார்கள்.

அவர்களைப்போல ஆயிர மாயிரம் மக்கள் கொலைக்களத்தை நோக்கிய மிரட்சியுடன்...

வயல் வெளியை நெருங்கும்போது....

அங்கே....

வயல் வெளி எங்கும் விழைந்து சிவந்து கறுத்த வெங்காயம் போலச் சனங்கள்.

ஒவ்வொருவருடைய முகங்களிலும் சோகக்களை... என்ன நடக்குமோ, ஏது நடக்குமோ என்ற தவிப்பு.

அவர்களும் அவர்களுடன் ஒருவராகப் போய் இருந்தார்கள்.

தேர்ச்சில்லுக்குள் அகப்பட்டுச் செத்த பசுக்கன்றுக்காக நீதி கேட்ட தாய்ப்பசுவின் முன்னே தன் மகனையே தேர்ச் சில்லுக்குத் தியாகம் செய்தான் மனுநீதிச்சோழன்.

ஆனால்.... இங்கு..... கசப்பான அனுபவங்கள் ஆணிவேர்வரை ஊறிப்போய்க் கிடக்கிறது. அவர்களுக்கும் என்ன நடக்கப்போகின்றது என்று புரியாமல் இல்லை. இன்னும் சில நிமிடங்களில் முகமூடிகளும் தலையாட்டிப் பொம்மைகளும் நீதவான்களாக வந்து தலையசைத்து தீர்ப்பு வழங்குவார்கள். அவர்களின் தீர்ப்புக்களில் பிள்ளைகளின் தலைவிதி நிர்ணயிக்கப்படும்.

ஆனால்.....

இராணுவத்தில் ஒரு மாற்றம் போலும்! அவர்களின் இதையங்களிலும் ஈரம் கசிந்ததோ என்னவோ!

வீடுகள் எரிக்கப்படவில்லை. அவர்கள் வெயிலில் காய்ந்து கருவாடாகவில்லை. எதிர் பார்த்ததுபோல முகமூடியும் வரவில்லை. தலையாட்டிப் பொம்மைகளும் வரவில்லை. அதட்டல்கள்- அடி- உதை- இல்லை.

எங்கும் அமைதி. அந்த அமைதியைக் கலைத்துக் கொண்டு ஒரு ஜீப் வந்து நின்றது.

அதில் இருந்து ஒருவர் இறங்குகின்றார். அவரும் அதே இலை குழை நிறத்திலான உடை. அவருக்கு அதே உடையில் நாலைந்து முண்டுகள். அவர்தான் பெரியவராக இருக்க வேண்டும்.

என்ன நடக்கப் போகிறதோ....

எல்லோரும் கவலையில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவர் சனங்களின் அருகே வந்தார். இருமினர்.... சனங்களைப் பார்த்துக் கன்னங்கள் குழிவிழச் சிரித்தார்.

சனங்களோ வேதனை தோய்ந்த பய உணர்வுடன் உதடுகள் மலராமல் ஒரு சிரிப்புச் சிரித்தார்கள்.

அவர்களின் பார்வை முழுவதும் அவர் என்ன சொல்லுவாரோ.... என்ன செய்வாரோ... என்பதிலேயே நிலைத்து நின்றது.

அவர் தொடர்ந்தார்....

அன்பான மக்களே.... இப்பொழுது இந்தப் பிரதேசத்தை எங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறோம். நீங்கள் பயப்பிடத் தேவையில்லை. நாங்கள் உங்களுக்கு ஒன்றும் செய்யமாட்டோம். இவ்வளவு காலமும் உணவு, மருந்து, பசளை, எரிபொருள்.... பொருட்கள் தடை செய்யப்பட்டிருந்தன. பல கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்திருப்பீர்கள். இனி ஒன்றுக்கும் பயப்படத் தேவையில்லை. எல்லோருக்கும் ஒரு பாஸ் வழங்குகின்றோம். அதை வைத்துக் கொண்டு நீங்கள் வவுனியா நகருக்குப் போய் உங்களுக்குத் தேவையான பொருட்களை மலிவு விலையில் வாங்கி வரலாம். உங்கள் பிள்ளைகளை ரவுண் பாடசாலைக்கு அனுப்பிப் படிப்பிக்கலாம். இனி உங்களுக்கு விடுதலை.... சந்தோசமாக உங்களுடைய வீடுகளுக்குப் போங்கோ....

இவ்வளவு விரைவாக விடுதலை பெறுவார்கள் என்று அவர்கள் கனவிலும் நினைக்கவில்லை.

ஒவ்வொருவருடைய மனங்களிலும் புதிய உணர்வு...... பழைய ஆமி என்றால் வீட்டை எரிப்பார்கள்.... பொடியங்களைப் பிடித்துப் போட்டு அடிப்பார்கள்.... முகாங்களுக்குள் கொண்டுபோய்ப் போட்டுச் சித்திரவதை செய்வார்கள்..... பின்பு அவர்களில் பயங்கரவாதி என்ற பெயரைக் குத்தி வெலிக்கடைக்கு.... பூசாவுக்கு அனுப்பி வைப்பார்கள். ஆனால்... இது பழைய ஆமிபோல இல்லை..... தமிழ் கூட நன்றாகப் பேசுகின்றார்கள்.

எல்லாம் போகப் போகத் தெரியும்.......!

பிரிந்து போனவர்கள் உதிர்த்திக் கொண்டு போகிறார்கள். வார்த்தைகள் தேனாக இனிக்கின்றன. யுத்தம் ஓய்ந்து சமாதானம் வந்தால் யாருக்குத்தான் விருப்பமில்லை.

மாணிக்கத்திற்கும் சிதைந்துபோன வாழ்க்கை மீண்டும் துளிர்ப்பது போன்ற உணர்வு.

ஒரு வாரம் நகர்ந்தது....

ஒரு அசம்பாவிதமும் நடக்கவில்லை. நம்பிக்கை வலுத்தது.

மகனின் நிட்சயித்த திருமணத் திகதிக்கு இன்னும் ஒரு வாரமே எஞ்சி நிற்கிறது.

நெருக்கமான சூள்நிலையில் சிறிதாகக் கல்யாணத்தைச் செய்ய வேண்டும் என்றிருந்த எண்ணம் கருதி ஒரேயொரு மகன்தானே கொஞ்சம் பெரிதாகச் செய்தால் என்ன என்ற எண்ணம் தலைக்கேறியது.

பஞ்சாங்கத்தைப் புரட்டினார்.....

நாளை திங்கட்கிழமை. நல்ல நாள்.

நாளைக்கு வவுனியா ரவுணுக்குப் போனால்.... நெல்லு மூடைகளைக் கொடுத்துவிட்டு கலயாண அலுவல்களைப் பார்த்து வரலாம் என எண்ணினார்.

பொழுது புலர்ந்ததும்.... வாடகை டக்டரிலே நெல்லு மூடைகளை ஏற்றிக் கொண்டு வவுனியாவுக்குப் புறப்பட்டார்.

தொண்நூறு நாட்களின் பின்னர் வவுனியா நகருக்குள் நுளைகின்றார். இடம் பெயர்ந்தவர்களின் வருகையினால் நகர் கொஞ்சம் சுறுசுறுப்பாக இயங்குகின்றது. புதிய பல கடைகள் முளைத்திருந்தன. கூடவே சேதனைச் சாவடிகளும்....

நேரடியாகவே டக்ரரை ராணி மில்லுக்கு விட்ட நெல்லைக் கொடுத்தார். அவருக்கே ஆச்சரியமாக இருந்தது. நெல்லுக்கு நல்ல விலை. பத்து வருடங்களின் பின்பு கையில் சுளை சுளையாகப் பணம்.

இவ்வளவு காலமும் பசளையும்-கிருமிநாசினியும் தடை செய்யப்பட்டு இருந்ததனால் கூடிய விலை கொடுத்து அவற்றை வாங்கி-விளைந்த நெல்லை அறாவிலைக்கு விற்று வந்தார்கள். அதனால் உடல் உழைப்புக் கூலி மட்டுமே மிஞ்சியது.

ஆனால் இங்கு... மனம் பூரித்துப் போனார். ஊர் இராணுவக் கட்டுப்பாட்டில் வந்தாலும் பறவாயில்லை. உள்ளம் எண்ணியது.

மில்றோட்டிலே இருந்த ஆதவன் அச்சகத்திற்குள் புகுந்தார். அங்கே அவர் எழுதிக் கொண்டு வந்த கல்யாண அழைப்பிதழைக் கொடுத்த ஓப்செட் முறையிலே ஒரு மணி நேரத்திலே அச்சடித்துக் கொண்டார். கணனி முறையிலான அச்சுப் பதிப்பு பார்ப்பதற்கு மிகவும் அழகாகவே இருந்தது. கல்யாண அழைப்பிதழைப் பார்த்ததும் மகனுடைய கல்யாணத்தையே பார்ப்பதபோல இருந்தது. மகனும் மருமகளும் ஒரு கணம் திருமணக் கோலத்தில் தோன்றி மறைந்தார்கள்.

நேரத்தைப் பார்த்தார். நேரம் ஒரு மணி இருபது நிமிடமாயிருந்தது...... இன்னும் அரை மணி நேரத்தில் சுபநேரம். தாலிக்குப் பொன் உருக்குவதற்காக ரவி யுவலரிக்குள் புகுந்து அதனையும் முடித்துக் கொண்டார்.

இனி என்ன செய்வது..... ?

லக்கி வீடியோ சென்ரரிலே வீடியோவுக்கு அட்வான்ஸ் கொடுத்தார். அத்துடன் பஸ் நிலையத்தின் மேல் மாடிக்குப் போய் ஆதி ஸ்ருடியோவிலே போட்டோவுக்கும் ஓடர் பண்ணிக் கொண்டார்.

இதற்குப் பிறகு ஊருக்குப் போக முடியாது. இரவைச் சுத்தானந்தா இந்து இளைஞர் மன்றத்திலே தங்கிக் கழித்துவிட்டு விடிந்ததும் கல்யாணத்திற்குத் தேவையான சாமான்களை வாங்கிக் கொண்டு போவோம் என்ற திட்டம் தீட்டிக் கொண்டார்.

காலையில் கல்யாணத்திற்குத் தேவையான சாமான்களை வாங்கிக் கொண்டு அதே டக்டரில் ஊருக்குப் புறப்பட்டார்.

ஊரைச் சென்றடைய மாலை நாலு மணியாகியிருந்தது.

வீட்டை நெருங்கும்போதே நெஞ்சம் மகிழ்ச்சிக் கடலாய் மாறியது. கல்யாண அழைப்பிதழைக் கையில் எடுத்துக் கொண்டார். விரல்கள் அழைப்பிதழை மனைவியிடம் காட்டி விட மாட்டோமோ என்று ஏங்கின. இதைக் கண்டால் அவள் எவ்வளவு சந்தோசப்படுவாள்.... இவ்வளவு காலமும் பட்ட துன்பங்கள் எல்லாம் ஓடி மறைந்தது விட்டதுபோல இன்ப உணர்வு. றைவர் டிராக்ரரைக் கொண்டுபோய் வாசலில் நிறுத்தினார். மாணிக்கம் துள்ளிக் குதித்து இறங்கினார். சந்தோச மிகுதியால் வயதுபோன நிலையிலும் அவரது இளமை திரும்பியிருந்தது.

வளவினுள் நுழைந்தார். உள்ளே ஊரவர்கள் சிலர்.... என்னவாக இருக்கும்? தொடர்ந்து நடந்தார்..... திண்ணையிலே மனைவி குந்திக் கொண்டிருக்கிறாள். அவளருகே அவளோட ஒத்த வயதுடைய சில பெண்கள்.

அவரைக் கண்டதும் அவள் அவரைப் பரிதாபமாகப் பாத்தாள்.

"என்ன செல்லம்மா....."

கண்கள் பனிக்கக் கேட்டார்.

"நேற்று நீங்கள் போன பிறகு ஒரு வெள்ளை வேனிலே வந்து மகனையும் சும்மா கேயிலடியில விளையாடிக் கொண்டிருந்த ரெண்டு மூண்டு பொடியன்களையும் பிடிச்சுக் கொண்டு போட்டாங்கள். நாங்களும் தேடாத இடமில்லை. போகாத காம்புமில்லை. அண்டைக்கு வந்த பெரியவர்தான் காம்பில இருந்தவர்.... அவரிட்டையும் கேட்டநாங்கள்.... தாங்கள் பிடிக்கவில்லையாம்.... தங்களுக்கு இதைப்பற்றி ஒன்றுமே தெரியாதாம்....."

சுடு சொற்களை அள்ளிவீசி... குலுங்கிக் குலுங்கிக் அழுதாள்.

அவர் ஏதோ சொல்ல நினைத்தார். வார்த்தைகள் நெஞ்சுக்குள் சிக்க.... கையில் இருந்த கல்யாண அழைப்பிதழ்கள் கை நழுவிக் கீழே விழுந்து காற்றில் துடித்தது.

பேச்செல்லாம் தமிழாகட்டும்

பேச்செல்லாம் ஆங்கிலமா?
பெற்ற தமிழ் வேண்டாமா?
மூச்செல்லாம் பிற மொழியா?
மோகம் இது தொலையாதா?
தீச் சொல்லாய்ப் போனதுவோ
தேன் சொட்டும் செந்தமிழ்தான்
பூச் சொரியும் குழந்தையர்க்கும்
புகட்டுகின்றீர் ஆங்கிலத்தை
காச்சல் இல்லை அம் மொழிபால்
கற்பதை நாம் மறுக்கவில்லை
தாய்ச் சொல் உரையாடி
உயர்த்திடுவீர் உன் குலத்தமிழை.

வியாசன்

Need a Computer?

நியாயமான விலையில் பழைய மற்றும் புதிய கணனி வகைகளை உங்கள் தேவைக்கேற்ப வகையில்...

Pentium I/II/III/IV

Free Internet
Free Setup



- ☞ **Sales**
- ☞ **Service**
- ☞ **Upgrades**
- ☞ **Repairs**

Call: Siva (Seelan)

(416) 702-9290

T. R. S. Auto



FOR COMPELETE AUTO WORKS AND DETAILING

Call: Kumar

Tel: (416) 609-8110

86 Melford Drive., Unit 10
Scarborough, Ont., M1P 4R5
(Tapscott/Finch)

வீரம் விளைந்த மண்

கெஞ்சுதல் இன்றித்தினம் கொள்கை வழி எண்ணி
அஞ்சுதல் இல்லாது அந்நியனுக்கு அடிபணிய மறுத்த வன்னி
நெஞ்சை அள்ளும் அழகுவனப்பாய் நினைவில் நீங்காத நினைப்பு
விஞ்சு புகழ் கொண்ட வீரம் விழைந்த மண்

வரிகட்ட மாட்டேன் என வாழ்வா சாவா என்று
வரிந்து கட்டி நின்று வாளொடு தோள் நிமிர்த்திய வீரனை
கரிக்கட்டு மூலைக் கயவன் காக்கை வன்னியன் பாவி
சரித்திரம் படைத்த வன்னி வீரனை சதிசெய்து சாய்த்துவிட்டான்.

மண்ணுறை வீர மெல்லாம் மாண்புறு திகழ் வன்னி
கண்ணுறை சிவந்து நின்று களம் பல கண்ட வன்னி
பெண்களும் இங்கு நிதம் பேசிடும் திறனோடு - விழுப்
புண்களும் பெற்று தினம் புகழ் பூக்கும் வன்னி

அடக்கு முறைக்கு அடங்காத மண் ஆர்ப்பரித்து முட்டும் விண்
கடக்கும் வெற்றிகள் பல களத்தினில் காட்டுகின்ற தீரம்
முடக்கு நிலை கொண்டுவர முயற்சிக்கும் முட்டாள் அரசு
நடக்கும் ஒரே யாகத்தின் முடிவு நம்மை சூழ்ந்து வரும் விடிவு

முந்தி வந்த வெள்ளையனை விரட்ட மூர்க்கமாய் எதிர்த்த மண்
இந்தியச் சேனைகளும் இங்கு இழப்புக்களை பெற்ற மண்
மந்தியாய்ச் சிங்களச் சேனைகள் மக்களை எடுத்தது பலிகள்
நந்தியாய் இருந்த படைமுகாம்கள் பல துடைத்தனர் புலிகள்

அடவி நிறை அழகு வன்னி அங்கெல்லாம் சொல்லும் வீரத்தின் கதை
நடவு செய்ய வேண்டாம் வீர நாற்றுக்கள் விளையும் தன்னாலே விதை
அடகு வைக்கமுடியாத அன்னை மண் விடிவிற்காய்
படகு விட்டும் தினம் ஆழியில் பகை விரட்டும் புலிகளணி

பரந்து விரிந்த வன்னி பாரெங்கும் புகழும் பூமி
உரமோடு உறுதியும் கொண்டு உரிமைக்கு உழைக்கின்ற நாட்டம்
கரமேந்திய கருவிகளோடு தினம் களத்தினிலே நிற்கும் புலிக்கூட்டம்
வீரம் விழையும் மண் புதிய வரலாறு கிடைக்கும் தினம்

வறியநிலை வாட்டினாலும் வாழ்விடம் யாவும் இழந்தாலும்
எறிகணை எங்கும் விழுந்திட்டாலும் எதிரிகள் எக்காளமிட்டாலும்
வெறிபிடித்த சிங்களர் தினம் வெட்டிப் புதைத்தாலும்
நெறியிலே நின்று நிதம் நெஞ்சுயர்த்தி போரிடுவர் புலிகள்.

பொன் பத்மநாதன்.

ஸ்ரீ அனகா டிசைன்ஸ் இங்

PURE SILKS AND FASHIONS

இப்போது பெரிய இடத்தில் மிகக்கூடிய தெரிவுகளுடன

நேரடி இறக்குமதியாளர்கள்

எல்லாவகையான சேலைகள், உயர்ந்த ரக சுரிதார் வகைகள், பஞ்சாபி வகைகள் மற்றும் அனைத்து இந்திய நவநாகரீக உடைகள், இமிற்ரேசன் ஆபரண வகைகள் யாவற்றுக்கும் தன்னிகரற்ற தனி ஸ்தாபனம்.

சிறுவர் சிறுமியருக்கான உடுப்பு வகைகளுக்கு நகரில் தனித்துவம் பெற்றவர்கள்.

குறிப்பு:
தரமான சாறி பிளவுசுகள் உடனுக்குடன் தைத்துக் கொள்வதற்கும் இன்றே நாடுங்கள்.

பெண்களுக்கான உயர்தர புடைவைகள் மைசூர், காஸ்மீர் பட்டு, கோலம், ரங்கோலம், காஞ்சிபுரம், தர்மாவரம் பட்டு, கிரியாவின் புதிய அறிமுகம் பனராஸ் பட்டு மற்றும் உங்களுக்கு தேவையான அனைத்து உடுப்புக்களும் கிடைக்கும் ஒரே இடம்.

Sri Anaka Design Inc.

TEL: (416) 267-4833

2607 Eglinton Avenue, Scarborough, ON

இரா சுப்பர் மார்க்கட்டின் மேல் மாடியில்

சூரியனின் கதிர்களும் அவற்றின் பிரயோகங்களும்

இரட்ணராஜா கீர்த்திகா
பாடசாலை மாணவி
கல்முனை

பூமியின் மீதுள்ள உயிர்களனைத்தும் சூரியனைச் சார்ந்துள்ளன. தற்சமயம் பூமியிலுள்ள நல்ல சூழ்நிலை உயிர் வாழ்க்கைக்குத் தகுந்ததாக அமைந்துள்ளது. சூரியனது கதிர் வீச்சு ஒரு 13வீதம் குறையுமாயின் பூமியின் மேற்பரப்பு முழுவதும் ஒரு மைல் தடிமனான பனியால் மூடப்பட்டுவிடும். கதிர்வீச்சு 30 வீதம் அதிகரித்தால் பூமியின் உயிரனைத்தும் கருகி அழிந்து போகும். நமது விண்மீனாகிய சூரியனைப் பற்றிய ஆராச்சியே இக்கால விஞ்ஞானத்தின் அதி சிக்கலான, அதிசுவாரசியமான பிரச்சனைகளுள் ஒன்றாகும். இவ் ஆராச்சியின் பயனாக பல உண்மைகள் தெரியவந்துள்ளன. சூரியன் இப்போது வீசிவரும் ஒளியின் அளவை கடந்த 100 - 200 கோடி ஆண்டுகளாக வீசி வருகிறான் என்று நம்பப்படுகின்றது. சூரியனில் ஒவ்வொரு வினாடியும் 564,000,000 தொன் ஐதரசன் 560,000,000 தொன் ஈலியமாக மாற்றப்படுகின்றது என்றும் 4,000,000 தொன் பொருண்மைச் சக்தியாக மாறி வெளிவிடப் படுகின்றது என்றும் விஞ்ஞானிகள் கணித்துள்ளனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு பௌதீக விஞ்ஞானி ஜேம்ஸ் கிளார்க் மாக்ஸ் வெல்லின் கொள்கையின்படி ஒளி ஒரு வகையான மின் காந்தக்கதிர் ரேடியோ அலைகள் ஒளி எக்ஸ்ரே முதலிய வெவ்வேறு மின் காந்தக் கதிர்கள் யாவும் ஒளியின் வேகத்திலேயே செல்கின்றன. வெவ்வேறு வகையான இக்கதிர்களில் ஒரேயொரு வகைதான் நம் கண்களால் காணக்கூடியது. இதையே நாம் காணும் ஒளி என்கிறோம். மின்காந்தக் கதிர்கள் யாவும் பல்வேறு வகைளான அதிர்வுகளால் அலை வரிசைகளை உண்டு பண்ணியே செல்கின்றன. ஒவ்வொரு வகையான கதிர்களுக்கும் வெவ்வேறு அலை நீளம் உண்டு. அலை நீளம் என்பது ஓர் அலையின் சிகரத்திற்கும் மறுஅலையின் சிகரத்திற்கும் இடையிலுள்ள தூரமாகும். ஒரு குறிப்பிட்ட அளவுக்குள் அடங்கிய அலை நீளம் கொண்ட கதிர்களை காமா கதிர்கள் என்கிறோம். புற ஊதாக்கதிர்களின் அலை நீளம் முற்றிலும் வேறாக இருக்கும். இவ்வாறு அலைநீளங்கள் வெவ்வேறாக இருப்பதால் அவற்றை அளந்து கதிர்களின் தன்மையைக் கண்டுபிடிக்கப் பல கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன.

கதிர்கள் ஒரு வினாடியில் உண்டுபண்ணும் அலைகளின் எண்ணிக்கைக்கு அதிர்வெண் (FREQUENCY) என்று பெயர் (அதிர்வுகள் எண் = அலை வேகம்/ அலைநீளம்) ஆகவே குறுகிய அலைநீளமுள்ள கதிரின் அதிர்வெண் கூடுதலாக இருக்கும் என்பது புலனாகின்றது. காணும் ஒளியின் நிறமும் மாறுபடும். சிவப்பு ஒளியின் அலைநீளம் அதிகமானது ஊதா ஒளியின் அலை நீளம் குறைவானது. அதிக சக்திவாய்ந்த கதிரின் அலை நீளம் குறைவாகவும் அதன் அதிர்வெண் அதிகமாகவும் உள்ளன. குறைந்த சக்திவாய்ந்த கதிரின் அலை நீளம் அதிகமாகவும் அதன் அதிர்வெண் குறைவாகவும் உள்ளன.

சூரியனின் சில கதிர்கள் உதாரணமாக புறஊதாக்கதிர்கள் அகச்சிவப்புக்கதிர்கள் தமது முழுச்சக்தியுடன் நம்மை வந்தடைந்தால் அவை நமது உடலுக்கு பெருஞ்சேதம் விளைவிக்கும். ஆனால் அதிஸ்டவசமாக அவை பாய்ந்து வருகையில் வழியிலுள்ள துகள்களுடன் மோதி தம் சக்தியின் ஒரு பாகத்தை இழந்து நீண்ட அலை நீளமுள்ள கதிர்களாக மாற்றப்படுகினறன. அத்துடன் பூமியின் வாயு மண்டலத்தை அடைந்தவுடன் அங்குள்ள ஏராளமான காற்றணுக்களுடன் மோதுவதால் தமது சக்தியின் பெரும்பாகத்தை இழந்து ஆபத்தில்லாத வடிவத்தில் பூமியை வந்தடைகின்றன. ஆகவே நமது வாயுமண்டலம் ஆனது நம்மைப் பாதுகாப்பதாலேயே நாம் உயிர் வாழ்கிறோம்.

சூரியனின் கதிர்களைக் கொண்டு நமக்குத் தேவையான சக்தியை உண்டு பண்ணுவதற்கு வழிகளைக் கண்டுபிடிக்க முன்னேற்றம் அடைந்த நாடுகளில் மட்டுமன்றி பின்னணியிலுள்ள பல நாடுகளும் மும்முரமான பல முயற்சிகளை நடாத்தி வருகின்றன. சக்தி

வெவ்வேறு வகையிலுள்ள தகுந்த முறைகளைக் கொண்டு ஒரு வகையான சக்தியை வேறொரு வகைச் சக்தியாக மாற்றலாம். ஊதாரணமாக ஒரு நீர் வீழ்ச்சியிலுள்ள அல்லது ஒரு அணைக்கட்டில் தேக்கியுள்ள நீரை வேகமாகத் தகடுகளின்மீது பாயவைத்து அத்தகட்டில் பிணைத்துள்ள கம்பிச் சுருள்களை ஒரு காந்த மண்டலத்தில் சுழல வைத்தால் மின்சார சக்தியாக மாற்றப்படும். அவ்வாறே நிலக்கரியை எரித்து நீரைக் கொதிக்கவைத்து நீராவி இயந்திரங்களை ஓட்டுகிறோம். இங்கு வெப்ப சக்தி இயந்திர சக்தியாக மாற்றப்படுகின்றது. ஒளி வெப்பம் ஒலி யாவும் வெவ்வேறு வகையான சக்தியாகும். 24 மணி நேரத்தில் பூமியின் நிலப்பரப்பின்மீது பாயும் சூரிய சக்தியானது மனிதன் இப்பூமியின்மீது வசித்து வந்த காலம் முழுவதிலும் உபயோகித்த எல்லாவித எரிபொருள்களையும்விட அதிகமானது. ஆகவே சூரிய ஒளியே மிக மலிவான சக்தி என்பது தெளிவாகின்றது. சூரியனில் இருந்து பாயும் சக்தியில் ஒரு மிகச் சிறிய பாகத்தைத்தவிர மீதியெல்லாம் வீணாகப் போகின்றது. பூமியின் வாயு மண்டலம் பூமிக்குப் பாயும் சூரிய சக்தியில் பெரும்பாகம் சமுத்திரங்களிலும் துருவ மண்டலங்களிலும் விழுந்து வீணாகிறது. தற்சமயம் சூரிய சக்தியைப் பயன்படுத்திக் கொள்ளுவதற்கு மிகப்பெரிய சாதனங்கள் கதிர்களைக் குவிப்பதற்கு பெரிய கண்ணாடிகள் (குழிவாடிகள்) தேவையாயுள்ளன.

குளிர் நாடுகளில் சூரியசக்தியைக் கொண்டு வீடுகளை வெது வெதுப்பாக வைத்திருக்கின்றனர். சூரியனிலிருந்து வீசப்படும் கதிர்களில் 80 வீதம் நாம் காணும் ஒளி 16 வீதம் அகச்சிவப்புக் கதிர்கள் (INFRATED RAYS) இதுவே வெப்பக் கதிர்கள். 4 வீதம் புறஊதாக்கதிர்கள் (ULTRA VIOLET RAYS) இவை மிக நுண்ணிய அலைகளால் ஆனவை கண்ணாடியினுாடாக நுளைந்து எளிதாகச் செல்லக்கூடியன. வெப்பம் சேகரிப்போனின் மேற்பாகம் கண்ணாடித் தகட்டால் மூடப்பட்டிருப்பதால் வெப்பக் கதிர்கள் அதனூடே நுளைந்து உள்ளே வைக்கப்பட்டிருக்கும் கருமையான பொருள்களின் மீது விழுந்து நீண்ட அலைகளாக மாற்றபடுகின்றன. இவைகளால் எளிதாகக் கண்ணாடியின் ஊடாக நுழைந்து செல்ல முடியாது. ஆகையால் அவற்றின் பெரும்பாகம் உள்ளே அடைபட்டுவிடுகிறது. மேலும் மேலும் வெப்பக் கதிர்கள் பாய்ந்து அடைபட்டுவிடுவதால் அவை வெது வெதுப்பாகிறது.

சூரிய நீர்காய்ச்சி:

கறுப்புச் சாயம் பூசப்பெற்ற உலோகத் தகடுகளாலான அகலமான ஆழமில்லாப் பெட்டிகளின் மேற்பாகத்தைக் கண்ணாடித் தகடுகளால் மூடிக் கூரையின்மீது வைத்தால் சூரிய வெப்பத்தை அவை நன்கு கிரகிக்கும். அதனுள்ளே குளாய்களை வளைந்து வளைந்து செல்லுமாறு அமைத்து அதனூடே தண்ணீரைச் செலுத்தினால் அது சூடேறி வெந்நீராக வெளிவரும். கறுப்புப் பெட்டியின் பக்கங்களில் இருந்து வெப்பம் வெளியேறாத வண்ணம் கம்பளித் துண்டுகளால் பெட்டியை மூடிச் சுற்றி வைக்க வேண்டும்.

சூரிய உலை:

பெரிய குழிவாடிகளைக் கொண்டு சூரிய வெப்பத்தைக் குவித்து மிக அதிகமான வெப்பநிலையை உண்டுபண்ணுவதால் சூரிய உலையை நிறுவலாம். உலகிலேயே மிகப்பெரரிய சூரியஉலை ஆராச்சி நிலையம் பிரெஞ்சு பிரனீஸ் மலைத் தொடரிலுள்ள மவுண்ட்லூயிஸ் என்னும் சிகரத்தில் அமைக்கப் பெற்றுள்ளது. அங்கு உலகிலேயே மிகப் பெரிய நீள்கோள வடிவமான கண்ணாடி பதிக்கப்பட்டுள்ளது. அது 3,500 சிறு கண்ணாடித் துண்டுகளாலானது. அவை ஒவ்வொன்றும் 5 அங்குல தடிப்பான ஜன்னல் கண்ணாடித்துண்டு. அப்பெரிய கண்ணாடியில் சரியாகப் பதிவதற்கென்று வெகு பக்குவமாக உருவாக்கப்பட்டவை. இக்கண்ணாடியில் இருந்து 80அடி தூரத்துக்கு அப்பால் 460சதுரஅடிப் பரப்புள்ள தட்டையான கண்ணாடி ஒன்று நிற்கிறது. இதில் 360 கண்ணாடித் துண்டுகள் உள்ளன. இது சூரிய ஒளியைத் திருப்பி நீள்கோளக் கண்ணாடியின்மீது விழச்செய்கிறது. இக்கண்ணாடி அவ்வெப்பத்தைக் குவித்து அதிக வெப்பமேறிய சூரிய உலையை உண்டு பண்ணுகிறது. தட்டையான கண்ணாடியில் பதிக்கப்பட்ட சில சிறு கண்ணாடித் துண்டுகள் சூரிய ஒளியைத் திருப்பி எதிரே வைக்கப்பட்டுள்ள மின்கலங்களின் (photo electric cell) மீது விழச்செய்து மின்னோட்டம் உண்டுபண்ணுகிறது. இம்மின்னோட்டத்தைக் கொண்டு இயந்திரங்களை இயக்கி சூரியன் இடம் பெயர்ந்து செல்கையில் தட்டையான கண்ணாடியும் சிறிது சுழன்று சூரியனை எப்போதும் நோக்கிய வண்ணம் நின்று சூரிய

வெப்பத்தை நீள்கோளக் கண்ணாடியில் விழச்செய்கிறது. மனித முயற்சி ஒன்றும் தேவையில்லை. 6400 பாகை பரனைற்வரை வெப்பநிலையை அடையக்கூடிய இச் சூரிய உலையில் ஒரு வருடத்தில் 30 நாட்களுக்கு அதிக வெப்பம் தாங்கக் கூடிய உலோகங்களை வெகு சுத்தமான நிலையில் செய்கின்றனர். ஏனைய 335 நாட்களும் விஞ்ஞானிகள் சூரியசக்தியின் தன்மையையும் அதை மக்களுக்குப் பயன்படுத்தும் முறைகளைப் பற்றிய ஆராய்ச்சிகள் பலவற்றையும் நடாத்தி வருகின்றனர். இவ்விதமான சூரிய உலைகளைக் கொண்டு ஆராயப்படும் ஒரு முக்கியமான பிரச்சனையானது வான்வழிக் கப்பல்களுக்குத் தேவையான சக்தி ஜனனிகளை உண்டுபண்ணுவதாகும். சூரிய வெப்பத்தைக் கொண்டு நீரையோ பாதரசத்தையோ காய்ச்சி ஆவியாக மாற்றி ரேர்போ- ஜனனிகளை (Turbo generator) ஓட்டி மின்சாரம் உண்டுபண்ணுவதற்குத் திட்டமிட்டுள்ளனர். ஜனனியைச் சுழலச் செய்த பின்னர் ஆவி குழாய்களின் வழியாகச் சுருங்கும் அறைகளுக்குச் சென்று அங்கே திரவமாகி மறுபடியும் உபயோகிக்கப்படும்.

ரஷ்யர்கள் சோவியத் ஆாமீனியப் பிரதேசத்தில் தமது முதலாவது சூரிய நிலையத்தைக் கட்டி மின்சாரத்தை உற்பத்தி செய்து மக்களுக்கு வழங்கி உள்ளனர். ஆர்மீனியாப் பிரதேசத்தில் வருடத்திதல் மிக அதிகமான நாட்களுக்குச் சூரிய ஒளி கிடைக்கின்றது. பெரிய கண்ணாடிகள் சூரியக் கதிர்களைத் திருப்பி ஒரு பெரிய கொப்பரையிலுள்ள நீரைக் கொதிக்க வைக்கின்றன. நீராவி அங்கிருந்து குழாய்களின் வழியாகச் சென்று 2200 வாற் திறனுள்ள ஜனனியை இயக்குகின்றது. நீர்க்கொப்பரையைச் சுற்றி 1,000 பெரிய கண்ணாடிகள் வைக்கப்பட்டுள்ளன. ஒளி மின்கலங்கள் சூரியனின் போக்கைக் கவனித்து அதற்கேற்றாற்போல கண்ணாடிகளைத் திருப்பி சூரிய வெப்பம் சதா கொப்பரையின்மீது குவியுமாறு செய்கின்றன. இத்துடன் கொப்பரையின் சமதளமான பாகத்தின்மீது சூரியக் கதிர்களை நேரடியாகக் குவிப்பதற்கும் ஓர் ஒழுங்கு உள்ளது. இந்நிலையிலிருந்து ஒரு வருடத்தில் 25,000,00 யூனிட் மின்சார சக்தி கிடைக்கும். பல நாடுகளில் வெவ்வேறு விதமான சூரிய அடுப்புகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஓரடிக் குறுக்களவுடைய குழிவாடியைக் கொண்டு ஒரு பத்து நிமிடத்தில் நீரைக் கொதிநிலைக்குக் கொண்டு வரலாம். இவ் அடுப்பில் சுலபமாகத் திரும்பக்கூடிய கண்ணாடிகள் உள்ளன. சூரியனின் போக்குக்கு ஏற்றவாறு கண்ணாடிகளைத் திருப்பி சூரியக் கதிர்களை சோடிய உப்பு நிறைந்த டப்பிகளில் செலுத்தி வெப்பத்தைச் சேமித்து வைத்து சூரியன் அஸ்தமித்த பின்பும் சமையலுக்குப் பயன்படுத்தலாம். வேறு மலிவான சூரிய அடுப்புக்களில் குழிவாடிகள் சூரிய வெப்பத்தைப் பாத்திரத்தின்மீது நேராகக் குவித்து சூடு உண்டாக்குகின்றன. இவ்வாடிகளை அவ்வப்பொழுது சூரியனின் போக்குக்கு ஏற்றாற் போல கைகளால் திருப்பி வைத்துக் கொள்ளவேண்டும். பாத்திரத்தின் அடிப்பாகம் கறுப்பாக இருப்பதால் வெப்பத்தை நன்றாக கிரகித்துக் கொள்கின்றன. மிக எளிய சாதனங்களாயினும் இவை வாழ்க்கைக்கு நன்றாகப் பயன்படுவன.

ஆய்வுகள்

உயிர்களைத்தேடி
சந்திரனில் ஆய்வு....
அது விஞ்ஞானம்!

உடல்களைத்தேடி
செம்மணியில் ஆய்வு....
இது அநியாயம்.

செல் உண்ணும் தமிழர்

இருள் உண்ணும் ஈழத்திலே
பசியுண்டு வாட்டும்
நோயுற்ற தமிழரைச்
செல் உண்ணப் புறப்படுதே.

முதற்கவனி

உன் வீட்டினைக் கவனி - அங்கே
உன் கிராமத்தைக் கவனி – போத
உன் பிரதேசங் கவனி - அங்கே
உன் தமிழினங் கவனி கவனி.

RAJA MAHENDRAN, P.Eng

இன்றைய சேவையே நாளைய வெற்றி!

மனதிற்கேற்ற மனையை வாங்கிட

ராஜா எம். மகேந்திரன்

BUS: (416) 469-5416
RES: (416) 287-2183

BUS: (416) 756-1267
RES: (416) 282-4978



1055 McNicoll Avenue
Scarborough, Ontario, M1W 3W6

RUBY RUBY
SAREE PALACE

ஸ்காபரோ மத்தியில் நவநாகரீக
ஆடைகளுக்கு

ரூபி அன்ட் ரூபி சாறி பலஸ்

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்
உண்மைதானா பாருங்கள்!

New Born Babies

Gift Items,

Party Dresses,

Sarees,

Men Dresses

And much more...

Jegan/Ruby
Tel: (416) 264-7833 - Fax: (416) 264-7834
2843 Lawrence Avenue East
Scarborough, Ontario, M1P 2S8
Brimley/Lawrence

நம்மஊரு

நம்மஊரு நல்ல ஊரு
ஆற்றோடும் அழகோடும் குடியிருந்தோம்
ஆலமரத் தோப்பினிலே மகிழ்ந்திருந்தோம்
நம்ம ஊரு நல்ல ஊரு

மழைக்காலத்து மாலைப்பொழுதொன்றில்
குயில்பாட மயிலாடும் மந்திகள் வெருண்டோட
இது கண்டு மான்கூட்டம் மருண்டோடும்
நம்ம ஊரு நல்ல ஊரு

விடிகாலைப் பொழுதினிலே
ஊர்க் கோழி கூவயிலே
தண்ணீர்க் குடுவெடுத்து
தரணியிலே நடந்து சென்று

தாமரைக் குளத்தோரம்
தவழ்ந்து வரும் தென்றலிலே
அசைந்தாடும் நெல்மணிகள்
நாணித் தலைகுனிந்திருக்கும்

கொட்டுக் கிணத்தடியான்
கூடவே துணையிருக்க
வெட்டத் துவங்கிடுவார்
விளைந்துவிட்ட வேளாண்மை

வெட்டிவைத்த உப்பட்டி
விரைந்து வைப்பார் பெரும் சூடு
சூடு தன்னைக் காக்கவென்று
சுற்றி வைப்பார் சிறு வேலி

கடுங்கோடை வந்ததுவும்
களம் திருத்தி கட்டை நட்டு
சூடு தள்ளிச் சுறு சுறுப்பாய்
சொரிய வைப்பார் நடையனாலே

தூற்றிக் கட்டிய தூய நெல் மணிகள்
வந்துவிடும் வண்டிகட்டி வாசலுக்கே
கொண்டு வந்த நெல்மணிகள்-கூடுயர்த்தி
கொட்டிடுவார் கொம்பறைக்குள்-நம்ம ஊரு
நல்ல ஊரு

கந்தசாமி-நுட்பராசா
குமுளமுனை.

அரசியல்

முயல் பிடிக்குமா? இல்லையா?
முகத்தில் காட்டாது
ஆள் எவ்வளவு? ஆடை எவ்வளவு?
அடையாளம் தெரியாது.

சிரித்து சமாளிக்கும்
வசதிக்காக மறக்கும்
பிடி கொடாமல் களவெடுக்கும்
பொய்யையும் பொருந்தச் சொல்லும்
சமயத்தில் சமூக சேவையும் செய்யும்.

சுயத்தை நிலை நிறுத்த
கண்டும் காணாமல்
தெரிந்தும் தெரியாமல்
பட்டும் படாமல்
உள்ளதை இல்லாதபடி
கதைவிடும்.

பிரச்சாரம் எதையும்
சரியென்று ஆணியறையும்
அந்த மாதிரி இந்த உலகம்
இனிவரும் காலம்
சர்வதேச உண்மைகள்
அப்பப்ப இயற்றப்படும்
அதன்மேல் காலாவதி
முத்திரையும் இடப்படும்.

தங்கேஸ்

கற்றவர் கல்லாவார்

கல்லாதவர் உலகில் நிலையாதவர்
கற்றவரே உலகில் நிலையானவர்
கற்றகல்வி உலகில் நிலைகொள்ள
கல்லாவான் உலகில் நிலையாகவே!

BALA INCOME TAX & TRANSLATION

பாலா வருமான வரி மற்றும் மொழிபெயர்ப்புச் சேவைகள்

- Income Tax
- Immigration
- Translation

EFILE

- வருமானவரி
- குடிவரவு
- மொழிபெயர்ப்பு





தொடர்புகளுக்கு:
P. Balasubramanium B.A (Bala)

15 Maresfield Drive
Scarborough, ON, M1V 2W9
(McNicoll/McCowan)

Tel: (416) 335-3233
Fax: (416) 335-3235

நோய் தோன்றும் காரணங்களும் அவற்றுக்கு ஏற்றசில விசித்திர நிவாரணங்களும்

(Cause of Diseases and Some Prevention Methods)- (1)

வழங்குபவர்-டாக்டர் சி.வ.பரராஜசிங்கம்.Ph.D Holistic Practitioner (Canada)

எமது உடம்பு இயற்கையால் சிருஷ்டிக்கப்பட்ட ஓர் அற்புத படைப்பு. இது இயற்கையின் நியதிப்படி தாமாகவே செயற்பட வல்லது. பிறந்தநாள் முதல் இறக்கும்வரை இயற்கையின் துணையுடன் பாதிப்பின்றிச் செயற்பட வல்லது. சுற்றுஞ் சூழலில் ஏற்படும் மாற்றங்கள், மனிதன் தானாகவே ஏற்படுத்திக் கொள்ளும் மாற்றங்கள் மற்றும் சீதோஷ்ண மாற்றங்களால் உடம்பின் இயற்கையான செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன.

திருவள்ளுவர் தமது தெய்வீக நூலில் "மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்துவது அற்றது போற்றி உணின்" எனக் குறிப்பிடுவதாவது உணவின் தகுதி, அது ஜீரணித்துவிட்டதா என்பதை உணர்ந்த பின் உண்பவருக்கு நோயே தோன்றாது என்பதாம்.

இன்று பெரும்பாலான நோய்கள் மன அழுத்தத்தால் தோன்றுகிறது என்பது பல மருத்துவ ஆராட்சி-யாளரினதும், விஞ்ஞானிகளினதும் அபிப்பிராயமாகும். மனிதனின் மூளையின் செயற்பாட்டில் பதினைந்து சதவிகிதம் கூட விஞ்ஞானிகளால் இன்றுவரை கண்டறிந்து கொள்ளப்படவில்லை. இவ்வளவு மர்மம் நிறைந்த உறுப்பின் செயற்பாடே பல நோய்களுக்கும் காரணமாகிறது. மனதில் ஓர் எண்ணம் உருவானதும் அது நுண்ணிய நரம்புக் கலன்களின் வழியாக (Neutrones) மின் வேகத்தில் உடம்பின் பல்வேறு பாகத்திலுமுள்ள உறுப்புக்களுக்கு அஞ்சல் செய்யப்பட்டு அவை உடன் செயற்படுகின்றன. உதாரணத்திற்கு எமது கண்ணில் ஓர் தூசி பட்டதும் மூளை அதை உணர்ந்து, உடன் கைகளுக்கு சமிக்ஷை கொடுத்து, கைகள் உடன் கண்ணைப் பொத்துகின்றன. இதேபோல் பல்வேறு செயற்பாடுகளும் கணப் பொழுதில் நிகழ்வதை நாம் அவதானிக்கலாம். மனதின் விருப்பு வெறுப்பிற்கு ஏற்பவே எமது உடம்பிலுள்ள சில உறுப்புக்கள் செயற்படுகின்றன. அவற்றை 'இச்சைக்கு ஏற்பச் செயற்படும் நரம்பு மண்டல உறுப்பு எனவும் (Voluntary or Sympathetic Nervous System) (உதாரணமாக நாமே மூடக் கூடிய கண் இமைகள், நாமே அசைக்க கூடிய கை கால்கள், நாம் விரும்பியபடி உள் இழுத்து வெளிவிடும் சுவாசம் ஆகிவையாகும்.) சில உறுப்புக்கள் எமது இச்சைக்கு ஏற்ப செயற்படாத நரம்பு மண்டல உறுப்புக்கள் எனவும் (Involuntary or Parasympathetic Nervous System) (உதாரணம் இருதயம், சிறுகுடல், பெருங்குடல், சிறுநீரகம் ஆகியவை) இருவகையாக வகுக்கலாம். இந்த இச்சைக்கு உட்பட்டுச் செயற்படும் உறுப்புக்களை நாம் எமது விருப்பு வெறுப்புக்கு ஏற்ப செயற்படச் செய்யலாம். ஆனால் இந்த இச்சைக்கு ஏற்ப செயற்படாத உறுப்புக்கள் தாமாகச் செயற்பட்டாலும் எமது மனத்தில் தோன்றும் உணற்சி, விருப்பு, வெறுப்புக்கேற்ப கூடிக் குறைந்தும் செயற்படுகின்றன. (உதாரணமாக நாம் பயந்ததும் இருதயம் வேகமாகத் துடித்தல், துக்கத்தால் வயிறு, சிறுகுடல், பெருங்குடல் ஆகியவற்றில் உள்ள சுரப்பிகள் நன்கு சுரக்காது பசியின்மை, மலச்சிகல் ஏற்படுதல், அதிகம் உணற்சிவசப்படுவதால் 'தைறோயிட்' (Thyroid) கோழம் தீவிரமாகச் செயற்பட்டுப் பதட்டம், நடுக்கம் ஏற்படுதல்)

மனதின் எண்ணங்களால் செயற்படும் இச்சைக்கு உட்படும் உறுப்புக்களை எண்ணம் மாறியதும் நாம் இயற்கை நிலைக்கு கொண்டுவந்து விடலாம். ஆனால் இச்சைக்கு உட்படாது செயற்படும் உறுப்புக்கள் எம் எண்ணங்கள் மாறிய பின்பும் இயற்கை நிலைக்கு வருவது சாத்தியமில்லை. எனவே அவை தொடர்ந்தும் இறுக்க நிலையிலேயே (Stressed State) இருந்து விடுகின்றன. மனிதனுக்கு ஒரு ஆபத்து வரும்போது பயப்படுவதோ, அதிற்சி அடைவதோ, ஓடுவதோ நியாமானது ஆனால் 'இப்படி நடக்குமோ?', 'அப்படி நடந்து விடுமோ?' என்னும் கற்பனையால் இச்சைக்குட்படாது செயற்படும் உறுப்புக்களும் இறுக்கமடைந்து அந்தக் கற்பனை நீங்கியபின்பும் அவை இறுக்க நிலையிலேயே இருந்துவிடுகின்றன.

இதனால் இந்த உறுப்புக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. அவற்றை போஷிக்கும் இரத்தம் மட்டுப் படுத்தப்படுகின்றது. அங்கு சுரக்கும் சுரப்பிகள் மந்தமடைந்து அவற்றின் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. தொடர்ந்தும் இந்த உறுப்புக்கள் தழராது பல நாட்கள் இறுக்க நிலையில் இருந்தால் அவ்விடங்களிலுள்ள நாடிகள், நாழங்கள் தடித்தும் விட்டங்குறைந்தும் பல்வேறு பயங்கர நோய்கள் தோன்றுகின்றன என்பதே இன்றைய விஞ்ஞானிகளின் தீவிர ஆராட்சிகள் மூலம் கண்டுபிடித்த உண்மையாகும். இதை எமது மூதாதையர்களாகிய மருத்துவர்களும் சித்தர்களும் யோகிகளும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கண்டறிந்து அந்த இறுக்க நிலையை தழர்த்துவதற்கு (Relaxation) யோகாசனம், தியானம், நிஷ்டை, பிராணாயமம் ஆகிய பல அற்புத நிவாரண முறைகளை எமக்குத் தந்துள்ளனர்.

உயிரினம் உயிர் வாழ்வதற்கு உணவு அத்தியாவசியமாகும். அந்த உணவு உடல் உழைப்பிற்கு ஏற்றதாகவும் உறுப்புக்களை நன்கு போஷித்து நல்ல நிலையில் வைத்திருப்பதற்கு உதவுவதாகவும் இருத்தல் வேண்டும். இதையே எம் முதியவர்கள் 'கடப்பாரையை விழுங்கி விட்டு சுக்கு கசாயம் குடித்தால் மாறுமா?' என்று நகைச்சுவையாக கூறுவர். இதன் விளக்கம் தகுதியற்ற உணவை உண்டபின் சிரமப்படுவதால் என்னபயன்?, அவர்களுக்கு நோய் தீர்வது எப்படி? என்பதாம். இன்று நாகரீகம் வளர்ந்து விட்ட நம் வாழ்வில் நிகழ்வதை சற்று அவதானித்தால் மனிதன் இயற்கை நியதிக்கு மாறாகவே உணவு வகையில் செயற்படுவதாக தோன்றுகின்றது. அவசர வாழ்க்கை காரணமாக தினம் குறித்த நேரத்திற்கு உணவருந்துகிறோம். அந்த நேரத்தில் எமக்கு பசி இருக்கிறதோ இல்லையோ நாம் உணவருந்த நேர்கிறது. இது முற்றாக இயற்கைக்கு மாறானது. மனிதனைத் தவிர வேறு எந்த ஜீவராசியும் பசியில்லாது உணவருந்துவதில்லை. எனவே நாம் எக்காரணத்தாலும் பசியில்லாத நேரத்தில் உணவு உட்கொள்ளுதல் கூடாது. எமது உடல் உறுப்புக்களில் உள்ள சுரப்பிகள் நன்கு சுரந்து அங்கு போதிய ரசங்கள் இருந்தாலே எமக்குப் பசி தோன்றும். அப்படிச் சுரப்பிகள் நன்கு சுரக்காதிருக்கும் போது உணவருந்துவதால் அஜீரணம் ஏற்பட்டு பலவித நோய்கள் தோன்றும்.

இதைத்தவிர அவ்வாறு பசி இல்லாதபொழுது உணவருந்தினால் நிகழ்வது உணவால் உருவாகும் 'கலோறி' (Calorie) என்னும்சக்தி உடல் உழைப்பால் விரயமாகாது தேங்கி அது கொழுப்பாகச் சேகரிக்கப்பட்டு உடம்பில் பல்வேறு பாகங்களிலும் தேக்கம் அடைந்து எமது எடையைக் கூட்டிவிடும். இதனால் சலரோகம் (Diabetis) இரத்த அழுத்தம் கூடுதல் (High Blood Pressure) போன்ற வியாதிகள் தோன்றுகின்றன. உணவு அருந்தும் போது எமது வயிற்றில் அரைவாசி உணவும், கால்வாசி நீரும், கால்வாசி வயிறு காலியாகவும் இருத்தல் அவசியம். அதுவே உணவு நன்கு ஜீரணமாவதற்கு உதவும். உணவு வயிற்றில் நன்கு கலக்கப்படுகிறது (Blended). இது வீட்டில் சமையல் அறையில் உள்ள ஒரு கலக்கும் இயந்திரத்திற்கு ஒத்தது (Blender Machine) அதற்குள் கலக்க வேண்டிய பதார்த்தத்தை அரைவாசிக்கு போட்டு நீர்விட்டு மேற்பாகத்தில் சிறிதளவு காலியாக வைத்துக் கலக்குகின்றோம். கலக்குதல் முடிந்ததும் கலக்கல் பாத்திரத்தில் கலவை நிறைய இருப்பதைக் காணலாம். இப்படி மேற்பாகத்தில் காலியான இடம் இருக்காவிடில் கலக்கும் கலவை சற்றுக் கலங்கியதும் வெழியே கொட்டிவிடும். இதேபோல் எமது வயிற்றிலும் இடங்காலியாக இருக்காவிடில் உணவு நன்கு ஜீரணமாகாது என்பதை நாம் சுலபமாக விளங்கிக் கொள்ளலாம். உணவு சிறுகுடலை அடைந்ததும் அங்கு போதிய இணையநீர் (Pancreatic Juice) பித்தநீர் (Bile) உணவுடன் கலந்து உணவு நன்கு ஜீரணிக்க உதவுகிறது. இந்த உணவு அளவுடன் இருந்தாலே அங்கு சுரக்கும் சுரப்புநீர் உணவை ஜீரணிக்கச் செய்யும். உணவு அதிகமாகவும், சுரக்கும் சுரப்புநீர் குறைவாகவும் இருந்தால் வயிற்று உப்பிசம் அஜீரணம் ஏற்படும் என்பதை ஊகித்துக் கொள்ளலாம். சிறுகுடலில் சத்துக்கள் உறிஞ்சப் பட்டபின் அங்கு தேங்கும் கழிவுப் பொருட்கள் கழிபடுவதற்காக பெருங்குடலை அடையும். அங்கு போதிய நார்ச்சத்தும் நீரும் சேர்ந்து பெருங்குடலின் இறுதிப் பாகமான மலவாசலுக்கு தள்ளப்பட்டு மலமாக வெழியேற்றப்படும். இந்தப் பெருங் குடலில் போதிய நார்சத்தும், நீரும் இல்லாவிடில் அங்கு இந்தக் கழிவுப்பொருள் தேங்கி அது பெருங்குடலால் உறிஞ்சப்பட்டு உடம்பில் நச்சு நீராகச் சேர்ந்து ஒவ்வாமை (Allergy) தோன்றும். இதனால் தொய்வு (Asthma) சரும அரிப்பு (Urticaria) பீனிசம் (Catarrh)

மூக்குநீரோடல் (Allergic Rhinitis) சருமப்புற்றுக்கள் (Eczema,Psoriasis) மூலவியாதி (Heamorrhoids) ஆகிய நோய்கள் தோன்றும் ஆபத்து உண்டு.

சில விசித்திர நோய்தீர்க்கும் முறைகள்:-

முற்காலத்தில் அதிகமான பாமர மக்களுக்கு போதிய கல்வி அறிவு இல்லாத காரணத்தால் கல்வி அறிவுள்ள சித்தர்களும் மருத்துவர்களும் தமது ஞானத் திறனால் பாமரமக்களின் மத்தியில் சமயத்தின் மூலம் இந்த நன்மைதரும் நெறி முறைகளை மிக நாசூக்காகப் பரப்பி மக்கள் சுகவாழ்வு வாழ்வதற்கு உதவினர். கல்வி அறிவு இல்லாத மக்கள் கூட சமய அனுஸ்டானங்களில் ஈடுப்படனர். இதை அவதானித்த சித்தர்களும் வைத்தியர்களும் தமது வைத்தியத்துறை ஞானங்களைச் சமயத்தின் மூலம் மக்கள் மத்தியில் பரப்பினர். உதாரணமாகக் கோவிலுக்கு மக்கள் அன்றாடம் போதல் அல்லது கிழமைக்கு ஒருமுறையாவது போதல் சகல சமயங்களிலும் அவசிமெனக் கருதப்படுகிறது.

இதனால் மக்கள் தம் சுற்றாடலில் சதா உழைப்பில் ஈடுபட்டு உடல் இழைப்பதுடன் மனத்தாலும் அதிகம் சலித்திருப்பதை நீக்கி தமது அன்றாட சூழ்நிலையைச் சற்று மறந்து உடலும் மனமும் சற்று ஓய்வு பெற உதவும். கோவில்களிலும், தேவாலயங்களிலும் உள்ள சிலைகள் சக்தி வாய்ந்த கற்களால் அல்லது உலோகங்களால் உருவாக்கப்பட்டவை. இவைகள் நாத அலைகளையும் (Sound Waves) ஒளி அலைகளையும் (Light Waves) தம்முள் ஈர்த்து வைத்து அவ்வப்போது வெளிவிட வல்லவை. இந்தச் சக்தி இந்தத் திருத்தலங்களில் பக்தியுடன் ஓதப்படும் பிரார்த்தனைகள், மந்திர உச்சாடனம் இவைகள் யாவற்றையும் உள்வாங்கப்பட்டு அந்தச்சுரம் உலோகங்களில் தேக்கி வைக்கப்பட்டு அவ்வப்போது வெளியாக்கப்படும். இவை பல்லாயிரம் ஆண்டுகளாகக்கூட அடக்கி வைக்கப்பட்டு அவ்வப்போது வெளிவிடப்படும். இப்படி வெளியாகும் சக்தி அங்கு கூடியிருக்கும் மக்களின் மேல் தாவி அவர்களுக்கு சக்தியைக் கூட்டி அவர்களில் தெய்வீகச் சக்தியைப் பலப்படுத்த வல்லவை. இதனாலேயே மிகப்புராதன கோவில்கள், தேவாலயங்களுக்கு செல்லும் சில பக்தர்களுக்கு பல தீராத நோய்களும் தீர்கிறது. அவர்களுக்கு அபூர்வ தெய்வீக சக்தி உருவாகிறது. இதைத் தவிர மக்கள் அதிகம் ஒன்றுகூடுவதால் மனிதரில் எமக்கு தெரியாது தேங்கி இருக்கும் மனித மானுஷ்ய சக்தி (Man Magnetic Force) அங்கு கூடும் மக்கள் மத்தியில் ஒருவரிலிருந்த மற்றவருக்குத் தாவும் சாத்தியம் அதிகமுண்டு. இந்த மனித மானுஷ்ய சக்தி ஒருவருக்கு ஒருவர் வித்தியாசப்படும். அதாவது இது சிலருக்கு அதிகமாகவும் சிலருக்கு குறைவாகவும் இருக்கும். அமைதியாகவும் திடமான ஆக்கபூர்வ எண்ணகள் (Optimistic Opinion), தியானம், மந்திர உச்சாடனம் செய்பவர்கள் மனதை யோகா பயிர்ச்சி, பிரணாயமம் முதலியவற்றால் திடப்படுத்தியவர்கள், மனதை ஒருநிலைப் படுத்தும் ஆற்றல் உள்ளவர்களுக்கு அதிக மாகவும், நிலையற்ற பதட்டமான மனப்பாங்கும் நலிய முரணான எண்ணங்களும் (Pessimistic Opinion) உடைய நபருக்கு குறைவாகவும் இருக்கும். இந்த மனித மானுஷ்ய சக்தி அவரவருக்கு அவர்களின் நோய்களை நீக்கவும், நோய்கள்வராது தடுக்கவும் (Enhance Immunity) உதவும். இந்த மானுஷ்ய சக்தி ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு தாவும் தன்மை வாய்ந்தது. எனவே பக்தி சிரத்தையுடன் ஒன்று கூடும் மக்கள் மத்தியில் மருவும் என்பதை எவரும் அனுமானித்துக் கொள்ளலாம். இப்படி சக்தி மருவுதலால் நலிவுற்ற மானுஷ்ய சக்தி உள்ளவர்கள் உற்சாகமடைவர். அவர்களின் மனமும் சாந்தமடையும். நோய் தடுக்கும் எதிர்ப்புச் சக்தியும் கூடும். கோவில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள், விகாரைகள் இவற்றில் அதிகமாக பிரார்த்தனைகள் நடக்கும். அங்கு கூடியிருக்கும் மக்களின் மனம் அந்தப் பிரார்த்னை சத்தத்தால் ஈர்க்கப்படுவதால் அவர்களின் மனம் அலைந்து திரியாது ஒருநிலைப்படுகிறது. சற்று நேரத்திற்காவது இப்படி மனம் ஒருநிலைப்படுவதால் மனம் திடப்படுகிறது. இது பெரும்பாலும் சித்தர்களும், ஞானிகளும் தியானத்தால் பெறும் சக்தி. ஆனால் மக்கள் தேவாலயங்களில் சுலபமாகப் பெறக்கூடியதாக இருக்கிறது. கோவில்களில் தீபாராதனை, தேவாரம், திருவாசகம் பாடுதல், மணி ஓசை, மந்திர உச்சாடனம், சலவாக்கு ஓதுதல், 'பிரித்' ஓதுதல் இவையாவும் இப்படியான நற்பலனையே செய்கின்றன என்பதை நாம்

அறிந்து கொள்ளலாம். நாம் முன் குறிப்பிட்ட நாத அலைகளும், ஒளி அலைகளும் இந்த தெய்வத் தலங்களில் உள்ள சிலைகள் சுருவங்களில் தங்கி இருந்து அவ்வப்போது வெளிவிடப்படுகிறது என்ற உண்மை சற்று நம்பமுடியாததாக இருக்கிறதா?. இது எமது மூதாதையர் கண்டறிந்த உண்மை என்பதால் எமது மனம் ஏற்க மறுக்கிறதா? ஆனால் இன்றைய விஞ்ஞானத்தை சற்று நோக்கவும். இன்றைய விஞ்ஞானிகள் எம்மைப் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் இருப்பவர்களுடன் கதைக்கவும் செய்திகளை அனுப்பவும், பெறவும் சாத்தியமாக்குகின்றார்கள். இத்தனைக்கும் அவர்கள் எமக்கு தந்து உதவுவது தொலைபேசி அல்லது கணனி (Telephone or Computer) என்னும் உருவில் சில உலோகங்கள்தான். இந்த சிறிய கருவிகள் நாதஒளி அலைகளை பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் கடத்தவும், ஏற்கவும் செய்கின்றன. இது இந்தச்சிறிய உறுப்புகளால் சாத்தியமாக்க முடியுமானால் தெய்வ ஸ்தலங்களில் உள்ள உலோங்களால் இந்த நாதஒளி அலைகளை கடத்தமுடியுமென நமது சித்தர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் கண்டறிந்ததில் உண்மை இருக்கவேண்டுமல்லவா?

சைவசமயத்தவர் திருநீறு அணிகிறார்கள். இந்தத் திருநீறு பசுவின் சாணத்தை எரித்துப்பெறும் சாம்பல். இந்தச்சாணத்தில் உள்ளவை பசுவின் வயிற்றில் ஜீரணிக்கப்பட்ட புல் போன்ற தாவரங்கள், பசுவின் வயிற்றில் ஊறிய இரசங்கள் ஆகியனவாகும். இந்த சாம்பலில் நீறாகிய தாவரமும், அது ஜீரணிக்கச்செய்த புரதச்சத்துகளும் அடங்கும். சாம்பலாகிய தாவரம் காபோ வெஜிரபிள்ஸ் (Carbo Vegetabilis) ஏனைய நீறாகிய மிருகசத்தாகிய புரதம் 'காபோ அனிமலிஸ்' (Carbo Animalis) ஆகும். இவை சமன சிகிச்சை (Homeopathy) என்னும் வைத்தியத்தின்படி உயிர் பிரியும் தறுவாயிலுள்ள ஒருவருக்குப் பலம் தந்து உயிர் காக்கவல்ல மருந்துகள் எனக் கண்டறியப்பட்டு வெற்றி கரமாகப் பாவிக்கப்படுகிறது. கோவில்களுக்கும் தேவாலயங்களுக்கும் பக்தர்கள் நறுமணமுள்ள பூக்களை எடுத்துச்செல்வதை நாம் காணலாம். இந்த மலர்களின் நறுமணத்தில் பல்வேறு நோய்களைத் தீர்க்கும் சக்தி உண்டு என்பதை 'வாஷனை வைத்தியம்' (Aromatherapy) என்னும் இன்றைய நவீன வைத்திய முறை விளக்குகிறது. இந்த மலர்களின் வாஷனை எத்தனையோ பயங்கர நோய்களைக் தீர்க்கவல்லவை. இதை நன்கு அறிந்திருந்த சித்தர்களும் மருத்துவர்களும் தேவாலயங்களுக்கு மக்கள் மலர்களை கொண்டு செல்வதை ஊக்குவித்தனர். தேவாலயங்களில் தீபாராதனை செய்யும் பொழுது தீபத்திலிருந்து புகை வெளியாவதை நாம் காணலாம். இந்தப் புகையானது கரி (Carbon) என்னும் தாதுப்பொருளாகும். இந்தத் கரி சுற்றம் சூழலில் உள்ள எவ்வித பயங்கர நச்சுத்தன்மையையும் நீக்கவல்லது என்பது தற்போதைய விஞ்ஞான ஆராட்சி மூலம் கண்டறிந்துள்ள உண்மை. கடினமான நச்சு சுரம்(Septic Fever), பேதி (Cholera) போன்ற நோய்களால் பீடிக்கப்பட்டவர்களை அவர்களை சுற்றி கரி நிரப்பிய பாத்திரங்களை வைத்ததால் அந்த நோய்கள் அவர்களை அதிகம் பாதிக்காது குணப்படுத்தலாம் என்று இன்று பல மருத்துவ ஆராட்சியாளர்கள் நிரூபித்திருக்கின்றனர். இந்த அடிப்படையிலேயே வீடுகளில் காலை,மாலை சாம்பிராணித் தூபம் போடுவார். இதன் காரணத்தால் வெளியே சென்று வீட்டிற்குள் பிரவேசிப்பவருக்கு 'ஆரார்த்தி' எடுத்தல், திருஷ்டி கழித்தல் முதலியன அனுஷ்டிக்கப் படுகின்றன. இவற்றால் வெளியே சென்று வருபவர்களில் தாவிப்படிந்துள்ள நச்சு வாயுக்கள், கிருமிகள்யாவும் புகைக்கரி பட்டதும் அழிந்து விடுகின்றன.

பெண்கள் தமது தலையில் வாஷனையுள்ள மல்லிகை, கனகாம்பிகை முதலிய மலர் மாலைகள் அணிவர். இதனால் அவர்களுக்கு மன உற்சாகமும் சுற்றம் சூழலில் உள்ள மனச்சோர்வு தரும் நிகழ்வுகளை அவதானியாது விடவும் மனதிற்கு மகிழ்ச்சியும் கிடைக்கும். இதைத் தவிர இந்த மலர்கள் காமவிர்தினிகள். எனவே இந்த வாஷனையை நுகர்வதால் பாலியல் வேட்கை அதிகரிக்கும். றோசாமலரின் வாஷனை இருதயத்திற்குப் பலம் கொடுக்கவல்லது. சிறுபிள்ளைகளுக்கு வெளியே செல்லும் பொழுது கரிய பொட்டு வைப்பார்கள். இந்தப்பொட்டு அரிசிக்குறுணலை எரித்த கரியை நல்லெண்ணையுடன் சேர்த்து செய்வதாகும். இதனால் வெளியே செல்லும் சிறு பிள்ளைகளுக்கு நச்சு வாயுக் களும், கிருமிகளும் சேராது அந்தக் கரிப்பொட்டு பாதுகாக்கும். இதைத்தவிர பிறரின் திருஷ்டி (பார்வை) பிள்ளையில் லயிப்பதற்கு முன் இந்த கரிய நிறப்பொட்டில் தரிப்பதால் பிறரின்

ஆசை நிறைந்த மானுஷ்ய சக்தி பிள்ளையில் தாவி அதற்கு எதுவித பாதிப்பும் ஏற்படுத்தாது பாதுகாக்கும்.

இதற்காவவே சில பெண்களும் திருஷ்டிப் பொட்டு (Beauty Spot) வைப்பார்கள். ஆண்கள் நெற்றியில், நெஞ்சின் நடுவில் சந்தனப்பொட்டு இடுவர். இந்தப் பொட்டு அதாவது நெற்றியின் இரு புருவங்கள் மத்தியில் எமது மூளைக்குள் இருக்கும் ஓர் பயறு போன்ற 'பிரியூரறி' கோழம் என்னும் நாடியில்லாக் கோழத்தின் (Pitiutary Gland) பிரதிபிம்ம நிலையம் இருக்கிறது. அவ்விடத்தில் பொட்டிடுவதால் அந்தக் கோழம் சதா ஊக்குவிக்கப்பட்ட வண்ணம் இருக்கும். இந்தச் சிறிய கோழத்தால் சுரக்கும் 'ஹோமோண்' இரசம் (Hormone) உடம்பிலுள்ள அத்தனை உறுப்புக்களையும் செயற்படச் செய்யும் ஆற்றலுள்ளது. மார்பின் நடுவில் சந்தணப் பொட்டு இடப்படும் நிலையம் 'தைமஸ்' (Thymus Gland) கோழத்தின் பிரதிபிம்ம நிலையம். இந்தக் கோழத்தினால் சுரக்கும் இரசம் உடம்பில் உள்ள அத்தனை தசைகளையும் உடன் வலுப்படுத்தும் சக்தி உள்ளது. மேலும் இந்தக் கோழம் உடம்பின் நோய் எதிர்க்கும் சக்தியை (Immune enhance) நொடிப் பொழுதில் பலப் படுத்தும் சக்தி வாய்ந்தது.

கோவிலில் அங்கப்பிரதிஷ்டனை செய்வார்கள். அது எதற்கு?. இது போதிய உடல் உழைப்பின்றி வாழ்பவருக்கு அதிக உடல் பயிற்சி கொடுத்து ஊழச்சதையைக் குறைக்கும், எடைகுறையும், நீரிழிவு, இருதய நோய் போன்ற வற்றை வராது தடுக்கும். கோவில்களில் புக்கை என்னும்பால்ச் சாதம், மோதகம் பரிமாறப்படும். இந்தச் சாதத்தில் எக்காரணத்தாலும் உப்புப் போடக்கூடாது (உப்பு மச்சம் எனக் கருதப்படுவதால்) என்னும் விதிமுறை இருக்கிறது. எனவே மக்களுக்கு உப்பு இல்லாத உணவு வழங்கப்படுகிறது. இல்லங்களில் தினந் தினம் அதிக உப்பு பாவிக்கும் மக்கள் இந்த உப்பில்லாத சாதத்தை உண்பதால் ஓரளவு உப்பு உடம்பிலிருந்து குறைகிறது. அதிகமான உப்பே பல நோய்களுக்கும் காரணம் என்று இன்றைய விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

தலையின் இரு மருங்கிலும் குட்டி இரு காதுகளையும் இறுகப் பற்றி 'தோப்புக் கரணம்' செய்வார்கள். தலையின் இருமருங்கிலும் செவிப்புலனின் பிரதிபிம்ம நிலையம் (Reflex Points of the Auditory Nerves). கண்பார்வை பிரதிபிம்ம நிலையம் (Reflex Points of Sight) என்பன இருக்கின்றன. எனவே இவ் உறுப்புக்கள் பலப்படும். காதின் கீழ்ச்சோணையில் மூளையின் பிரதிபிம்ம நிலையம் (Reflex Points of the brain in the lobes of the ear) இருக்கிறது. நாம் இரு காதுகளையும் குறுக்கேவைத்த இரு கைகளாலும் பற்றி வாயை மூடி, கண்களையும் மூடி தோப்புக்கரணம் என்பதில் கீழே பதியும்பேது மூக்கால் சுவாசம் வெளிவரும், வயிறு உள்பக்கம் சுருங்கித் தள்ளப்படும். பின் மேலெழும்போது சுவாசம் உள்ச்செல்லும், வயிறு மேலெழும். இதுவே இயற்கையான சுவாசமுறை. பலருக்கு இது எதிர்மாறாக நிகழ்வதால் அதாவது சுவாசம் உள் செல்லும் பொழுது வயிறு மேற்பக்கம் உயராது உள் பக்கம் மடிந்தும், பின் சுவாசம் வெளியாகும் பொழுது வயிறு உள்செல்லாது வெளிப் பக்கம் வருவதாலும் சுவாசப்பைக்கும் மேல் வயிற்றிற்கும் இடையில் உள்ள 'பிரிமென்தகடு' (Diaphragm) நன்கு செயற்படாது சுவாசப்பைக்குள்ளும், இருதயத்திலும் கழிவுப் பொருட்கள் தேங்கி பல இருதய, சுவாசப்பை நோய்கள் தோன்றுகின்றன. இதை நிவர்த்தி செய்து சுவாசத்தை இயற்கை முறைக்கு கொண்டு வருவதற்கு இந்தத் தோப்புக்கரணம் உதவுகிறதல்லவா?. இதை நன்கு உணர்ந்த நம் மூதாதையர்களாகிய சித்தர்களும், யோகிகளும் இப்படி சமய அனுஸ்டானங்கள் மூலம் சுவாசத்தை இயற்கை நிலைக்கு கொண்டுவரச் செய்திருக்கின்றனர். இந்த அனுஷ்டானத்தால் மூளை, இருதயம், சுவாசப்பை என்பன பலப்படுகின்றன. ஏனைய சமயங்களாகிய கிறிஸ்தவ சமயம், புத்த சமயம், இஸ்லாமிய சமயம் முதலிய சமயங்களிலும் பிரார்த்திக்கும் பொழுதும், தொழும் பொழுதும் உடம்பை பல விதத்திலும் அப்பியாசித்தே வணங்குவர். இவையாவும் சுவாசத்தை ஸ்திரப்படுதி மூளைக்குப் பலம் கொடுக்கும் அப்பியாசங்களேயாகும்.

இந்து சமயம், கிறிஸ்தவ சமயங்களில் பிரார்த்தனை செய்யும்பொழுது ஜெபமாலை, உருத்திராட்ச மாலை முதலியவற்றை பெரு விரலின் முற்பக்கத்திற்க்கும் சுட்டுவிரலுக்கும் இடையில் வைத்து உருட்டுவர். இந்தப் பெருவிரலின் நடுப்பாகத்தில், உள்ளங்கை பக்கத்தில் எமது மூளையுள் உள்ள முக்கிய பிரதான கோழமாகிய 'பிரியூற்றறி' (Pituitary

Gland) கோழத்தின் பிரதிபிம்ம நிலையம் இருக்கிறது. இது மூளையைப் பலப்படுத்தவும், உடம்பின் அத்தனை நாடி இல்லாக் கோழங்களையும் (Indocrine Glands) ஊக்குவிக்கவும் செய்கின்றது. இதனால் ஞாபகசக்தி கூடும், மனம் உறுதிபெறும், மனோசக்தி பலப்படும், அதிக உற்சாகம் ஏற்படும். எமது தோழிலுள்ள தசைகள் மனத்தில் பதட்டம் ஏற்படுவதால் இறுக்கமடைகின்றன. இப்படி இறுக்கமடைவதால் அதனுள் உள்ள நாடிகளும் நாளங்களும் இறுக்கப்படுகின்றன. இதனால் அந்த நாடி, நாளங்களிள் ஊடாகச் செல்லும் குருதியின் ஓட்ட வேகம் மந்தமடைகிறது. இதனால் இந்த நாடி, நாளம் போஷிக்கும் இருதயம் (Heart), மூளை (Brain), சுவாசகோஷம் (Lungs) ஆகியவை பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இதனால் இருதயநோய்கள், பாரிசவாதம், தொய்வு போன்ற நோய்கள் தோன்றும் ஆபத்து ஏற்படுகிறது.

கோவில்களில் காவடி எடுத்தல், விக்கிரகம், சொரூபங்களைத் தோழில் வைத்து அழுத்திச் சுமப்பதால் இந்த தசைகள் இழக்கமடைந்து மென்மையாகின்றன. அதனூடாகச் செல்லும் நாடி, நாளங்கள் நல்ல நிலையில் செயற்படுவதால் மேற்குறிப்பிட்ட நோய்கள் வராது தடுக்கப்படுகின்றன. அதிகமாக எல்லாச் சமயங்களிலும் விரதம் நோன்பு ஆகியவை அனுஸ்டிக்கும் படி அறிவுறுத்தப்படும். இதன் காரணத்தால் உடம்பில் உள்ள அத்தனை உறுப்புக்களும் ஓய்வெடுப்பதுடன் தினமும் அதிக உணவு வயிற்றில் சேராத காரணத்தால் உடம்பில் தேங்கிய நச்சுப்பெருட்களை உண்டிக்காய், கல்லீரல், மண்ணீரல், முதலியவற்றால் விரைவில் அகற்றப்பட்டு உடம்பு புத்துயிர் பெறுகிறன்து என்பதை நாம் விளங்கிக் கொள்ளலாம். இன்றைய நவீன விஞ்ஞானிகள் இருதய நோய், புற்றுநோய் (Cancer) ஆகியவை மரக்கறி உணவு உண்பவருக்கு வருவது குறைவு எனக் கண்டறிந்துள்ளனர். இதை எமது சித்தர்களும், யோகிகளும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கண்டறிந்து 'சைவ உணவே மனிதருக்குச் சிறந்தது' என விளக்கியுள்ளனர். தற்போதைய விஞ்ஞானிகள் மூன்று கோடி மைல்களுக்கு அப்பால் உள்ள பிரமாண்டமான கோழமான சூரியன் இந்த உலகத்தையும் ஏனைய கோழ்களையும் ஆட்டிப்படைக்கிறது என்று கண்டறிந்து மக்களின் பாராட்டை பெறுகின்றனர். எமது மூதாதையர்களாகிய சித்தர்களும் யோகிகளும் சூரியனின் இன்றியமையாத தன்மையை அன்றே அறிந்து அதை தெய்வமென்று வழிபட்டு அதற்கு தைமாதம் பொங்கல் வைத்து விழா எடுத்து கொண்டாடினர். அதை நம்மிற் பலர் மூட நம்பிக்கை என்று கேலி செய்ததுமுண்டு. சூரியனே உலகில் உயிரினம் வாழ்வதற்கு அத்தியா அவசியமாகையால் அதை தெய்வம் என எமது மூதாதையர் மதித்து வணங்கினர் என்றால் அதில் தவறொன்றுமில்லையே. இன்று இயற்கையால் ஏற்படும் அனர்த்தங்களாகிய பூகம்பம் (Earthquake), எரிமலை (Volcano), சூறாவழிக் காற்று (Cyclone, Tornado) போன்ற அனர்த்தங்களை இன்றைய விஞ்ஞானத்தால் தடுக்கமுடிகிறதா? இல்லையே!. அனர்த்தம் நிகழ்ந்தபின் அதன் விளைவுகளை மதிப்பீடு செய்யமட்டும் முடிகிறது. பின் ஏன் இந்த 'எல்லாம் எம்மால் முடியும்' என்ற அகங்காரம்?. இயற்கையை மதித்து நடந்தால் எல்லாம் நன்மையாகவே முடியும்.

வேண்டுவதெல்லாம் என்ன?

நற்குடி மக்கள் வேண்டும்
நமக்கு நல்லரசன் வேண்டும்
நல்லதோர் குடும்பம் வேண்டும்
அதுகாக்க நல்மனைவி வேண்டும்

உருகும் பொருளெல்லாம் - மனமுமல்ல
ஓடும் பொருளெல்லாம் - உயிர்களுமல்ல
உருகாத மனமெல்லாம் - மனிதமுமல்ல
இழகும் பொருளெல்லாம் - செல்வமுமல்ல.

விதியது மதியால் விதியும் - கதியாக
தருவாய் அருளைப் பொருளும் - கெதியாக

வாழ்வினில் நல்ல நன்மைகள் - செய்தே
பாரினில் நல்ல பண்புகள் - நாட்டுவோம்.

NEW SHANKAR AND CO

நியூ சங்கர் அன் கோ

- Gift Items
- Silver
- Brass
- Kids Wear
- Men & Women Fashions



- Audio
- Video
- Compact Disks
- Video CDs
- DVDs



2365 Eglinton Avenue East
Scarborough, ON, M1K 2M5
Tel: (416) 750-2370
Email: newshankar2001@yahoo.ca

PRIYAS

இலங்கை - இந்திய - கனேடிய உணவுப் பொருட்கள், உடன் மரக்கறி வகைகள், இறச்சி மற்றும் கடலுணவு வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள சிறந்த இடம்.

பி
ரி
யா
ஸ்

Tel: (905) 415-8508
Fax: (905) 415-0091

2 Fenton Road Unit 6 & 7
Markham, Ont., L3R 7B3
(Steeles/Brimley)

அச்சமுற்ற தாய்மைகள்

முனைவர் Dr. பார்வதி கந்தசாமி

துயர் கலந்த தாய்மைகளின் எண்ணிக்கை கனடாத் தமிழர்கள் மத்தியில் கூடிக் கொண்டு போவதற்கு அண்மையில் சேலைகளால் சோலை கட்டி பெண் வர்த்தகர் மத்தியில் சுடர் விட்டுப் பிரகாசிக்க முனைப்புக் கொண்ட அன்னை குரூரமாகக் கொல்லப்பட்டதுடன் அதன் முன்னர் தொடர்ச்சியாக நடந்த திகில் நிறைந்த பெண்களின் கொலைகளும் சான்றுகளாகும். ஆயுதங்கள் தரிக்காத தாயார் அன்புக் குஞ்சுகளுக்குச் சிறகுகளை விரித்து அரவணைத்து, அந்நிய நாட்டில் ஆதரவாக இருக்க இயலாத அச்சுறுத்தல் உருவாகி உள்ளது.

குஞ்சுகளுக்கு இரைதேடி பல கடல்கள் கடந்து போய் வரும் ஆக்காண்டிகள் எமது அன்னையர். பள்ளிக்கு அனுப்பி பாங்கான மதிய இடைவேளையிலும் காவல் நின்று வீடு சேர்த்து ஊட்டி வளர்த்து கவினுறு கலைகளை எல்லாம் கற்க ஆர்வம் ஊட்டும் அந்த அன்புத் தாய்மை நோய் வரும்போது அருகிருந்து தலைகோதி முத்தம் இடும் அந்தத் தாயன்பினை யாரால் கொடுக்க முடியும்?. "அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே" என்று பட்டினத்தாரும் பத்து மாதங்கள் சுமந்த அன்னையின் பிரிவைத் தாங்க முடியாது பாடிய பாட்டு யாருக்கும் கண்ணீர் வரவைக்கும் "ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப் பையல் என்ற போதே பிரிந்து வந்து பாலூட்டிய தாயை எப்பிறப்பில் காண்பேன் இனி"

தனது குழந்தை தாய்க்குப் பொன் குஞ்சு வாலிபனானாலும் தாய் அவனைக் குழந்தையாகவே காண்கின்றாள், அன்பு சொரிகிறாள், குழுக்களில் சேர்ந்தாலும் கூட தன் மகனை மீட்க அவள் வெறிகொண்டு அலைவாள். 700 மாணவர்களை யாழ்ப்பானத்தில் ஸ்ரீலங்கா இராணுவம் சுற்றி வளைத்தபோது 1984ல் அன்னையர் அணி திரண்டனர். காவல் முகாங்களின் வாசலில் காத்திருக்கும் அன்னையரையும் குஞ்சுகளுக்காகத் தம்மையே முழுமையாகப் பலி கொடுத்த தாய்மைகளையும், குஞ்சுகளைக் காப்பாற்ற முயன்று பாலியல் வதைகளுக்கு உள்ளாகிய தாய்மாரையும் நாம் கண்டோம். ஆனால் இன்று உயிரைத் தாங்கிப்பிடித்துக் கொண்டு ஓடிவந்து கொடுங் குளிர் நாட்டில் பலவிதமான இன்னல்களை அநுபவித்துக் கொண்டு வாழ்க்கை நடாத்தும் எமக்குள் குரோதங்களும், சண்டியர் குழுக்களும் உருவாகி வளர்வது எம்மையே நாம் அழித்துக் கொள்வதற்கான வழியாகத்தான் தோன்றுகின்றது. அரபு மக்கள்மீது மேற்குலகு நிகழ்த்தும் கெடுபிடிகள் அவர்கள் மீதானது மட்டுமல்ல. இதற்கு வெள்ளை இனம் அல்லாத நாமும் விதிவிலக்கானவர்கள் அல்ல.

நாம் இலங்கையில் வாழ்ந்தாலும் என்ன கனடாவில் வாழ்ந்தாலும் என்ன இரு சமுதாயங்களும் ஆண்வழிச் சமுதாயங்களே. பெண்ணுக்கு அமைந்த இடம் இரண்டாந்தரமானதே. கனடாத் தமிழர் மத்தியில் நிகழும் தாய்மைக் கொலைகள் தமிழ்ப் பெண்கள் சமூகத்தில் மிகப் புறந்தள்ளி வைக்கப்படும் இனம் என்பதைப் பறைசாற்றுகின்றன. ஈழத் தமிழிச் சமூகத்தின் சமுதாயக் கட்டமைப்புக்களுள் ஆண் பெண் பற்றிய நிலைப்பாடுகள் பிரதிபலிக்கின்றன. ஆண் ஆதிக்கப் பண்பாட்டில் பெண் தெய்வங்கள் தாய்மை வடிவுடையவையாகவே சித்திரிக்கப்படுகின்றன.

பெண் பிறக்கவில்லை உருவாக்கப்படுகிறாள் என்றார் சிமோன் டீ பூவர். தாயும் அவ்வாறே உருவாக்கப்படுகிறாள். தாய்மை "வீடு" என்ற வரையறையுள் அகப்படுத்தப்பட்டு குழந்தை பொரிக்கும் இயந்திரமாக்கப்படுகின்றது. கற்காலத்தில் பெண்மை தழுவிய குணங்கள் இறைமைப்படுத்தப்பட்டு பூஜிக்கப்பட்டுள்ளன. பெண்ணினுடைய கருப்பை - அதற்கு உள்ள மகத்துவமான தாய்மையுறல் - தீட்டுப்படல், கருத்தரித்தல், குழந்தை பெறல், பாலூட்டல் - இவை கற்கால மனிதராலும் வெகுவாக அவதானிக்கப்பட்டு கருப்பையைச் சக்தி வாய்ந்த அபூர்வமான அமிசமாகக் கருதினர்.

எமது மூதாதையர் விலங்குகள், செடி கொடிகள், சூரியன், வானம், சந்திரன், நட்சத்திரங்கள், போன்றவற்றை அவதானித்துக் கருப்பையுடன் இணைத்துக் கூறும் "அபூர்வம் பற்றிய புனைகதைகள்" பல்வேறு மொழிகளிலும் மரபுகளாக வழங்கி வருகின்றன. ஆதிகாலக் குகை ஓவியங்கள் "கருப்பையை" இணைப்பனவாக உள்ளதாக பிரஞ்சு நாட்டு மானிடவியலாளரான அத்திரேலேறோய் கோர்ஹான் கூறுகின்றார். நமது சிவலிங்கம் போலவே பூக்களுடன் கூடிய முக்கோண வரைவுகளும் பெண் உறுப்பு (கருப்பையின் முக்கியத்துவம்) வடிவாகவே உள்ளன. இது அதிகார முக்கியத்துவத்தையும் புலப்படுத்துவதாகக் கூறுவர். இந்த முக்கியத்துவம் கருதியே மழைத் தெய்வமாக அதாவது உற்பத்திக்கு முக்கிய பங்குதரும் மழையைப் பெண்தெய்வமாக்கி "மாரிஅம்மன்" என்ற தெய்வம் உருவாகியது. சமயப் பக்கபலத்துடன் இயற்கைப் பெண்மை தாய்மையை பெண்மையாகச் செயற்கை வடிவம் பெறுகின்றது என அரங்க நலங்கிள்ளி கூறுகின்றார்.

இன்று இரண்டாவது நிலையில் இயங்கும் சமூக நிறுவனமான பெண் "தாய்மை" குழந்தை பெற்றுக் கொடுக்கும் நிலையில் மட்டும் இயங்காது மாசு மறுவற்ற உள்ளன்போடு குழந்தையின் நலனுக்காக இரவு பகலாக அயராது பாடுபடுகின்றது. குழந்தையின் பொருட்டு தாய் செய்யும் உடல்சார் உழைப்புக்கள் அவளது உளம்சார் தாய்மைப் பண்பிற்கு முன் மிக அற்பணமானவையே என மினோச்சா கூறுகின்றார். இன்றைய ஆணாதிக்க சமுதாயத்தில் பெண்ணினுடைய "தாய்மை" யும் பெண்வழிச் சமுதாய வீழ்ச்சிக்கான ஆயுதமாகவும் கருதப்பட்டு "மற்றவர்களின் வாழ்வுக்காகவே" பெண் என்னும் தோற்றம் உருவாகியதாகத் தொடர்ந்து கற்பிதங்கள் செய்யப்பட்டன. பெண் தங்கியிருக்கும் ஒரு மனிதப் பிராணியாக்கப்பட்டாள். பெண் போராட்டப் பங்குபற்றலின் முக்கியத்துவம் உணரப்பட்டு புறநானூற்றுத் தாயார் என திடீரென "வீரம்" ஆண்சமுதாய அதிகார நிலைநாட்டலின் தேவைகருதிப் "பயன்படுத்தும்" தற்காலிக பிராணிகளாக "புறநானூற்றுத் தாயார்" "வீரத்தாயார்" வேலுடன் இன்று படைக்கப்பட்டு மேடைகளில் காட்டப்படுகின்றனர். பெண்கள் தாம் பயன்படுத்தப்படுவதனை உணராதவாறு ஆண் ஆதிக்கச் சமுதாயமே அத்தந்திரங்களைப் பயன்படுத்துகின்றது.

பெண்களின் பிறர் நலம் பேணல், இரக்கச் சுபாவங்களைப் பெண்மீது தொடர்ச்சியாக வளர்த்து பெண்கள் தம் குழந்தைகளுக்காக தம் வாழ்வை பூரணமாக அர்ப்பணிக்கும் நிலை எமது பெண்களை ஆண் வழிச் சமூகம் ஆதிக்கம் கொண்டுள்ளது. இத்தகைய தாய்மை இன்று கனடாவில் மேலும் மேலும் சவால்களை எதிர்நோக்கி நிற்கின்றது.

முள்ளிச் செடிகளின் முள்ளுக்காக இயங்கி இளைஞர்களைச் சிந்தனைவழியைத் தூண்டாது அழிவுப் பாதையில் இணைக்கும் கபடத்தனமான ஆயதங்களை கருவிகளாகக் கொண்டு தாய்மை பற்றிய விழுமியங்களை உணராது அவலம் உறும் தாயாரை அழித்தொழிக்கும் செயல் உருவாகி இருப்பது விசனிக்கத் தக்கது. தாயின் அன்பைப் பெறமுடியாத ஆயதங்களினதும் இரக்கமற்ற, இலட்சியமற்ற கூட்டுக்களின் கற்பனை உளவியலால் ஈர்க்கப்பட்ட இளைஞர்கள் தாயவளைக் குரூரமாக அழிக்க முற்படுவது நமது கருப்பைகளுக்கு எல்லாம் கொடுக்கப்பட்ட சவால்களாக அமைகின்றன. தாயின் அன்பு பெறமுடியாத குழுவன்களுக்கு சமூக முயற்சியால் தாயன்பு ஊட்டப்படல் வேண்டும். இல்லையேல் எமது கருப்பைகள் எல்லாம் ஊனமுற்று ஊனமுற்ற சமுதாயத்தைத்தான் உருவாக்க முடியும்.

தாயற்றவர்களுக்குத்தான்
தாயுள்ளவர்களுக்குத் தாய்மை அளிக்கும் சுகம் உணரப்பட்டுப் பொறாமை உருவாக்கம் பெறும் வாய்ப்பு ஏற்படும். அவர்கள் உளவியல் பாதிப்புக்கு உள்ளாகியவர்கள். அவர்களை வழிநடாத்த "தாயன்பின்" முக்கியத்துவம் சமூகமட்டத்தில் உணரப்பட வேண்டும். பல அன்னையரின் முயர்ச்சியினால் ஊனமுறும் சமூகத்தை வழி நடாத்தி வெற்றி காணலாம். தாயன்பு எனும் ஊசி மருந்து ஏற்றப்படும்போது தாயற்ற - தாயன்பு பெறமுடியாது இருக்கும் இளைஞரையும் தாய்மாரையும் சமூகம் எதிர்நோக்கி இருக்கும் சவால்களில் இருந்து விடுவிக்கலாம். அன்னையரே திரண்டெழுவீர்! சுமூகமான பயப்பிராந்தியற்ற கனடியத் தமிழ் அன்னையர் வாழ்வு நிலைபெற வழி வகுப்போமாக!

Asha LUXMY

ASHA'S LUXMY

Fast Food and Take-Out

CHAIR RENTAL

"THE BEST NEVER REST"

Caterers for Wedding Parties Takeout

ASHAS'S LUXMY FAST-FOOD AND TAKE-OUT

(416) 288-8177
1849 Lawrence Avenue East
Scarborough, ON
M1R 2Y3.
(Lawrence/Parmacey)

தான்தோன்றி ஈச்சரம்

ஆனிரைகள் பால்சொரிய ஆண்கன்றுதுள்ளிவர அமுதம் ஊறும்
காநிறைய மலர்பூத்துக்குலங்குவதால் வண்டினமோ களிகொண்டாட
போதவிழா மலர்தொடுத்துக் கவிபாடி முக்கணார்க்குப் பூசைசெய்து
கோதைபங்கன் தனைப்போற்றும் ஒட்டுசுட்டான் தான்தோன்றியீச்சரம்காண்

மான்துள்ளக் குயில்கூவ மந்தியினம்மரம்தாவ மரப்பொந்தில்
தேன்வண்டுஇசைபாடத் தவளைகளோதாளமிட திசைதோறுள்ளார்
கோன்தன்னை அருவுருவத்திருமேனி நீராட்டிக் குறைகள்தீரத்
தான்வந்து தாள்பணியும் ஒட்டுசுட்டான் தான்தோன்றியீச்சரம்காண்

பூம்புனல்கள் அலையாடுநீர்நிலைகள் பரந்தோடிப் பசுமைசெய்யத்
தாம்புனல்கள் முகில்களெல்லாம் தவறாது காலமிசைவதாலே
நாமுமக்கு நெல்மணிகள் தருவமென வயல்களெல்லாம் நெல்குவிக்கும்
ஓமென்று ஒலிக்கின்ற ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈச்சரம்காண்

காணும் பக்தரைக் கைவிடவே மாட்டான்
காமுகத்தவர் சிங்களத்தர் படை
வேணுமட்டும் அழிந்து ஒழிந்திட
வித்தினையிட்ட ஓயாத மூன்றலை
வாணுதல் மங்கை பாகத்தானுறை
வனப்புமிக்குடை ஒட்டுசுட்டான் என
பேணும் ஈழச்சரித்திரம் சொல்லுமே
ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈச்சரமே

கோழிப் பறவைக்கோர் குளமென நெல்மொழி
கோதை பாகத்தான் அருவுருவத்தனாய்
ஆழிசூழுலகாள் வதறியாது
அன்று வெள்ளையன் ஆணவங் கொண்டுமே
வேதியன்றனைப் பார்த்து இம்மாடுபுல்
மேயுமாவென - ஆமென்ற வேதியர்க்
காகவன்று புல்லுண்டதால் புகழ்திகழ்
ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈச்சரமதே

V. சண்முகம்

YARL'S SUPER STORE

Canadian, East-West Indian Grocery
Fresh Fish, Meat and Vegetable

இலங்கை, இந்திய பல சரக்குச் சாமான்கள்

- ☑ உடன் மரக்கறி வகைகள்
- ☑ பழவகைகள்
- ☑ பூசைச் சாமான்கள்
- ☑ உடன் மீன் வகைகள்
- ☑ ஏழு நாட்களும் பங்கு ஆட்டு இறைச்சி
- ☑ இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட விளைமீன், ஒட்டி, ஓரா, உயிர் நண்டு மற்றும்
- ☑ மீன் வகைகள் உட்பட அனைத்துப் பொருட்களும் மிக மலிவாக கிடைக்கும் ஒரே இடம்.

☞ பலசரக்கு வகைகளுக்கு: (416) 923-9806
☞ மீன் வகைகளுக்கு: (416) 923-8093

யாழ்ஸ் சுப்பர் ஸ்ரோர்
607A Parliament Street
Toronto, Ontario
M4X 1P6



மீன்பாடும் தேனாடு

வித்துவான் க. ஞானரெத்தினம்

மட்டக்களப்பின் எல்லை:-

மட்டக்களப்புப் பிரதேசம் ஈழத்தின் கிழக்குப் பகுதியில் தற்போதைய மட்டக்களப்பு, அம்பாறை என்னும் இரு பெரும் மாவட்டங்களையும் உள்ளடக்கி வடக்கே வெருகல் ஆறு தொடக்கம் தெற்கே குமுக்கன் ஆறுவரை உள்ள சுமார் 200 கீலோமீற்றர் நீளத்தையும் 6000 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பையும் கொண்ட பரந்த பிரதேசமாகும்.

மட்டக்களப்பின் இயற்கைவளம்:-

கடலும் கடல் சார்ந்த நிலமும் வயலும் வயல் சார்ந்த நிலமும் இம்மாநிலம் முழுவதும் காணப்படுவதனால் இப்பிரதேசம் மருதமும் நெய்தலும் மயங்கிய மாண்பிற்கும் குறிஞ்சியும் முல்லையும் முயங்கிய பாங்கிற்கும் எடுத்துக் காட்டாய்த் திகழ்கின்றது. குயில் கூவும் மாஞ்சோலைகளும் கிளிகள் பேசும் இளஞ்சோலைகளும் வண்டுகள் ரீங்காரம் செய்யும் நறுமணங்கமழும் சோலைகளும் மடைதிறந்து பாயும் நீரோடைகளினதும் நீர்வீழ்ச்சிகளின் ஓசையும் பரவையில் வள்ளங்களில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களின் பாட்டொலியும் வயல் வெளிகளில் வேலை செய்யும் உழவர் ஓதையும் நெல் குற்றும்போது பெண்களின் வளையல்களில் இருந்தெழும் ஓசையும் மங்கல நாட்களில் பெண்கள் போடும் குரவை ஒலியும் இரைமீட்டபின் வீடு நோக்கிச் செல்லும் மந்தைக் கூட்டங்களின் ஒலியும்

தரிகிட தரிகிட தரிகிட தரிகிட
தாதெய்யதா தளங்கு ததிங்கிண

என்று நாட்டுக் கூத்து ஆடுபவர்களின் காற்சலங்கை ஒலிகளும் என்று இன்னோரன்ன ஒலிகளுடன் மட்டக்களப்பு வாவியில் வாழும் மீன்கள் கூட இன்னிசை ஒலி எழுப்பும் ஒலியுடனும் இசையில் திசையறியப்பட்டது என்றும் மீன்பாடும் தேனாடு என்றும் பெயர் பெற்றது. மட்டக்களப்புப் பிரதேசம் இந்தவகை ஓசைகளுள் ஒன்றை திமிலைக் கண்ணன் இப்படிக் கவிதையாக யார்த்துள்ளார்.

"தென்னை பனையொடு தேன்தரு சோலையும்
செந்நெல் வயலும் செழித்துப் பொலிவுற
வன்மீன் எழில்தரு வாவியில் மீனினம்
தன்னை மறந்து தமிழினிற் பாடுமே."

பெயர்க் காரணம்:-

மட்டக்களப்பின் பெயரைப் பொறுத்தவரை ஐதீகச் சான்றுகளும் வரலாற்றுச் சான்றுகளும் உண்டு. மட்டுக்களப்பு என்னும் பெயர் தொன்று தொட்டு ஏற்பட்டதாகச் சாசனங்களிலும் காணப்படவில்லை. அன்னிய தேசத்தவர் மரம் ஏற்றிய காலத்தில் இங்குள்ள கண்டபாணத்துறையில் தங்குவது வழக்கம். இலங்கையின் வனப்பைக் கேள்வியுற்று வட இந்தியாவிலே அயோத்தியினின்றும் முற்குகர் இலங்கைக்குப் படை எடுத்து வந்தனர். அவர்கள் இலங்கையின் கீழ்ப்பாகம் வந்தபோது ஒரு சதுப்பேரி காணப்பட்டது. அச் சதுப்பேரியினூடே ஓடத்தைச் செலுத்தினர். அப்போது வழியில் மண் செறிந்த ஒரு முனை குறுக்காக இருந்தமையால் அதற்கு மண்முனை என்று பெயரிட்டு அப்பால் தென்திசை நோக்கிப் புறப்பட்டனர். வாவி எல்லையில் ஓடம் சென்றதும் அப்பால் செல்ல வழி இல்லாததைக் கண்டு இது மட்டும் மட்டடா மட்டக்களப்படா (இந்தக் களப்பு இதுவரையுந்தான்.) என்னும் பொருளில் கூறி மட்டக்களப்பு என்னும் பெயரினைச் சூட்டி ஒரு கிராமத்தினை அரணாக்கினர் என்ற ஒரு ஐதீகச் சான்றினை மட்டக்களப்பு மாண்மியம் கூறுகின்றது.

"சீரிலங்கும் மட்டக்களப்பு நாட்டை
மட்டக் கந்தமே சூழ்ந்த களப்பென வகுத்து
மண்முனை மட்டவாழ்வுறு களப்பு
மட்டமாநகர் தன்னில்"
மட்டமாங்களப்பை ஆண்டு

என்று இச் சொற்றொடர்கள் வழங்கி வருவதனால் மட்டமாகிய களப்பு என்று பொருள்படும் மட்டக்களப்பு என்று பெயர் வந்துள்ளது எனக் கொள்ளலாம். களப்பு என்பது தூய தமிழ்ச் சொல் ஆகும். கண்ணகி

வழக்குரைக் காவியத்திலே கப்பல் வைத்த காதையில் தூரியோட்டு என்ற பிரிவில்

"மன்றலொத்த தொடை மாரபா மட்டக்களப்பில் விட்டார்" என்றும் கோவலனார் என்ற காவியத்தில் தூரி ஓட்டம் என்ற பிரிவில் "மட்டுபுன்னைக் குடாகடந்து மட்டக்கப்பில் விட்டனரே" என்றும் இந்த இரு நூல்களிலும் காணப்படுவதனால் மட்டக்களப்பு என்னும் சொற்பிரயோகம் சரியானதே. இப் பிரயோகம் 15ம் நூற்றாண்டில் இலக்கியத்தில் ஏறியுள்ளது என்று கூறுகின்றது மட்டக்களப்பு மக்கள் வாழ்க்கையும் வளமும் என்ற நூல்.

மக்களின் வரலாறும் குடிமுறை மாற்றமும்:-

நீர்வளம், நிலவளம் பொருந்திய நாடுகளில் மக்கள் சென்று சென்று குடியேறி வாழ்வது இயல்பு. அந்தவகையில் திராவிட மக்கள் சிறப்பாகக் கடலோடிகள் கடல் மார்க்கமாக வந்து மட்டக்களப்புப் பகுதிகளில் குடியேறி இருக்கவேண்டும். இவ்வகையில் குடியேற்றம் ஏற்படுவதற்கு முன்னர் வேடுவச் சாதியினர் இங்கு வாழ்ந்திருக்கலாம் என்று தோன்றுகின்றது. வேறு சில வரலாறுகள் இயக்கர், நாகர், வேடுவர் வாழ்ந்ததாகவும் கூறுகின்றன.

எயினர்கள் கொக்கு நெட்டி மரத்தினைத் தேனுக்காக வெட்டியபோது இரத்தம் சிந்தியது. அந்தக் கொக்கு நெட்டி மரத்தில் ஓர் இலிங்கம் இருந்தது. இதனால் கொக்கட்டிச்சோலை என்னும் பெயர் பிறந்தது என்பர். காடு சுற்றிவந்த வேடர்கள் ஒரு நாள் ஒளிவீசும் தங்கவேல் ஒன்று நாவற்கிளையில் பிரகாசிப்பதைக் கண்டு கொத்துப் பந்தலிட்டு அவ் வேலைக் கும்பிட்டு வந்தனர் என்று ஒரு வரலாறும் உண்டு. இதுவே திருக்கோவில் என்றழைக்கப்படும் ஊராகும். இத்தகைய வரலாற்றுச் சம்பவங்களைப் பார்க்கும்போது ஆதிக் குடிகள் வேடுவராக இருக்கமுடியும் என்று அனுமானிக்க முடிகின்றது.

இந்தியாவில் இருந்து மட்டக்களப்பு மாநிலப்பகுதிக்கு காலத்திற்குக் காலம் மக்கள் வந்து குடியேறினர் என்பதும் வரலாறு. இந்த வகையில் முற்குகரும் வந்து குடியேறினர். இந்த முற்குகர் என்னும் சாதியினரின் செல்வாக்கு மட்டக்களப்பில் கிராமிய மக்களால் கைக்கொள்ளப்பட்டு வந்தது. இன்னும் பல இடங்களில் காணப்படும் சட்டங்கள் மூலம் நிருபிக்கப்படுகின்றது. முற்குகர் சாதிவழமை மட்டக்களப்பில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த ஒரு வகைச் சமுதாயக் கோட்பாடும் சட்டமுமாகும். முதுசம், சீதனம் அளிக்கும்வகை காணி, பூமி, தோட்டம் போன்றவை ஆட்சிப் படுத்தப்படும் விபரங்கள் நன்கொடை வகை காணி ஒற்றி பிடிக்கும் விதம், வட்டிக்குப் பணம் கொடுக்கும் முறை, கொள்வனவு விற்பனவுவகை ஆகியவையும் இன்னும் பலவித வழமைகளும் மேற்கூறியதுபோல் இன்றும் சில இடங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

இவ்விதமாக இந்தியாவில் இருந்து பரவலாகக் குடியேறிய சமுகத்தினருள் மலையாளர், வங்காளர், கலிங்கர், சிங்கர் என்ற சாதியினரும் சிறப்பாக மலையாளத்தில் வாழ்ந்த குகர் என்னும் பிரிவினரும் இங்கு வந்து குடியேறினர் என்பதற்கு வடசேரி தென்சேரி (கொம்புமுறி) பிரிவும் மருமக்கள் தாயமுறையும் கன்னக் குடுமியும் போடி என்ற பெயர்ப் பிரயோகமும் குரவையிடும் வழக்கமும் தாய்வழிப் பாரம்பரிய முறைகளும் மந்திர தந்திர முறைகளும் மண முறைகளிற் சிலவும் சான்றுபகர்கின்றன என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இங்கு குடியேறிய வங்கர் என்போர் கடலோடிகள். வங்கம் என்பது கப்பல். கப்பல் வைத்துக் கடல்படு திரவியம் சேர்த்தோர் வங்கர் எனப்பட்டனர். வங்கர், கலிங்கர், சிங்கர் ஆகிய இவர்கள் யாவரும் சேர்ந்து இங்கு கலிங்கராயினர் என்பது மரபு.

மட்டக்களப்பு மாநிலத்தின் சில பாகங்களில் சிங்கள மக்களும் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். இதன் காரணமாகச் சமயம், சாதி, மொழி, மணப் பண்பாடு போன்றவற்றில் கலப்புகள் உண்டாயின. சமரசப் பண்பாடு மட்டக்களப்பு மக்களின் பெருங்குணமாகும்.

மட்டக்களப்பு மாநிலமெங்கும் வாழும் தமிழ் மக்களோடு முஸ்லிம் மக்களும் கொண்டும் கொடுத்தும் உறவாடிச் சகோதரர்களாய் வாழ்ந்து வருவதனால் தமிழ் மக்களின் கலாச்சார உறவுமுறைகள் பல அவர்களது கலாச்சாரத்தில் இடம்பெறலாயின. அத்துடன் தமிழர்களிடையே வழங்கிவந்த கோத்திரம் சாதிக் குடி முறைகள் மட்டக்களப்பு வாழ் இஸ்லாமியர்களிடையேயும் புகுந்து விட்டன. இதன்படி இராசாம்பிள்ளைக் குடி, வடக்கணாக்குடி, மூத்தநாச்சிக்குடி, ஓடாலிக்குடி என்பன முஸ்லிம்கள் பெருவாரியாக வாழும் காத்தான்குடி, மருதமுனை, சம்மாந்துறை, சாய்ந்தமருது, அட்டாளைச் சேனை ஆகிய கிராமங்களை நோக்கும்போது புலனாகின்றது.

வெள்ளாளர் என்போருக்கு கண்டங் குடி, சருகுப்பில்லி குடி, கட்டப்பத்தன் குடி, கவுத்தன் குடி, அத்தியாயங் குடி, பொன்னாச்சி குடி, வயித்திக்குடி என்ற மாகோன் வகுத்ததாகவும் மேலும் வயித்தியனாகுடி, சுத்தியா குடி, பெரியகவுத்தன் குடி, சின்னக்கவுத்தன் குடி, கோப்பிக் குடி, சங்கரப்பத்தன் குடி, போக்கன் குடி என்றும் வகைப்படுத்தப் பட்டிருந்தனர் என்றும் உலகிப்போடிக் குடி, காலிங்காக் குடி, படையாண்ட குடி, பெத்தாணிட குடி, பணிக்கனா குடி, கச்சிலா குடி, பெத்தாண்ட படையாண்ட குடி என முற்குகரும் வகுக்கப்பட்டிருந்ததாக வரலாற்று அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

சில ஊர்ப் பெயர்கள் ஆக்கப்பட்டமை:-

திருக்கோவில்:- கோவிலின் மூலஸ்தானத்தில் வேல் வடக்கு முகமாய் இருந்து கிளக்கு முகமாகத் திரும்பியதால் (திருக்கோயில்) இப்பெயர் பெற்றது.

கொக்கட்டிச்சோலை:- இக்கிராமத்தில் பண்டைக்காலத்தில் கொக்கட்டி அல்லது கொக்குக் கெட்டி என்னும் மரங்கள் நிறைந்திருந்தமையால் இப் பெயர் பெற்றது.

சந்திவெளி:- முற்குகர் திமிலரைத் துரத்திவிட்டு திரும்பி வரும்போது பல திசைகளில் இருந்தும் துரத்திச் சென்றவர்கள் வந்து சந்தித்த இடம் இப்பெயர் பெற்றது.

வந்தாறுமூலை:- இவர்கள் அனைவரும் வந்து இளைப்பாறிய இடம் இப்பபெயர் பெற்றது.

சத்துருக்கொண்டான்:- பதுங்கியிருந்து சத்துருக்களைக் கொன்ற இடம் இப்பெயர் பெற்றது.

ஏறாவூர்:- சத்துருக்களைக் கொல்வதற்கு உதவிபுரிந்த பட்டாணிகளைக் குடியேற்றிய இடம்.

செட்டிப்பாளையம்:- வியாபார நோக்கமாக இந்தியாவில் இருந்து வந்த செட்டிகுல வணிகர் ஒருவர் ஓடம்மீது வரும்வழியில் தண்ணீர் ஆழம் போதாமையினால் ஓடம் தட்டி நிற்க தரையிறங்கி நின்ற இடம்.

பழக்கவழக்கங்கள்:-

குழந்தை பிறந்ததும் மாமனார் கண்ணூறு கழித்தல், கிரகஉதய நேரம் கணித்துச் சாதகம் எழுதுதல், பெண் குழந்தை பிறந்தால் கூரையின்மேலாக விளக்குமாறு ஒன்றையும் ஆணாக இருந்தால் உலக்கை ஒன்றையும் மாமனோ, மாமியோ எறியும் மரபு, விருந்தினரை முகம் மலர்ந்து வரவேற்று உபசரித்தல், பூசாரிகளையும் மாந்திரிகர்களையும் நாடி நோயுற்ற போது திருநீறு ஓதுதல், நூல் கட்டுதல், தண்ணீர் ஓதிக் கொடுத்தல், பேய்ப்பார்வை பார்த்தல், செய்வினைக்குக் காய் வெட்டுதல் போன்ற கிரிகைகளைச் செய்தல், மரணவீட்டில் துக்கம் விசாரிக்க வருபவர்களைச் கட்டி அழுதல், தொற்று நோய்கள் ஏற்படும்போது கொம்புத்தட்டு எடுத்தல், பள்ளயங்கள் வைத்தல், காளி, வைரவர் போன்ற மூலத் தேவதைகளுக்கு நேர்க்கடன் செலுத்துதல், பலி செலுத்துதல், அலகு (செடில்) பாய்ச்சிக் காவடி எடுத்தல், வழிப்போக்கர்களுக்கும், யாத்திரிகர்களுக்கும் உதவும் வண்ணம் தெருக்களில் அம்பலங்கள், தலைவாசல்கள் அமைத்தல், சுமைதாங்கிகள் கட்டுதல், தண்ணீர்ப் பானைகள் வைத்தல் போன்ற பழக்க வழக்கங்களை மக்கள் கைக்கொள்ளுகின்றனர்.

கலைகள்:- நாட்டுக் கூத்து (வடமோடி, தென்மோடி) கொம்புமுறி (வடசேரி, தென்சேரி) வசந்தன், குரவை, கரகம், காவடி, பாற்காவடி, முட்காவடி, ஊஞ்சற்பாட்டு, நாட்டுக்கவி போன்றவையாகும்.

இங்கு காணப்படும் பாரம்பரிய நாகரீகங்களும் அயல் நாட்டு நாகரீகத்தில் சிக்கித் சிதைந்து அழிந்துபோகாமை இப் பிரதேசத்தின் சிறப்பாகும். இன்னும் பரம்பரை நாகரீகத்தையும் கலை கலாச்சாரத்தையும் கடைப் பிடிக்கும் பண்பும் பழக்க வழக்கமும் இருக்கின்றது என்பதைப் பெருமையோடு கூறிக் கொள்ள முடியும்.

தமிழ் காக்க கூடினர் சங்கம் – அன்று
தமைக் காக்க தேடினர் சங்கம் – இன்று.

SIDNEY Financial Services

ACCIDENT BENEFITS

BOOKKEEPING & TAX SERVICES

FINANCIAL SERVICES AND ACCOUNTING

- ☞ Bookkeeping ☞ Business Accounting
- ☞ Personal Tax ☞ P. S. T / G. S. T



FINANCIAL

- ☞ R.E.S.P
- ☞ Personal Loan (தனியார் கடன்)
- ☞ Business Loan (வியாபாரக் கடன்)
- ☞ Credit card

INSURANCE CLAIMS AND TRAFFIC TICKETS

WE CAN HELP YOU WITH

- ☞ வாகன விபத்திற்குள்ளானவர்களுக்கான நஷ்டஈடு
- ☞ தகுந்த ஆலோசனைகள்
- ☞ உரிய நஷ்டஈடு
- ☞ சட்ட உரிமைகள்
- ☞ வீட்டுப் பராமரிப்புச் செலவுகள்

PARA LEGAL SERVICES

- ☞ குடிவரவு. அகதி வழக்குகள் (**Sponsor** உட்பட)
- ☞ அகதிக் கோரிக்கை விண்ணப்பம் தயாரித்தல்
- ☞ நாட்டினுள் வந்து அகதி கோரல் (**Inland**)
- ☞ சகல குடிவரவு தொடர்பான விடயங்கள்
- ☞ குடும்ப அங்கத்தவரின் வருகைக்கு பெறுப்போற்றல்
- ☞ மேன்முறையீடு (**Appeal**)
- ☞ **Citizenship** விண்ணப்பம் தயாரித்தல் பரீட்சைக்கு ஆயத்தம் செய்தல்.

Sithiravadivel. K (Sidney) BA.(Hons)

Tel: (416) 745-2794 (416) 745-0010 Fax: (416) 745-9228

2-2885 Jane Street, North York, ON, M3N 2J6 (Jane/Finch)

வன்னியின் வாழ்வும் வரலாறும்

தமிழ்மணி, கவிஞர் அகளங்கன் - வவுனியா

"எல்லை வடக்கில் எழில்யாழ் பரவுகடல்
பல்லோர் புகழருவி தெற்கெல்லை-நல்லதிரு
கோணமலை கீழ்பால் கேதீச்சரம் மேற்கில்
மாணத் திகழ் வன்னி நாடு."

என்னும் பழம் பாடலில் வன்னிநாட்டின் எல்லைகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் தற்பொழுது வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் அரசாங்க அதிபர் பிரிவுகளே வன்னித் தேர்தற் தொகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாடுவரையில் பரந்தன், கிளிநொச்சி, மாங்குளம் பகுதிப் பெருநிலப் பரப்புக்களும் வன்னிப் பிரதேசம் என்றே இப்பொழுதும் பொதுவாகக் குறிப்பிடப்படுகின்றன.

கிழக்கு எல்லையாகக் குறிப்பிடப்பட்டுள்ள திருகோணமலை வன்னிப் பிரதேசமாக இப்பொழுது குறிப்பிடப்படுவதில்லை. இப்பகுதியில் வாழ்பவர்கள் இன்றும் வன்னியர்கள் என்று இன்றும் அழைக்கப்படுகின்றார்கள்.

வன்னி என்பது காட்டைக் குறிக்கும் சொல் என்றும் காட்டில் வாழ்பவர்கள் வன்னியர் என்றும் சிலர் மேலோட்டமாகப் பொருள் கொள்வர். அதற்குச் சான்றாக வன்னிப்பிரதேசம் இப்பொழுதும் அதிக காடுகளைக் கொண்டதாகவே காணப்படுகின்றது.

வன்னி என்றால் நெருப்பு என்று பொருள் கொண்டு வன்னியர் அக்கினி குலத்தவர் என்றும் கூறுவர். வையாபாடல் ஆய்வுரையில் திரு க. செ. நடராஜா அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

கோணேசர் கல்வெட்டும், வையா பாடலும் இலங்கைக்கு வன்னியர் வந்த வரலாறு பற்றிக் குறிப்பிடுகின்றன. வன்னியர்கள் தென் இந்தியப் பகுதிகளில் இருந்தே இலங்கைக்கு வந்தனர் எனக் கூறுகின்றன. தற்பொழுது தமிழ் நாட்டில் சேலம் முதல் புதுச்சேரிவரை வன்னிய குலத்தினர் பரந்து வாழ்கின்றனர். வன்னியர் அக்கினி குலத்தவர் என்பது புராணக்கதை. சிலை எண்பது என்னும் நூல் வன்னியர் குல மாண்மியத்ததை அவ்விதம் கூறுகின்றது. வன்னியருக்குரிய சின்னம் வில் ஆகும்.

இதுமட்டுமல்லாமல் வன்னியர்களின் தொழில் போர் புரிதல் என்றும் படையில் உள்ள ஒருவன் அதிக சண்டைகளுக்குச் சென்று அதிவீர பராக்கிரமம் உள்ளவனாகவும், விவேகியாகவும் காணப்படின் அவன் வன்னியன் என்ற உத்தியோகத்திற்கு உயர்த்தப்படுவான்.

இப்படியாக வன்னியன் உத்தியோகத்தைப் பெற்றவர்களில் இருந்தே வன்னியச் சாதி தோன்றிற்று என்றும் செவிவழிக் கதைகள் உண்டு. தென்னிந்தியாவில் திருவன்னியூரில் இருக்கும் இறைவனை வன்னியூரர் என்று திருநாவுக்கரசர் தேவாரம் பாடித் துதிக்கிருக்கின்றார்.

கூழங்கை ஆரியச் சக்கரவர்த்தியின் காலம் கி. மு. 101 ஆகும். அவனது மாமன் மகளான மாருதப்பிரவை காலமும் அதனை அண்டியே இருத்தல் வேண்டும். அவளின் மகனான சிங்கமன்னவன் காலமும் கி. மு. முதலாம் நூற்றாண்டின் நடுப்பகுதியாகும். வையா பாடலின்படி இவனே அறுபது வன்னியர்களை இலங்கையிற் குடியேற்றியவன் ஆவான். எனவே வன்னியர்கள் இலங்கையில் குடியேறிய காலம் கி. மு. 50ம் ஆண்டுவரையில் என வையாபாடல் வாயிலாகக் கொள்ளக் கிடக்கின்றது என வையாபாடல் ஆய்வுரையில் திரு க. செ. நடராஜா குறிப்பிடுகின்றார். தொடர்ந்து வையாபாடல் ஆய்வுரையில் அவர் மதுராபுரியில் இருந்து அறுபது வன்னியர்கள் மாருதப்பரவையின் மகன் சிங்கமன்னவன் (வாலசிங்கன், வரராசசிங்கன்) காலத்தில் அவன் மணவினை சம்பந்தமாக இலங்கைக்கு வந்தார்கள். முதல் வந்த அவ்வறுபது வன்னியரும் அடங்காப்பற்றிக்கு அனுப்பப்பட்டனர். அவர்களுள் ஒரு வன்னியன் கண்டி நகரில் திசை ஆக இருந்தான். இவனே சிங்கள மக்களுள் வன்னியர் குலம் வளரக் காரணமாய் இருந்தானென்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

வன்னி இராச்சியம் அடங்காப்பற்று என்ற பெயரிலேயே அழைக்கப்பட்டு வந்தது. சுதந்திரத் தனித் தமிழ் இராச்சியமான அடங்காப்பற்றை ஆட்சி செய்த மன்னர்களுக்குள்ளே கயிலாய வன்னியன் (கயிலை வன்னியன்) விளங்கினார். கைலாய வன்னியன் பற்றிச் சில வரலாற்றுச் சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு திரு. கரவைக் கிளான் கந்தசாமி அவர்கள் தணியாத தாகம் என்ற பெயரில் நாடகம் எழுதி மேடையேற்றிப் பின்பு நூலாகவும் வெளியிட்டார். பண்டாரவன்னியன் பற்றி முல்லைமணி என அழைக்கப்படும் திரு வே. சுப்பிரமணியம் அவர்கள் கிடைத்த வரலாற்றுச் சான்றுகளை வைத்து நாடகம் ஒன்றினை எழுதி மேடையேற்றிப் பின்பு அதனைப் புத்தகமாகவும் வெளியிட்டார். மூன்று பதிப்புக்களை அந்நூல் கண்டது. பின்பு கலைஞர் கருணாநிதி அவர்கள் பண்டாரவன்னியன் பற்றி பாயும் புலி பண்டாரகவன்னியன் என்ற நாவலை எழுதி வெளியிட்டார். முல்லைமணி அவர்கள் கயிலாய

வன்னியன் வரலாற்றை வன்னியர் திலகம் என்ற பெயரில் நாவலாக எழுதி வெளியிட்டார்.

வழிபாடுகள்:-

யாழ்ப்பானத்திலும் வன்னியிலு.ம் உள்ள நாச்சிமார் வழிபாடுகள் பற்றி பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்கள் ஈழத்து வாழ்வும் வளமும் என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் நாச்சிமார் கோவில்கள் ஆங்காங்கே உள்ளன. வன்னி நாட்டை அரசாண்ட வன்னித் தலைவியர் எழுவர் அக்காலத்தில் ஒல்லாந்தரோடு பெரும்போர் நிகழ்த்தித் தோல்வியுற்றனர். அதனால் தாம் மாற்றான் கைப்படலாகாது என்ற எண்ணத்துடன் நஞ்சுண்டு இறந்தனர். எனவே தமிழ் மக்கள் அவரை வீரத் தெய்வங்களாக்கி இன்றும் வணங்கி வருகின்றனர். இக் கோவில்களில் வெள்ளி செவ்வாய்க் கிழமைகளில் விளக்கேற்றுவர். பறையும் முழக்குவர். ஒவ்வோர் முழக்கமும் ஒவ்வோர் நாச்சியின் பெயருக்காக முழக்கப்படுவன.

தைப்பொங்கல் ஆண்டுப்பிறப்பு முதலிய நன்நாட்களிலே கோவிலின் சுற்றாடலில் உள்ள குடும்பத்தினர் வந்து பொங்குவர். அன்றியும் இடர் நேர்ந்த காலத்தில் நேர்த்திக் கடன் செய்து அதற்காகவும் பொங்கல் செய்வரென்று குறிப்பிடுகின்றார்.

வன்னிப் பிரதேசத்திலே இருக்கும் முக்கியமான தலங்களிலே ஒன்று வற்றாப்பளை அம்மன் ஆலயமாகும். சேரன் செங்குட்டுவன் சேரநாட்டில் பத்தினித் தெய்வமாம் கண்ணகியை வழிபடுவதற்காக இமயத்தில் கல்லெடுத்துக் கங்கையிலே நீராட்டிக் கடவுள் மங்களம் செய்து வழிபாட்டைத் தொடக்கி வைத்தார். அக்காலத்தில் இலங்கையில் அரசனாக இருந்த கயவாகு மன்னன் அப்பத்தினித் தெய்வ வழிபாட்டினை இலங்கையில் தொடக்கி வைத்ததாகச் சிலப்பதிகார வரலாறு கூறுகின்றது.

சிலப்பதிகாரம் பாடப்பட்ட காலம் கி. பி 5ம் அல்லது 6ம் நூற்றாண்டாக இருக்கலாமென அறிஞர் பெருமக்கள் கருதுகின்றார்கள். அப்படியாயின் இலங்கையில் பத்தினித் தெய்வ வழிபாடு தோன்றிய காலமும் இதற்குச் சற்று முந்திய காலமாகவே இருக்கலாம்.

சிங்களவர் வழிபடும் பத்தினித் தெய்வம் (பத்தினித் தெய்யோ) கண்ணகியே என்பதற்குச் சிலப்பதிகாரம் சான்று பகர்கின்றது.

கண்ணகி வழிபாடு வற்றாப்பளையில் தோன்றியமைக்கு ஓர் கர்ணபரம்பரைக் கதையும் உண்டு. வயது முதிர்ந்த மூதாட்டியார் ஒருவர் ஆநிரைகளை மேய்த்துக் கொண்டிருந்த இடையர்களுக்குக் காட்சி கொடுத்து மறைந்த செய்தி ஊர்முழுவதும் பரவியது. அது மாத்திரமின்றி காட்சி கொடுத்து மறையும்போது ஒவ்வோர் வருடமும் வருகின்ற வைகாசித் திங்களில் வரும் பௌர்ணமி விசாக தினத்தில் நான் வருவேன் என்பதனையும் மக்கள் தெரிந்து கொண்டனர். அதன் பிரகாரம் அவர்கள் அவ்விடத்தில் ஓர் கோவில் அமைத்து வணங்கி வருவகின்றார்கள்.

கண்ணகி வழிபாட்டின் பத்தாவது இடமாக இது அமைந்ததினால் இவ்விடம் பத்தாப்பளை எனப் பெயர் பெற்றுப் பின்பு வற்றாப்பளை என மருவியதாகச் சிலர் குறிப்பிடுகின்றார்கள். எனவே வற்றாப்பளை அம்மன் ஆலயம் வரலாற்றுப் புகழ் மிக்க தொன்மையான ஆலயமாகச் சிறப்புறுகின்றது.

வாழை யம்பொழின் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டம், வண்டு பண்செயு மாமலர்ப் பொழின் மஞ்ஞை நடமிடும் மாதோட்டம், பொன்னிலங்கிய முத்துமா மணிகளும் பொருந்திய மாதோட்டம், மாவும் பூகமும் கதலியு நெருங்கு மாதோட்ட நன்னகர், எனத் திருஞானசம்பந்தராலும் வங்கம் (கப்பல்) மலிகின்ற கடல் மாதோட்டம், மட்டுண்டு வண்டாடும் பொழின் மாதோட்டம், மாவின்கனி தூங்கும் பொழின் மாதோட்டம் என்றெல்லாம் சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும் துதித்துப் பாடப்பெற்ற மாதோட்டத்துப் பாலாவிக் கரையில் எழுந்தருளி இருக்கும் திருக்கேதீஸ்வர ஆலயம் வன்னிப் பிரதேசத்தின் பாரம்பரியப் பெருமைக்குச் சாண்றாக விளங்குகின்றது.

இவற்றைவிட வன்னிப்பிரதேசத்தில் போற்றப்படுகின்ற மேலும் இரு முக்கிய ஆலயங்களாக ஒட்டுசுட்டான் தான்தோன்றிஈஸ்வரர் ஆலயமும் புதூர் நாகதம்பிரான் ஆலயமும் விளங்குகின்றது.

மடுவிலே அமைந்திருக்கும் மாதாகோவில் தமிழிச் சிங்கள கிறிஸ்த்தவர்கள் சைவர்கள் ஒன்றாகச் சென்று வழிபடுகின்ற கோவில்களாக விளங்குகின்றது. இக்கோவில்கள் முற்காலத்தில் அம்மன் கோவில்களாக இருந்ததாகவும் பிற்காலத்தில் கிறிஸ்த்தவப் பாதிரிமார்கள் இதை மாதா கோவிலாக மாற்றியதாகவும் அக்கிராம முதியவர்கள் இன்றும் கூறுகின்றார்கள். சைவர்கள் சென்று வழிபாடு செய்வதும் நேர்த்திக் கடன் வைத்து அதை நிறைவேற்றிச் செல்வதும் இவ் உண்மையை இன்றும் நிரூபித்துக் கொண்டிருக்கின்றது.

உலகின் இறுதித் தமிழ் இராச்சியம் வன்னி இராச்சியம் என்பதைக் கற்சிலைமடு என்ற இடத்தில் பண்டாரவன்னியனைத் தோற்கடித்த வொன் டிறபேக் என்ற ஆங்கிலத் தளபதி அமைத்த நினைவுச் சின்னம் நிரூபிக்கின்றது. 31 அக்டோபர் 1803ல் பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்டான்.

வவுனியா அரச அதிபர் பிரிவு:-

தற்போதிருக்கும் வவுனியா நதரத்தின் தெற்கே கண்டி வீதிப்பகுதியில் மூன்று மைல்வரையில்

தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்தனர். கிழக்கே கொறவுப்பொத்தானை வீதியில் மூன்று மைல்கள் வரையில் தமிழர்கள் வாழ்ந்து வந்தனர். தென்கிழக்கில் ஏழுமைல்கள் வரையில் இன்றும் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். தென்கிழக்கு எல்லையில் தமிழ்க் குடும்பங்களும் சிங்களக் குடும்பங்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர். நகரின் வடக்கில் முற்றுமுழுதாகத் தமிழ்க் குடும்பங்களே பாரம்பரியமாக வாழ்ந்து வந்தனர். வட-கிழக்கில் சில தமிழ்க் கிராமங்களும் சிங்களக் கிராமங்களும் அருகருகே அமைந்திருந்தன.

நகரின் மேற்கே மன்னார் வீதியோடு சேர்ந்த பகுதியிலே சில முஸ்லிம் கிராமங்களும் தமிழ்க் கிராமங்களோடு நெருங்கிக் காணப்பட்டன. தமிழ் முஸ்லிம் சமூகத்தவரிடையே எந்தவிதமான பகைமை உணர்வும் இன்றுவரையில் இல்லை என்றே கூறலாம்.

வவுனியா நகரத்திற்கு முற்காலத்தில் வழங்கிய பெயர் விளாங்குளம் என்பதே ஆகும். யாழ்ப்பாணத்தில் இருந்து கண்டி கொழும்பு முதலான இடங்களுக்குப் போக்குவரத்துப் பாதை அமைக்கப்பட்டதனால் வவுனியா நகரம் உருவாகியது. உண்மையில் நகருக்கு மூன்று மைல் தொலைவிலேயே பாரம்பரியக் கிராமங்கள் அமைந்திருந்தன. வவுனியாக் குளத்தோடு சேர்ந்த குடியிருப்புக் கிராமத்தில் சில குடும்பங்கள் வசித்தன.

அரசாங்க வேலைகளின் நிமித்தமும் வியாபார நிமித்தமும் வவுனியாவுக்கு வந்த பிற பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் நகரத்தினுள் தங்கத் தொடங்கிக் குடியிருப்புக்கள் தோன்றின.

பாரம்பரியக் கிராமங்களின் பெயர்கள் குளம், மடு, மோட்டை, கட்டு, முறிப்பு, எனக் குளங்கள் சம்பந்தப்பட்ட பெயர்களையே அதிகம் கொண்டிருக்கின்றன. உதாரணமாக கள்ளிக்குளம், பம்பைமடு, பாலமோட்டை, பெரியகட்டு, மூன்று முறிப்பு என்பவற்றைக் குறிப்பிடலாம்.

சில கிராமங்கள் மண்ணின் தன்மையைக் கொண்டும் பெயரிட்டு அழைக்கப்பட்டன. தற்போதைய நகரிலிருந்து ஒரு கிலோமீற்றர் வரையில் தெற்கே அமைந்திருக்கும் குருமண்காட்டினை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இதே போன்று காட்டின் தன்மையை அடிப்படையாகக் கொண்டும் கரம்பைக்காடு என்னும் கிராமப் பெயர் உருவாயிற்று.

தற்போது இந்த உண்மை தெரியாதவர்களும், இடம் பெயர்ந்து வந்து குடியேறியவர்களும் காடு என்று அழைப்பதை நாகரீகக் குறைவாகக் கருதிக் கரப்பன் காடின்ஸ், குருமன் காடின்ஸ் எனவும் அழைக்கத் தொடங்கியுள்ளார்கள்.

தொழில்:-

பாரம்பரியக் கிரமங்களில் வாழ்ந்த மக்களின் முக்கியமான தொழில் நெல் வேளாண்மையாகும். ஏறக்குறைய எழுபதாம் ஆண்டுவரையில் நெற் செய்கையே முக்கிய தொழிலாக இருந்தது. பின்னால் உழுந்து, மிளகாய், வெங்காயம் முதலானவையும் பயிரிடப்பட்டன. 1970ம் ஆண்டின் பின்பே இத்தகைய உப உணவுப் பயிர்ச் செய்கைகள் அதிகரிக்கத் தொடங்கின. குளங்களை அண்டியே குடியிருப்புக்கள் இருந்தன. பெரிய குளங்களை அண்டி இருந்தவர்கள் காலபோகம், இடைப்போகம், சிறுபோகம் என்று மூன்று போக நெல் வேளாண்மை செய்தனர்.

தங்களது விவசாயத் தொழிலுக்குக் கூலிவேலையாட்களை அமர்த்தும் வழக்கம் முன்பு இருக்கவில்லை. ஊரவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி ஒவ்வருவரது வேலையாக ஒற்றுமையாகச் செய்தனர். வரம்பு வெட்டுவது தொடக்கம் சூடு அடித்தல்வரையில் முக்கியமான வேலைகளை எல்லாம் இப்படியாகச் சேர்ந்தே செய்தனர். இதைப் பரத்தைமுறை என அழைத்தனர். எருமை மாடுகளே நெற் செய்கைக்கு முக்கியமாகப் பயன்படுத்தப்பட்டது.

வீடு:-

பொருளாதார வசதிகள் மிகவும் குறைவாக இருந்த இக்கிராமங்களில் வீடுகள் எல்லாம் காட்டுத்தடிகள் கொண்டே அமைக்கப்பட்டன. கூரையை வரிச்சுக்களால் நெருக்கமாகக் கட்டி வைக்கோலால் வேய்ந்தனர். பிற்காலத்தில் கிடுகுகளைக் கட்டி அதன் மேல் வைக்கோலால் வேய்ந்தனர். அதனால் வீடுகள் மிகவும் குளிர்ச்சி பொருந்தியவையாக இருந்தன. மண்ணால் சுவர் அமைத்துச் சாணத்தினால் மெழுக்கிட்டனர். வீட்டின் வெளிப்புறத்தின் முன்னால் மால் எனப்படும் சிறிய வீட்டைக் கட்டினர். திண்ணைகளை அமைத்து அவற்றை இருக்கைக்காகப் பாவிப்பர்.

பெரிய வீடுகள் 1970ற்கு முன்னர் மிகக் குறைவாகவே காணப்பட்டன. கிறீஸ்தவர்கள் நகருக்குள்ளேயே இருந்தனர். ஆனால் கிராமங்களில் கிறிஸ்த்தவக் குடும்பங்களோ குடியிருப்புக்களோ காணப்படவில்லை. இப்பொழுதும் அரிதாகவே காணப்படுகின்றது.

கல்வி:-

முன்பு யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த சிலர் திண்ணைப் பள்ளிக்கூடங்களை ஆரம்பித்து நாடாத்தினர். அப்பாடசாலைகள் மூலம் வன்னிச் சிறுவர்கள் சிலர் கல்வி கற்றனர். புராணங்கட்குப் பயன் சொல்லுதல் எனப்படும் புராணப்படலமும் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் மூலமே கற்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணத் தொடர்பு இருந்த

சில குடும்பங்களைச் சேர்ந்தோரே உயர்கல்வி கற்றனர்.

1970ற்கு முன் விரல் விட்டு எண்ணக் கூடிய பட்டதாரிகளே வன்னியில் உருவாகியிருந்தனர். ஒரு சில வசதி படைத்தவர்கள் தங்கள் பிள்ளைகளை இந்தியாவிற்கு அனுப்பிக் கல்வி கற்பித்தனர். இன்னும் சிலர் யாழ்ப்பாணம் அனுப்பிக் கல்வி கற்பித்தனர்.

சில பாரம்பரியங்கள்:-

அருவி வெட்டி வயல் மூட்டுக்களிலேயே கட்டைகந்துகளாக வைக்கப்படும். பின்பு கட்டைக் கந்துகளைப் பிரித்து ஒரே இடத்தில் உயரமாகச் சூடு வைப்பார்கள் சூடு வைக்கும்போது இளைஞர்களிலே ஒருவரே மேல் ஏறி நிற்பார். சூட்டில் ஏறி நிற்பவர் தவறி விழுந்து விட்டால் அவரை அவ்வூரில் உள்ள பெண்கள் யாரும் மணம் முடிக்கச் சம்மதிப்பதில்லை என்று முதியோர்கள் இன்றும் கூறுகின்றார்கள்.

பரத்தையாகச் சேர்ந்து அருவி வெட்டும்போது மத்தியான நேரம் தனித்தனி வயல்களில் இறங்கிப் போட்டிக்கு அருவி வெட்டுவார்கள். அப்போது அருவி வெட்டுப் பாடல்களைப் பாடுவார்கள். பாடல்களிலே தங்கள் தங்கள் ஆசைகளையும் வெளிப்படுத்துவார்கள். போட்டிக்கு வயல்களில் இறங்கும்போது போட்டியில் வெற்றி பெறும் இளைஞர்களுக்கு அங்குள்ள முதியவர்களின் பெண்களைப் பரிசாகத் தருவதாகவும் பேசிக் கொள்வார்கள். அதன்படி அறுவடையின் பின் திருமணமும் நிகழும்.

வயலில் பலகை அடித்து நெல் விதைக்கும் காலத்தில் விதவைகள் பிட்டு, அப்பம், இடியப்பம் முதலான பலகார வகைகளைக் கொண்டு வருவார்கள். அவர்கள் கொண்டு வந்த காலை உணவை மகிழ்ச்சியோடு உண்ணும் விவசாயிகள் தங்கள் வயல்களில் விரும்பிய ஒன்றில் ஒரு தடியைக் குத்திவிட்டுச் செல்லும்படி சொல்லுவார்கள். அந்த விதவைகளும் தமக்குப் பிடித்த பெரிய வயலாக (மடைமுகத்து) நீர்பாச்சும் முதல் வயலாகப் பார்த்துத் தடியைக் குத்தி வைப்பார்கள். அந்த வயலின் விளைச்சல் அப்பெண்ணுக்கே வழங்கப்படும்.

திருமணம் முடிந்த இளந்தம்பதிகள் ஓராண்டு முழுவதும் உறவினர்களின் வீடுகளுக்குச் சென்று விருந்துண்டு மகிழ்வார்கள். விருந்து கொடுக்கும் உறவினர் தமது வயலில் ஒரு வயலை அன்பளிப்பாகக் கொடுக்கும் வளக்கமும் சில இடங்களில் உண்டு.

தமது மகளுக்குச் சீதனமாக நெற்காணியைக் கொடுக்கும் பொற்றோர் முதல் வருடம் வயலை விதைத்துப் பராமரித்து அறுவடை செய்து கொடுப்பார். அந்த முதலைக் கொண்டு அடுத்தபோக வேளாண்மையை அவர்கள் செய்வர்.

அடங்காப்பற்று

ஒரு வானம்
ஒரு சூரியன்
ஓடி வரும் நிலா

இருண்டு வெளிக்குது
இந்தப் பந்து!

இங்கே மும்மாரி
பெய்கிறது,
முழு உயிர்களுக்கும்
உணவு !

உயர்ந்த மனிதம்
உழவுக்கு வந்தனம்
ஊரெல்லாம் கொம்பறை
வளர்த்தது
அடங்காப்பற்று

சிற்றரசுகள்
சீர்செய்த நெல்வேலி
நிரம்பி இருக்கும்
மருதமும் நெய்தலும்

மறவரை ஈன்ற
மான நிலம்
முல்லை!

அடிபணியா ஆழுமை
அடையாளம் வைத்த
இனத்தின் கருவறை
இந்த மண்!

முடி வீழ்ந்தும்
முதுகிடா மறவனுக்கு
மணிமகுடம்
கற்சிலை!

காதலும் வீரமும்
விடுதலைக்கு வித்தான
இலட்சியம்
வன்னிக்குச் செழுமை.

இளமைச்செல்வி

Dundas Dental Centre

Dr. Vanathy Jeevakumar & Associates

டாக்டர் (திருமதி) வானதி ஜீவகுமார் அன் அசோஷியெட்

அனைத்து பல் மருத்துவ சேவைகளுக்கும் மிசிசாகாவில்
வாரத்தில் ஏழு நாட்களும்



பல் மருத்துவர்கள்:

Dr. Vasanthy Jeevakumar BDS
Dr. Quis Kazala D.D.S
Dr. Borris Zivanovic D.D.S
Dr. Girish Deshpande BDS, MDS (Orthodontic)
Dr. Mustafa Abouzgia BDS, Dip OMFS, MSE, FRCD(Oral Surgeon)

General Dentistry Including Brace and Implants

Business Hours:

Monday – Friday	10.00 AM – 8.00 PM
Saturday & Sunday	10.00 AM – 5.00 PM.





Tel: (905) 281-0273 - Fax: (905) 281-8792
29 Dundas Street East, Mississauga, Ontario
L5A 1V9.

வளம் பொங்கும் வன்னி

குங்குமச் சிமிளெடுத்துக் கொட்டி விளையாடியதோ
கீழ்வானச் செம்பருத்திப் பருப்பு,
தூங்கி யெழுந்ததி காலை சுந்தரப் பனிமலர்கள்
சூழவுள்ளதால் மலரும் விருப்பு.
பொங்குகின்ற தாமரையாள் பொய்கையினிலாடிவரு
பொன்னிறத்து நடனபொருகரும்பு
எங்குமிழவயற்பரப்பின் இழநாற்றுமீதுபடும்
இழங்கதிர்கள் வன்னிமண்ணின்சிறப்பு

வேம்புதிர்ந்து பூவெடுத்து விதவிதமாய் வடகமிடும்
வேல்விழிகள் விழி நொந்ததோ
காம்புதிர்ந்து பூவெடுத்து கனகாம்பரமாலையிடும்
கயல்விழிகள் கனி தந்ததோ
பாம்புதிர்ந்து படமெடுத்துப் பனங்காமத்தம்மன் புகழ்
பாடுமெழில் புவிதந்ததோ,
நாமதிர்ந்து போயுடைந்து நம்புவியை யுத்தமிடும்
நாசவிழிகளை நோவதோ,

முத்தாடும் முல்லைக்கடல் மணலில்
மோகனமிசைக்கும் குயில்கள் நடனமிடப்
பத்தோடும் மயில்கள் பட்ட மரநிழலில்
பழமினிக்கும் பாலையடிப் புலவில்
மத்தாடும் ஆவினங்கள் மேயும் மரவணிலில்
மோகமிடும் மரநாய்கள் சுற்றும்
சத்தோடும் தூதுவளைக்கங்சிவயல் வெளியில்
தன்கொண்டவனைவிழிகளினால் தேடும்.

மீனொன்றுபாயுது மன்னார்க்கடலரிப்பில்
வான்மழை பெய்யுது வன்னிமண்பரப்பில்
கானமிசைக்குது கருங்குயில் விருப்பில்
மானம் பெரிதென்றவடங்காத பற்றில்
மான்கன்று பாயுது மறைவெளித்தரிப்பில்
தேன் வண்டு தாவுது சூடிய சரத்தில்
கோனொன்று வாடுது தமிழீழத்தின் வருப்பில்
ஏனின்னும் நாடது நமக்கில்லைக் கரத்தில்

கணேஷ்

கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா?



துரித பணமாற்றுச் சேவை

பணமாற்றுச் சேவையில் தனித்துவமானவர்கள்

44 ஆண்டுகள் வர்த்தகத்துறையின் முன்னோடிகள் (இதில்) கடந்த 11 ஆண்டுகளாக கனடாவில் துரித பணமாற்றுச் சேவையில் தமிழ் மக்கள் இதயங்களில் இடம் பிடித்தவர்கள்.

உங்கள் பணம் பாதுகாப்பாகவும் விரைவாகவும் சென்றடைய அழையுங்கள்

மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

M. Kassippillai & Sons Inc.
3228 Eglinton Avenue East Suite #3, Scarborough, ont, M1J 2H6.
(Eglinton/Markham Road)
Phone: (416) 267 -8221



NATHAN CONTSRUCTION

உங்கள் வீட்டுத் திருத்த வேலைகளைக் குறைந்த செலவில் தரமாகச் செய்விப்பதற்கு 22 வருட தொழில் அனுபவமுள்ளவர்களை அழையுங்கள்.

◊ Painting
◊ Plastering
◊ Tiles (Ceramic/Vinyl)
◊ Hardwood Floor
◊ Sanding

22 years of Experience



தொடர்பு கொள்ளுங்கள்:

நாதன்

Tel: 416-291-9701
Cell: 416-417-9027



இந்து தர்மம்

ஸ்ரீமதி செல்வாம்பாள் ஸ்ரீதரக்குருக்கள்

எமது இந்து சமயத்தில் நான்கு வர்ணங்கள் உள்ளன. இந்த நான்கு வர்ணங்களின் பிரிவுகள் வேறுபாடுகள் பற்றித்தான் தற்போது வேகமாகப் பேசப்படுகின்றன. வர்ணங்களில் உள்ளடக்கப்படுகின்ற பிராமண, ஷத்திரிய, வைசிய, சூத்திர வர்ணங்களைச் சாதிப் பிரிவுகள் என்று தப்பாக விளங்கிக் கொள்கின்றார்கள். இந்த நான்கு பிரிவினருக்கும் தனித்தனியே காரியங்கள் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஒருவர் செய்யக் கூடிய செயலை மற்றொருவர் செய்யக் கூடாது. ஒரு குடியானவன் பஞ்சகச்சம் கட்டிக் கொண்டும், பூணூல் போட்டுக் கொண்டும் வந்தால் நமக்குக் கோபம் வருகின்றது. மிகவும் மீறிப் போய்விட்டான் என்கின்றோம். ஒரு பிராமணன் சுருட்டுப் புகைத்துக் கொண்டும் பஞ்சகச்சம், பூணூல் என்பன இல்லாமலும் வந்தால் அவனை அயோக்கியன் என்கின்றோம். குடியானவர் யாராவது போதைவஸ்த்துப் பாவித்தால் யாரும் பெரிதாகக் கோபித்துக் கொள்வதில்லை. பிராமணர்கள் யாராவது போதைவஸ்த்துப் பாவித்தால் அவர்கள் பிராமண குலத்தில் இருந்து விலக்கப்படுகின்றார்கள். இத்தனைக்கும் இவர்கள் அனைவரும் ஒரே மதத்தினரே. ஆனாலும் ஒருவர் செய்வது நல்ல காரியமாக இருந்தாலும் கோபம் வருகின்றது, கெட்ட காரியமாக இருந்தாலும் கோபம் வருகின்றது. பிராமணன் கலப்பை எடுத்து உழுதால் ஆச்சாரமில்லாதவன் என்று பரிகாசம் செய்கின்றோம். சூத்திரன் வேதியானம் செய்தால் காலம் கெட்டுப்போய்விட்டது என்று குறை சொல்கின்றோம். இப்படி ஒரே மதத்தில் பல வித்தியாசங்கள் இருக்கின்றன. ஒருவரோடு ஒருவர் உட்காந்து சாப்பிடக் கூடாது, ஒரு பிரிவினரை மற்றவர் தொடக் கூடாது, ஒருவருக்கு அருகில் மற்றவர் வரக்கூடாது என்று எத்தனையோ வித்தியாசங்கள் இருக்கின்றன.

நான்கு வர்ணங்கள் என்று பெயரளவில்தான் இருக்கின்றன. ஒவ்வொரு வர்ணத்திலும் ஆயிரக்கணக்கான பிரிவுகள் இருக்கின்றன. இப்படி இந்த இந்து மதமானது ஒரு விசித்திரமான மதமாக இருக்கின்றது. முன்பு ஒரு காலத்தில் உலகம் முழுவதும் ஒரே மதமே இருந்தது என்று கூறிய பெருமையுள்ள எமது இந்து மதத்தில் இப்படி ஒன்றுக்கொன்று வித்தியாசப்படும் சமாச்சாரங்கள் இருக்கின்றன. மற்றய மதங்களிலும் வித்தியாச நிஷேகங்கள் உண்டுதான். ஆனால் அவை அந்த மதத்தவர் எல்லோருக்கும் ஒரேவிதமானவையாகும். நமக்குள்ளே வித்தியாசங்களும் விலக்குகளும் பலவகையாகக் காணப்படுகின்றன. ஒருவன் செய்தால் அதைத் தர்மம் என்கின்றோம். அதையே வேறொருவன் செய்தால் அதர்மம் என்கின்றோம். ஒரு பெரியவர் பெரியதோர் ஆச்சரியத்தினைச் சொல்கின்றார். நமக்கெல்லாம் மரணம் வருவது ஆச்சரியம் அல்ல. நமது உடலைக் காற்றடைத்த பை என்கின்றோம். அந்தப் பையிலே ஒன்பது ஓட்டைகள் இருந்தும் அந்த ஓட்டைகள் மூலமாக உள்ளே அடைக்கப்பட்டுள்ள காற்று வெளியேறாமல் உயிரோடு இருக்கின்றோம். அதுதான் ஆச்சரியம் என்று அவர் குறிப்பிடுகின்றார். இதுபோன்று பலவிதமான சந்தேகங்களுக்கும் வித்தியாசங்களுக்கும் இடமான இந்த இந்து மதமானது எவ்வளவோ காலங்களாக நிலைத்திருக்கின்றது என்பதை நினைத்து ஆச்சரியப்பட வேண்டியுள்ளது.

கோவிலிலே பிராமணர்கள் மூலஸ்த்தானம் வரையில் போகலாம் என்றும் மற்றவர்கள் போகமுடியாது என்றும் விதிகள் விதிக்கப்பட்டுள்ளன. சிலர் கொடிமரத்திற்கு அப்பால் நிற்கவேண்டும் என்றும் விதிக்கப்பட்டுள்ளது. சில காரியங்களைச் சிலர் வேதோக்தமாகச் செய்ய வேண்டும். அதே காரியங்களை வேறு சிலர் வேதோக்தமாகச் செய்தால் அவர்களுக்கு கெடுதல் உண்டாகும். வேதம் சொல்வதனை விட்டால் சிலருக்குப் பயம். வேதம் சொன்னால் சிலருக்குப் பாவம். இவ்வளவு வித்தியாசங்களும் பாரபட்சங்களும் ஏன் இருக்கின்றன?. இந்த விடயங்களை நாம் சொல்லிக் கொள்வது அவமானமாக இருக்கின்றதென நினைக்கின்றோம். இப்படியான வித்தியாசங்கள் பல நல்ல அம்சங்கள் உள்ள எங்கள் மதத்திற்கு களங்கமாக இருக்கின்றன என்று நம்மில் சிலர் கூறிக் கொள்கின்றார்கள்.

நன்றாக ஊன்றிப் பார்த்தால் முழு விடயங்களிலும் இப்படியாகப் பல வித்தியாசங்கள் இருக்கின்றது. நல்ல அம்சங்கள் இல்லை என்றே சில சமயங்களில் எண்ணுவதற்குத் தூண்டுகின்றது. இப்படியான வாதங்கள் ஏற்படும்போது மதத்தில் அபிமானம் உள்ளவர்கள் எதையாவது சமாதானமாகச் சொல்வார்கள். சில வேளைகளில் சிலர் இப்படியான முரண்பட்ட விடயங்களை எடுத்து உறுத்தி உறுத்திச் சொல்லும்போது மத அபிமானிகள் வேதனை அடைகின்றார்கள். மதம் தொடர்பான இத்தகைய முரண்பாட்டுக் கருத்தானது இன்று அதிகளவில் வெளிநாடுகளிலும் பரவி வருகின்றது. எமது இந்துமதம் ஏதோ ஓர் ஆதாரத்துடனேயே இவ்வளவு காலமும் வாழ்ந்து வருகின்றது. வேறு எந்த மதத்திற்கும் இப்படியான நிண்ட ஆயுள் இருப்பதாகத் தெரியவில்லை. எங்களுக்குத் தெரியாமல் ஏதோ ஒரு சக்தி இதனைத் தாங்கிக் கொண்டு அதற்கு ஆதாரமாக இருக்கின்றது.

எவ்வளவோ வித்தியாசங்கள் இருந்தாலும் கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் இந்து மதம் அழியாமல் இருக்கின்றது. மற்றய மதங்களைப்போல இந்து மதத்திற்கு இதுதான் வரையறை, இதுதான் சாஸ்த்திரம் என்று சொல்லமுடிவதில்லை. ஆச்சாரம் இல்லாமல் வரும் ஒருவன் ஆச்சாரத்துடன் இருக்கும் ஒருவரை அணுகுதல் கூடாது தூர நில் என்கின்றோம். ஜாதிப் பிரிவினையைக் காட்டித் தூர நில் என்கின்றோம். உலகம் முழுவதும் உள்ள ஏனைய மதங்களும் இப்படியான வித்தியாசங்கள் உள்ள மதங்களாகவே இருந்தால் அது தவறானதெனத் தோன்றுகின்றது. இவை தொடர்பாக விவாத அரங்குகளோ அல்லது விமர்சனங்களோ தோன்றியிருக்காது. ஏனைய மதங்கள் எல்லாம் ஒரே மாதிரியான தர்மங்களைக் கடைப்பிடித்துவர இந்து மதம் மட்டும் இப்படி இருப்பதனால் எங்களுக்கு அது தவறானதாகத் தெரிகின்றது. ஏனையவர்கள் இந்து மதத்தினைச் சுட்டிக்காட்டி பரிகாசம் செய்வதுபோல் தெரிகின்றது. இத்தகைய வினாக்கள் அனைத்துக்கும் தகுதியான விடைகள் அவசியமாகும்.

மதம் என்றால் என்ன? ஆத்மா கடைத்தேற என்ன வழியோ அதுதான் தர்மம், அதுதான் மதம். உடம்பிற்கு வியாதி வராமல் வந்த வியாதியால் பாதிப்புக்கள் ஏற்படாமல் காப்பவர், ஆலோசனைகள் செய்பவர் வைத்தியராவார். உடம்பிற்கு என்ன வியாதி வந்திருக்கின்றது என்பதும் அதனைப் போக்குவதற்கு இதைத்தான் செய்யவேண்டும் என்பதும் வைத்தியருக்குத்தான் தெரிந்ததாகும். சக்கரை நோயாளி இரத்த அமுத்தம் உள்ள நோயாளியின் மருந்தினை உபயோகிக்கமுடியாது. வைத்தியரிடம் ஏன் இப்படியான வித்தியாசமான மருந்து என்று கேட்டால் இவ்வருத்தத்திற்கு இதுதான் மருந்து என்றே பதிலுரைப்பார். அப்படியாக அவர்கள் பதிலிறுத்தால் நாம் அவற்றைப் பின்பற்ற வேண்டியது அவசியமாகின்றது.

உடம்பு வைத்தியத்திற்கே இவ்வாறு நாம் பின்பற்றுவோமானால் ஆத்ம வைத்தியத்திற்கு எவ்வளவு நம்பிக்கையும் பக்தியும் அந்த வைத்தியனிடத்தில் இருக்கவேண்டும். மற்றய மதங்களிளே காணப்படுவது போன்ற பொதுவான விதிகள் இந்து மத்திலும் காணப்படுகின்றது. அவற்றைப் பொதுத் தர்மம் என்று கூறுகின்றோம். இவை எல்லா இந்துக்களாலும் கடைப்பிடிக்கபட வேண்டியவையாகும். ஸத்யம் என்பது ஒரு பொதுத் தர்மமாகும். பொய் சொல்லுதல் கூடாது. தாயாரிடத்திலோ, தகப்பனாரிடத்திலோ, குருவிடத்திலோ, தெய்வத்திடமோ பக்தி செலுத்துதல் வேண்டும். பிறருக்கு எங்களால் இயன்ற உபகாரங்களைச் செய்தல் வேண்டும். நமக்கு அவசியமான அளவு மட்டும் செலவு செய்துகொண்டு மிகுதியை மற்றவர்களுக்காக உபயோகிக்க வேண்டும். இவை ஸத்தயம், பிரமச்சாரியம், அஹிம்சை, அஸ்த்தேயம், அபரிக்ரஹம் என்று சொல்லப்படும் பொதுத் தர்மங்களாகும்.

இவற்றைத் தவிர இறைவன் எம்மை எந்த இடத்தில் எந்த நிலையில் எந்தக் குடும்பத்தில் எந்த இனப்பிரிவில் பிறப்பித்திருக்கிறாரோ அந்த நிலையில் நாம் கடைப்பிடிக்கச் சில தர்மங்கள் உண்டு. அவற்றை விஷேஷ தர்மங்கள் என்று சொல்வார்கள். பிராமண, வைசிய, சத்திரிய, சூத்திர வர்ணத்தினருக்கு என்று செய்யப்பட வேண்டிய சில காரியங்கள் உண்டு. அவை வர்ண தர்மங்கள் என்று கூறப்படும். பொதுவான தர்மங்களுக்கு மேல் ஒவ்வொருவருக்கும் உள்ள அதிகப்படியான தர்மங்களோ, கடமைகளோ இவையாகும். எல்லோருக்கும் எல்லாம் பொதுவானவை என்றால் கஷ்டநிலைதான் அதிகமாகும்.

நுளைவுச் சீட்டுக்கள் வழங்கும் இடத்தில் எல்லோரும் புகுந்துவிட்டால் அங்கிருப்பவர் என்ன செய்வார்? வானொலி ஒலிபரப்பாளர் மூடிய கதவினுள் இருந்து ஒலிபரப்புச் செய்யும்போது எல்லோரும் உள்ளே போகமுடியுமா? ஒவ்வொருவருக்கும் தத்தமது

கடமைகளைச் செய்ய சில சௌகரியங்கள் இருக்க வேண்டும். ஒரு குடும்பத்தில் ஒருவருக்குச் சுகவீனம் ஏற்பட்டால் அவருக்குச் சில வசதிகளைச் செய்து கொடுக்கின்றோம். அது தொற்று வியாதியாக இருந்தால் குடும்பத்தினரிடமிருந்து சற்றுத் தனிமைப்படுத்திக் கவனிக்கின்றோம். அப்போது குடும்ப அங்கத்தினர் அனைவருக்கும் அப்படிச் செய்யவேண்டியது நியாயமாகுமா?

எல்லோருக்கும் பொதுவான தர்மங்கள் நம்மத்தியில் அதிகமாக இருக்கின்றன. அதேவேளை அவரவர் கடமைகளைச் செய்வதற்கும் சில வசதிகள் வேண்டுமல்லவா? உண்மையில் அவை சௌவ்கரியங்கள் அல்ல. உதாரணமாக வானொலி ஒலிபரப்புக் என்று ஒதுக்கப்பட்டிருப்பது போல் அந்தந்தச் தேவைகளுக்குரிய சுதந்திரங்களையும் விசேட தர்மங்களையும் எல்லோரும் அங்கீகாரம் செய்ய வேண்டும். ஏன் என்றால் அவர்கள் செய்வது தங்களுக்காக மட்டுமல்ல எல்லோருக்கும் சௌக்கியம் உண்டாக்குவதற்காகவே தங்கள் விசேட தர்மங்களை அனுஷ்டிக்கிறார்கள். எல்லோரும் சேர்ந்து சாப்பிடுவதால் மட்டுமோ எல்லோரும் கோவிலுக்குள் சமனாகச் செல்வதால் மட்டுமோ ஜதி வித்யாசங்கள் இன்றித் திருமணங்கள் செய்வதால் மட்டுமோ ஒற்றுமை வந்துவிடாது. எமது இதையத்தில் அன்பும் ஒற்றுமையும் இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தத்தமது காரியங்களை ஒழுங்காகச் செய்து கொண்டு மற்றவர்களின் காரியங்களையும் ஒழுங்காக நடக்க ஒத்தாசை செய்து கொண்டு இருத்தல் சிறப்பானதாகும்.

நம்மிடமுள்ள மனக்கலக்கத்தினால் நம்முடைய தர்மங்கள் தப்பாகத் தெரிகின்றன. எவ்வளவுக் கெவ்வளவு நியமங்கள் கடமைகள் கடப்பாடுகள் அதிகமாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு எல்லாம் ஒழுங்காக இருக்கும். எல்லோருக்கும் சௌக்கியமும் சௌகரியமும் அதிகரிக்கும். பத்தியம் கடுமையாக இருந்தால் வியாதி சீக்கரம் குணமாகும் என்பது போல. இந்து மதத்தில் உள்ள விசேட தர்மங்கள் அரசன் இல்லாமலே தேசம் நன்றாக இருக்க உபயோகப்பட்டு வந்தன. கிராமப் பஞ்சாயத்தில் கட்டுப்பாடுகள் குறையக் குறைய ஆக்கிரமங்கள் அதிகமாயின. இதனால் கலகம் அதிகம் உண்டாகியது. தம்மைச் சமூகத்தில் இருந்த தள்ளிவைத்து விடுவார்களோ என்ற பயத்தினால் குற்றங்கள் குறைவாக இருந்தன. அரசன் தண்டனை அழிக்கவேண்டிய அவசியமில்லாத நிலைமாறி கிராமப்பஞ்சாயம் மதிப்பிழந்து போனதால் நகர்பாதுகாவலரும் இராணுவமும் அதிகரித்துவிட்டது. இதன் காரணம் என்ன? வர்ணாச்சிரம தர்மத்தின் குறைவே ஆகும். நமது தர்மங்கள் தனித்தனியே இருந்தாலும் ஊன்றி ஆராய்ந்தால் அவற்றில் இருக்கும் ஒற்றுமையைப் பாதிக்கும் அல்லவா.

எமது இந்து தர்மத்தினை எடுத்துச் சொல்லத் தொடங்கினால் சொல்லிக் கொண்டே இருக்கலாம். எழுதிக் கொண்டே இருக்கலாம். எமது இந்துமத தர்மங்கள் வர்ணாச்சிரம தர்மங்கள் மக்கள் வாழ்க்கையை நேர்படுத்தி நல்வாழ்வு வாழ்வதற்கே ஏற்படுத்தப்பட்டவை என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இங்கு தரப்பட்டவிடயங்கள் யாரையாவது புண்படுத்தக் கூடியவையாக அமைந்திருந்தால் அதனை நான் எடுத்துக் கொள்கின்றேன். கண்டிப்பது பிரிந்து நிற்காமல் ஒன்றாகச் சேர்கின்ற நோக்கத்தில்தான் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன். சத்தியத்தோடு அனைவரும் ஐக்கியப்பட வேண்டும். அடிப்படையில் என் ஆசை நோக்கமெல்லாம் எல்லோரும் அரண்குடி மக்களாகச் ஒன்று சேரவேண்டும் என்பதேயாகும்.

"ஆள்க தீயதெல்லாம் அரன் நாமமே சூழ்க
வையகமும் துயர் தீரவே"

கற்றவர் கல்லாவார்

கல்லாதவர் உலகில் நிலையாதவர்
கற்றவரே உலகில் நிலையானவர்
கற்றகல்வி உலகில் நிலைகொள்ள
கல்லாவான் உலகில் நிலையாகவே!

மற்றவரும் கல்லாவார்

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்து
என்றும் உலகில் நல்லதை எண்ணியே
என்றும் வாழ மக்கள் மனதில் - அவன்
என்றும் வாழ்வான் பின் கல்லாகி அங்கே.

MILAN AUTOS CENTRE INC.

கையால் கார் கழுவும் நிலையம்

சகல திருத்த வேலைகளுக்கும்
என்ஜின் சம்போ, இன்ரீயல் சம்போ, பொலிசிங், Body Work, *ரின்ரிங்*,
புதிய பழைய ரயர்கள், Rust Proof, Under Coating

10 *வருடங்களுக்கு மேல் அனுபவம் வாய்ந்த திருத்துனர்கள்.*

ONTARIO'S DRIVE CLEAN

Ontario Emission Inspection

வாகனப் புகை வெளியேற்றுப் பரிசோதனை!
ஒன்ராரியோ அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வாகனப் பரிசோதனை நிலையம்.

All Kinds of Mechanical Works Experts in Exterior, Interior and Engine Shampooing, New & Used Tire Changing.
We do Touch up, Paint, Rust proof and Undercoating

Engine Transmission
Rebuild 1 Year Warranty

Complete Auto Repair and Hand Car Wash

CALL: **RAJAH**

Tel: (416) 752-6608 Fax: (416) 752-8599
1213 Kennedy Road, Scarborough, Ontario, M1P 2L2
(Kennedy/Lawrence)

ஈழத்து திருமகன் தனிநாயகம் அடிகளாரின் நினைவாக தமிழகத்தில் ஒரு இதழியல் கல்லூரி

எட்வேட் மணிமாறன் பிலிப்

"என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்

தன்னை நன்றாய்த் தமிழ் செய்யு மாறே"

என்னும் திருமந்திரத்தை மேற்கோளாகக் கொண்டு வாழ்ந்து உலக மெல்லாம் தமிழ் முழக்கம் செய்தவர் தனிநாயகம் அடிகள். இவர் ஈழத்தின் யாழ்ப்பாணத்தில் உள்ள சிற்றூராகிய கரம்பொனில் 1913ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 2ஆம் நாள் கென்றி ஸ்ரனிஸ்லொஸ், செசில் இராசம்மா தம்பதிகளுக்கு முதல் குழந்தையாக பிறந்தார். ஆரம்பக் கல்வியை ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியிலும், தொடர்ந்து யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் பயின்றார். பின்னர் கொழும்பிலுள்ள புனித பேர்னாட் குருத்துவக் கல்லூரியில் 1931ஆம் ஆண்டு முதல் 1934ஆம் ஆண்டு வரை மெய்யியல் படிப்பை முடித்து 1934ஆம் ஆண்டு முதல் இறையியல் கல்வியை ரோமபுரியில் உள்ள ஊர்பன் பல் கலைக் கழகத்தில் பயின்று கத்தோலிக்க குரவாக திருநிலைப்படுத்தப் பட்டார்.

1945ஆம் ஆண்டிலிருந்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழைப் பயின்று எம்.ஏ, எம்.லிட் பட்டங்களைப் பெற்றார். அடிகளார் அவர்கள் 1947ஆம் ஆண்டிலிருந்து 1949 வரை சங்க இலக்கியத்ததில் இயற்கை என்னும் தலைப்பில் ஆராய்ச்சி செய்து அறிஞர் பட்டம் பெற்றார். 1948ஆம் ஆண்டில் தூத்துக்குடியில தமிழ் இலக்கிய கழகத்தை அடிகளார் நிறுவினார். இக் கழகம் 1971ஆம் ஆண்டு முதல் திருச்சியில் அமைந்து அரும் பல இலக்கிய பணிகளை ஆற்றி வருகின்றது. 1952ஆம் ஆண்டு முதல் 1961ஆம் ஆண்டு வரை இலங்கைப் பல கலைக் கழகத்தில் கல்வித்துறை விரிவுரையாளராக பணியாற்றினார். இதற்கிடையில் 1955 முதல் 1957 வரை இலண்டன் பல்கலைக்கழகத்தில் கல்வித்துறையில் ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் பெற்றார். 1961 ஆண்டு முதல் 1969 வரை மலேசியா பல்கலைக்கழகத்தில் இந்திய துறையில் பேராசிரியராக பணியாற்றினார்.

தூத்துக்குடியில் தமிழ் இலக்கிய கழகத்தை நிறுவிய போது, உலகின் பல நாடுகளுக்கும் சென்று தமிழின் தொன்மை, செழுமை, பண்பாட்டு சிறப்பினை விளக்கி, விரிவுரைகள் நிகழ்த்தி, அதனால் உலக் அரங்கில் தமிழ்த்தூது நிகழ்த்தவும், தமிழ் இலக்கிய கழகத்தின் வளர்ச்சிக்கு நிதியை திரட்டவும் வழிசெய்தார். அடிகளார் பன்னிரண்டு மொழிகளைப் பயின்றவர். அவற்றுள் தமிழ், ஆங்கிலம் இலத்தீன், இத்தாலியம், பிரெஞ்சு, ஸ்பானிஸ் ஆகிய ஆறு மொழிகளை நன்றாக அறிவார். சில சந்தர்ப்பங்களில் இவ் மொழிகளிலேயே சிறப்புப் பேராசியராகவும்

கடமை புரிந்துள்ளார். இத்தனை மொழிகளை தெரிந்து கொண்ட ஒரு முறை சொன்னார்,

யாமறிந்த மொழிகளிலே - தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்

என்று பாரதி சொன்னானே. ஆந்தக் கருத்துக்கு பொருள் மிகுதி. பாரதி ஐந்து மொழிகளைத்தான் கற்றிருந்தார். ஆனால் பன்னிரண்டு மொழிகளை கற்று விட்டு சொல்கின்றேன். ஆனால் இதை நான் செருக்கோடு சொல்லவில்லை. பன்னிரண்டு மொழிகளைப் படித்து, உணர்ந்தவனாக சொல்கின்றேன் என்றார் அடிகளார். ஆவர் உலகம் பூராகவும் சென்று ஆற்றிய உரைகளிலே அவர் வற்புறுத்திய கருத்து ஒன்றே உலகம் என்பது தான். இது சங்க காலத்தில்,

யாதும் ஊரே: யாவரும் கேளீர்

என்று கணியன் பூங்குன்றனார் கூறிய கருத்தின் அடிப்படையில் அமைந்ததாகும். அடிகளார் தமிழ் ஈழத்தில் பிறந்து, இந்திய, மலேசிய நாடுகளில் பணிபுரிந்திரிந்தாலும், இவ் எல்லைகளுக்குள் தம்மை சிறைப்படுத்திக் கொள்ளவில்லை. தூம் ஒரு மனிதன் என்னும் உலகளாவிய எண்ணம் அவருக்கு இருந்தது. அதனால் தான்

யாதும் ஊரே: யாவரும் கேளீர்

பெரிதே உலகம்: பேணுநர் பலரே

எத்திசை செலினும் அத்திசைச் சோறே

யாதானும் நாடாமல் ஊராமல்.....

என்னும் பழந்தமிழ் கருத்துக்கள் அவரது உள்ளத்தை கொள்ளை கொண்டன. புல நாடுகளுக்கும் சென்று உரைகள் ஆற்றிய பின்னர், அவர் கையெழுத்தையும் விரும்பிக் கேட்போர்க்கும் விருந்தினர் நூல்களிலும். யாதும் ஊரே: யாவரும் கேளீர் என்னும் சங்கப் புலவரின் அழகிய அடியினைத் தமிழ் எழுத்தில் பொறித்து ஒத்த மொழி பெயர்ப்பினையும் கேட்போர் வரைந்து வழங்குவார்.

"Every Country is my country"

"Every man is my kinsman"

இரண்டயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழரின் பண்பாடு நாகரிகம் சிந்தனை உலகளாவிய ரீதியில் இருந்தது என்பதை பிற நாட்டார்க்கு வியக்கும் வண்ணம் விளக்கியுள்ளார். பக்தியில் கலிந்த செய்யுட்கள் தமிழில் அரும்பி மலர்ந்தது போல் வேறு எம் மொழியிலும் மலர்ந்ததில்லை. அளவிலும், சுவையிலும் தமிழிலுள்ள திருப்பாடல்கள் போல், பிற இலக்கியங்கள் இல்லை. பல்வேறு மொழிகளோடு ஒப்பிட்டு தமிழ் மொழி இரக்கத்தின் மொழி, பக்தியின் மொழி என்பது இனிதே பொருந்தும் என்றார் அடிகளார்.

நவீன தமிழ் ஆராய்ச்சிக்கு வித்திட்டு வளர்த்து, உலக அரங்கில் தமிழுக்குச் சிறப்பிடம் பெற்றுத்தந்த பெருமை தனிநாயக அடிகளாருக்கே உரியது. அவர் நிறுவி ஆசிரியராக இருந்து நடத்திய TAMIL CULTURE, JOURNAL OF TAMIL STUDIES ஆகிய இரு ஆராய்ச்சி இதழ்களும் மேலை நாட்டு அறிஞர்களுக்குத் தமிழ் இலக்கிய வளத்தை அறிமுகப்படுத்தி, அவர்களைத் தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபடச் செய்தன. பேராசிரியர்கள் கமில் சுவலபில், எம்.பி.எமனோ, ஆர்.இ.ஆஷர், ஜே.ஆர்.மார், சி.ஜே.டீல், எட்கர் நோல்ட்டன், ஜுன் ∴பீலியோஸா போன்ற அறிஞர்கள் தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்குத் தனிநாயக அடிகளே காரணம்.

உலகத் தமிழ் அறிஞர்களை ஒருங்கிணைத்துச் செயல்பட வைக்கும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் பற்றிய எண்ணம் அடிகளாரின் சிந்தனையில் பூத்தது தான். அம்மன்றத்தின்மூலம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளை நடத்துவதும் அடிகளாரின் கருத்துத்தான். இவற்றை முதலில் அடிகளார் வெளியிட்டபோது இவை பகற்கனவு என்றே பலர் கருதினர். ஆனால் எண்ணியதை எண்ணியாங்கு முடிக்கும் திண்ணியராகிய அடிகளார் இவற்றைச் செயல்படுத்தி, வரலாற்றில் அழியாப் புகழ் பெற்றார். முதலாவது தமிழாரய்ச்சி மகாநாட்டை 1966ஆம் ஆண்டு மலேசியாவின் தலைநகரான கோலாம்பூரில் சிறப்பாக நடாத்தி வைத்தார். மாநாட்டை தொடக்கி வைத்த அன்றைய மலேசிய பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் அவர்கள், எமது பல்கலைக் கழகத்தின் இந்தியத் துறையில் பன்மொழிப் புலமையும், பரந்த மனப்பான்மையும் கொண்ட அறிஞரைப் தலைவராக கொள்ளும் பேறு பெற்றிருக்கின்றது. பேராசிரியர் தனிநாயகம் அடிகளாரையே நான் குறிப்பிடுகின்றேன். அவருடைய தலைமைதான் இல் உலகத் தமிழ் மாநாட்டை கூட்ட வழி வகுத்துள்ளது எனப் புகழாரம் சூட்டினார்.

பலரும் அடிகளாரை மறந்துவரும் இக்காலத்தில், இவரது நினைவாக உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் தனிநாயக அடிகளார் அறக்கட்டளையை நிறுவி அதன்மூலம் ஆண்டுதோறும் நினைவுச் சொற்பொழிவுகள் நிகழ்த்த ஏற்பாடு செய்துள்ளோம். அவை தனிநாயக அடிகளாரின் இதழ்வழித் தமிழ்ப்பணி போன்ற நூல்களாக வெளிவந்துள்ளன. அடிகளாரின் தமிழ்த் தூது, வுயஅடை ஊரடவரசந யனெ ஊளைைடைணையவழைெ டுயனௌஉயிந யனெ "ழநவசல போன்ற நூல்களின் மறுபதிப்பும், அவரது ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தொகுப்பாகிய ளுநடநஉவநன "யிநசள ழக வுயயெைெயலயபயஅ யுனபையட என்நூலும் வெளிவர தமிழ் இலக்கிய கழகம் பெரிதும் உதவியுள்ளது

இவையெல்லாம் போதாது என்று, திருச்சிராப்பள்ளி மாநகரில் !தனிநாயகம் அடிகள் இதழியல் கல்லூரி! யையும் நிறுவி நடத்திவருகின்றது. இதன் மூலம் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் அனுமதியோடு இதழியல், பொதுமக்கள் தொடர்பியல் துறையில் முதுகலைப்பட்டய வகுப்புகளை நடத்திவருகின்றது. தரமான பத்திரிகையாளர்களையும் எழுத்தாளர்களையும் உருவாக்குவதே அவர்கள் திட்டம். இது வரை 3 ஈழத்து மாணவர்கள் புலமைபரிசுகள் பெற்று முதுகலைப்பட்டம் அடைய துணை செய்துள்ளார்கள் தமிழ் இலக்கிய கழகத்தினர்.

தனிநாயக அடிகளாரின் நினைவைப் போற்றும் பல்வேறு பணிகளில் அவர்கள் ஈடுபடுவதற்குக் காரணம் இத் தமிழ் இலக்கியக் கழகம், அடிகளாரால்1948-ம் ஆண்டு நிறுவப்பட்டது என்பது தான். இப்பணிகளை அடிகளாருக்குச் செய்யும் நன்றிக் கடனாகவே தமிழகத்து மக்கள் செய்து வருகின்றார்கள். ஏற்கனவே 50 இலட்சம் ரூபாவில் கல்லூரியை கட்டிடத்தை முடித்துவிட்டு, அதற்கான தளபாடங்கள், நூல் நிலையம், கனணிகள் போன்றவற்றை வாங்குவதற்காக தரணியெல்லாம் வாழும் ஈழத்தமிழரிடம் உதவி கேட்கின்றது தமிழ் இலக்கியக் கழகமும் அதன் இயக்குனருமான அமுதன் அடிகளார்.

உங்கள் உதவியோடு இந்த இதழியல் கல்லூரியைச் சிறப்பான முறையில் நடத்தி, மேலும் காட்சித் தகவல் இயல், வளர்ச்சித் தகவல் இயல், ஊடகங்களுக்கான எழுத்து, விளம்பர இயல் போன்ற பல துறைகளுக்குரிய பாடங்களை நடத்தப் பல்கலைக்கழகத்திடமிருந்து இசைவு பெற முடியும் என நம்புகின்றார்கள் . அவர்களுக்கு விரைந்து உதவுங்கள், தாராளமாக உதவுங்கள்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: அமுதன் அடிகள், செயலர், தமிழ் இலக்கியக் கழகம், 49- பாரதியார் சாலை, திருச்சிராப்பள்ளி - 620 001, இந்தியா. கனடாவில் (sinnarasa@hotmail.com)

வன்னி மகள்

சோகக் கடலில் உள்ள வன்னி மகள்-அவள்
துயரக் கதை பரவும் ஈழத்திலே

தன் எழில் கொண்டு நின்ற பாவையவள்
தனியாகத் தவிக்கின்ற பேதையானாள்

அழகு சிதைந்தழியும் கன்னியவள்
செந்தமிழின் தேனமுத வள்ளி மகள்
இயற்கை வளம் கொழிக்கும் எழிலரசி
இரந்தோர்க்கு ஈந்து வந்த வள்ளலவள்

எழில் பொங்க வாழ்ந்து வந்த பூங்கோதை
எத்தர்களின் கைகளிலே கலங்குகிறாள்
பாலோடு தேன் பருகி வாழ்ந்த அவள்
பகைவர்களால் பட்டினியோ கிடக்கின்றாள்

அந்தி பகல் கலகலப்பாய் நின்ற அவள்
அன்னியரால் அலக்கழிந்தே சிதைகின்றாள்
கண்ணீரே காவியமாய் மாய்கின்றாள்
செந்நீரே உதிரமெலாம் உதிர்க்கின்றாள்

வீரமறவர்க்கே தாயாவாள்
வீரம் உரமேற்றும் துர்க்கையவள்
வீரமைந்தர் தமை நடத்தும் கொற்கையவள்
போர்க்கொடியே உயர்ந்திடவே திடமாவாள்
வெற்றி வாகை சூடிடவே பார்க்கின்றாள்

கவரிமானின் பண்புகளின் உறைவிடமே
கண்ணெதிரே கயவர்களைக் களைகின்றாள்
மண்மீது மகத்துவமே புரிகின்றாள்
மண்பெருமை மறக்காமல் காக்கின்றாள்

Insurance & Financial Services

Liberty Mutual

London Life



Balan Kanapathipillai (Agent)

All Insurance & Financial Services

- ✓ *Auto*
- ✓ *Home*
- ✓ *Life*
- ✓ *Disability*
- ✓ *R.R.S.P*
- ✓ *Mutual Fund*
- ✓ *Group Insurance*
- ✓ *Child Education*
- ✓ *Travel*
- ✓ *Business*

Office: (416) 291-0451 Ext. 286 - Fax: (416) 291-3779
Cell: (416) 452-6975
Pager: (416) 336-4027

10 Milner Business Court Suite 900
Scarborough, ON
M1B 3C6

Home Office:
Tel: (905) 294-2429
Fax: (905) 201-6028

15 Krenmiles Cres
Markham, ON
L3S 2C9

நாளை விடியும்

கலாமலர் கதிர்காமநாதன்

கோடை காலத்தில் வெப்பம் உடம்பெல்லாம் ஒரே எரிவாக இருந்தது. வீட்டிற்குள்ளே மின் விசிறி இயங்கிக் கொண்டிருந்தாலும் வெப்பத்தை உடல் உணர்ந்து கொண்டுதான் இருந்தது. வெளியே மரங்கள் ஆட்டம் அசைவின்றி வெயிலுக்கு அடிபணிந்தது போல் அமைதியாக நின்றிருந்தன. நேரம் மாலை ஏழு மணியாகியும் வெப்பநிலையில் பெரிய மாறுதல் இல்லை. பிள்ளைகள் இருவரையும் அழைத்துக் கொண்டு சாந்தி அருகில் உள்ள பூங்காவிற்கு சென்றாள். கூண்டை விட்டு வெளியேறிய குருவிகள் போல பிள்ளைகள் தாயின் முன்னே ஓடிச் சென்றார்கள் சாந்தியின் கண்கள் அங்கும் இங்கும் அலைந்து நம்மவர்கள் யாராவது நிற்கிறார்களா என்று தேடிக் கொண்டிருந்தன. வெள்ளையர்கள் கறுப்பர்கள் சீனர்கள் இந்தியர்கள் என்று பலரும் அங்கு காணப்பட்டனர். அடர்த்தியான மேபிள் மரங்களும் பயின் மரங்களும் நிறைந்து காணப்பட்ட அந்தப் பூங்காவிலே மரங்களுக்குக் கீழே இருப்பதற்காகப் போடப்பட்ட வாங்கில் சாந்தி அமர்ந்திருந்தாள். பிள்ளைகள் ஊஞ்சல் ஆடுவதும் சறுக்கி விழுவதுமாக விளையாடிக் கொண்டிருந்தார்கள். அக்கா என்ற குரலைக் கேட்டுச் சாந்தி திரும்பிப் பார்த்தாள். கோடை காலங்களில் பூங்காவிற்கு வரும் அவளே நின்றிருந்தாள். ஓ நீங்களா என்றபடி புன்னகைத்தாள். எங்க... .. சமர் எண்டால்தானே இங்காலே வாறது. இப்ப புள்ளையளின்ர கரச்சல் தாங்கேலாமல்தான் இப்ப வெளிக்கிட்டு வந்தனான் என்று கூறிக் கொண்டு சாந்திக்கருகிலே அமர்ந்து கொண்டாள். உங்களுக்கு மூண்டு பிள்ளையளோ என்று சாந்தி கேட்டாள். இல்லை எனக்கு இரண்டுபேர்தான். இது பக்கத்து அப்பாட்மென்ரில இருக்கிற பிள்ளை. நாலு வயசு. இந்த வருசம் ஸ்கூலுக்குப் போறா. பெரிய பாவப்பட்ட குடும்பம். சோகம் கலந்த பெருமூச்சு வெளியேற அவள் தொடந்தாள். இந்தப் புள்ளையின்ர தகப்பன் ஒண்டரை வருசத்திற்கு முந்தி கார் அச்சிடனில செத்துப் போயிட்டாராம். இரண்டு வயதில இன்னும் ஒரு பொம்பிளைப் பிள்ளை இருக்குது. தாய்க்கும் குறைஞ்ச வயசுதான். பெரிய கறுமம். தாயின்ர தகப்பனும் சின்ன வயசில செத்துப் போயிட்டாராம். சகோதரம் எண்டு இருந்த ஒரு தம்பியும் புலியில போய் செத்துப் போயிட்டுதாம். தகப்பனையும் தம்பியையும் விட்டுட்டுத் தாய் வரமாட்டன் எண்டு ஒரேபுடியாய் இருந்ததாம். இப்ப மருமகனும் போன புறகு மகள் தனிச்சுப் போச்சுதெண்டு போன வின்ரருக்கதான் வந்தவ. இவை ஊரில எவடம் என்று சாந்தி கேட்டாள். கிளிநொச்சிக்குப் பக்கத்தில----- என்டு அவ முடிக்கமுன்னே பரந்தனே? என்று சாந்தி கேட்டாள். ஓ ஓ பரந்தன்தான் என்றாள். சாந்தியின் மனதில் ஏதோ இனம் புரியாத ஓர் பதட்டம். அம்மா தம்பி சைக்கிளால விழுந்திட்டான் என்றதும் அவள் சாந்தியை விட்டு மகனை நோக்கி ஓடினாள்.

சாந்தின் அடிமனதில் இருந்து சுமதி அக்காவின் நினைவுகள் எழுந்தன. ஓ சுமதி அக்காதான் இள வயதில புரிசனை இழந்தவ. அவவின்ர மகனும் ஆனையிறவில இறந்து போனதாய்க் கேள்விப்பட்டனான். சுமதியக்காவைச் சந்தித்த அந்த நாள்----- தோட்டத்திற்கு தண்ணி ஊத்திக் கொண்டிருந்த தம்பி திடீரென அக்கா றோட்டைப் பார் என்றான். நான் பனையோலை வேலிக்கால் றோட்டைப்பார்தேன். மோட்டார்ச் சைக்கிள் சக்கரதில் சேலை சிக்கிய நிலையில் சுமதி அக்கா நிக்கிறா. சுந்தரம் அண்ணை சிக்கிய சாறியை வெளியே எடுத்துக் கொண்டிருந்தார். டேய் தம்பி வாய் பாக்காமல் ஓடிப்போய்க் கத்திரிக்கோல எடுத்துக்குடு என்று சொன்ன அம்மா படலையை திறந்து வெளியே போய் சுமதி அக்காவைக் கூட்டிவந்து தன் சாறி ஒன்றை மாத்தக் கொடுத்து கதைதுக் கொண்டு இருக்கும் போதுதான் அவ எங்கடை தூரத்துச் சொந்தம் என்டு தெரியவந்தது. இதுக்குப்பிறகு எங்கள் இரு குடும்பத்திற்கு இடையேயும் மிக அன்னியோன்னியம் ஏற்பட்டது.

சுந்தரம் அண்ணை கொழும்பில சேவையராய் வேலை பாத்தவர். அவருக்கு அங்க ஒரு கடையும் இருந்தது. எண்பத்திமூன்டுக் கலவரம் நடக்கேக்க அவர் கொழும்பிலதான் இருந்தவர். வானொலிச் செய்தியளைக் கேட்டு எங்கட ஊர்ச் சனமும் சுந்தரம் அண்ணை செத்துப் போயிட்டார் என்டு கதைக்கத் தொடங்கீட்டுதுகள். சுமதியக்கா ஒரே அழுகை. சனங்களும் துக்கம் விசாரிக்க அவ வீட்டுக்கு போய் வந்தபடி.திடீரென்று ஒரு நாள்

சுந்தரமண்ணை வந்து நின்றார். காங்கேசன்துறைக்கு வந்த கப்பலில் வந்து வீடு வந்தார் ஆனால் சித்தப்பிரமை பிடித்தவர் போல காணப்பட்டார். அவர் கண்முன்னாலேயே அவர் சொத்துக்கள் சூறையாடப்பட்டும் தீயிட்டுக் கொழுத்தப் பட்டதையும் பார்த்ததில் இருந்து இப்படியாகி விட்டதாம் என்று அம்மா வந்து சொன்னா. சிலநாட்களில் படுக்கையாகிவிட்ட சுந்தர மண்ணை இந்த உலகத்தை விட்டும் போய்விட்டார். சுந்தர மண்ணை இறந்த நேரம் சுமதியக்கா என்னமாய் கதறி அழுதா இப்ப நினைக்கும்போதும் நெஞ்சை உலுக்கியது அந்தக்காட்சி. கடவுளே ஏன்தான் இப்படிச்சோதிக்கிறியோ அந்தக்குடும்பத்தை... ... ... என்று சாந்தி மனம் நொந்து கொண்டாள்.

தமிழீழத்திலும் சரி புலம்பெயர்ந்த நாடுகளிலும் சரி ஆயிரக் கணக்கில் விதவையாகிக் கொண்டிருக்கும் எங்கட பெண்களுக்கு வழி மறிக்கப்பட்ட வாழ்க்கைதானா? அவர்களால் வாழ்க்கைப் பயணத்தை தொடரமுடியாதா? புனர்வாழ்வு வாழ்வியல் மாற்றம் என்பதெல்லாம் அவர்களுக்குத் தேவை இல்லையா? இளவயதில் கணவனை இழந்து மன அழுத்தம் மனச்சோர்வு மன உழைச்சலில் சிக்கி விரக்தி வேதனை நம்பிக்கை வரட்சி என்று வாழ்க்கைப் பயணத்தை தினமும் திசைமாற்றிச் செல்லும் இவர்களுக்கு மறுவாழ்வு கொடுப்பதை எமது சமுதாயம் இதயசுத்தியுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். இது ஆரோக்கியமான ஒரு சமுதாயத்தின் கடமை. சாந்தி உணர்ச்சி வசப்பட்டவள் போல் காணப்பட்டாள். இனம்புரியாத ஒரு உணர்வு அவளை ஆக்கிரமித்துக் கொண்டது. என்னால என்ன செய்ய முடியும் என்பது போல பெருமூச்சொன்று வெப்பமாய் வெளியேறியது.

சுமதி அக்காவைப்போல இவளையும் காலம் முழுக்க கைம் பெண்ணாக வாழ விடமாட்டன். எப்படியும் இவழுக்கு நல்ல ஒரு வரனைத்தேடிக் கண்டுபிடித்துக் கொடுப்பன். இவழும் மற்றவர்களைப்போல சமுதாயத்தில் சிரித்து சிந்தித்து வாழவேண்டும்.

சுமக்கமுடியாத ஒரு சுமையை சுமந்து இறக்கிவிட்ட உணர்வோடு இருக்கையில் இருந்து எழுந்தாள் சாந்தி. கண்கள் அவசர அவசரமாக அவளைத்தேடியது. .. .. .. ம்.. .. பரவாயில்லை நாளைக்கு வருவாதானே என்ற எண்ணத்துடன் குழந்தைகளை அழைத்துக் கொண்டு வீடு நோகிச் சென்று கொண்டிருந்தாள். எப்பிடியும் சுமதியக்காவை நாளைக்குப் பார்த்திடுவன். இந்தப் பக்கத்தில் இருந்தும் ஒரு நாள் கூடப் பார்க்க முடியேல்லையே ச்சீ.. .. .. என்றபடி நாளையின் விடியலுக்காக காத்திருந்தாள் சாந்தி..

நட்பாய் எனக்கொரு நகல் எழுதேன் !

சமுகத்தின்
வெறித்தனத்திற்கெல்லாம்
சாவு மணி அடிக்க
ஏன் தயங்கினோம்?

உணர்வில்
உயிரில்
கலந்த பின்
பிரிந்தோம்
என்பது
வேதனை தான்

மரணித்து
காதலை வளர்ப்போம்
என்றோம்
எனக்குள்
இருக்கும் நீயும்
உனக்குள்
இருக்கும் நானும்
வாழ்து கொண்டே
நினைவுகளில்
வாழ்வோம்
என்கின்றனர்

நீ தந்த
சின்ன சின்ன
பரிசுப் பொருளெல்லாம்
இன்றும் என்
தலை அணையின் கீழ்
ஒழித்து வைத்திருக்கிறேன்

உன்னை எல்லாம்
இப்போ என்
தொலைபேசி
விசாரிக்க
தவறுவதில்லை

நமக்கு
வயதாவது போல்
சமுக வெறிக்கும்
வயதாகாதா என்ன?
புதிதாய் அல்லவா
பிறப்பெடுக்கிறது

சமுகம் திருந்தாது
நாம் தான்
மாறவேண்டும்

அடங்கு முன்
உன்னை ஒருமுறை
பார்த்திட வேண்டும்

எங்கே இருக்கிறாய்
நட்பாய்
எனக்கொரு
நகல்
எழுதேன்.

**நளாயினி
தாமரைச்செல்வன்
சுவிஸ்.**

CHANKANAI TEXTILES

Wholesale & Retails

TEL: (416) 264 6533

FAX: (416) 264 3959

நங்கையர் விரும்பும் நவநாகரீக
உடைகளுக்கு நாடவேண்டிய ஒரே இடம்.

2800 Eglinton Avenue East, Unit #18, Scarborough, ON, M1J 2C9

சங்கானைச் சந்தை

FOR RETAIL & WHOLESALE

- மரக்கறிச் சந்தை
- மீன் சந்தை
- இறைச்சிச் சந்தை
- பலசரக்குச் சந்தை



2800 Eglinton Avenue East, Unit #17
Scarborough, ON, M1J 2C9
(Eglinton/Brimley)
(416) 261-1392

என்று தீரும் எம் அவலம்?

ஆனைகட்டி ஆண்டுவந்த நீள்புலமும்
ஆசைகாட்டி வளர்த்துவந்த ஆநிரையும்
ஆற்றங்கரை தன்னில் வீற்றிருந்த வாழ்வும்
அணைகட்டி ஏற்றி வந்த நீர்வளமும்
மனை கட்டி மகிழ்ந்திருந்த மருப்பும்
தினை விதைத்தே தித்தித்த நிறைவும்
சுனை யதனைச் சூழ்ந்திட்ட பயிரும்
கனைத்து வரும் மோட்டெருமைப் பாலும்
மீண்டும் பிறந்து வரும் மிடுக்கும்
மீகாமன் கொண்டு வரும் உணவும்
மீண்டொருகால் பெற்றுவரு தேனும்
மீதமின்றிப் பருகி வந்த வாழ்வும்
அரக்கர் கூட்டமங்கே அழித்திடவே
அகன்று எம் மண்விட்டேகி
அகதி நிலை தேடி அலைந்தே
அங்கொன்றும் இங்கொன்றுமாக
அலக்கழிந்தே சிதைகின்ற நிலையோ
அன்பாக இணைந்திருந்த நாங்கள்
அநாதைகளாய் அபலைகளாய்
அடி உதைகள் வாங்கி என்றும்
அலறி வரும் வானூர்திக் குண்டில்
அகப்படாது பங்கர்கள் தோண்டி
அடிவயிற்றைக் கலக்கி வரும் ஒலியில்
அடிபடவே கால்கள் புதைகுளியின்
அடியினிலே போகின்ற எண்ணம்
பாசக் கயிற்றோடு எமனாகப் பொம்பர்
பார்த்து உயிர்காக்க மழை வெய்யில்
பாராது ஓடிச் சகதியில் வீழ்ந்து
பாம்புப் படுக்கையில் கால்வைத்து
பாழாகப் போகின்ற வாழ்வு
பச்சிளம் பாலகர் தானும்
பால் இன்றியே என்பு புண் தோலும்
பச்சையாய்த் தோன்றியே சாகும்
பரிதாபகரமே எம் அவலம்
என்றுதான் தீருமோ ஐயா!
பாரினில் உள்ளோர்கள் யாரும்
பாவியராக செத்திடும் இனத்தை
பாராமல் இருந்திடும் விந்தை
பாரினில் மேலோங்கள் ஏனோ?

என்றுதான் தீருமோ தமிழன்
என்ற இனம் படும் இந்த அவலம்
பாவையர் என்போர்கள் எல்லாம்
பாவியராகவே ஆக்கி கற்பு
பார்த்ததுமே பறித்து புதைகுளியில்
பார்த்திடாமலே புதைத்திடும்
ஆமிக் காம்புகள் எல்லாம்
ஆகின்ற தெங்கள் புதைகுளிகள்
சாட்சிகள் சொன்னாலும் புதைகுளிதான்
கூடவே சென்றாலும் புதைகுளிதான்.
காணோம் என்றாலும் புதைகுளிதான்
சித்திர வதைகளோ என்றும்
சிறு பூனை கையில் பட்ட
சுண்டெலிகளாக எம்மைச்
சுட்டெரித்து அழிக்கின்ற அவலம்
என்றுதான் தீருமோ ஐயோ
சிங்களப் பேரின வாதம்

தேசிய அடையாள அட்டை
தேசத்தின் அட்டையாய் அன்றி
தேடித்திரிந்துமே பிடிக்க தமிழன்
தேசிய சின்னமே அடையாளம் காட்ட
என்றுதான் தீருமோ ஐயா!
பாரினில் உள்ளோர்க்கும் யாரும்
பாவியராக செத்திடும் இனத்தை
பாராமல் இருந்திடும் விந்தை
பாரினில் மேலோங்கல் ஏனோ?

தேசிய அடையாள அட்டை
தேசத்தின் அட்டையாய் அன்றி
தேடித்திரிந்துமே பிடிக்க தமிழன்
தேசிய சின்னமே அடையாளம் காட்ட
வீட்டினில் இருந்திட்ட வெனினும்
பொலிஸ் பதிவோடு வேண்டும்
வீதியில் சென்றிடத் தமிழன்
வேறு பாசுகள் வேண்டும்
பெற்றிடக் காசுகள் அங்கே
வாரி இறைத்திடல் வேண்டும்
சிறையினில் சித்திர வதைகள்
சிரசினில் கொண்டிட்டான் தமிழன்
அடி இடி உதை தினமுமே.

து. சிவபாலு

தாலாட்டு

பச்சை இலுப்பை வெட்டிப்
பால்வடியத் தொட்டில் கட்டி
தொட்டிலுமோ பொன்னாலை
தொடுகயிறோ முத்தாலை
முத்தென்ற முத்தோநீ
முதுகடலில் ஆணிமுத்தோ

UNITY - A - AUTOMOTIVE AND BODY SHOP

- Auto Collision Repairs
- Body Works
- Painting
- Insurance Claims
- Windshield Glass
- Under Coating
- Rust Proof

Free Estimate

- **Computerized Examinations and Repairs**
- **Mechanical & Electrical Works**
- **Computerized 4 Wheel Alignment**
- **Interior & Exterior Shampooing**
- **Muffler & Exhaust Specialists Pipe Bending & Welding**
- **New tire sales, Installation and Wheel Balancing**
- **Fuel injection Service & Tune-up**
- **Safety Inspection & Certification**
- **Suspension and Transmission**
- **Interior and Motor Shampoo**
- **Oil Change (Castrol GTX)**

ONTARIO'S DRIVE CLEAN

Call: Ram

Tel: (416) 285-8956

73 Howden Road, Scarborough, Ontario, M1R 3C7

(Lawrence & Birchmount – Near to Collision Reporting Centre)

இலங்கையில் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்படலாமா?

சட்டத்தரணி செ.செல்வரட்டணம் L.L.B Attorney at Law.

தற்போதய அரசியலமைப்புச் சட்டம் தனிமனிதன் ஒருவனின் உரிமைகளைப் பாதுகாப்பதான பல ஏற்பாடுகளைத் தன்னகத்தே உடையதாக உள்ளது. உறுப்புரைகள் 10 11 12 (1) 13 என்பன பிரஜைகளது உரிமைகளை மட்டுமல்லாது தனிப்பட்ட ஒவ்வொருவரதும் உரிமைகைளை பாதுகாத்து அவற்றை உத்தரவாதமும் செய்கின்றன. உறுப்புரை 13ன் கீழ் ஒருவரது உரிமை எங்கனம் பாதுகாக்கப்படுகின்றது என்பதை விளக்கிக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஒருவர் எதேச்சாதிகாரமாக கைது செய்யப்படாமலும் தடுத்து வைக்கப்படாமலும் தண்டிகப்படாமலும் இருப்பதை உறுப்புரை 13 உறுதி செய்கிறது. சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கிணங்க அன்றி ஒருவர் கைது செய்யப்படுவதற்கான காரணத்தையும் அறிவித்தல் வேண்டும் என்று உறுப்புரை 13 (1) குறிப்பிடுகிறது.

ஒருவர் தான் விரும்பிய இடத்திற்குப் போகமுடியாதவாறு ஒருவரைத் தடைசெய்தலும் உறுப்புர்ரை 13 (1) ஐ மீறுவதாகும் என மார்க் பெர்ணாந்து நீதியரசர் கருத்து தெரிவித்துள்ளார். சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஒருவர் ஏதேனும் குற்றத்தைப் புரிந்துள்ளார் என ஒருவர் கருத்துக் கொள்ளும்போது மட்டுந்தான் ஒருவர் கைது செய்யப்பட முடியும். எந்தவித சான்றுகளும் இன்றி வெறுமனே சந்தேகத்தினை மட்டும் அடிப்படையாக வைத்து ஒருவரை கைது செய்ய முடியாது. இது தொடர்பில் குலதுங்க நீதியரசர் சேன வீரக்கோன் வழக்கில் பின்வருமாறு குறிப்பிட்டார். கிளர்ச்சிச் செயற்பாடுகளின்போது அவற்றைத் தடுக்கும் வண்ணம் தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்வதும் ஆட்கள் குழுவினரைக் கைது செய்வதும் விசாரணை நடைபெறும்வரை ஆட்களை தடுத்து வைத்தலும் அவசியமானதாக இருந்த போதிலும் எந்த சாட்சியங்களும் இல்லாத ஒருவரை விரைவல் விடுதலை செய்வதும் மற்றவர்களை விரைவில் நீதிமன்றத்தின முன்னர்ல் கொண்டுவருவதும் கூட அவசியமாகும். இதே கருத்து முன்னர் சர்வானந்தா நீதியரசரால் நமசிவாயம் என்பவரது வழக்கில் எடுத்துக் கூறப்பட்டது. இவ்வழக்கில் பேரூந்து ஒன்றில் பிரயாணம் செய்து கொண்டிருந்த விண்ணப்பதாரர் எவ்வித காரணமும் குறிப்பிடப்படாது கைது செய்யப்பட்டு பின்னர் பலவந்தமாக பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டார். அவர் தமது பிரயாணத்தை தொடர முடியாதவராக சுதந்திரம் பறிக்கப்பட்டவருமாக இருந்தார். அரசியலமைப்புச் சட்டத்தினாலேயே அங்கீகரிக்கப்பட்ட இச் சுதந்திரத்துடன் ஒருவர் எப்படிப்பட்டவராக இருப்பினும் எதேச்சாதிகாரமாகவோ சட்ட நியாயங்கள் இன்றியோ தலையீடு செய்ய முடியாது.

155ம் உறுப்புரையின் பயனாக ஆக்கப்படும் அவசரகால ஒழுங்கு விதிகள் பாராளுமன்றத்தினால் ஆக்கப்படும் சாதாரண சட்டங்களின் செயற்பாட்டை நிறுத்தி வைக்கக்கூடிய அதிகாரத்தையும் கொண்டுள்ளன. நாட்டில் ஏற்பட்டுள்ள அவசரகால நிலையை எதிர்நோக்கியே இவ் ஒழுங்கு விதிகள் ஆக்கப்படுகின்றன. இவையும் எழுத்திலான சட்டம் என்னும் வரைவிலக்கணத்தினுள் வருகின்றன. ஆவசரகால நிலமை என்ற போர்வையின் கீழ் உத்தரவாதம் செய்யப்பட்ட உரிமைகளுக்கு சாவுமணி அடிக்கமுடியாது.

அவரகாலநிலை ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்படும் ஒரு செயலைச் செய்யும்போது அச்சட்டத்தின் கீழ் அது தவறொன்றாகக் கணிக்கப்படும்போது மட்டுந்தான் ஒருவர் கைது செய்யப்படலாம். வெறுமனே சந்தேகம் என்னும் போர்வையில் அப்பாவி மக்களை கைது செய்வதோ தடுத்து வைப்பதோ சிதிரவதை செய்வதோ இயலாததும் நடைபெறக் கூடாததுமான ஒரு விடயமாகும். அங்கனம் செய்யப்படும் ஏதேச்சாதிகார செயல்களுக்கு எதிராக பாதிக்கப் பட்டவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் எமது

நீதிமன்றங்கள் பாராட்டத்தகும் விதத்தில் செயற்பட்டுள்ளன.

சந்தேகத்தின்பேரில் கைது செய்தல் என்னும் எதிர்க்கருத்தில் தங்க முனையும் போலீஸ் மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக எமது நீதிமன்றத் தீர்ப்புகள் சாட்டையடிகளாக அமைந்துள்ளன. இவ்விடயம் தொடர்பில் மிகமுக்கிய வழக்காக வினாயகமூர்த்தி என்பவரது வழக்கு திகழ்கின்றது. இவ்வழக்கில் 1994ம் ஆண்டு ஜனவரி மாதம் விண்ணப்பதாரர் சார்பில் சட்டத்தரணி ஒருவரால் 126ம் உறுப்புரையின் கீழ் வழக்கு தொடரப்பட்டது. இவ் வழக்குப்பற்றி அறிக்கையொன்று சமர்ப்பிக்கும்படி நீதிமன்றம் மனித உரிமைக் குழுவொன்றுக்கு பணிப்புரை செய்தது.

இவ்வழக்கில் விண்ணப்பதாரர் 1993 ஒக்டோபர் மாதம் 2ம்திகதி ஒரு விடுதியிலிருந்து இராணுவ அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். ஆவரது கண்களைக்கட்டி ஒரு வீட்டுக்கு அழைத்துச் சென்று டிசெம்பர் மாதம்வரை அந்நிலையியே வைக்கப்பட்டார். பின்னர் அவர் இந்தியத் தூதரகத்தின் பின் உள்ள ஒரு கட்டத்திலும் அதன் பின்னர் பனாகொடை இராணுவ முகாமுக்கும் அழைத்துச் செல்லப்பட்டார். அங்கிருந்து குற்றத்தடுப்புத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டார். அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் அவர் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டதாக பிரதிவாதிகள் தெரிவித்தனர். ஆயினும் அரசியலமைப்புச் சட்டத்தின் 11ம் 13ம் 14ம் உறுப்புரைகளின் கீழான தமது அடிப்படை உரிமைகள் பிரதிவாதிகளால் மீறப்பட்டதாக விண்ணப்பதாரர் முறையிட்டார். அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணமும் அவருக்குத் தெரிவிக்கப்படவில்லை.
சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கைமுறை பின்பற்றப்பட்டதா என்பன நன்கு ஆராய்தல் வேண்டும்.பிரதிவாதிகளின் கருத்தின்படி 1993ம் ஆண்டின் 1ம் இலக்க அவசரகால (நானாவித ஏற்பாடுகளும் மற்றும் தத்துவங்களும்) ஒழுங்கு விதிகளின் கீழ் குறிப்பிடப்பட்ட தவறுகளை விண்ணப்பதாரர் புரியவுள்ளார், புரிந்துள்ளார். முற்றும் புரிவதில் அக்கறை உடையவராய் உள்ளார் என்பதனைச் சந்தேகிப்பதற்கு நியாயமான காரணங்கள் உண்டு என்னும் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டார் என்பதாகும். அவ்வொழுங்கு விதிகளின் 18ம் விதியின்படி ஒருவர் ஒரு தவறைப் புரிந்துள்ளார் என அல்லது புரியமுனைகிறார் என சந்தேகிப்பதற்கு நியாயமான காரணங்கள் இருந்தால் ஒரு இராணுவ அதிகாரி பிடியாணையின்றி ஒருவரைக் கைதுசெய்யலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலில் ஒருவரைக் கைதுசெய்துவிட்டு பின்னர் அதனை நியாயப்படுத்துவதற்காக விசாரணைகளை மேற்கொள்ள முடியாது. சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கைமுறை என்பது கைது செய்யப்படும்போது ஒருவர் தவறொன்றைப் புரிந்து கொண்டிருந்தாரா அல்லது கைதுசெய்யப்படும் நபர் தவறொன்றைப் புரிவதில் அக்கறை கொண்டுள்ளார் என சந்தேகிப்பதற்கு நியாயமான காரணங்கள் இருந்தனவா என்பதனை தீர்மானித்தல் அவசியமென நீதியரசர் ஏ.ஆர்.பி.அமரசிங்க கருத்து தெரிவித்தார். இவ்வழக்கில் விண்ணப்பதாரரைக் கைது செய்தபோது அவர் தவறைப் புரிந்து கொண்டிருந்தவராகவோ அல்லது புரிந்துள்ளார் என்ற தகவல் கைது செய்தவர் அறிந்தவராகவோ இருக்கவில்லை. அவர் தவறைப் புரியக்கூடுமென சந்தேகிப்பதற்கான நியாயமான காரணங்கள் இருந்ததாகவோ நீதிமன்றத்தின் முன் நீரூபிக்கப்படவில்லை.

ஊறுப்புரை 13(5)ன் கீழ் ஒவ்வொரு ஆளும் அவருக்கெதிரான குற்றம் நிரூபிக்கப்படும் வரையில் குற்றமற்றவராக ஊகிக்கப்படுதல் வேண்டும். எனவே நியாயமான சந்தேகத்தை ஏற்படுத்தாத நியாயங்களைக் கொண்டு ஒருவர் கைது செய்யப்படலாகாது.

வெறுமனே ஜனாதிபதியை கொலைசெய்ய விண்ணப்பதாரருக்கு எண்ணம் இருந்தது என்னும் கூற்றும் அதன் அடிப்படையில் அவரைத் தடுத்து வைப்பதற்கான சட்டங்களை பாதுகாப்பு அமைச்சு செயலாளர் ஆக்கத் துணிந்ததும் கண்டிக்கப்படத்தக்க செயல்களாகும். இது தொடர்பில் நீதிமன்றம் மிகக் கடிமையான சட்டங்களை அமைச்சு செயலாளர் தொடர்பில் பின்வருமாறு எடுத்து கூறியது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பொலீசின் பணிப்பின் கீழ் செயற்படும் இறப்பர் இயந்திர முத்திரை ஒன்றாகும். ஓவ்வொரு வழக்கிலும் தனிப்பட்ட தீர்வுக்கு வராமலும் தடுப்புக் கட்டளைகளை கைச்சாத்து இடுவதன் மூலமும் செயற்படுவதனால் 17ம் ஒழுங்கு விதிகளின் தேவைப்பாடுகளுடன் இணங்கி ஒழுகுவதாகச் செயல்ப்படக் கூடாதெனவும் அவரே தமது சொந்த அபிப்பிராயத்தில் ஒரு முடிவுக்கு வரக்கூடியதாக இருக்க வேண்டுமென்று உயர் நீதிமன்றம் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் பாதுகாப்பு அமைச்சு செயலாளருக்கு நினைவுபடுத்தியுள்ளது. வெறுமனே அவர் திருப்தியடைந்தார் என்று

கூறி இயந்திர வடிவில் தடுப்புக் கட்டளைகளை கைச்சாத்திட முடியாது. அத்துடன் நீதிமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படாது விண்ணப்பதாரர் சட்டவிரோதமாக 142நாட்கள் தடுப்புக்காவலிலும் வைக்கப்பட்டிருந்தார். 1993ம் ஆண்டு யூன்மாதம் அவசரகாலநிலை ஒழுங்கு விதிகளின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். ஆக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதனைக் கருத்திற்கொண்டு பல வரவேற்கத்தகு ஏற்பாடுகள் அறிமுகப் படுத்தப்பட்டன. இவ் ஒழுங்கு விதிகள் பின்பற்றப்பட வேண்டியது அவசியமாகும். பொதுமக்களின் அடிப்படையான பாதுகாப்புக்களை பேணுவதற்காக அவை கடிமையாக பின்பற்றப்படுதலும் வேண்டும். அடிப்படை உரிமை மீறலுக்கான நிவாரணம் இங்கு வழங்கப்பட்டது.

அமரசிங்க நீதியரசரின் கருத்துப்படி வெறுமனே பொதுவான சந்தேகத்தின்மீது மட்டுமே விண்ணப்பதாரர் கைது செய்யப்பட்டுள்ளார். பின்னர் அதனை நியாயப்படுத்தலாம் என்ற எண்ணத்தில் இங்கு கைது இடம் பெற்றுள்ளதேயொழிய ஏதேனும் நியாயமான காரணத்தின் அடிப்படையில் அல்ல. எனவே 18ம் ஒழுங்கு விதியினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கை முறையும் கைது தொடர்பில் பின்பற்றப்படவில்லை.

17ம் ஒழுங்கு விதியின் கீழ் ஆக்கப்பட்ட தடுப்புக் கட்டளைகள் விண்ணப்பதாரர் தடுத்து வைக்கப்படுவதற்கான எந்தக் காரணங்களையும் குறிப்பிடப்படவில்லை. தேசிய பாதுகாப்புக் கருதியும் அவரைத் தடுத்து வைத்தல் அவசியம் என்று மட்டும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஒருவர் என்ன காரணத்திற்காகக் கைது செய்யப்படுகின்றாரோ அல்லது தடுத்து வைக்கப்படுகின்றாரோ என்பது பற்றி அங்ஙனம் செய்யப்படுகின்றவருக்கு அறிவிக்கும்போதுதான் ஏற்படக்கூடிய சந்தேகத்தை அகற்றக்கூடியதாக இருக்கும்.

விண்ணப்பதாரர் என்ன காரணத்திற்காக கைது செய்யப்பட்டார் என்பதோ பின்னர் தடுத்து வைக்கப்பட்டார் என்பதோ அத்தகைய செயல்களைப் புரிந்த இராணுவ உத்தியோகத்தருக்கோ பொலீஸ் உத்தியோகத்தருக்கோ தெரிந்திருக்கவில்லை. எனவே சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கைமுறை பின்பற்றப்பட்டதினால் 13(1)ன் உறுப்புரையின் கீழ் விண்ணப்பதாரியின் அடிப்படை உரிமை பிரதிவாதிகளால் மீறப்பட்டதென நீதிமன்றம் கருத்துத் தெரிவித்தது. இவற்றுக்கு மேலதிகமாக 18(1)ம் விதியில் குறிப்பிடப்பட்டதற்கு இணங்க விண்ணப்பதாரரை அண்மையில் உள்ள பொலீஸ் நிலையத்திற்குப் பாரப்படுத்தாமல் இராணுவக் கட்டுப்பாட்டிலேயே வைத்திருந்ததும் சட்டவிரோதமான செயலாகும். 19(3)ம் ஒழுங்கு விதியின் கீழ் விதித்துரைக்கப்பட்ட காலத்தினுள் விண்ணப்பதாரரை நீதிவான் முன்னர் கொண்டு செல்லாததும் அதிகாரம் அளிக்கப்படாத இடமாகிய பனாகொடை இராணுவ முகாமில் தடுத்து வைத்ததும் உறுப்புரை 13(2)ஐ மீறும் செயலாகும் எனவும் நீதிமன்றம் தீர்த்தது.

சந்தேகத்தின் மீது வீணே அப்பாவிப் பொதுமக்களை கைதுசெய்து அவர்களை மனிதாபிமானமற்ற முறையில் நாடாத்தி தமது தான்தோன்றித்தனமான அதிகாரத்தை வேரூன்ற முனையும் அரசின் பொலீஸ் மற்றும் இராணுவ உத்தியோகத்தர்கள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பமுடியாது என்பதை உணர்வதில் இவ்வழக்கு ஒரு திருப்புமுனையாக உள்ளது. மிக அண்மைக்கால வழககொன்றினை இங்கு உதாரணமாகக் காட்டலாம். இவ் வழக்கு பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்தும் இன்னொரு முக்கிய வழக்காகும். இவ்வழக்கின் நிகழ்வுகளின்படி பொறியியலாளரான விண்ணப்பதாரர் தனது அலுவலகத்திற்கு பேரூந்தில் பயணம் செய்து கொண்டிருந்தபோது சோதனைச் சாவடியொன்றில் இராணுவத்தினரால் சோதனை செய்யப்பட்டார். தேசிய அடையாள அட்டையினையும் சர்வதேச சட்டக் கற்கைகளுக்கான பண்டாரநாயக்கா நிலையத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டையினையும் விண்ணப்பதாரர் காண்பித்தார். அவரிடம் பொலிஸ் நிலைய பதிவு ஆவணம் இருக்கின்றதா என வினாவப்பட்டபோது பதிவைக் காண்பிக்கவேண்டிய சட்டத்தேவைப்பாடு தமக்கு இல்லை என்று கூறினார். இதனால் ஆத்திரமடைந்த இராணுவ உத்தியோகத்தர் அவரை மேற்கொண்டு பிரயாணம் செய்ய அனுமதிக்காது ஒரு மணி நேரத்தின் பின்னர் அங்கு வந்த இரு பொலீஸ் உத்தியோகத்தர்களிடம் ஒப்படைத்தார். பின்னர் பொலீஸ் கட்டுக்காவலில் விண்ணப்பதாரர் வைக்கப்பட்டார். அதன் பின்னர் அவர் நீதவான் முன்னர் கொண்டுவரப்பட்டு மறுநாள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். அவரது அடிப்படை உரிமை உறுப்புரைகள் 12(1) 13(1) 13(2) என்பனவற்றின் கீழ் பிரதிவாதிகளால் மீறப்பட்டதாக விண்ணப்பதாரர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். இவ்வழக்கிலும் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட

நடவடிக்கை முறைக்கிணங்க விண்ணப்பதாரர் கைது செய்யப்படவில்லை. போலிஸ் பதிவு அறிக்கையை ஒருவர் கொண்டு செல்லவேண்டும் என்பது விதியல்ல. அப்படி ஒரு சட்டம் நடைமுறையில் இல்லை. நீதிமன்றம் 50000.00 ரூபாவை நட்ட ஈடாக விண்ணப்பதாரருக்கு வழங்கியது. அதில் 7500.00 ரூபாய்கள் இரண்டாம் பிரதிவாதியால் செலுத்தப்பட வேண்டுமெனவும் அதுவும் மூன்று மாதங்களுக்கிடையில் செலுத்த வேண்டுமெனவும் கட்டளையிட்டது.

மேற்கூறப்பட்ட வழக்குகளை ஆராயும்போது சட்டத்தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் வழிப்புணர்வு இருந்து வருவதையும் எமது நீதிமன்றங்கள் மீது நம்பிக்கை பெருகி வருவதையும் அறியக்கூடியதாக உள்ளது. இருந்த போதிலும் இன்று ஒருவருக்கு அநீதி விளைவிக்கப்படும்போது பல்வேறு காரணங்களுக்காக மக்கள் நீதிமன்றங்களின் துணையை நாடத்தயங்குகின்றனர். மேற்கூறப்பட்ட வழக்குகள் அத்தகையோருக்கும் சந்தேகத்தின்பேரில் ஒருவர் அவசரகால நிலையின்போது கைது செய்யப்பட முடியும் என எண்ணுவொருக்கும் போலீஸ் பதிவு அறிக்கையைக் கட்டாயமாக எடுத்துச் செல்ல வேண்டும் என்று எப்போதுமே பயத்துடன் வாழும் மற்றயோருக்கும் ஒரு திறவு கோலாக இருக்கட்டும்.

சில நாட்டார் பாடல் வரிகள்...

சிட்டுப் போல் நடையழகி
சிறுகுருவித் தலையழகி
பட்டுப்போல் மேனியாளைப்
பாதையிலே பாத்தீங்களோ

கோரை மயிரழகி
குருவிந்தப் பொட்டழகி
பவளம்போல் பல்லழகி
பாதையிலே பாத்தீங்களோ

பட்டம்போல் நெற்றி
பவளம்போல் வாயழகி
முத்துப்போல் பல்லழகி
முன்போகக் கண்டீரோ

வாகை மரமேறி
வடக்கே தெற்கே பார்க்கும்போது
தோகை மயில்போலை
தோகையளைக் கண்டீரோ.

உலகே உனக்குக் கண்ணில்லையா?

அன்று செவ்வானம்
செங்கதிரால் சிவந்ததோ
இன்று அவ்வானம்
நிலத்தில் சிந்திடும்
செங்குருதியால் சிவந்ததோ
நெல் விளைந்த
மருத நிலமெல்லாம்
சுடுகாடாய் மாறியதோ
கொலை வெறியால்
குழந்தையும் குமரியும்
கொன்று குவிகிறதோ!

பாடுபட்ட விளைநிலம்
குருதியால் வழிகிறதோ
அடுப்பங்கரை எல்லாம்
பூனைகள் இருப்பிடமோ
புனித நதிகள் எல்லாம்
குருதி நதிகள் ஆனதோ

கடலிலே எமதுடல்
மீனுக்கிரையானதோ
வாழ்க்கைப் படகெல்லாம்
டைட்டானிக் கப்பலானதோ

அனாதைகளாய் விதவைகளாய்
நாதியற்ற மனிதர்களாய்
அகதிகளாய் அடைக்கலம்
தேடும் எலிகளாய்
வேற்று நாட்டினிலே
புகலிடம் தேடும் அகதிகளாய்
இழிவான தொழில் செய்து
எம்மவர் படும்பாட்டைப் பார்.

கப்பலோட்டிய தமிழினம்
இன்று படும் பாட்டைப்பார்
வாழ்க்கையே போராட்டமாகி
போராட்டமே வாழ்க்கையாகி
வாழும் தமிழினத்தைப்பார்
இதைப்பார்க்க உலகே
உனக்குக் கண்ணில்லையா?.

செல்வி சி. சிவபாதசுந்தரம்
வவுனியா.

MOKA MARKET

சகல இலங்கை இந்திய மரக்கறி, உணவுவகைகள்,
மளிகைச் சாமான்கள், சஞ்சிகைகள், இறைச்சி
மீன்வகைகள், Video, CD யாவற்றையும்
ஒரே இடத்தில் மலிவாகப் பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்.

உடன் ஆட்டிறைச்சி, மரக்கறி வகைகளையும்
வாடிக்கையாளர் நன்மை கருதி பெற்றுத்
தருகின்றார்கள்

மற்றும் ரெலிபோன் காட், பத்திரிகை.......

அதி கூடிய வாகனத்தரிப்பிடங்களுடன் மிசிசாக்காவில்

Rathburn & Mavis சந்தியில்

MOKA MARKET

900 Rathburn Road West
Mississagua

905-273-4137.

சிலேடைச் சிங்காரம்

வைத்தியக் கலாநிதி வி. யே. பிகுராடோ

இலக்கிய இன்பத்தைச் சுவைப்பதற்கு நாம் இலக்கியத்திலோ தமிழிலோ பாண்டித்தியம் பெற்றிருக்க வேண்டிய அவசியம் இல்லை. என்னைப் பொறுத்தவரையில் எனது இலக்கிய அறிவு எட்டாம் வகுப்பிற்குமேல் எட்டிப்பார்தது கிடையாது. எட்டாம் வகுப்பில் எனக்குத் தமிழ் கற்பித்த ஆசிரியரின் திறமை எனக்குத் தமிழ் இலக்கியத்தில் ஒரு ஈடுபாட்டினை ஏற்படுத்தியது.

சிலேடை நயம் என்பது எமது தமிழ் இலக்கியத்துக்கே உரித்தான சொத்து என்றுதான் கூற வேண்டும். பாரசீக இலக்கியங்களிலும் இவ்வித நயங்கள் காணப்படுவதாக ஈழத்துப்பூராடனார் ஒருமுறை என்னிடம் கூறியிருக்கிறார். சிலேடை என்பது ஒன்றுக்கொன்று சம்பந்தப்படாத இரண்டு பெயர்களை ஒற்றுமைப்படுத்திப் பார்க்கின்ற ஒரு நயம்.

உதாரணமாக ஒரு பாடலை எடுப்போம். இப்பாடலிலே திருடனையும், செருப்பையும் ஒற்றுமைப்படுத்திப் பார்கின்றார் புலவர்.

“அங்கங் களவால் அதுகண்டு தைப்புறலால்
எங்கும் மிதியடி யென்றே சொல்லலால் - வெங்கல்
கரடுமுட் கஞ்சாது செல்லுதலால் காமர் முத்துச்சாமி மன்னா
திருடனை ஒப்பாம் செருப்பு”

இப்பாடலின் முதல் வரியினைப் பார்த்தால் திருடன் களவே உருவானவன். அதனைக் கண்டு அவனை உதைப்பார்கள். என்ற பொருள்பட “அங்கம் களவால் அது கண்டு உதைப்புறலால்” என்று பிரிக்கலாம். செருப்புத் தைப்பவர்கள் ஆங்காங்கே அளவெடுத்துத் தைப்பார்கள். என்ற பொருள்பட “அங்கு அங்கு அளவால் அது கண்டு தைப்புறலால்” என்று பிரிக்கலாம்.

இரண்டாவது வரியினை எடுத்தால் திருடனைக் காண்பவர்கள் அவனை மிதி, அடி என்று கூறிக்கொண்டு துரத்துவார்கள். செருப்பை “மிதியடி” என்று கூறுவார்கள். அடுத்து “வெங்கல் கரடு முட்கஞ்சாது செல்லுதலால்” என்ற வரிகளைப் பார்த்தால் திருடன் ஓடும்போது கல், கரடுமுரடான பாதை, முள் என்று எதையுமே பொருட்படுத்தாது செல்வதுபோலச் செருப்பும் கல், கரடு, முள் என்பவற்றைப் பொருட்படுத்தாது செல்வதற்கு நாம் உபயோகிக்கும் ஒன்று. எனவே திருடன் செருப்புக்குச் சமன் என்று கூறுகின்றார் புலவர். அவரது கற்பனைத் திறன் எமக்கு வியப்பையும் இன்பத்தையும் தருகின்றதல்லவா.

அடுத்தாக இன்னொரு பாடலை எடுத்துப் பார்ப்போமாயின் இதிலே பாம்பையும் எண்ணையையும் ஒற்றுமைப்படுத்திப் பார்க்கின்றார் வேறோர் புலவர்.

“ஆடிக் குடத்தடையும் ஆடும் போதே யிரையும்
மூடித்திறக்கின் முகம் காட்டும் - ஓடி மண்டை
பற்றிற் பரபரென்னும் பாரிற் பின்னுக்கு முண்டாம்
முற்றிலு நெய்பாம்பெனவே யேது”

"ஆடிக்குடத்தடையும்" அதாவது பாம்பாட்டி ஆட்டுவித்த பின்னர் பாம்பானது குடத்தை அதாவது அதனுடைய இருப்பிடமான பேழையைச் சென்றடைகின்றது. அதுபோல செக்கிலே எள்ளையோ, கொப்பறாவையோ இட்டு ஆட்டியதும் எண்ணையானது குடத்தைச் சென்றடைகின்றது. "ஆடும் போதே யிரையும்" அதாவது பாம்பு ஆடும்போது ஸ்....ஸ்... என்று சீறுவதுபோல செக்கிலே எண்ணெய் ஆடும்போது அதேவிதமான ஸ்... ஸ்... என்ற ஒலி கேட்கின்றது.

"முடித்திறக்கின் முகம்காட்டும்" அதாவது பாம்புப் பேழையின் மூடியைத் திறக்கின்றபோது பாம்பு தன் தலையினைத் தூக்கிக் காட்டும். எண்ணை இருக்கின்ற பாத்திரத்தின் மூடியைத் திறக்கின்றபோது அது எமது முகத்தின் விம்பத்தைப் பிரதிபலிக்கும். "ஓடி மண்டை பற்றிற் பரபாரன்னும்" அதாவது பாம்பின் தலையைத் தடவினால் கை வழுக்கிச் செல்லும்போது அதன் செதில்களில் பரபரப்புத் தன்மையை உணரலாம். அது போலத் தலையிலே நாம் எண்ணையைத் தடவும்போதும் தலைமயிரின் பரபரப்புத் தன்மையை நாம் உணரலாம்.

"பாரிற் பின்னுக்குமுண்டாம்" பிண்ணாக்கு என்பதனைப் பிரித்தால் பிண் + நாக்கு எனவரும். அதாவது பிளவுபட்ட நாக்கு என்ற அர்தத்தினைக் கொடுக்கும். பாம்புக்கு இரட்டை நாக்கு என்பது நாமறிந்ததே. எண்ணெய் பிந்தபின் எஞ்சுவதும் பிண்ணாக்கு. எனவே எண்ணையும் பாம்பும் ஒன்று என வாதிடுகின்றார் புலவர். இது போன்ற எத்தனையோ ரசனையூட்டும் சிலேடைப் பாடல்கள் எமது தமிழ் இலக்கியங்களிலே புதையுண்டு கிடக்கின்றன. இவற்றை நோக்கும்போது இதுபோல எழுதவேண்டும் என்ற ஆசை எனக்கும் ஏற்பட்டது. அதன் வெளிப்பாடாக நான் எழுதிய சிலேடைப்பாடல் ஒன்றை இங்கு தரவிரும்புகின்றேன்.

"தலையினிலே மலர்கொளலால் தளிர்மடலாம் ஆடையினால்
இலையென்போர் இன்னமுது கொள்ளலினால் - நிலையாகக்
குலக்கொழுந்தாம் குழந்தைகளைக் கூடவைத்து வளர்த்தனால்
குல மகளுக் கொப்பாம் குலை வாழை.'

பின்னலிட்டுப் பூ வைத்துக் கொள்ளும் பெண்களைப்போல வாழையும் குலைபோட்டுப் பூ வைத்துக் கொள்கின்றது. பெண்கள் மடிப்பு மடிப்பாகச் சேலை கட்டிக் கொள்வதுபோல வாழையும் மடல்களால் தன்னை அமைத்துக் கொள்கின்றது. வாழை இலையைப் பாவித்து அதன்மீது சோறு போட்டு உண்பார்கள். "அம்மா எனக்கு உணவு இல்லை" என்று இரப்பவர்களுக்கு குடும்பத் தலைவி சோறு போட்டுப் பசியாற்றுவாள். தன் பிள்ளைகளைத் தன்னுடன் கூடவைத்துப் பராமரிக்கும் தாயைப்போலவே வாழையும் தன் குட்டிகளைத் தன்னருகே வைத்து வளர்க்கிறது. இதனால் குலைதரும் வாழை குலமகளுக்கொப்பானது.

தமிழ் இலக்கியங்களில் எத்தனையோ வகை வகையான இரசனைக்குரிய நயங்களைத் தரும் பாடல்கள் உள்ளன. இந்த இன்பந் தரும் இலக்கியப் படைப்புக்கள் அழிந்துவிடாது. பாதுகாத்து, வெளிக்கொணர்ந்து அவற்றை அனுபவிப்பதோடு மற்றவர்களையும் அனுபவிக்கச் செய்யவேண்டியது அனைத்துத் தமிழர்களின் கடமையாகும்.

Imagintech



IMAGINATION IS THE SOURCE OF INVENTION

Bavany Rajaretnam
Administrator

Tel: (416) 285-7600 - Fax: (416) 352-5900
2369 Eglinton Avenue East
Scarborough, ON, M1K 2M5
Email: admin@imagintech.on.ca

VINUSHUN

Restaurant & Take Out

WE DO CATER FOR ALL OCCATIONS

வினுஷன்

2398 Eglinton Avenue East
Scarborough, Ontario
M1K 2P5

(416) 752-5760

நாகமுத்து

செல்வி சயந்தினி பாலசிங்கம்

மாசிப்பனி மூசிப் பெய்து கொண்டிருந்தது. வசதியான வீடுகளில் மட்டும் தைபிறந்து வழிபிறந்து வாழ்க்கை சுகமாக ஓடிக் கொண்டிருந்தது. பனையோலையால் வேயப்பட்ட அந்த வட்ட வீடுமட்டும் என்றும் போல் சோகத்தின் சாயமிழக்காமல் இருந்து கொண்டே இருக்கிறது. அதிகாலை நேரம். தார் வீதியில் படுத்திருந்த மாடுகள் தங்கள் தூக்கத்தை கெடுத்த பேருந்து வண்டிக்கு ஏண்டாப்பாக எழுந்து இடம் விட்டு விலகிக் கொண்டிருந்தன.

குசினியில் பனம் முள்களின் புகைக்குள் நெருப்பைத் தேடி நெஞ்சில் நிறைந்த காற்றை துருத்திபோல் ஊதிக் கொண்டிருந்தாள் நாகமுத்து. ஏழ்மையின் எல்ல அம்சங்களும் பொருந்திய குடும்பத் தலைவி அவள். அப்பம் சுட்டு விற்றால் மட்டுமே அடுத்த நேரம் அடுப்பில் அரிசி வேகும் என்ற நிலை. கள்ளுவிட்டு வைத்த மா புளித்துப் பதமாக இருந்தது. அடுப்பில் அப்பச்சட்டியை வைத்து விட்டுத் திண்ணையில் மான்தோலில் படுத்திருந்த தன் கண்மணியை ஒருதரம் எட்டிப் பார்த்தாள். இன்னும் உறங்கிக் கொண்டிருந்த கிடுகுத்தளரில் மொய்த்திருந்த கொசுக்கள் கலைந்து மீண்டும் வந்து மொய்த்துக் கொண்டிருந்தன. பலாவடியில் வீழுந்த கூளன்பழம் தின்ன வந்த மாடுகள் இடிபட்டு காவோலைகளை உழக்கும் சிலமன் கேட்டது.

பட்டுப்போன்ற அப்பங்கள் ஒன்றில் ஒன்று ஒட்டாமல் இடையிடையே சமண்டலம் இலைகளை வைத்து ஓலைப் பெட்டியில் அடுக்கினாள் நாகமுத்து. சேலைத் தலைப்பெடுத்துக் கழுத்து வேர்வையை அழுத்தித் துடைத்துபடி செத்தைக்ஊடாக மீண்டும் திண்ணைக் குறையை எட்டிப்பார்த்தாள். கடவாய் வடிந்த அடையாளத்தோடு கைகளைச் சூப்பிக் கொண்டு தளர்நடையில் வந்தான் தாயைத்தேடி. புகையுண்ட தன் கண்ணீரைத் துடைத்தபடி எட்டி இழுத்து அணைத்தபோது மடிக்குள் நாய்க்குட்டிபோல் குடைந்து நுழைந்து கொண்டான்.

பிலாவிலையில் பட்டு வழிந்த பனித்துளிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாய்ச் சிந்திக் கொண்டிருந்தன. சருகுகளைக் கொழுத்திய குப்பைமேட்டில் கொள்ளியொன்றை எடுத்துச் சுருட்டைப் பற்ற வைத்தபடி அந்த தேவனின் பெத்தாச்சி வந்து கொண்டிருந்தா. ஓடிப்போய் ஒட்டிக் கொண்டான். மடியில் முடிந்திருந்த குருவித்தலைப் பாவக்காய்களை குசினித் திண்ணையில் கிடந்த கமுகம் மடலுக்குள் கொட்டிவிட்டு "நீ போட்டுவா புள்ள பொடியனுக்கு சோறு தீத்திறன். " என்று சொன்னதுதான் தாமதம் பெத்தாச்சி எனக்குத் தயிரும் சோறும் என்று மழலை மொழிந்து கொண்டு முகம் கழுவக் கிணத்தடிக்கு ஓடினான். "நில்லடா நான் வந்து கழுவி விடுறன். கிணத்தடிப்பக்கம் போகாத" என்று பெத்தாச்சி பின்னால ஓடினா.

நீயாச்சு உன்ர பெத்தாச்சியாச்சு" என்று சொல்லிக் கொண்டு தலையில் அப்பக்கூடையும் இடுப்பில் முருக்கங்காய் கட்டுமாக நாகமுத்து நடக்கத் தொடங்கினாள். பனங்கூடலுக்கு ஊடாகக் கதிர்பரவிக்கொண்டுவர உடம்புக்குச் சுகமாக இருந்தது. சத்தகத்தையும் பனங்குருத்தையும் எடுத்துக் கொண்டு பெத்தாச்சி முத்தத்துக்கு வர அவவை முந்திக்கொண்டு மாவடிக்கு ஊஞ்சலாட ஓடினான் தேவன்.

தனது ஒரே மகனின் மறுவடிவமான பேரன்மேல் அளவில்லாத பாசம் பெத்தாச்சிக்கு. அப்பா எங்கயம்மா என்று கேட்கும் அந்தச் சின்னஞ்சிறுசுக்கு "அப்புசாமிட்டப் போட்டார் ஐயா" என்று கண் கலங்கிக்கொண்டு சொல்லும் நாகமுத்துவின் பதில் கேட்டு தனக்குள்ளே கதறாத நாளே இல்லை. தன் புருசன் பாவித்த வேலகாறன் கம்புமுதல் மாட்டுக்கொட்டிலுக்குள் கிடந்த பழுதைவரை எதைப் பார்த்தாலும் கதறி அழும் நாகமுத்துவில் இப்போதுதான் கொஞ்சம் மாற்றம் ஏற்படுவது தெரிந்தது.

கதிரமலையானே நீதான் துணை என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டு பாக்குரலை எடுத்து இடிக்கும்போது மாட்டுகொட்டில் பக்கமாக ஏதோ கறார் என்று சத்தம் கேட்டது.

"டேய் என்னடா செய்யிறாய் இஞ்சால வா" என்று அன்பாக அதட்டிவிட்டு உமலிழைப்பதில் மூழ்கி விட்டார் பெத்தாச்சி.

அப்பத்தைக் கடையில் கொடுத்துவிட்டு சந்தையில் கொஞ்சக் கூனிறாலும் ஒரு கூறு சூடையும் வாங்கிக் கொண்டு நிமிர்ந்த நாகமுத்துவின் காதுகளில் "எடியேய் நாகமுத்து உன்ர பொடியனுக்கு மேல வட்டில் சில்லு விழுந்து போச்சாம். இஞ்ச என்ன செய்யிறாய். ஓடு வளவுக்கு" என்று யாரோ சொல்லிக் கேட்டுது. கண்ணகத்தாயே.........! என்று அலறித் தலையிலடித்துக் கொண்டு ஓடினாள் நாகமுத்து தெருவில் நின்றவர்கள் அவளையே பார்த்துக் கொண்டிநிந்தார்கள். வளவுக்குள் நுழையும்போது முற்றத்தில் ஆக்கள் கூடிநிற்பதும், ஓவொன்று மாமியார் அலறும் சத்தமும் கேட்டு நாகமுத்துவின் நெஞ்சு காய்ந்துவிட்டது.

அவள் வாயிலிருந்து வார்த்தைகள் வரவில்லை. அந்தப் பிஞ்சுத்தேகம் இரத்தத்தில் தெப்பமாக நனைந்து கிடந்தது. வாய்வழியே வந்திருந்த தயிரையும் சோற்றையும் சேலைத்தலைப்பால் துடைத்துவிட்டு மடியில் தூக்கி வைத்து "ஐயோ..........!" என்று அலறிய நாகமுத்து தன் மகனை இறுக அணைத்தபடி மண்ணிலே சாய்ந்து விட்டாள். அவள் இனி எழுந்திருக்க மாட்டாள்!

அடிவயிற்றுச் சமிக்ஞைகள்

உன் தாயும்
அவள் தாயின்
தாயின், தாயின்
தாயும்,
அவள் தாயும் இல்லாவிடின்
நீயும்
உன் மகள் வழிப் பேத்தியும்
அவள்தன் பேத்தியும்
அவளின் பூட்டியும்
எதனூடு கிளைத்திருக்க முடியும்?

சில பொழுது எண்ணிப்பார்.

வானத்தின் வண்ணம் காண்பதற்கும்
வெறும் பெண்ணாய் நீ
மீளப்பிறந்து கற்பதற்கும் -
தொப்புள் கொடிகளின்
தொடர் சமிக்ஞைகளுக்கும்
தொடர்பு ஏதும் இல்லையா?

சில பொழுது எண்ணிப்பார்.

ஒருவேளை..................
அடிவயிற்றுக் கொடிவேரின்
ஆரம்பம் நீ என
நினைத்திருந்தால்
அல்லது
நம்முகம் பேண
முன்னோடிகளின் தொடர்ச்சி
எதற்கு என்ற
எண்ணமிருந்தால்.............

எங்கே
ஒருகையால்
உன் ஆத்துமத்தின் உயிர் தொட்டு
மறுகையால் சுட்டிக்காட்டு
நீ சுவைத்த கனியின்
மரத்தை

ஏவாள் நீயே!

ஆழியாள்
அவுஸ்ரேலியா.(திருகோணமலை)

மாணவர்களை முன்னணியில் வைப்பதில் சாதனை புரியும்

V V TUTORING CENTRE

◊ Science	◊ Biology	◊ Chemistry	◊ Physics
◊ Finite Math	◊ Math	◊ Algebra & Geometry	◊ Calculus
◊ Economics	◊ Accounting	◊ Economics	◊ English
◊ English Reading	◊ ESL	◊ Social Studies	◊ French

இப்பாடங்களை பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஒன்ராறியோவில் கற்பிப்பதற்கான தராதரம் பெற்ற அனுபவமிக்க கனேடிய ஆசிரியர்கள், தராதரம் பெற்ற தொழில் நுட்ப வல்லுனர்கள் அடங்கிய ஆசிரியர்கள் குழுவால் கனடிய பாடசாலைகளின் பாடத்திட்டத்திற்கமைய கற்பிக்கப்படுகின்றன.

வகுப்புகள் பிற்பகல், வார இறுதி, குறுகியகால கற்கை நெறிகளாக ஒழுங்கமைப்பட்டுள்ளன.



புதிய விசேட கற்கை நெறிகளாக:

- ☞ தரம் 3, 6ற்கான மாகாணப் பரீட்சைக்குத் தயார்படுத்தும் வகுப்புக்கள்
- ☞ **Gauss Contests, Canadian National Mathematics League** கணித போட்டிகளுக்கான வகுப்புகள்
- ☞ விஞ்ஞான செய்முறை வகுப்புகள்
- ☞ ஆங்கில வாசிப்பு வகுப்புகள் **(Reading Classes by Canadian Teachers)**
- ☞ கணணி வகுப்புகள் **(Computer Classes)**

☑ பல்கலைக்கழக, கல்லூரி மாணவர்களுக்கான தனி வகுப்புகள் ஒழுங்கு செய்து தரப்படும்.

எங்கள் சேவை உயர்ந்தது! எங்கள் மாணவர் முன்னணியல்!
எங்கள் கட்டணம் குறைந்தது!!!

வீ. வீ ரியூரறிங் சென்ரர்

Bellamy/Ellesmere	Kennedy/Eglinton	Middlefield/Elson
1095 Bellamy Road	2390 Eglinton Ave. E. #204	28James Edward Drive, Markham

(416) 701-1763　　**(905) 471-3084**

(தயவு செய்து தொலைபேசியில் தங்கள் செய்தி விபரத்தைப் பதிவு செய்யவும்)

வன்னியில் ஒரு பள்ளிநாள்

குப்பி விளக் கொளியில்
திண்ணைமேல் குந்தி
கொடுத்திட்ட பணிகளை
முடித்துவிட்ட பூரிப்பில்
கும்மாளம் கொட்டி
கண் துயிலும் பிஞ்சுகள்
காகக் குரல் கேட்டு
கண்விழித்துக் கடன்முடிப்பர்

கருத்துடன் ஒன்றிய
அர்ப்பண உணர்வோடு
கற்றலில் சிக்கலை
கவனமாய்த் தீர்க்கும்
கண்ணியம் மிக்க, வன்னி
ஆசிரிய சேவைக் கிளை
கண்டிலர் எவரும்
அவனியில் எங்கனும்

கற்பனைக்கு வளங்களாய்
கைநூல்கள் பகரும்
கண்டறியா தினிசுகளோ
கைக் கெட்டாப் பலகை
கற்கும் அச்சாதனங்கள்
கைக்கு வர நியாயமில்லை
ஏனனில் அவை
வன்னிக்குத்
தடைப்பொருளாம்

புதுப் புது விளையாட்டும்
ஆடலுடன் பாட்டும்
புதுமை நலினமிடும்
ஆக்க வினோதங்களும்
கற்க வைப்பவர்
எம்மையென
களிப்போடு பள்ளி ஏகும்
கண்ணின் மணிகளுக்கு
கனவாகிப் போகும் யாவும்

திடீரென வான்மீதில்
திகிலடையச் சத்தம் வரும்
திக் கெட்டும் பாலகர்கள்
திணறடித்து ஓடிடுவர்
பங்கர்கள் என்றும்
மரங்களின் கீழென்றும்
பரபரப்பாய் படுத்திருந்தே
பரமனை இறைஞ்சுடுவர்

பம்பரமாய்ச் சுழன்று
வினோதங்கள் பல காட்டி
பலமான முகா மொன்றை
கண்டுவிட்டோம் என்று
பள்ளியின் கொட்டில்கள்
பலதையும் தகர்த்துவிடும்
பல நவீன திணிசுகள்
பக்குமாய்த் தரையிறங்கும்.

வானமே வாய்பிழந்து
தீப்பிளம்பு கக்கியதே
வன்னியிலே பள்ளிக்குப்
பந்தொன்று கிட்டியதே
என்றெல்லாம் எண்ணிவிட
நேரமே எட்டாது
எங்குமே பிரளயம்
புலம்பியே கிளர்ந்திடும்.

ஐயகோ செல்வங்கள்
பள்ளியிலே! என்றுகூவி
ஓடிவந்த பெற்றவர்கள்
பிள்ளையைக் காணமுன்பும்
படுத்திருங்கள் பிள்ளைகாள்
பாதுகாப்பாய் எனக்கூறி
பாலகரைக் காப்பாற்ற
அங்கிருந்த ஆசானும்

எட்டமாய் சுற்றுகிறான்
எவருமே அஞ்சவேண்டாம்
எமக்கில்லை இலக்கு
எங்கேயோ போடப்போறான்
எங்கேனும் ஓடவேண்டாம்
என்றிட்ட அதிபரும்
எண்ணவில்லை அங்கனம்
இவ்விடி விழுமென்று

காலைக் கூட்ட வேளை
கும்பிட்ட மண்டபமும்
குருதிச் சேற்றினால்
கோலமே மாறிவிடும்
வண்ணத்துப் பூச்சிகளாய்
சிறகடித்து ஓடிய
விளையாட்டு முற்றமும்
விந்தைக்குத் தப்பாது

அமர்ந்திடும் வகுப்பறையாம்
ஆலமர சோலைகளும்
அடுக்காகத் தொங்கும்
அவற்றின் விழுதுகளும்
அழகினை விட்டகற்றி
அலங் கோலக்
காட்சிகளாய்
அவல அவதரிப்பின்
அடையாளம் காட்டி நிற்கும்

பயங்கரவாதிகள்
பதுங்கி ஒழிகின்ற
பதுங்கு குழிகொண்ட
பாரிய முகாமொன்று
வான்படை வீரரது
வலிய தாக்குதலால்
வகையிழந்து போனதென்று
வானொலியில் செய்திவரும்.

உண்மைக் கதைகளை
உரைத்திடும் சிறுகவிதை
உலகெங்கும் வாழ்வோரின்
உள்ளத்தை உருக்காதோ?
கல்வியில் சிலபடிகள்
கற்று எம்மண் உயர
கனடாவில் மலருகின்ற
கொம்பறையே அறைகூவும்.

செல்வி
வ. லிங்கேஸ்வரி
முல்லைத்தீவு

CHANKANAI FURNITURE INC

Power Sale!!!



Tel: (416) 264-9642 **Fax: (416) 264-9644**

#4-2800 Eglinton Avenue Unit #4
Scarborough, ON, M1J 2C9

www..chankanaifurniture.com

THE S.P. IMPORTERS

ஒரே பிளாசாவில் மூன்று தனிப் பெரும் ஸ்தாபனங்கள்

Grocery & Vegetable

Tel: (416) 261-3881
Fax: (416) 266-9499
2863 Lawrence Ave. East
Scarborough, ON
M1P 2S8.

Furniture

Tel: (416) 266-3077
Fax: (416) 266-9499
2861 Lawrence Ave. East
Scarborough, ON
M1P 2S8.

Fish & Meat

Tel: (416) 261-4737
Fax: (416) 261-5483
2853 Lawrence Ave. East
Scarborough, ON
M1P 2S8.

Brimley & Lawrence *சந்திரில்*

எஸ். பி. .இம்போட்டர்ஸ்

வன்னிப் பிரதேசக் கல்வி வளர்ச்சியின் பின்னடைவுகள்

த. சிவபாலு பி.இடி. சிறப்பு எம். ஏ

வன்னிப்பிரதேசத்தின் கல்வி நிலை ஏனைய தமிழ்ப் பிரதேசங்களோடு ஒப்பு நோக்கும் போது பின்னடைவுள்ளதாகவே காணப்பட்டது. கல்விக்கான வாய்ப்புக்கள் போதியளவு இல்லாமை, ஆக்கிக் கொடுக்கப்படாமை, புறக்கணிக்கப்பட்டமை, குடிசனப்பரம்பல் என்பன கல்வியில் முக்கிய பங்குகொண்டு வந்துள்ளன.

வன்னிப் பெருநிலப்பரப்பு பரப்பளவால் கூடியதானாலும் அங்கு வாழுகின்ற மக்களின் இருப்பிடங்கள், அதனை ஒட்டி எழுந்த பாடசாலை அமைவிடங்கள் என்பன போதிய மாணவர் இல்லாத காரணத்தால் பின்அடைவு காணப்படவேண்டிய நிலையைத் தோற்றுவித்தது. மன்னார் தொடக்கம் முல்லைத்தீவு ஈறாகப் பரந்துபட்டுக்கிடக்கும் பாரிய காடுமண்டிய பிரதேசத்தில் காணப்படும் குடியிருப்புக்கள் ஆங்காங்கு பரந்து அமைவுற்றுள்ளமையால் ஆரம்பகாலந்தொட்டே கல்வி பெறுவதற்காக வேற்று இடங்களுக்கு மாணவர்களை அனுப்பவேண்டிய தேவைப்பாடு தவிர்க்கமுடியாததாகக் காணப்பட்டது.

இலங்கையின் கல்வி வரலாற்றில் அந்நியர்களின் வருகையினூடே கல்வியில் விருத்தி ஏற்படத்தொடங்கியமை கல்வி வரலாற்றில ஒரு மைல்கல். தமது மதத்தைப் பரப்பும் நோக்குடன் கத்தோலிக்க, அமெரிக்க, ஆங்கிலத் திருச்சபைகள் போட்டிபோட்டுக் கொண்டு செயற்பட்டன. இலகுவாக மதம் மாற்றப்படக்கூடியவர்கள் தமிழர்கள் என்பதனை அவர்கள் குறகியகாலத்திலேயே அறிந்திருந்தனர். இதனால் தமக்கு வசதியான வாய்ப்பான இடங்களில் தமது பணிகளைத் துரிதப்படுத்தி வந்தனர். மிசனறிச் சபையினர். தமது மதத்தைப் பரப்புவதற்கான ஒரு முக்கிய சாதனமாக கல்வி புகட்டுவதைக் கையாண்டார்கள். கத்தோலிக்க திருச்சபை, அமெரிக்க மிசனறி அங்கிலிக்கன் சபை போன்றன தமது மதங்களைப் பரப்பும் நோக்குடன் பல ஆலயங்களை நிறுவியதோடு நின்றுவிடாது அருகருகே பாடசாலைகளையும் நிறுவி சிறார்களுக்குக் கல்வி புகட்ட ஆரம்பித்தனர். இதனால்

திண்ணைப்பாடசாலையாக குருகுலக் கல்வியைப் பெற்றுவந்த இல்ஙகைச் சிறுவர்கள் பாடசாலை முறையிலே கல்வியைப் பயிலும் வாய்ப்பைப் பெற்றார்களாயினும் இவ் வாய்ப்புக்கள் வன்னிப் பிரதேசத்தைப் பொறுத்தளவிலே மிக அரிதாகவே காணப்பட்டன. முக்கள் சிறுசிறு குளுக்களாகப் பரந்துபட்டு வாழ்ந்தமை இதற்கான காரணத்தோடு மதம் மாறுவதிலும் வன்னியர்கள் காட்டிய எதிர்ப்பும் காரணிகளாகின.

வன்னிப் பிரதேசங்களில் அமைவுற்ற கல்விக்கூடங்களைச் சற்று நோக்கினால் இவ் உண்மை தெற்றெனப் தெரியும். முன்னார் மாவட்டத்தில் மட்டும் எருக்கலம் பிட்டி மகாவித்தியாலயமே வன்னியின் ஆரம்பத்தில் காணப்பட்ட உயர்நிலைக்கல்வி கற்கக் கூடியபாடசாலை ஒன்றாகக் காணப்பட்டது. வவுனியாவிலோ முல்லைத்தீவிலோ இத்தகைய பாடசாலைகள் இடம்பெறாமை துர் அதிஸ்ரமே. வுவுனியா, முல்லைத்தீவு பிரதேசத்திலிருந்து மன்னாருக்கு அல்லாது யாழ்ப்பாணப்பாடசாலைகளுக்குச் செல்லவேண்டிய நிலையே வித்தியானந்தக் கல்லூரி முள்ளியவளையில் அமையும் வரை காணப்பட்டது. பண்டாரநாயக்காவின் சுயமொழிக் கல்வி, பாடசாலைகள் அரசஉடமையாக்கியவை போன்ற காரணங்களால் வன்னிப்பிரதேசத்தில் கல்வியில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டமையினையும் நாம் அவதானிக்கலாம். மிக அண்மைக்காலம் வரை உயர்கல்வி நிறுவனங்கள் எதுவுமே வன்னிப்பிரதேசத்தில் அமைந்திருக்கவில்லை. ஏழுபதுகளுக்குப்பின்னர் வவுனியாவில் ஒரு ஆசிரியர் கல்லூரி நிறுவப்படல்வேண்டும் என்னும் கருத்து முன்வைக்கப்பட்டு அது செயற்படுத்தப்படும் வரை எந்தவொரு உயர்நிலைக் கற்கை வசதிகளோ வாய்ப்புக்களோ வன்னியில் இடம்பெறவில்லை எனலாம். வுவுனியாவில் அமைந்த விவசாயப்பாடசாலை ஒன்றே விவசாய உத்தியோகத்தர் தேவைக்கான பயிற்சிகளை நல்கும் நிலையமாகக் காணப்பட்ட ஒரு நிலையமாகும். இதுவும் மிகவும் குறைந்த அளவினரான மாணவர்களையே பயிற்றுவித்து வந்தது. இன்று வவுனியாவில் அமைந்துள்ள பல்கலைக்கழக வளாகம் காலத்தின் தேவையை ஒட்டி அமைந்து விட்டமை கல்வியின் வளர்வுக்கு உந்துதலாக அமைந்துள்ளது.

வன்னிப் பிரதேசங்களில் ஆங்கில ஆட்சிக்காலத்தின் ஆரம்பத்தில் இடம்பெற்ற பாடசாலைகளில் ஆசிரியத்தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளும் நோக்கத்துடன் தெரிவுசெய்யப்பட்ட ஆரம்பவகுப்பு ஆசிரியர்கள் சாதாரணமாக எழுதவாசிக்கத் தெரிந்திருந்தால் போதும் என்ற கணிப்பின் அடிப்படையில் இடம்பெற்றனர். வகுப்பில் திறமை மிக்கமாணவர்கள்

அல்லது ஆசிரியர்களின் பிள்ளைகள் சட்டாம்பிள்ளைகளாக நியமனம் பெற்று வந்தனர். இவர்களே பின்னர் ஆசிரியர்களாகவும் நியமனம் பெற்றனர். இன்று வளர்வுபெற்ற நாடுகளில் பின்பற்றப்படுவதுபோன்று ஆசிரியர்ப்பயிற்சி பெற்றவர்கள் மட்டும் தான் ஆசிரியத் தொழிலில் ஈடுபடமுடியும் என்னும் நிலை இன்றும் இலங்கைபோன்ற வளர்முகநாடுகளில் பின்பற்றப்படுவதில்லை. க.பொ.த. சா.த அல்லது உயர்தர சான்றிதழ்கள் பெற்றோர் எவரும் ஆசிரியராக இருப்பதற்குத் தகதியுடையவர்கள் என்னும் கருத்தே ஆசிரிய நியமனத்தில் பின்பற்றப்படுகின்றதே யன்றி மாணவர்களின் தேவைகள், உளவியல் தாக்கங்கள், கற்பித்தல் முறைகள், பாடத்திட்டமிடல், போன்ற அறிவுத் தேவை புறக்கணிக்கப்படுவதால் எமது மாணக்கரின் கல்வி வளர்ச்சியிலும தனித்துவ மேம்பாட்டிலும் பல இடர்வினைகள் ஏற்படுவத தவிர்க்கமுடியாததே. அரசியல் நோக்கில் ஏதோ பெற்றோரைத் திருப்தி செய்யம் நோக்கில் பாடசாலைகளுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படுகின்றதே யன்றித் தகுதி தகமைகள் கவனிக்கப்படுவதில்லை. தரப்படுத்தல், பிரததேச முதன்மை போன்றனவும் கல்வியில் பெரும் தாக்கத்திமைனக் கொண்டமைவது கண்கூடு. போர்த்துக்கேயர் காலத்திலிருந்த இலங்கை விடுதலை அடையும் காலம் வரை வன்னியின் கல்வி வரலாற்றில் பாடசாலைகள் பெரும் பாலும் ஐந்தாம் வகுப்பு வரை கல்விபெற்றுத் தரும் நிறுவனங்களாகவே காணப்பட்டன. இதனால் பெற்றோர் கல்வியில் பெரிதாக அக்கறை செலுத்தியதாகக் காணப்படவில்லை. தமது பிள்ளைகள் கையெழுத்து வைக்கத் தெரிந்திருந்தால் போதும் என்ற மனப்பாங்கோடு இருந்து வந்தனர். துமது அன்றாட வேலைகளைக்கவனிப்பதே பிள்ளைகளின் தலையாய பணி என்பதே பெற்றோரின் நோக்கமாகும். அவர்கள் கல்வி கற்று என்னதான் செய்யப் போகின்றார்கள் என்ற மனப்பாங்கு பலரிடமும் காணப்பட்டது. அவர்களுக்குக் கல்வி விழுமியங்களோ அதன் பலாபலன்களோ தெரிந்திருக்க வாய்ப்பு இருந்திருக்க வில்லை. கல்வி என்பது உத்தியோகத்திற்காகத்தான் என்னும் எண்ணம் இன்றுகூட பல பெற்றோரிடம் காணப்படுகின்றது. வாழ்வின் செம்மை, உயர்வு, வளர்வுக்குக் கல்வி பலவழிகளிலும் பயனளிக்கும என்னும் கருத்தை அவர்கள் புறக்கணித்து வந்துள்ளனர் அல்லது தெரியாதிருந்தனர் எனலாம்.

இத்தகையசூழ்நிலைகள் வன்னிப்பிரதேசக்கல்வியின் வளர்ச்சிக்கு தடைகளாக இருந்து வந்துள்ளன. 1970களில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 70க்கு மேற்பட்ட பாடசாலைகள் காணப்பட்டன. வவுனியாவில் 90 பாடசாலைகளும் மன்னாரிலும் அதே அளவினதாகக் காணப்பட்டன. சிலபாடசாலைகள் ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினாலும் மாணவர்கள் பற்றாக் குறைகளாலும் மூடப்படவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன. பனங்காம், ஆண்டான்குளம் போன்ற முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பழம்பெருமைமிக்க கிராமங்களில் உள்ள பாடசாலைகள் மூடப்பட்டு அயல்கிராமங்களுக்கு மாணவர்களை அனுப்பவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை தோன்றியமைக்குத் தற்கால கெடுபிடிகளும் மக்களின் இடப்பெயர்வுகளும் காரணிகளாகும. வன்னிப் பெருநிலப்பரப்பு இன்று அரசின் பாரமுகக் கொள்கையினால் பல்வேறு துறைகளிலும் மாற்றான் தாய் மனப்பான்னையின் தாக்கத்தை அனுபவித்து வருகின்றது.

இந்த நிலைமை வன்னிப் பிததேசச் கல்வியிலும் பாரிய தாக்கத்தைக் கொண்டுள்ளது. பாடப்புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், கட்டிட தளபாடவாய்ப்புக்களைத்தும் புறக்கணிக்கப்பட்டதொரு பிரதேசத்தில் வன்னிச் சிறார்கள் கல்விக்கு முகம் கொடுக்கின்ற நிலைமை எப்போ மாறும் என்பது கேள்விக்குறியே.

இன்று வன்னிப்பிரதேசத்தில் பெருந்தொகையான மாணவர்கள் இடப்பெயர்வு, பஞ்சம், பசி, பட்டினி போன்ற காரணங்களால் பாடசாலைகளுக்குச் செல்லமுடியாத நிலையில் இருப்பதை யேர்மெனி போன்ற வெளியுலக நாடுகளின் செயற்பாடுகள் வெளியே படம்பிடித்துக்காட்டுகின்றன. உணவுப்பற்றாக் குறைகாரணமாக பெருந் தொகையான வன்னி மாணவர்கள் கண்பார்வை இழத்தல், காது கேட்காமை, மூளைவளர்ச்சி பாதிப்புப் போன்ற வற்றிற்கு ஆளாகின்றார்கள் என்பதனை கடல் கடந்த நாடுகளில் வசிக்கின்ற ஈழத்தமிழர்கள் சற்றுச் சிந்தித்துப்பார்த்தால் எதுவித உதவியும் இன்றி அலைந்து பஞ்சத்தில் வாடிக் கொண்டிருக்கும் எம் இரத்தங்களுக்கு ஏதோ ஒரு வகையில் உதவிக்கரம் நீட்டமுடியும். மனம் இருந்தால் இடமுண்டு என்பதற்கமைய தமிழினம் செயற்படுதல் எம் இனத்தை பேரழிவிலிருந்து பாதுகாக்க உந்துகோலாக அமையும்.

கல்லாமை என்றும் அறியாமை - உண்மை
சொல்லாமை என்றும் வெல்லாமை.

புரியாதார் செயல் எல்லாம் பலியாது
தெரியாதார் சொல் எல்லாம் புரியாது.

Annual Summer Sale!

Apply Today to Receive Sunflowers Store Credit Card and get

3 MONTHS INTEREST FREE

All Brand Names Mattress 50% Off



Two Great Locations to Serve You Better

Toronto
3024 Kennedy Road
(416) 609-8556

Mississauga
1225 Dundas Street E.
(905) 270-5422

www.sunflowersfurniture.com

அன்னியம் தொலைப்போம்

வீரத்து வியர்வை
வீழ்ந்து மண்மீது
செம்கண் தெருவாய்க்
கோடுகிழிக்கும்

கருக்குவாழ் தாங்கும்
பனைகளைப்போல......
உருக்குவாழ் ஏந்தும்
இரும்பு மேனிகள்

அன்னிய வெறியரை
அடியோடழித்து
கொம்பறை முழக்கிக்
குதுாகலித்திருந்த
பண்டாரவன்னியனின்
வன்னியதேசம்.....
காட்டிக்கொடுத்த
கயவன் ஒருவனால்
கற்சிலைமடுவில்
தூங்கிப்போனது!!!

பண்டாரவன்னியன்
படைவீரம் பாடியே
கடுக்கண் பாரம்
காதினை இழுக்க
காலம் காலமாய்
வம்சம் பெருக்கி
வாழ்ந்து கிடந்த
என்னுயிர்த் தாயாம்
வன்னிநாச்சியே....

உன்முகம் இழந்து- நீ
மூளியாய்ப் போனாய்!!

தேனாறு பாய்ந்த
திசையெங்கும்
நிணவாறு!!

போரடித்து நெற்குவித்த
பூமியெங்கும்
பிணக்குவியல்!!

முல்லைக்கரையின்
மணலை அரிக்கிற
வெள்ளக் கடலென.....
சொந்தம் உறவுகள்
ஊரூராக அலைந்து தொலைந்தன!

அன்னியம் தொலைக்க
சூளுரைத்தெழுந்த- நாம்
அன்னியப் பூமியில்
அன்னியமாகினோம்!

சாம்பல் மேடாய்ச்
சந்ததி அழியவும்.....
ஆங்கில யோனியுள்
அடி முடி தேடினோம்!!

அக்கினிக் குஞ்சென
அவதரித்த- நாம்
பனிக்குஞ்சுகளாய்
உலாவருகின்றோம்!

அன்னியன் தெருவில்
அடிமைகளாகி
கடமை இழந்து- நாம்
கைகட்டி நிற்கவும்,,,,,

குளமுறிப்பு,
கற்சிலைமடு,
முல்லைநகரென
வன்னி நிலமெங்கும்
மீண்டும் மீண்டுமாய்
ஆயிரமாயிரம்
பண்டாரவன்னிகள்
வன்னிநாச்சிகள்
உயிர்த்தெழுந்தனர்!!

இனியும், செருப்பிற்களவாய்
காலை வெட்டியும்....
சட்டைக்களவாய்....
உடலை வெட்டியும்....
புகலிட வாழ்விற்கு
இரையெனப் போகுமோ
வளமார் எங்கள்
வன்னிச் சுதந்திரம்?

துருவச் சேற்றுள்
புதைந்த முகங்களை
மெல்ல நிமிர்த்துக!

எங்களின் வாழ்வைச்
சிதைத்தெறிந்திட்ட
எதிரிக்கெதிராய்- எம்
முகங்கள் திரும்புக !!

மா. சித்திவிநாயகம்

எஸ். ரி. பி பூட் மார்க்கட்

உங்களின் விருப்பத் தெரிவுகளுக்கேற்ற பல வகைகளையும்
தொகையான பொருட்களையும் இலங்கை இந்தியாவில் இருந்து
இறக்குமதி செய்து தரும் ஒரே இடம்

மரக்கறிவகைகள், பழவகைகள், மீன்வகைகள், இறைச்சிவகைகள்
அனைத்தும் ஒரே இடத்தில்

இது மட்டுமா?

பெரியளவில் தெரிவுகள் உள்ளடங்கிய தமிழ்ச் சினிமா, நாடகக்
கொப்பிகளும் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரே இடம்





We Stock......

- ☑ **M & M Twins Products**
- ☑ **Larich Products**
- ☑ **Niru Products**
- ☑ **Ceycan Products**

எஸ்.ரி.பி பூட் மார்க்கட்

83 Kennedy Road, Suite #9
Brampton, Ontario

T.P (905) 450-8433.

முஸ்லிம்களும் தமிழும்

பேராசிரியர் டாக்டர் க. கணபதிப்பிள்ளை

கொழும்பு ஸாகிராக் கல்லூரித் தமிழ்ச் சங்க வருடாந்த விழாவின்போது போராசிரியர் ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கு தரப்படுகின்றது.

ஸாகிராக் கல்லூரியில் பண்டிதர் நல்லதம்பி அவர்கள் பணியாற்றிய காலத்திலே சில வேளைகளில் நான் இங்கு வந்ததுண்டு. அக்காலத்தில் ஆங்கிலம் அதிக செல்வாக்கு உடையதாக இருந்தது. அந்நிலையிலும் இங்கு தமிழ்ச் சங்கம் ஒன்று நடந்து வந்தததைக் கண்டு மகிழ்ந்தேன். திரு. கமால்தீன் போன்ற மாணவர்கள் சர்வகலாசாலையில் தமிழையும் ஒரு பாடமாக எடுத்ததைக் கண்டு ஸாகிராக் கல்லூரியில் தமிழ் எந்த நிலையில் இருக்கின்றதென்பதை நான் அறிந்துகொண்டேன். தமிழ் வளர்ச்சிக்கு நாம் எம்மால் இயன்றவரை முயர்ச்சிகள் செய்யவேண்டும். அதற்கு முஸ்லிம்கள் செய்த தொண்டு அளப்பரியது. இன்னும் அவர்கள் செய்து வருகின்றார்கள். அதற்கு ஸாகிரா போதிய ஆதாரமாகும்.

தமிழ் வளர்ச்சிக்கு முஸ்லிம்கள் அரிய பெரிய தொண்டுகள் செய்து வந்திருக்கிறார்கள். அவற்றில் முஸ்லிம் புலவர்கள் செய்த தொண்டுகளை எம்மால் மறக்கமுடியாது. தென்னிந்தியாவில் பல முஸ்லிம் புலவர்கள் தோன்றி உள்ளனர். தமிழ்ப் புலவர்கள் முஸ்லிம்களிடையே அன்று மட்டுமல்ல, இன்றும் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதுவுமன்றித் தமிழ் அபிமானமுள்ள முஸ்லிம் கொடைவள்ளல்கள் பலர் தென்னாட்டில் இருந்திருக்கிறார்கள். தமிழ்த் தொண்டில் பெரிய ஆர்வம் கொண்ட சீதக்காதி அவர்களைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இவருக்குத் தமிழ் மீது இருந்த பற்று போற்றுதற்குரியது. உமறுப் புலவர் தொண்டும் அளவிடற்கரியது. அவர் தமிழ் மொழிக்கு உவந்தளித்த சீறாப்புராணம் தமிழுக்கு ஓர் அணிகலனாய் விளங்குகின்றது. தென்னிந்தியாவில் இருக்கும் தமிழ் மொழிக் கழகங்களில் முஸ்லிம் புலவர் பலர் இருந்து தமிழுக்குத் தொண்டாற்றிவருவது யாவரும் அறிந்ததே. தமிழ் வளர்ச்சிக்காக இலங்கை முஸ்லிம்களும் பல வகைத் தொண்டுகளை ஆற்றி உள்ளார்கள். யாழ்ப்பாணத்தில் இந்துக்களிடையேயும் முஸ்லிம்களிடையேயும் உள்ள நெருங்கிய தொடர்பு தமிழ் மொழியைக்

கொண்டுதான் உருவாகியது. யாழ்ப்பாண முஸ்லிம்கள் செந்தமிழையே பேசுகின்றார்கள். மேலும் பல முஸ்லிம் புலவர்களும் யாழ்ப்பாணத்தில் இருக்கிறார்கள். அதேபோலவே மட்டக்களப்பிலும் பல முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் இருக்கிறார்கள். அங்குள்ள முஸ்லிம் பெண்களும் தமிழ்த் திறமையும் கவித் திறமையும் படைத்தவர்கள். அங்கு புலமை என்பது கவித்துவமே. கவிகளைப் பாடும்போது அவர்கள் இலக்கண அமைப்பினைப் பார்ப்பதில்லை பொருட் செறிவினையே பார்ப்பார்கள். நினைத்தவுடன் பாக்களைப் பாடுகின்ற திறன் அவர்களுக்கு உண்டு. அங்கேயே நாம் உண்மையான புலமையைக் காணக்கூடியதாக உள்ளது.

முஸ்லிம் பெண்களின் இயற்கைப் புலமைக்கு ஓர் உதாரணத்தினை இங்கு கூறிவைக்க விரும்புகின்றேன். ஒரு முஸ்லிம் பெண் உபகாரச் சம்பளம் பெறுவதற்காக மட்டக்களப்புக் கச்சேரிக்குச் சென்றிருந்தாள். அங்கே இருந்த அரசாங்க அதிகாரிகள் அவளைக் கவனியாது இருந்துவிட்டார்கள். எனவே அவள் அங்கிருந்த கோட்டு முதலியாரிடம் சென்ற பின்வருமாறு பாடினாள்.

"மொட்டந் தலை யழகா முதலி வேலை பார்க்குமையா இட்டமுடன் என் காசை எடுத்துத்தா ஐயாவே!"

இங்கு எவ்வளவு திறமையாகவும் நகைச்சுவை ததும்பும் விதமாகவும் இவள் எடுத்துக் கூறியுள்ளாள் என்பதனைக் காண்கின்றீர்கள். தங்களை அறியாமலே பீறிட்டு வரும் சொற்றொடர்கள் அவர்களது கவிக்கு அழகு சேர்க்கின்றன.

இதுபோன்றே புத்தளம், பேருவளை போன்ற பகுதிகளிலும் முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் இருந்திருக்கிறார்கள். இவ்வாறாக முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் இருந்தும் நமது அறியாமையால் அவர்களைக் கொண்டு தமிழை வளர்க்க முடியாது போய்விட்டது. இனிமேலாவது நாம் அத்தகையோரைக் கொண்டு தமிழைச் சிறந்த நிலைக்குக் கொண்டுவர முயலுதல் வேண்டும். அதற்கு இப்படிப்பட்ட தமிழ் வளர்க்கும் கழகங்கள் உதவியாக இருக்கும். புதுப்புது நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து தமிழ் வளர்க்க முயல வேண்டும். நாம் சாதி சமய வேற்றுமை காட்டாது ஒன்றுபட்டுத் தமிழை இன்னும் வளர்க்கப் பாடுபடவேண்டும்.

தகவல் அப்துல் மர்ஸக் முகம்மது ஸப்வான்.

கீதவாணி

Geethavaani

Tel: (416) 267-1100
Fax: (416) 267-7707

TODAY'S HITS
YESTERDAY'S MEMODYS

எம்மிடம் தரப்படும் அறிவித்தல்கள், வாழ்த்துக்கள் உலகம் பூராகவும் வாழும் தமிழ் மக்களைச் சென்றடைகின்றன என்பதனை மறந்து விடாதீர்கள்.

We bring the whole world to your home

2800 Eglinton Avenue East Suite 200
Scarborough, Ontario, M1J 2C9

Email: geethavaani@worldtamilradio.com
www.worldtamilradio.com

நா. சண்முகம்
இல.6, திருநாவற்குளம்
வவுனியா
20.08.2001.

கனம் தலைவர் அவர்கட்கு,
வன்னித் தமிழ்ச் சமூககலாச்சார அமையம்
கனடா

அன்புடையீர்!

மல்லாவிப்பிரதேசத்தில் வன்னித் தமிழ்ச் சமூக கலாசார அமையத்தின் அரும் பெரும் பணிகள்

1 ஆரம்பகால நடவடிக்கையாக மேற்படி அமையம், மல்லாவி வைத்தியசாலைக்கு மின்பிறப்பாக்கியை வழங்கி வைத்தியசாலைக்கு ஒளி வசதியைச் செய்து கொடுத்தது. இதனைத் தொடர்ந்து வைத்திய சாலையில் ஏற்பட்ட நீர்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வைத்தியசாலைக் கிணற்றைச் செப்பனிட்டு நீர்வழங்கலை முறைப்படுத்தியது. தொடர்ந்து மல்லாவி அரசினர் வைத்தியசாலை நலன்புரிச் சபைக்கு நோயாளர்களின் அவசர தேவைக்கான செலவுக்கென நிதியுதவியை இறுதியாக வழங்கியுள்ளது.

2 மல்லாவிப் பிரதேசத்தில் மேற்படி நிறுவனம் புலமைப்பரிசில் திட்டத்தை ஆரம்பித்தது. இதனை பாண்டியன்குளம்-துணுக்காய் அபிவிருத்திக் கழகம் பொறுப்பேற்று நடைமுறைப்படுத்தி வருகின்றது. பாடசாலை அதிபர்கள் ஊடாக தொடக்கமாக ஆறு ஏழ்மையும் திறமையுமான மாணவ - மாணவிகளின் கல்வியை ஊக்குவிக்க மாதாந்தம் ரூபா ஆயிரம் வீதம் வழங்கப்பட்டு வருகின்றது. ரூபா 77904.00 இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

3 மல்லாவி நகரில் அமைந்துள்ள புகழ்மிக்க பாடசாலைகளில் அனிஞ்சியன்குளம் அ.த.க. பாடசாலையும் ஒன்றாகும். இடப் பெயர்வுகாரணமாக மல்லாவியில் புகலிடம் தேடிய கும்பங்களின் பிள்ளைகள் இப்பாடசாலையில் கல்வி கற்கத் தொடங்கியதால் பாடசாலைகள் திடீரென ஆசிரியர் பற்றாக்குறை இட நெருக்கடி, தளபாடத் தேவை ஏற்பட்டது. கல்வித் தகமையுடைய பெண்கள் தொண்டர் ஆசிரியர்களாகச் சேவை செய்ய முன்வந்தனர். ஆனால் இவர்களுக்கு சம்பளம் வழங்க இடம் பெயர்ந்த ஏழைப் பெற்றோர்களால் முடியவில்லை. ஆதிபர் தனது உத்திக்கு ஏற்ப மாதா மாதம் ஒருவருக்கு ரூபா 100.00 வீதம் மாத்திரம் வழங்கக் கூடியதாக இருந்தது. நிலமையை எடுத்துக்கூறி வன்னித் தமிழ்ச் சமூக கலாசார அமையத்திடம் உதவி கேட்டோம். நிலமையை கவனமாக பரிசீலித்த பின்பு ஒவ்வொரு ஆசிரியைக்கும் மாதாமாதம் ரூபா 1000.00 வீதம் வழங்கக்கூடியதாக நிதியை அனுப்பி வைத்துள்ளது. ஆனால் பாடசாலையில் மற்றவாகளின் கொடுப்பனவுகளுக்கு அமைவாக 10 ஆசிரியர்களுக்கு மாதாமாதம் ரூபா 500.00 வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி மூன்று வேலைத் திட்டங்களுக்கும் அவற்றின் முக்கியத்துவம், அவசிய அவசரம் கருதி உதவி கோரியபோது எனது போரிக்கையை பரிசீலனை செய்து நிதிவழங்கிய அமையத்துக்கு இத்திட்டங்களின் பயன்களின் சார்பில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நிதி முழுவதும் சரியாக, எதிர்பார்ப்புக்கு அமைவாக செலவு செய்யப்பட்டு, உரியபயனை அடைந்தவர்கள், நடைமுறைப்படுத்துபவர்கள் ஒழுங்காக அறிக்கைகள் பற்றுச்சீட்டுக்கள் அனுப்பிவைக்கிறார்கள் என்பதைத் தங்கள் நிறுவனத்தில் இருந்து பெறப்படும் பதில் கடிதங்கள் மூலம் அறிகிறேன். இது தொடரும் எனவும் எதிர்பார்க்கின்றேன்.

மேற் கூறப்பட்ட நற்கைங்கரியத்திற்கு அமையத்தின் உறுப்பினர் திரு. கா. யோகநாதன் அவர்களினதும், அவரின் நண்பர்கள் எனக்கருதக் கூடிய பரோபகாரிகளின் பெருந்தன்மையும் மிகவும் போற்றப்படக் கூடியது. அமையத்தின் பணிதொடர வாழ்த்துகின்றேன்.

இவ்வண்ணம்
நாகலிங்கம் சண்முகம்.

"தன்னினம் தாழ்ந்தபின் உயிர் வாழாமை"

கரும்புலிகள்.

INDUSTRIAL ALLIANCE
LIFE INSURANCE COMPANY

NORWICH UNION

Since 1965
USC
EDUCATION SAVINGS PLANS

We will shop around and select the best company with competitive price.



Call:
T. K. Thevarajah

(நோர்விச் யூனியன் அதிசிறந்த விற்பனையாளர் விருது பெற்றவரும் முன்னாள் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன ஊழியரும்)

- ☑ நம்பிக்கை
- ☑ நாணயம்
- ☑ உத்தரவாதம்

உங்கள் வாழ்க்கைக்குத் தேவையான காப்புறுதியைப் பல காப்புறுதிக் கம்பனிகளிடம் இருந்து பரிசீலித்துப் குறைந்த விலையில் பெற்றுத்தரத் தயாராக இருக்கின்றோம்.

முதியோருக்கு உகந்தமுறையில் உங்களுக்கு விரும்பிய காப்புறுதி நிறுவனங்களில் காப்புறுதி செய்து கொடுக்கப்படும்.

Tel: (905) 471-9061   Fax: (905) 471-2202

அமையத்தின் தேவை!

கனடா வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையமானது தனது ஐந்தாவது வருடத்தில் நகர்ந்து கொண்டிருக்கின்றது. அமையம் ஆரம்பிக்கப்பட்டபோது துணியப்பட்ட பல நல்நோக்கங்கள் மெதுவாக ஆனால் உறுதியாக முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக வன்னிப் பிரதேசத்தில் இன்று கல்வி பயின்று கொண்டிருக்கும் மாணவர்களது கல்வி வளர்ச்சி, வைத்தியசாலை வசதிகளை அதிகரித்தல் போன்ற விடயங்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் தாய், தந்தையரை இழந்து கல்வி கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கும், மற்றும் பொருளாதார வறுமை காரணமாகக் கல்வியைத் தொடரமுடியாத மாணவர்களது கல்விக்கும் இவ் அமையமானது புலமைப்பரிசில் திட்டம் ஒன்றினை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தி வருகின்றது. இன்றுவரையில் ஏறக் குறைய 25க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு இத் திட்டத்தின் மூலமாக நிதி உதவி செய்து வருகின்றது. தவிரப் பல வசதியீனங்களுடன் இயங்கிக் கொண்டிருக்கின்ற வன்னிப்பிரதேச வைத்தியசாலைகளின் குறைகளைப் போக்குவதற்கு நிதியுதவி செய்யப்பட்டுப் பல நெருக்கடிகள் நீக்கப்பட்டுள்ளன. இது போன்று மேலும் பல தேவைகள் வன்னிப் பிரதேசத்தில் காணப்படுகின்றது. அவை அவசியமாகத் தீர்க்கப்பட வேண்டியவையாகும். அதற்கு வன்னிப் பிரதேசத்திற்கான ஒரு அமையமும் அதனது இருப்பும் வளர்ச்சியும் அவசியமானது.

வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையம் தொடர்பாகப் பலரிடம் கருத்துச் சிக்கல்கள் இருக்கின்றன.

1. பிரதேச வாதமுத்திரை குத்தப்பட்டுவிடும் என்ற பயப்பீதி.
2. மூன்று மாவட்டங்களை உள்ளடக்கிய பாரிய பிரதேசத்திற்கான அமைப்பினை நடாத்துவதில் நடைமுறைச் சாத்தியம் பற்றிய ஐயப்பாடுகள்.
3. தேவையில்லாத பிரச்சனை என்ற நினைப்பும் நிலைப்பாடும்.
4. வெளியில் சொல்லமுடியாத காரணங்களை மனதில் வைத்துக் கொண்டு ஈடுபாடில்லை என்று சாதிக்கும் பூசி மெழுகல்கள்.

பிரதேச வாதம் என்ற பிரச்சனையைக் கருத்தில் கொண்டால் அதை வெறும் கற்பனாவாதம் என்றே கொள்ள வேண்டும். ஒரு நாட்டினைப் பிரதேசங்களாகப் பிரித்து அப் பிரதேசங்களுக்கு ஏற்றவாறு அரசியல், நிர்வாக, பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் எவ்வாறு பிரதேச வாதமில்லையோ அதேபோன்று ஒரு பிரதேசத்தில் இருந்து புலம் பெயர்ந்தவர்கள் தங்கள் பிரதேசத்தினது பிரச்சனைகளை நன்கறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கு ஒரு அமைப்பினை ஏற்படுத்திக் கொள்ளுதல் பிரதேசவாதமாகாது. மேலும் வன்னி என்பது இன்று வன்னியர் பரம்பரையின் பிரதேசமில்லை. பல்வேறு காலங்களிலும் பல்வேறு புவியியல் பகுதிகளிலும் இருந்துவந்து குடியேறிய மக்கள் கூட்டத்தாரது தொகுப்பாகும்.

பூர்வீக இயக்கர் அல்லது நாகர் இன மக்கள், சோழர் காலத்தில் இலங்கையில் குடியேற்றப்பட்ட வன்னியர்கள், ஆரிய வம்சமான சாளுக்கியர் ஆட்சிக்காலத்தில் குடியேற்றப்பட்ட கன்னடர்கள், இமயவரம்பன் காலத்தில் குடியேற்றப்பட்ட மலையாளிகள், மற்றும் அண்மைக்காலங்களில் குடியேறிய தீவக மக்கள், யாழ்ப்பாண மக்கள், மற்றும் மலையக, திருகோணமலை மக்கள் என எல்லோரும் சேர்ந்து வாழும் ஒரு பிரித்துப் பார்க்க முடியாத இனக்கலவையே இன்றய

வன்னியாகும் (Melting Pot). இங்கு வன்னியர், வன்னி என்பதெல்லாம் வெறும் அரசியல் இலாபத்திறகாகப் பயன்படுத்தப்படுகின்ற மாயைக் கருத்துக்களே. இன்று வன்னி வாழ் மக்கள் பொருளாதாரத் தடைகாரணமாகவும் யுத்த நிலை காரணமாகவும் துன்பப்படுகின்றனர். அவர்களுக்கு உதவுவது மனிதாபிமானப் பிரச்சனை. அவ்வாறு உதவ முடியாவிடினும் அவர்களது பிரச்சனைகளை வெளியுலகிற்கு எடுத்துச் சொல்லும் குரலாகவேனும் வன்னியை நன்கறிந்த ஒரு அமைப்பு இருப்பது அவசியமாகும்.

மற்றய மூன்று கருத்துச் சிக்கல்களையும் நோக்கும்போது சிலர் தமது கடமைகளைத் தட்டிக்கழிக்கும் சுயநலத்தினை அடிப்படையாகக் கொண்ட கருத்துக்களாகவே காணப்படுகின்றது. இப்படியான கருத்துகளை உலவ விடுபவர்கள் அனேகமாகப் படித்தவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் நிட்சயமாகத் தங்களது பொறுப்பு என்ன என்பதனை உணர்ந்து செயற்படுதல் வேண்டும். அவர்கள் தாம் பிறந்த மண், தம் பிரதேச மக்கள் தங்கள் பொறுப்பு என்பவற்றை எல்லாம் உணராமல் வளர்ந்து வரும் அமையத்திற்கு எதிரான கருத்துக்களைப் பரப்பி வருகின்றார்கள். இப்படியானவர்கள் இன்று கனடா வராது இருந்திருப்பார்களாயின் எம் அமையத்தினது செயற்பாடுகளை நன்கு போற்றியிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

போதியளவு நிறைந்த வளங்கள் இருந்தும் வன்னிப் பிரதேசமனது சமூக அரசியல் பொருளாதாரரீதியில் மிகவும் பின்தங்கி இருந்தது, இருக்கின்றது. இதற்குப் பிரதானமான காரணங்களாக கல்வி அறிவின்மை சரியான வழிகாட்டல் இன்மை என்பன காணப்படுகின்றது. இலங்கையில் இலவச சுயமொழிக் கல்வித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின் வன்னியின் பள்ளிப்படிப்பில் ஓர் எழுச்சி ஏற்பட்டது. பொதுக் கல்விமுறை வரலாற்றில் முதன் முறையாக வன்னியின் பெரும்பாண்மையான பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்றனர். இவ்வாறு படிப்பினை ஆரம்பித்த பிள்ளைகளின் பெற்றோர்கள் படிப்பறிவு இல்லாதவர்களாகவே இருந்தார்கள். இதனால் அனேகமான பெற்றோர்கள் "ஏதோ எழுத வாசிக்கத் தெரிந்தால் போதும்" என்று தங்கள் பிள்ளைகளின் படிப்பினைப் பாதியில் நிறுத்தி விட்டார்கள். இவற்றை எல்லாம் கடந்து வன்னியில் ஓரளவு படித்து முன்னிலைக்கு வந்த மிச்சம் மீதிகளும் நாட்டினது பிரச்சனை காரணமாக வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்துவிட்டார்கள். இதனால் இன்றய வன்னி மீண்டும் ஆரம்பநிலைக்கே திரும்பிச் சென்று கொண்டிருக்கிறது. இந்நிலையைத் தடுத்து வன்னிப்பிரதேசத்தினை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதற்கு புலம் பெயர்ந்த வன்னிப் பிரதேச மக்கள் தம்மால் முடிந்ததைச் செய்வது மிக அவசியமானது.

இந்த வகையில் கனடா வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையம் அதிகமாகக் பணியாற்ற வேண்டி உள்ளது. முதலில் புலம் பெயர்ந்து உலகெங்கும் வாழும் வன்னிப்பிரதேச மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்க வேண்டும். பின்னர் அவர்களின் உதவிகளை ஒருங்கிணைத்து வன்னிப்பிரதேசத்திற்கான அத்தியாவசிய தேவைகளை முடிந்தளவு நிவர்த்தி செய்ய வேண்டும். அத்துடன் வன்னியின் பிரச்சனைகளை, தேவைகளை வெகுசன தொடர்பு சாதனங்கள் ஊடாக வெளிக் கொணர முயலவேண்டும். இவற்றைப் புலம் பெயர்ந்த வன்னி மக்கள்தான் செய்யமுடியும். இதனை வேறுயாராவது செய்வார்கள் என எதிர் பாத்தால் அது தமிழை வளர்க்க சிங்களவர்களை ஆசிரியர்களாக நியமிப்பது போல் அமையும்.

சூரியன் உதிக்கும்வரை எமது பிரதேசம் தாக்குப் பிடிக்காது. அதற்கு முன் எம்மால் முடிந்த ஒரு மெழுகுவர்த்தியையாவது ஏற்றி ஒளி கொடுப்போம்.

இ. தங்கேஸ்வரன்.
ஆசிரியர் குழு உறுப்பினர்
கொம்பறைமலர்

DILDAN GENERAL CONTRACTOR

டில்டன் ஜெனரல் கென்ராக்ரர்



- ☞ Basement Finishing
- ☞ Plumbing
- ☞ Dry Wall
- ☞ Painting
- ☞ Ceiling
- ☞ Flooring
- ☞ Electrical
- ☞ Tiling
- ☞ Kitchen
- ☞ Counter Top
- ☞ Washroom

CALL: RAVI

RES: (416) 431-4648
CEL: (416) 828-8518

கனேடிய தமிழ் வானொலி

CANADIAN THAMIL RADIO (CTR)

24 மணிநேர தமிழ் ஒலிபரப்பு

ஆரோக்கியமான நிகழ்ச்சிகள்
ஆழமான சிந்தனைகள்
நாகரீகமான நடப்புகள்

பிரியமுள்ள

கலாதரன்

வரவேற்பாளர்:	(416) 264-8798
செய்திப் பதிவு:	(416) 264-0655
நிகழ்ச்சிப் பங்கேற்பு:	(416) 264-0699
தொலைநகல்:	(416) 264-9500

மண்ணையும் மனங்களையும் நேசிப்போம்.!

வன்னி விழா
சிறப்புற அமைய வாழ்த்துக்கள்

ஒன்றல்ல..
இரண்டல்ல...
பதின்மூன்று வருடங்கள்....
இத்துறையில் அனுபவம், திறமை.....

வீடு வாங்க, விற்க நாடுங்கள்.

ROYAL LePAGE

Karu Kandiah
(Associate Broker)
Residential Specialist

Home: (416) 284-9999
Bus: (416) 284-4751
Car: (416) 616-7278

யாழ்நகர் ரேடர்ஸ்

- ◊ இலங்கை-இந்திய உணவுப் பொருட்கள்
- ◊ உடன் மரக்கறி வகைகள்
- ◊ திருமணம் மற்றும் விசேட பூசைக்குரிய மாவிலை, வாழையிலை, அறுகம்புல், முடித்தேங்காய் வாசனைத் திரவியங்கள்
- ◊ இறக்குமதி செய்யப்பட்ட சுமித்மிக்சி (Smith Mix), றைஸ் குக்கர்(Rice Cooker)
- ◊ ஒடருக்கு பலகார வகைகள்

மக்கள் தேவையுணர்ந்து மேற்குறிப்பிட்ட பொருட்களைத் தரமான முறையிலும், குறைந்த விலையிலும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே தரிப்பு ஸ்தாபனம்.

தொலைபேசி: (416) 285-0587

Yarlnagar Trade'a'rs
1239 Ellesmere Road
Scarborough, ON

யாழ்நகர் ரேடர்ஸ்
1239 எல்ஸ்மயர் வீதி
ஸ்காபரோ, ஒன்ராறியோ

வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையம்
கனடா.

புலமைப் பரிசில் திட்டம்

கடந்த வருடங்களைப் போலல்லாது இவ்வருடம் புலமைப் பரிசில் என்னும் ஓர் சிறப்புப் பக்கத்தினைக் கொம்பறை மலரில் ஓர் தனிப்பிரிவாக இணைத்துக் கொள்வதில் அமையம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றது. அதற்காக அமையத்தின் முன்னாள் தலைவர்களிடம் அதனது கடந்தகால நிகழ்கால முன்னேற்றங்கள் பற்றி அறிக்கை தருமாறு கேட்டபோது சிரமம் பாராது உரிய நேரத்தில் தந்துதவிய அனைவருக்கும் அமையம் தனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றது.

"மக்கள் நிதியே மாபெரும் நிதியாம்
அள்ளித் தந்து உதவிகள் செய்தால்
உண்மை செய்தே உயர்வுகளடைய
மாணவர்கல்வி அங்கு பெருக்குவோம்"

புலமைப்பரிசில் செயற்திட்டக் குழு

திரு ச. இராசேஸ்வரன்
திரு த. பாலசுப்பிரமணியம்
திரு க. பாலசிங்கம்.
திரு க. யோகநாதன்
திரு இ. தங்கேஸ்வரன்
திரு. த. சிவபாலு

புலமைப்பரிசில் தகவல் பிரிவு
வ. த. ச. க. அமையம்
கனடா.

திரும்பிப்பார்கின்றோம்......

கிழக்காசியாவிலேயே அதிகம் கல்வியறிவு பெற்றவர்களாக இந்தியாவில் கேரள மாநிலத்தவர்களும் இலங்கையில் தமிழர்களும் காணப்பட்டார்கள். இங்கு எண்பத்து மூன்று வீதமானவர்கள் படித்தவர்களாகவே காணப்பட்டார்கள். இது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் உள்ள புள்ளி விபரம் ஆகும். இன்று தமிழர்களின் கல்வி போர்ச் சூழலால் ஏற்பட்ட இடப்பெயர்வுகளாலும் பொருளாதாரச் சீர்குலைவாலும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக எம் வன்னிப் பிரதேசத்தில் இராணுவம் நிலை கொண்டிருந்த நாட்களில் ஒரு பாடசாலையிலேயே பல கிராமங்களின் பாடசாலைகள் இயங்கவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டன. மாணவர்கள் போதிய உணவு இன்றி பசியோடும் பட்டினியோடும் பாடசாலைகளுக்கு சமூகமளித்தார்கள். இதனால் பாடசாலைகளில் மாணவர்கள் மயங்கி விழுந்த சம்பவங்கள் பலவும் உண்டு. இது எதைக் காட்டுகிறது என்றால் வயிற்றுப்பசி தீராவிடினும் அறிவுப்பசியைத் தீர்க்க மாணவர்கள் எவ்வளவு தீவிரம் காட்டுகிறார்கள் என்பதையே.

ஏமது அமையமானது 1996ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் அங்குரார்ப்பணம் செய்யப் பட்டபோதும் 1997ம் ஆண்டிலேயே தனது முதல் நிர்வாக நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தது. சங்கத்தின் முதன்மை நோக்கங்களாக வன்னிப் பிரதேசத்தில் வசதியற்ற திறமையுள்ள மாணவர்களுக்கு உதவி வழங்கலும் மாவீரன் பண்டாரவன்னியன் நினைவாக கலாச்சார விழாவொன்றை வருடா வருடம் கனடாவில் கொண்டாடுவதும் எனக்கொண்டிருந்தது. சங்கத்தின் யாப்பில் இன்னும் பல விடயங்கள் இந்நாட்டுச் சட்ட திட்டங்களுக்கமையச் சேர்த்துக் கொண்டாலும் இவையிரண்டுமே பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தது. அன்றய பொழுதில் பல முற்போக்கு எண்ணம் கொண்ட நிர்வாகிகளின் ஒத்துழைப்போடு திடகாத்திரமான ஒரு அத்திவாரம் சங்கத்திற்கிடப்பட்டது. இதன் பிரகாரம் முதலாம் ஆண்டான 1997 கார்த்திகை 22ல் (நவம்பர் 22) பண்டாரவன்னியன் நினைவு விழாவும் விழாவின்போது கொம்பறை மலரும் வெளியிட ஆரம்பிக்கப்பட்டது. சங்கத்திற்கான முதல் விழாவிலேயே பண்டாரவன்னியன் நாடகம் மிகத்திறமையாகத் தயாரிக்கப்பட்டு மேடை ஏற்றப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை பல நாடகங்களை எழுதி இயக்கி விழாவின்போது வெற்றிகரமாக மேடையேற்றிக் கொண்டிருக்கும் திரு.பாலா கணபதிப்பிள்ளை அவர்களின் பங்கு எமது சங்கத்திற்கு அளப்பரியது. அதேபோல் கொம்பறை மலர் வெளியீட்டில் சிவாசீலன் சேனாதிராசாவினதும், சபா இராசேஸ்வரனதும் பங்குகள் இன்றியமையாதவை. இவர்களின் சேவைக்கு வன்னித் தமிழ்ச் சமூகம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது.

சங்கத்தின் பிரதான நோக்கங்களின் மற்றொன்றான வறிய மாணவர்களுக்கான நிதியுதவி வழங்கும் திட்டம் 1998ம் ஆண்டின் நிர்வாகசபையில் ஆராயப்பட்டு பல நிர்வாகச் சிக்கல்களும் நடைமுறைச் சாத்தியக்குறைவும் காணப்பட்ட நிலையில் திரு.சபா.இராசேஸ்வரன் அவர்களின் ஆலொசனையிலும் வழி நடத்தலிலும் புலமைப்பரிசில் திட்டமாக மாற்றப்பட்டு அதற்கான நடவடிக்கைகளையும் அவரே மேற்கொண்டார்.இத்திட்டத்தின் வெற்றி அவரையே சாரும்.

அன்றிலிருந்து எமது சங்கம் கடந்த பல வருடங்களாக திறமையுள்ள வறிய மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இன்று இத்திட்டத்தின் கீழ் பல பாதிக்கப்பட்ட திறமையுள்ள வறிய மாணவர்கள் பயன் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக குடும்பத்தின் முக்கிய உழைப்பாளியான தந்தையையோ, அன்றித் தாயையோ, அல்லது இருவரையுமோ போரின் அவலத்தால் இழந்த வறிய மாணவர்களுக்கு முடிந்தளவு உதவிகளை சங்கம் வழங்குகிறது. இத்திட்டம் செம்மையாக நடைபெற கருணையுள்ளம் கொண்ட நன்கொடையாளர்களும், சேவை மனம் கொண்ட சங்கத்தின் நிர்வாகிகளுமே காரணமாய் இருக்கிறார்கள்.

இத்திட்டம் வன்னிப் பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தவென சம்பத்தப்பட்ட உதவி பெறும் மாணவர்கள் படிக்கும் பிரதேசங்களில் நலன் பேணும் குழுக்கள் பாடசாலை மட்டங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இக்குழுக்கள் மூலமாகவே உதவிகள் அம் மாணவர்களைச் சென்றடைகின்றன. பல பிரதேசங்களில் இக்குழுக்கள் நல்ல முறையில் செயல்படுகின்றன. உதவி பெறும் மாணவர்களிடமிருந்து பெற்ற உதவிகளைச் சான்றுப்படுத்திய கடிதங்கள், மாணவர்களின்

நன்றியறிதல் கடிதங்கள் போன்றவற்றைக் காலக்கிரமத்தில் சங்கத்திற்கு அனுப்பிவைத்திருக்கிறார்கள். இதனால் மேலும் பல மாணவர்களுக்கு உதவி பெறும் வாய்ப்பையும் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இக் குழு உறுப்பினர்கள் நிச்சயம் பாராட்டப்பட வேண்டியவர்களே. ஆனால் சில குறிப்பிட்ட பிரதேசங்களின் பாடசாலைக் குழுக்கள் சரிவர இயங்காததன் காரணமாக அப்பிரதேச மாணவர்களுக்கான உதவிகளைத் தொடர்ந்து வழங்குவதில் நிர்வாகிகள் சிரமத்தை எதிர்கொள்கிறார்கள். இதனால் குறிப்பிட்ட பிரதேச மாணவர்களுக்கான உதவிகள் நிறுத்தப்படும் நிலை ஏற்பட்டிருப்பது மன வருத்தத்தை அளிக்கின்றது. சேவை மனப்பாங்கு கொண்டு இப் பிரதேசப் பாடசாலைக் குழுக்கள் நடவடைக்கைகளை எடுப்பார்களாயின் மேலும் பல திறமையுள்ள வறிய மாணவர்கள் பயன் பெறுவர் என்பது திண்ணம்.

மேலும் இத்திட்டத்தின் கீழ் எமது வன்னிப் பிரதேச வறிய மாணவர்கள் கல்வியில் மேம்பட இங்குள்ள பலர் உதவிகளை வழங்க முன் வரவேண்டும். இன்றும் பல பாடசாலைகளில் இருந்து திறமையுள்ள வறிய மாணவர்களின் பட்டியல்கள் சங்கத்திற்கு கிடைத்தவண்ணம் இருக்கின்றது. எல்லா மாணவர்களின் கோரிக்கையையும் நிவர்த்தி செய்யுமளவுக்கு சங்கத்தின் நிதி போதுமானதாக இல்லை. எனவே பலர் நன்கொடைகள் வழங்கி இம் மாணவச் செல்வங்களின் அறிவுப்பசியைப் போக்க முன்வரவேண்டும் என சங்கத்தின் சார்பில் பணிவோடு வேண்டுகிறேன்.

திரு சி. யோகராசன் MCSE.
தலைவர் (1997/1998)
வ. த. ச. க. அமையம் - கனடா.

இவையும் கவியோ?

திறமை யற்று வெறுமை கொண்டு
புலமை காட்ட விளையும் கவிதை
வறுமை மிகுந்த வெற்றுச் சொல்
குவிந்த பதரே தூற்றிய நெல்முன்.

வன்னி நல்ல வன்னி

வன்னி நல்ல வன்னிதான் சுப்பண்ணா
அது சிங்களவன் கையிலிப்போ இல்லண்ணா

பண்டார வன்னி மன்னன் ஆண்டமண்
அரியாத்தை வீரப்பெண்ணும் வாழ்ந்த மண்

வந்தோரை வாழவைக்கும் வன்னிமண்
பரம்பரையாய் வன்னியர்கள் வாழ்ந்தமண்

வன்னி நல்ல வன்னி

சிங்களவன் கால்பட்டுச் சிதைந்தமண்
புலிகள் ஓயாத அலைமூன்றில் மீட்டமண்

தம்பி பிரபாவைப் போற்றும் மண்
தரணி புகழ் படையணிகள் வாழும் மண்

வன்னி நல்ல வன்னி

புலிகளை அழிப்பதாகச் சுப்பண்ணா
சந்திரிக்கா சபதமிட்டா சுப்பண்ணா

ஆட்டலறி வேண்டிவந்தா சுப்பண்ணா
அண்ணனிடம் கொடுத்துவிட்டா சுப்பண்ணா

புலிகள் ஆட்டலறி அடித்தஅடி சுப்பண்ணா
அண்டமெல்லாம் அதிருதடா சுப்பண்ணா

ஆளைவிட்டா போதுமென்று சுப்பண்ணா
ஓடிவிட்டான் சிங்களவன் சுப்பண்ணா

வன்னி நல்ல வன்னி

புலிக்கொடியும் பறக்குது பார் சுப்பண்ணா
புதுயுகமும் படைத்திடுவோம் சுப்பண்ணா

வன்னி இப்போ எங்கள் கையில் சுப்பண்ணா
நான் வழமுடன் வாழப்போறேன் சுப்பண்ணா

வன்னி நல்ல வன்னி

நிவேதிதா செல்வா
கனடா

புலமைப்பரிசில் என்னும் எம் குழந்தை.....

வன்னிப் பிரதேசத்தில் உள்ள ஒரு சில வறிய குடும்பங்களுக்காவது எமது அமையத்தின் உதவி நேரடியாகச் சென்றடைய ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும் என்பது என்னுடைய விருப்பமாக இருந்தது. நெடுங்கேணியைச் சேர்ந்த மங்களம் என்பவரும் அவரது மனைவியும் ஒரே நேரத்தில் ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்டார்கள். அநாதரவான அவர்களின் பிள்ளைகளுக்கு எதாவது உதவியை எமது சங்கம் செய்யவேண்டும் என்ற எனது விருப்பத்தை 1998ம் ஆண்டு செயற்குழுவிடம் தெரிவித்தேன். அத்துடன் இதுபோன்று எமது பிரதேசத்தில் வாழும் தாய்தந்தையரை இழந்து பாதிப்புக்குள்ளான பிள்ளைகளின் விபரங்கள் கிடைத்தால் நேரடியாகவே முடிந்தளவு பணத்தை அவர்களுக்கு அனுப்பி உதவலாம் என்றும் தெரிவித்திருந்தேன்.

தனிப்பட்டமுறையில் நேரடியாக நாம் செய்ய முற்படும் இந்த உதவிகள் பாதிப்புக்குள்ளான பிள்ளைகளை முழுமையாகச் சென்றடையாது அப்பிள்ளைகளைப் பராமரிப்பவர்களுக்கு நாம் அப்பணத்தை அனுப்பவேண்டும். அவ்வாறு அனுப்பப்படும் பணம் அப்பிளைகளது கல்விக்கோ அல்லதுமுன்னேற்றத்திற்கோ பயன்படுத்தப்படுமா? என்ற விடயங்கள் செயற்குழுவில் ஆராயப்பட்டன. முடிவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்து பொதுச்சேவை ஈடுபாடு கொண்ட பிரமுகர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்றைத் தயாரித்து அவர்களுடன் இது விடயமாகத் தொடர்பு கொள்வது என்று தீர்மானித்தோம்.

அன்றும் இன்றும் இத்திட்டத்தின் வெற்றிக்காகப் பங்காற்றிவரும் திரு. ச. இராசேஸ்வரன் அவர்களினால் இப் புலமைப்பரிசில் திட்டத்திற்கான செயற்திட்டம் வடிவமைக்கப்பட்டு ஏற்கனவே எம்மால் தெரிவு செய்யப்பட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுள்ள பிரமுகர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. பிரிவுகள் தோறும் தகுதிவாய்ந்த பிள்ளைகளைத் தெரிவு செய்து இத்திட்டத்தைச் செயற்படுத்துவதில் எம்முடன் பங்கு கொள்ளமுடியுமா என்று கேட்டிருந்தோம். பல மாதங்களாகியும் அவர்களிடமிருந்து எந்தவித பதிலும் வராமல் போகவே வவுனியாவில் நாம் நேரடியாகத்

தொடர்பு கொள்ளக்கூடிய நிலையில் இருந்த சில பிரமுகர்களுடன் தொடர்பு கொண்டு எப்படியாவது இத்திட்டத்தினை ஆரம்பித்து

வைப்பதற்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். அவர்கள் இத்திட்டத்தினை அங்கு அமுல்படுத்துவதில் உள்ள சிரமங்களை எடுத்துக் கூறியிருந்தார்கள். இருப்பினும் தம்மால் இயன்ற முயர்ச்சிகளை எடுப்பதாக உறுதியளித்து, ஆரம்ப முயர்ச்சியாக மூன்று பிள்ளைகளைத் தெரிவு செய்து அனுப்பியிருந்தார்கள்.

இப்படி ஆரம்பித்த இத்திட்டம் தொடர்ந்துவந்த செயற்குழுக்களின் விடாமுயர்ச்சியால் பல பிள்ளைகளின் கண்ணீரைத் துடைக்கும், அறிவை வளர்க்கும், வாழ்வை வழம்படுத்தும் திட்டமாக வளர்ச்சியடைந்து வருவதனையிட்டு நெஞ்சம் நெகிழ்கின்றேன். இத்திட்டத்தினால் பயனடைந்துவரும் பிள்ளைகள் நன்றிப் பெருக்குடன் கடிதங்களை அனுப்புகின்றார்கள் என்பதனை அறியும்போது அதைவிடப் பெரும்பயன் வேறென்ன எங்களது அமையத்திற்கு இருக்கமுடியும் என்று எண்ணத் தோன்றுகின்றது.

இங்கிருந்து நாம் இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த விரும்பினாலும் கூட பாதிப்புக்குள்ளான பிரதேசங்களுடன் தெடர்புகளைப் பேணுவதில் பலவிதமான இடையூறுகளையும் சிக்கல்களையும் நாம் எதிர்நோக்கவேண்டி உள்ளது என்பதனை ஏற்றுக்கொண்டாக வேண்டும். இருந்தாலும் இத்திட்டத்தினால் பிள்ளைகள் பயனடைந்து வருகின்றார்கள் என்ற தகவல் அங்குள்ளவர்களைச் சென்றடையும்போது நிட்சயம் அவர்களாகவே தொடர்பு கொள்ள முயற்சிப்பார்கள்.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து உதவி கோரும் பிள்ளைகளின் தொகை அதிகரிக்கும்போது கனடாவில் அமையம் உங்களது உதவியினை நாடிவரும். அப்போது உங்களால் இயன்ற உதவியைச் செய்து வாழ்க்கையோடு போராடும் எமது பிள்ளைகளுக்கு உதவ முன்வரவேண்டும் என்று உங்களை உரிமையோடு கேட்டுக் கொள்கின்றேன்.

ஆற்றலும் அடக்கமும் நிறைந்த தற்போதைய செயற்குழு இப் புலமைப்பரிசில் திட்டத்தினை நடை முறைப்படுத்துவதில் பெரும் முயர்ச்சி எடுப்பதையிட்டு அவர்களுக்கு எனது நன்றியையும் பாராட்டுதலையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. க. கணபதிப்பிள்ளை
1998/99ம் ஆண்டு தலைவர்
வ. த. ச. க. அமையம்
கனடா.

புலமைப்பரிசில் திட்டமும் நாமும்.....

சகல வழங்களும் பெற்று வழங் கொழித்த வன்னி மண்ணில் வாழ்ந்த வன்னி மக்கள் அரசாங்கத்தின் திட்டமிட்ட ஆக்கிரமிப்பாலும் திட்டமிட்டு மறுக்கப்பட்ட அடிப்படைத் தேவைகளான மருத்துவம் உணவு போன்றவை தேவைக்கேற்பக் கிடைக்காமல் எம்மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டு மரங்களுக்குக் கீழும் பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் தங்கிப் பசி பட்டினியாலும் வருத்த துன்பத்தாலும் வாழ வழியின்றித் தப்பிப் பிளைக்க வழி தெரியாது தவித்த வறிய மக்களுக்குக் கனடா வாழ் வன்னியைச் சேர்ந்தவர்களாகிய நாம் முற்றாக அவர்கள் துன்பத்தினைப் போக்க முடியாவிட்டாலும் எங்களால் முடிந்த ஒரு மிகச் சிறிய உதவியையேனும் செய்ய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடுதான் எங்கள் வன்னி நலன்புரிச் சங்கம் 1996ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் ஒரு சிறிய பகுதியினரால் முதன் முதலில் அமைக்கப்பட்டடு அதன் நிர்வாக நடவடிக்கைகள் 1997ம் வருடத்தின் ஆரம்பத்தில் துரிதமாக நடைமுறைப் படுத்தப்பட்டது. இதன் விழைவாக இவ்வருடத்தில் அதிகமான அங்கத்தவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள். இதனால் எங்களுக்கு என்றொரு அமைப்பும் ஒரு குறிப்பிட்ட தொகைப் பணமும் சேமிக்க முடிந்தது. இதுவே சங்கத்தினது வளர்ச்சியின் முதற்படி என்று சொல்லலாம்.

1998ம் ஆண்டு தலைமைத்துவத்தை ஏற்றுக் கொண்ட திரு க. கணபதிப்பிள்ளை அவர்கள் எத்தனையோ குடும்பங்களின் பிள்ளைகள் பெற்றோரை இழந்து அடிப்படைக் கல்வியேனும் கற்க முடியாமல் தவிக்கின்றார்கள். விவேகமான மாணவர்களாக அவர்கள் இருந்தும் வசதியீனத்தால் கல்வியைத் தொடர முடியாமல் உள்ளார்கள். அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்ற தனது கருத்தினை நிர்வாகசபையில் வெளிப்படுத்தினார். சபை அதனை ஆராய்ந்து அதனை அமுல்படுத்த ஏகமனதாகத் தீர்மானம் மேற்கொண்டது. இதன் பிரகாரம் ஒரு புலமைப் பரிசில் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு அதற்கமைய வன்னியில் உள்ள பிரமுகர்களோடு தொடர்பு கொண்டு வசதியற்ற திறைமையுள்ள சில மாணவர்களின் பெயர்ப் பட்டியல் பெறப்பட்டு மாதாந்தப் பணம் அவர்களுக்கு அனுபப்பட்டது.

தொடர்ந்து சில தடைகள் ஏற்பட்டாலும் 2000ம் ஆண்டு நிர்வாகசபையானது இத்திட்டத்தினைத் துரிதப்படுத்தும் நோக்கில் முன்னாள் நிர்வாகசபை உறுப்பினர்கள் சிலரையும் இணைத்து ஒரு தனியான குழு அமைக்கப்பட்டு அதனிடம் இத்திட்டத்தின் முழுப் பணிகளும் ஒப்படைக்கப்பட்டது. அவர்களது துரித முயற்சியாலும் அயராத உழைப்பினாலும் 23 மாணவர்கட்கு புலமைப்பரிசில் வழங்கப்பட்டதை நாம் பெருமையாக எண்ணுகின்றோம். கனடா வாழ் தமிழ் மக்களிடம் இருந்து பெறப்பட்ட பாரிய உதவிகளும் இக்குழுவின் உறுப்பினர்களான திருவாளர்கள் ச. இராசேஸ்வரன், கா. யோகநாதன், இ. தங்கேஸ்வரன், த. பாலசுப்பிரமணியம், த. சிவபாலு ஆகியோரின் செயற்திறனுமே இத்திட்டத்தின் வெற்றிக்குக் காரணம் என்பதனை நன்றியுடன் தெரிவிப்பதில் பெருமையடைகின்றேன். இதேநேரத்தில் இப் புலமைப்பரிசிலுக்காக நிதி வழ்கிய, வழங்கிக் கொண்டிருக்கின்ற பெருந்தகைகளுக்கும் வன்னி மக்களாகிய நாம் நன்றிக்கடன் பட்டுள்ளோம். அவர்கள் தங்கள் ஆத்ம திருப்திக்காச் செய்யும் இத்தொண்டு மேன்மேலும் வளர ஆண்டவன் அவர்களுக்கு சகல வசதிகளும் நல்கி ஆசீர்வதிப்பாராக. இம் மாணவர்களை வன்னியில் இருந்து தேர்வு செய்து அனுப்பும் பொது நோக்கங் கொண்ட பெருமக்களுக்கும் எமது அமையம் நன்றி கூறிக் கொள்கின்றது. புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ ஒரு மாணவருக்கு வருடத்திற்கு 240.00 டொலர்கள் வழங்கப்படுகின்றது. இத் தொகையினை வன்னியைச் சேராத பிறபகுதி மக்களும் உதவியாக வழங்கி வருகின்றார்கள். இன்று தெரிவு செய்யப்பட்ட அதிகமான மாணவர்களது பெயர்ப்பட்டியல் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில் வன்னியைச் சேர்ந்த ஒவ்வொருவரும் பண உதவி செய்ய முன்வந்தால் இத்திட்டம் பெரு வெற்றி அளிக்கும் என்பது திண்ணம்.

தற்போது கனடாவில் எத்தனையோ தமிழி இளைஞர்கள் சட்டம் ஒழுங்குகளை மதிக்காமால் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதை எண்ணும்போது கவலையளிக்கிறது. ஆதுபோல் அல்லாமல் அவர்கள் இப்படியான நல்ல திட்டங்களுக்கு உதவி வழங்கித் தாங்களும் முன்னேறி சமூகத்தையும் முன்னேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். மேலும் இத்திட்டம் பற்றித் தெரியாவர்களுக்குத் தெரியப்படுத்தி அவர்களின் உதவிகளையும் பெற்று சிறிய செடியாக உருவெடுத்திருக்கும் திட்டம் பெரிய ஆலமரமாக தளைத்தோங்கி பல வறிய மாணவர்களின் கல்விக்கு வழிவகுக்க வேண்டுமென வேண்டிக் கொள்கின்றேன்.

திரு இ.சிவராசா.
தலைவர் 2000/01ம் ஆண்டு
வ.த.ச.க. அமையம் - கனடா.

மு/மல்லாவி மத்திய கல்லூரி
M/ MALLAVI CENTRAL COLLEGE

MU/MALLAVI CENTRAL COLLEGE

Yogapuram,
யோகபுரம்,
Sri Lanka,
இலங்கை

15.11.200[illegible]

தலைவர்,
வன்னி, தமிழ் சமூக கலாச்சார அமையம்,
கனடா.

தலைவர்,
பாண்டியன்குளம் துணுக்காய் அபிவிருத்தி நிறுவனம்,
ஊடாக.

நன்றி தெரிவித்தல்.

எமது கல்லூரியில் தரம் 8இல் கல்விகற்கும் பா. பத்மராசனி எனும் மாணவி மிகவும் வறுமைப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர். திறமை மிக்கவர். இவர் தனது கல்வியைத் தொடர்வதற்கு தங்கள் ஆதரவு பெரிதும் உதவும். போர்ச்சூழலில் வறுமைத் துயருக்கு மத்தியிலும் கற்கத்துடிக்கும் எமது பரிதாபத்திற்குரிய மாணவ சமுதாயத்திற்கு உதவ முன்வந்த தங்களது பெருந்தன்மையையும், இவ்வுணர்வையும் நாம் மனப்பூர்வமாக பாராட்டுவதுடன் எமது இதயம் கனிந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் பெருந் தொகையான வறிய மாணவர்களுக்கு கல்வி புகட்டும் நம்பிக்கை நட்சத்திரமாக மிளிரும் எமது கல்லூரி தொடர்ந்தும் தங்கள் அமையத்தின் பேராதரவை அவாவி நிற்கின்றது.

– நன்றி –

PRINCIPAL
MALLAVI CENTRAL COLLEGE
MALLAVI.

பிரதி/*

அதிபர்.

மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்
M / Pandiyankulam Mahavidyalayam

நட்டாங்கண்டல்
NADDANKANDAL

07.04.2001

தலைவர் அவர்கட்கு,
வன்னித் தமிழ் சமூக கலாச்சார அமையம்,
கனடா.

இணைப்பாளர் ஊடாக,
பா.உ.அ.கழகம்,
போகபுரம்.

அன்புடையீர்,

வறுமைக்குட்பட்ட பிள்ளைகளுக்கான புலமைப் பரிசில் கொடுப்பனவு.

மேற்படி எமது பாடசாலையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட செல்வி விஜயனிக்கம் நாகினி என்ற மாணவிக்கு மேற்படி தலைப்பின் கீழ் தங்களின் அனுசரணையுடன் பாண்டியன் -குளம் துணுக்காய் அபிவிருத்திக்கழகத்தினால் மாதாந்தக் கொடுப்பனவாக ரூபா1000 வழங்கப்பட்டுவருகின்றது. கல்வியில் மிக ஆர்வம் உள்ள இம் மாணவிக்கு தங்களால் வழங்க -ப்பட்ட இக் கொடுப்பனவு கல்வியை மேம்படுத்த பெரிதும் உதவுகின்றது. இதற்காக தங்களின் அமையத்திற்கும் இதனைப் பெற்றுத்தரும் பா.உ.அ.கழகத்திற்கும் எனது சார்பிலும் எமது பாடசாலை சார்பிலும் மனம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள் -கின்றேன்.

அத்துடன் எமது பாடசாலையில் கல்வி பயிலும் தந்தையை இழந்த வறுமையில் உள்ள கல்வியில் மிகவும் ஆர்வம் உள்ள மாணவியான செல்வி நர்மிளா புஸ்பலிங்கம் என்ற மாணவியின் கல்வி வளர்ச்சிக்கு தங்கள் கொடுப்பனவை விஸ்தரித்து அம் மாணவியின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு செயற்படுவீர்கள் என்ற எதிர்பார்ப்புடன் விண்ணப்பிக்கின்றேன். தங்கள் அமையத்தின் சேவைகள் மேன் மேலும் வளர்ந்தோங்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி.

....Y. Thilla.........
அதிபர் Mrs.Y. Thillainathan
Principal
Mu/Pandiyankulam M.V
Naddankandal

சக்தி விநாயகர் -
- பெண்கள் விடுதி
மன்னார்
08.08.2001

ஐயா!

ஜெயவேல் கிருஸ்ணகுமார் ஆகிய நான் மன்/சக்தி விநாயகர் இந்து கல்லூரி (தேசிய பாடசாலை) யில் 13ம் ஆண்டு கலைப் பிரிவில் கல்வி பயின்று வருவதோடு, சக்தி விநாயகர் பெண்கள் விடுதியில் அதிபர். திரு. குமாரசிங்க ராஜா அவர்களின் பராமரிப்பில் வளர்ந்து வருகின்றேன். எனது தாய் வழி உறவினர்களோ தந்தை வழி உறவினர்களோ யாரும் இல்லாத நிலையில் என் க.பொ.த உயர்தரக் கல்வியை கற்பதற்காக நீங்கள் எனக்கு செய்த பேருதவியை நானறிவேன். எனது நிலையில் என்னுடைய எதிர் காலத்தை சிறப்பானதாக அமைப்பதற்கு நீங்கள் செய்யும் இந்த உதவியினால் என் மனம் பூரிப்படைகின்றேன். அதற்காக நான் நன்றி கூறுகின்றேன். நீங்கள் தந்த உதவி என்னுடைய உயர்தரக் கல்வியை திறம்படச் செய்வதோடு அக்கறையும் ஊக்கமும் அளித்தது என்பதை அதனால் அறியத் தருகின்றேன். அத்துடன் நான் எனது மேற்படிப்பைத் தொடர்வதற்கும் உங்கள் உதவியையும் நல்லாசிகளையும் வேண்டி நிற்கின்றேன்.

மேலும் நீங்கள் செய் ஆக்கத்திறனுடைய பெரும் இவ் அரும்பணி மேன் மேலும் வளர வேண்டும் என வாழ்த்தி நிற்கின்றேன். இதே போல எமது பாடசாலையிலும், விடுதியிலும் என் போன்ற சகோதர சகோதரிகள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும். உங்கள் நோக்கு அவர்களிடமும் சென்றடைய வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

இப்படிக்கு
உண்மையுள்ள,
ஜெ. கிருஸ்ணகுமார்.

ஆண்கள் விடுதி
ஸ்ரீ சித்தி
மன்னார்.

கனம் :-

மதிப்புக்குரிய தலைவர் வன்னித் தமிழ் கலாச்சார பொறுப்பாளர் அவர்களுக்கு அறியத்தரும் விடயம் என்னவென்றால், நீங்கள் எங்கள் ஏழ்மை நிலையை அறிந்து எனக்கு உதவி செய்கின்றீர்கள் அதற்கு நன்றி எங்கள் குடும்பம் கிளிநொச்சியில் இருந்து இடம் பெயர்ந்து வந்து பேசாலை ORC முகாமில் வாழ்கின்றோம். எனது அப்பா கத்தியனாலயிடம் சித்திரவதைப்பட்டு இருக்கிறார். அதற்காக ஒரு வேலையும் செய்ய மாட்டார். எனது அம்மா நிரந்தர நோயாளி, அதனால் எனக்கு விடுதிப் பணம் கொடுக்க முடியாது. எனவே நீங்கள் இன்னொருமாதமும் இந்த உதவியைச் செய்யவும். நான் உங்கள் இலட்சியத்தை நிறைவேற்றுவேன்

நன்றி

இப்படிக்கு
உண்மையுள்ள
மாணவன்.
ஜெ. ஜசந்திரராஜன்

புலமைப் பரிசில் வறிய மாணவர்களின் சொத்து

திரு ச. இராசேஸ்வரன். B.A (Hons), MCSE
புலமைப்பரிசில் திட்டக்குழு
வ.த.ச.க.அமையம் - கனடா.

வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையமானது 1997ம் ஆண்டு கனடாவில் உதயமாக்கப்பட்டது. இதனது ஆரம்ப முன்னோடிகளாகப் பலர் இருந்திருக்கின்றார்கள். இவர்கள் அப்போது வன்னி நலன் புரிச் சங்கம் என்ற பெயரிலேயே இச் சங்கத்தினைத் தாபித்து அதற்கொன ஒரு யாப்பினையும், ஒரு குறியீட்டுச் சின்னத்தினையும் தயாரித்து இயங்கிவந்தார்கள். இச் சங்கம் ஆரம்பித்த முதலாவது வருடத்திலேயே மூத்த மாவீரன் பண்டாரவன்னியனுக்கு விழா எடுக்கவேண்டும் என்பதனையும், அவ் விழாவின்போது ஒரு மலரினைக் கொம்பறை என்ற பெயரில் வெளியிடவேண்டும் என்றும் நற்சிந்தனையுடன் செயற்பட்டு அவற்றைத் தமது கன்னி நடவடிக்கையாகச் செய்யத் தொடங்கினார்கள். அந்த வகையில் இங்கு எமக்கு இச் சங்ககத்தினை ஈன்றெடுத்துத் தந்த அதனது முதற் தலைவர் திரு. சி. யோகராசன் அவர்கட்கும் அவரோடு தோள் கொடுத்து நின்ற அப்போதைய நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும் என்றென்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இதனை அடுத்து 1998ம் ஆண்டில் இச் சங்கத்தினைப் பொறுப்பேற்ற தலைவர் திரு க. கணபதிப்பிள்ளை அவர்களின் தலைமையிலான புதிய நிர்வாகசபையானது அதனை ஒரு இலாப நோக்கற்ற சங்கமாகக் கனடாவின் ஒன்ராரியோ அரசாங்கத்தில் பதிவு செய்வதற்கான நடவடிக்கையில் இறங்கியது. அந்நேரத்தில் அதனது பெயரானது தற்போதுள்ள பெயராக அதாவது வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையம் என மாற்றி அமைக்கப்பட்டுப் பதிவுக்கு உட்படுத்தியது. மேலும் இக்கால நிர்வாக சபையானது வழமை போன்று வன்னி விழா 1998னை சிறப்பாக நடாத்தியதோடு ஒன்ராரியோ மானிலத்தில் இருந்து எமது ஏனைய சமூகச் சங்கங்கள் வெளியிடுகின்ற மலர்களை விடச் சிறப்பான மலரொன்றினை யாவரும் விரும்பத்தக்க வகையில் வெளியிட நடவடிக்கை எடுத்தமையையும் அத்தோடு சிறப்பான அட்டைப்பட அமைப்பு முறையினை உருவாக்க நடவடிக்கை எடுத்தமையையும் இங்கு பாராட்டத்தான் வேண்டும். இதன்பின்பே ஏனைய எமது சமூகச் சங்கங்களும் எமது சங்கத்தின் தொடர்ந்து வந்த நிர்வாகசபைகளும் இப் புதிய யுக்தியினைக் கையாளத் தொடங்கின. இந்தவகையில் அவ்வாண்டுக் கொம்பறை மலரின் சிருஸ்டிகளாக என்னோடு பணிபுரிந்த திரு சி. யோகராசன், திரு சே. சிவாசீலன் ஆகியோருக்கும் அட்டைப்பட வடிவமைப்பாளர் ஓவியக்கலாவாருதி மரியநாயகம் அவர்கட்கும் சிறப்பு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள வன்னி மக்களும் இலக்கியச் சஞ்சிகை வெளியீட்டாளர்களும் கடமைப்பட்டவர்களாவர். இங்கு ஓர் சிறப்பு என்னவெனில் இக் கொம்பறை மலர் அட்டைப்படத்தினது வடிவமைப்பே திரு மரியநாயகம் அவர்கட்கு மக்கள் மத்தியில் பாரிய கௌரவத்தினை ஏற்படுத்திக் கொடுத்திருக்க அதனை அடுத்துவந்த 1999ம் ஆண்டு நிர்வாகசபையானது அவருக்குக் கௌரவப்பட்டம் வழங்கிக் கௌரவிக்க முன்வந்தது.

தொடர்ந்தும் இந்த நிர்வாகசபையானது அமையத்திற்கு ஓர் பதிய திருத்திய யாப்பினை அமைக்கும் முயர்ச்சியில் இறங்கி அதனையும் பொதுச்சபையின் அனுமதியுடன் நடைமுறைக்குக் கொண்டு வந்தது. வன்னிச் சங்கம் என்பது கனடாவை மாத்திரம் மையமாகக் கொண்டு செயற்படாமல், அதனது செயற்பாட்டினை தாய்மண் வன்னிப்பிரதேசம் நேக்கி நகர்த்த வேண்டுமென்ற மனப்பாங்கில் வசதியற்ற நிலைகளினால் கல்வியைத் தொடர முடியாத மாணவர்கட்கு பொருளாதார உதவியினை வழங்குவதன் மூலமாக ஆர்வமுள்ள மாணவர்களது கல்வித் தரத்தினை உயர்துவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்ற திட்டம் நிர்வாகசபையினால் எடுக்கப்பட்டது. இதன் விளைவாக வன்னிப் பிரதேசக் கல்விப் புலமைப்பரிசில் திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூல வரைவுகளை உருவாக்கும் பொறுப்பு அன்றைய நிர்வாகசபை உறுப்பினராக இருந்த என்னிடம் ஒப்படைக்கப்பட்டபோது அதற்கான வரைவுகளை அழுத்தந் திருத்தமாக உருவாக்கி நிர்வாகசபைக்குச் சமர்ப்பித்தபோது அதனை ஏற்றுச் செயற்படத் தொடங்கினர்.

கல்விப் புலமைப் பரிசில் திட்டத்திற்கான முதலாவது நிதிக் கொடுப்பனவு திரு. எஸ். விஜயபாரதி (வவுனியா) அவர்களினால் உத்தியோக பூர்வமாக 1998ம் ஆண்டு வன்னி விழாவின்போது அன்றைய தலைவர் திரு க. கணபதிப்பிள்ளை அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் இவ்வாண்டில் இத் திட்டத்திற்கென நிதி வழங்கியவர்கள் திரு க. பத்மநாதன் குடும்பத்தினர் (குமுழமுனை), திருமதி ச. கமலம்மா குடும்பத்தினர் (தண்ணீரூற்று) ஆகியோர்களாவர்.

1999ம் ஆண்டில் இவ் அமையத்தின் நிர்வாகப் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட திரு கை. பஞ்சாட்சரம் அவர்களின் தலைமையிலான நிர்வாகசபையானது திரு. எஸ் விஜயபாரதி அவர்களின் நன்கொடையினைப் பயன்படுத்தி முதற்கட்ட நடவடிக்கையாக வவுனியா மாவட்டத்தில் புலமைப்பரிசிலினைக் கொடுப்பதற்குரிய ஆரம்ப முயர்ச்சியில் இறங்கியது.

அதனை அடுத்து 2000ம் ஆண்டில் அமையத்தினது நிர்வாக சபை மாற்றமானது மாசி மாத்தில் இடம்பெற்றது. அதன் தலைவராக நிர்வாகசபையினைப் பொறுப்பேற்ற திரு இ. சிவராசா அவர்களும் நிர்வாகசபை உறுப்பினர்களும் எடுத்துக் கொண்ட முயர்ச்சியினால் புலமைப் பரிசில் திட்டத்தினைச் செயற்படுத்துவதற்கொன ஒரு விசேட குழுத் தெரிவு செய்யப்பட்டது. அக்குழுவின் உறுப்பினர்களாகத் திருவாளர்கள் கா. யோகநாதன், ச. இராசேஸ்வரன், த. பாலசுப்பிரமணியம், இ. தங்கேஸ்வரன், சூ. சேவியர், க. கணபதிப்பிள்ளை என்போருடன் திரு த. சிவபாலு அவர்கள் ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டார்கள். இக் குழுவானது காலத்திற்குக் காலம் எடுத்துக் கொண்ட முயர்ச்சியினால் நிர்வாகசபையினது ஒத்துழைப்புடன் மிகக் கூடியளவு மாணவர்களை புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ்க் கொண்டுவந்து நிதிபெற வழிவகுத்தது.

2001ம் ஆண்டில் அமையத்தின் நிர்வாகசபைப் பொறுப்பினை திரு பெ. வி. கெனடி தலைமையில் பொறுப்பேற்றுக் கொண்ட தற்போதைய நிர்வாகசபையானது தொடர்ந்தும் புலமைப்பரிசில் திட்டத்திற்கான விசேட குழுவினைத் தொடர்ந்தியங்க அவ் அங்கத்தவர்களது பதவிக் காலத்தினை நீடித்ததுடன் தனது முதல் நடவடிக்கையாக இத்திட்டத்திற்கு நிதிசேகரிக்கும் நடவடிக்கையிலும் இறங்கியது. அதன்மூலமாக 5000.00 டொலர்களை நிதியுதவிக் காட்சிமூலமகப் பெற்றுக் கொண்டது. மேலும் இவ்வருடத்தில் கடந்த வருடத்தில் புலமைப்பரில் பெற்றவர்களில் இருந்து தொடர்ந்தும் அதனைப் பெறுவதற்குத் தகுதியானவர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு நிதி வழங்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருப்பதுடன் புதிதாக 17 மாணவர்களையும் 2001ம் ஆண்டு ஐப்பசி மாதம் வரையில் இத்திட்டத்தின் கீழ் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்து வருகின்றது. மொத்தமாக இதுவரையில் புலமைப்பரிசில் பெறும் மாணவர்களுக்காக ஏறக் குறைய 7200.00 டொலர்கள் செலவாகும் எனவும் மதிப்பீட செய்யப்பட்டுள்ளது.

பின்வரும் அட்டவணையானது புலமைப்பரிசில் திட்டம் தொடர்பாக மேற்குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தினையும் உள்ளடக்கிய சில முன்னேற்றங்களைப் புள்ளிவிபரரீதியாக எடுத்துக் காட்டுகின்றது.

புலமைப்பரிசில் திட்டம்
வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்கள்.

பொது மக்களிடமிருந்து திரட்டப்பட்ட நிதி விபரங்கள்.

ஆண்டு	நிதிவழங்க முன்வந்தோர்	மொத்த நிதிவழங்க இணங்கிய தொகை	நிதி திரட்டப்பட்ட தொகை	முன்னேற்றம் பற்றிய குறிப்புக்கள்.
1998	03	815.00 டொலர்	615.00 டொலர்	
1999	00	00	200.00	1998க்குரிய காசோலைகள்.
2000	15	3840.00	3257.80	
2001	16	3840.00	2240.00	

ஆதாரம்: புலமைப்பரிசில் திட்டக் குழு அறிக்கை. வ. த. ச. க. அ.

இவ் அட்டவணையினை நோக்குமிடத்து 1998, 2000, 2001ம் ஆண்டுகளிலேயே பொது மக்களிடமிருந்து நிதி திரட்டப்பட்டுள்ளது என்பது புலனாகின்றது. நிதி வழங்க முன்வந்தோர் தொகையானது அதிகரித்தபோது அங்கு திரட்டப்பட்ட நிதியினது அளவும் அதிரித்துச் சென்றிருப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது. இருப்பினும் நிதி உதவிகோரி விண்ணப்பித்திருக்கும் மாணவர்களது எண்ணிக்கையானது அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. எனவே கனடாவில் தனிப்பட்டரீதியாக நிதிவழங்க முன்வருவோர் எண்ணிக்கையானது அதிகரிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

கடந்த நான்கு ஆண்டுகளினது புலமைப்பரிசில் செயற்பாட்டில் 2000ம் ஆண்டின் நிதி திரட்டல் நடவடிக்கையானது முன்னனியில் உள்ளது. மேலும் பொது மக்களிடமிருந்து திரட்டப்பட்ட நிதியினைவிட வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையமானது இவ் ஆண்டில் 1440.00 டொலர்களைப் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் மாணவர்கட்கு வழங்குவதற்காக ஒதுக்கித் தந்துள்ளது என்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும். இருப்பினும் இந்நிதி அப்போதிருந்த கேள்வி நிலையினை நிறைவு செய்வதாக இருக்கவில்லை.

புலமைப்பரிசில் திட்டம்
வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்கள்.

புலமைப்பரிசிலின் கீழ் நிதி வழங்கிய விபரங்கள்.

ஆண்டு	நிதி பெற்றோர்	முல்லை மாவட்டம்		வவுனியா மாவட்டம்		மன்னார் மாவட்டம்.	
		எண்ணி	தொகை	எண்ணி	தொகை	எண்ணி	தொகை
1998	00	00	00.00	00	00.00	00	00.00
1999	01	00	00.00	01	220.00	00	00.00
2000	13	04	960.00	05	1200.00	04	960.00
2001	30	13	3120.00	10	2400.00	07	1680.00

ஆதாரம்: புலமைப்பரிசில் திட்டக் குழு அறிக்கை. வ. த. ச. க. அ.

மேற்படி அட்டவணையின் பிரகாரம் புலமைப்பரிசில் பெறுவோர் தொகையானது 2000ம் ஆண்டினைவிட 2001ம் ஆண்டில் இரட்டிப்பிலும் கூடுதலாக அதிகரித்திருப்பதனை அவதானிக்க முடிகின்றது. இந் நிர்வாகசபையினது பதவிக்கால எல்லை முடிவடைவதற்குள் இத்தொகை மேலும் அதிகரிப்படையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய அனைத்து வெற்றிகளுக்கும் புலமைப்பரிசில் திட்டத்திற்கு நிதிவழங்க முன்வருவோர் காட்டி வரும் ஆர்வமும் அதனோடினைந்து தற்போதைய நிர்வாகசபையினரின் அயராத முயர்ச்சிகளும் புலமைப்பரிசில் திட்டச் சிறப்புக் குழுவினது தீவிர முயர்ச்சிகளுமே காணரங்களாகும். மேலும் திட்டக்குழுவில் ஒழுங்காகவும் சிறப்பாகவும் அதனது நிர்வாக நடவடிக்கைகளைப் பேனிவரும் திரு கா. யோகநாதனுக்கு என்றென்றும் நன்றி கூறவும் கடமைப்பட்டுள்ளோம்.

நாம் உண்மையான மனதுடன் ஒன்றுபட்டு உழைப்போமாயின் எங்கள் மாணவர்களில் அதிகமானோரது தரமும் தராதரமும் உயர்வடைவதற்கு வழிகிட்டுவதற்கு வாய்ப்புக்கள் அதிகமா உண்டு. அதனால் நீங்களாக மனமுவந்து உங்களது சொந்தச் சகோதரர்கள் என்று எண்ணி ஒரு சிறு துளியையாவது வருடாவருடம் வழங்க முன்வருவீர்களாயின் உங்கள் ஆத்ம திருப்தியும் மாணவர்கள் முன்னேற்றமும் அதிகரிக்கும் என்பது திண்ணம்.

இளையான் தலைமுறை புரியான் - என்று
தலையான் தலைமுறை வழிகாட்டுமவர்க்கு.

புலமைப் பரிசில் திட்டத்தினது செயற்திட்ட முன்னேற்றங்கள். நிர்வாகசபை ஆண்டு 2001/2002.

நடைமுறை நிர்வாகசபையானது பதவி ஏற்றதிலிருந்து, தனது நிர்வாக ஆண்டு காலப்பகுதியில் வன்னிப் பிரதேசத்தில் மாவட்டரீதியாகப் பின்வரும் விபரங்களைக் கொண்ட தாய் தந்தையரை இழந்தவர்களும், வறியவர்களுமான மாணவர்கட்குப் புலமைப் பரிசில் நிதியினைத் தொடர்ச்சியாக வழங்கி உதவிபுரிந்து வருவதோடு மேலும் சில புதிய மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் நிதி வழங்கவும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அவை தொடர்பான விபரங்கள் பொதுமக்களது பார்வைக்காப் பின்னிணைக்கப்படுகின்றது. மேலும் இந் நிதியினை வழங்குவதற்கு உதவிபுரிந்த அனைத்துப் பெருந்தகையர்கட்கும் அமையம் தனது மனமார்ந்த நன்றிதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

நிதியுதவி பெற்ற மாணவர்	மாவட்டம் உ.அ.அ.பிரிவு	பாடசாலை	புலமைப்பரிசில் வழங்கியவர்கள்.
வவுனியா மாவட்டம் :-			
1. செ. றஜிதா	வவுனியா	நெளுக்குளம் க மகா.வி	திமதி கா.வசந்தாதேவி 757 யோகபுரம், திரு சி. கார்த்திகேசு 758யோகபுரம்.
2. கு. மேரிகனிஸ்டா	வவுனியா	நெளுக்குளம் க மகா.வி	வ.த.ச.க.அமையம்
3. த. பாலகௌரி	வவுனியா	நெளுக்குளம் க மகா.வி	Dr ஐ. ஞானேஸ்வரன், வவுனியா.
4. க. அமலதாஸ்	வவுனியா	நெளுக்குளம் க மகா.வி	Dr ஐ. ஞானேஸ்வரன், வவுனியா.
5. ச. சியாமளா	வவுனியா	ஓமந்தை மத்தியகல்லூரி	வ.த.ச.க.அமையம்.
6. க. யாழினி	வவுனியா	பன்றிகெய்தகுளம் ம.வி	திரு. அ. சண்முகலிங்கம்.
7. வி. மதனிகா	நெடுங்கேணி	நெடுங்கேணி ம.வி	திரு. தா. பரமானந்தம் குடும்பம் பிறம்ரன் கனடா (நெடுங்கேணி).

8. ச. மோகனாம்பிகை	நெடுங்கேணி	நெடுங்கேணி ம. வி	திரு. தா. யோகநாதன் (சிவம்) பிறம்ரன் (நெடுங்கேணி)
9. சா. சஜிதா	நெடுங்கேணி சேனைப்புலவு	நெடுங்கேணி ம.வி	திரு. ச. சதாசிவம் குடும்பம் ஸ்காபுரோ கனடா. (பழம்பாசி)
10. பா. கோபிநாத்	நெடுங்கேணி சேனைப்புலவு	நெடுங்கேணி ம.வி	திரு. ச. சதாசிவம் குடும்பம் ஸ்காபுரோ கனடா. (பழம்பாசி)

மன்னார் மாவட்டம் :-

1. அ. அலக்ஸ்றேகர்	மன்னார்	மன்னார்ப் புனித பாடசா	வ.த.ச.க.அமையம்
2. ந. நந்தபாபு	மன்னார்	மன்னார் சித்தி வினா.இந்	அ. இராமேஸ்வரன் பிறம்ரன் (யாழ்ப்பாணம்)
3. தெ. வசந்தராசன்	மன்னார்	மன்னார் சித்தி வினா.இந்	வ.த.ச.க.அமையம்
4. ஜெ.கிருஸ்ணகுமாரி	மன்னார்	மன்னார் சித்தி வினா.இந்	திருமதி அம்பிகா சிறீகாந்தராசா பிறம்ரன் (நாவற்குளி)
5. ப. பாக்கியலட்சுமி	மன்னார்	புனித ச. பெ.தே. பாடசாலை	திரு. பரா சங்கானை சந்தை.
6. சி. இதயராணி	மன்னார்	பாத்திமா மத்திய மகாவித்	Dr ஐ. ஞானேஸ்வரன், வவுனியா.
7. பி. வ. சுருள்மேரிறெவல்	மன்னார்	புனித ச. பெ.தே. பாடசாலை	திரு பி. எஸ். சூசைதாசன்.

முல்லைத்தீவு மாவட்டம :-

1. பா.பற்குணராசன்	துணுக்காய்	மல்லாவி மத்திய கல்லூரி	வை.இராஜேஸ்வரன் 365யோகபுரம், க.அம்பலவாணர் 364 யோகபுரம்.
2. சு. கோசலா	ஒட்டுசுட்டான்	இடதுகரை அ.த.க பாடசாலை	திரு. க. பாலமனோகரன். முள்ளியவளை.

3. பு. பரணீதரன்	ஒட்டுசுட்டான்	யா.பல்கலைக்கழகம்	திரு. இ. தங்கேஸ்வரன். கற்சிலைமடு.
4. வி. ஜெயரூபன்	முல்லைத்தீவு	யா.பல்கலைக்கழகம்	Dr ஐ. ஞானேஸ்வரன். வவுனியா.
5. செ. ஜெசிக்குமார்	முல்லைத்தீவு	யா.பல்கலைக்கழகம்	வ. த. ச. க. அமையம்.
6. ய. லிங்கேசியா	முல்லைத்தீவு	யா.பல்கலைக்கழகம்	திரு. ரி. தமிழ்ச்செல்வன்.
7. இ. மஞ்சுளா	முல்லைத்தீவு	யா.பல்கலைக்கழகம்	திரு. பத்மநாதன்.
8. து. கலைவாணி	முல்லைத்தீவு	யா.பல்கலைக்கழகம்	திரு.ச. இராசேஸ்வரன்
9. ப. கிருஷா	துணுக்காய்	மல்லாவி மத்திய கல்	வ. த. ச. க. அமையம்.
10. வ. கௌசிகா	துணுக்காய்	மல்லாவி மத்திய கல்	Dr ஐ. ஞானேஸ்வரன் வவுனியா.
11. தே. தேவலக்ஷ்ன்	முல்லைத்தீவு துணுக்காய்	கல்விளான் அ.த. க. பாட	கா.யோகநாதன் 758 யோகபுரம்,பு. புனிதவதி 121 வவுனிக்குளம்.
12. தனுசா குலசிங்கம்	முல்லைத்தீவு துணுக்காய்	யோகபுரம் மாகாவித்தி	பா.விஜயகுலசிங்கம் முன்னாள்கிளை முகாமையாளர், துணுக்காய் ப.நோ.கூ.சங்கம் 392யோகபுரம்.
13. ராகினி புஸ்பநாதன்	முல்லைத்தீவு பாண்டியன்குளம்.	பாண்டியன்குளம் மகாவித்	பா.விஜயகுலசிங்கம் முன்னாள்கிளை முகாமையாளர், துணுக்காய் ப.நோ.கூ.சங்கம்392யோகபுரம்.

வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையத்தினது புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 2000/2001ம் ஆண்டில் நிதியுதவி பெற்றுக் கொண்டிக்கும் மாணவர்கள் சிலர் கீழே

முல்லைத்தீவு மாவட்டம்:~

து. கலைவாணி
முள்ளியவளை.

இ. மஞ்சுளா
குமுழமுனை.

ய. லிங்கேசியா
வற்றாப்பளை.


வி. ஜெயரூபன்
முள்ளியவளை.


தே. தேவலக்ஷன்
கல்விளான்.

பா. பற்குணராசன்
மல்லாவி.

ப. கிருஷா
மல்லாவி.

வ. கௌசிகா
மல்லாவி.

மன்னார் மாவட்டம்:~


தெ. வசந்தராஜன்
மன்னார்.

ந. நந்தபாபு
மன்னார்.

ஜெ. கிருஷ்ணகுமாரி
மன்னார்.

பேச்சுப் போட்டி 2001ம் ஆண்டு

பாலர் பிரிவு:-

முதலாம் இடம்

இ. சர்மியா

இரண்டாம் இடம்

அ. அருண்சியா

மூன்றாம் இடம்

செ. துளசிகா

கீழ்ப் பிரிவு:-

முதலாம் இடம்



யோ. ஜெகதீஸ்வரன்

இரண்டாம் இடம்

அ. பூரம்யா

மூன்றாம் இடம்

ஜெ. பிரியங்கா

மத்திய பிரிவு:-

முதலாம் இடம்

ச. ஜதீபா

இரண்டாம் இடம்

ஜெ. சிந்துசா

மூன்றாம் இடம்

ஜெ. செந்தூரன்

மூன்றாம் இடம்

பு. சிவகௌரி

பேச்சுப் போட்டி 2001ம் ஆண்டு

மேற்பிரிவு பிரிவு

முதலாம் இடம்



ஸ்ரீ. தர்சன்

இரண்டாம் இடம்



வே. மயூரன்

மூன்றாம் இடம்



பி. யுடிஸரன

வினாவிடைப் போட்டி 2001 ஆண்டு

முதலாம் இடம்



வே மயூரன்

இரண்டாம் இடம்



இ. இராஜிவன்

மூன்றாம் இடம்



இ. இரதீசன்

சித்திரப்போட்டி 2001ம் ஆண்டு

பாலர்பிரிவு

முதலாம் இடம்

வீ. கபிலன்

இரண்டாம் இடம்

க. கேர்த்திகா

இரண்டாம் இடம்

ச. திவாசிகா

இரண்டாம் இடம்

உ. நிதர்சிகா

சித்திரப் போட்டி 2001ம் ஆண்டு.

பாலர் பிரிவு

இரண்டாம்இடம்

வி. கிசாணி

மூன்றாம் இடம்

பி. அபிசயா

மூன்றாம் இடம்

த. தேவிகா

மூன்றாம் இடம்

இ. தனுஷன்

மூன்றாம் இடம்

ச. அச்சுதா

மூன்றாம் இடம்

அ. அபிநயா

மூன்றாம் இடம்

இ. கபிலன்

கீழ்ப் பிரிவு:-

முதலாம் இடம்



செ. நிலோசன்

முதலாம் இடம்

அ. ஜனனி

இரண்டாம் இடம்

அ. மிதுலா

இரண்டாம் இடம்

இ. தர்சிகா

சித்திரப் போட்டி 2001ம் ஆண்டு

மூன்றாம் இடம்

க. நிகஸ்தி

மூன்றாம் இடம்

நா. லாவண்ணியா

மத்திய பிரிவு:-

முதலாம் இடம்

சி. மாதங்கி

இரண்டாம் இடம்

அ. கயானி

மூன்றாம் இடம்

ச. லக்சி

மூன்றாம் இடம்

சி. மௌலிகா

வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையம் கனடா.

புள்ளிவிபரப் பின்இணைப்பு

கடந்த வருடம் வன்னிப்பிரதேசம் தொடர்பான சில புள்ளிவிபரத் தொகுப்புக்கள் மலர் வெளியீட்டுக் குழுவினரால் தொகுத்துத் தரப்பட்டது. அத் தொகுப்பினால் பயனடைந்த பலர் அதனது தேவைப்பாட்டினை வலியுறுத்தியதனால் இவ்வருடமும் நாம் அத் தொகுப்பின் தொடர்ச்சியாகச் சிறிய நீர்ப்பாசனம் தொடர்பான புள்ளிவிபரங்களை இங்கு தருகின்றோம். வன்னி மாவட்டத்தில் உள்ள அனைத்துச் சிறிய நீர்பாசனங்களதும் புள்ளிவிபரங்களை இங்கு சேர்த்துக் கொள்ள முடியாததனால் வவுனியா மாவட்டத்தில் உள்ள சில கிராம அலுவலர் பிரிவுகளில் காணப்படும் சிறிய நீர்ப்பாசனக் குளங்களது விபரங்கள் மாத்திரமே இங்கு தரப்படுகின்றது. அவற்றில் முக்கியமாகக் குளங்களது பெயர், நீர்க் கொள்ளளவு, அக் குளத்தின் கீழ் நீர்ப்பாய்ச்சப்படும் ஏக்கரளவு, விவசாயக் குடும்பங்களது எண்ணிக்கை போன்ற விபரங்கள் உள்ளடக்கப்படுகின்றன. இவற்றினது தொடர்ச்சியான புள்ளிவிபரத் தொகுப்பானது அடுத்துவரும் ஆண்டுகளில் பிரசுரிக்கப்படும் என்ற நம்பிக்கை உடையோம்.

புள்ளிவிபரத் தகவல் பிரிவு
வ. த. ச. க. அமையம்
கனடா.

இல.	குளங்களின் பெயர்.	கொள்ளவு	ஏக்கர்	விவ.குடும்ப.
	கிராம அலுவலர் பிரிவு. ஓமந்தை			
1.	அரசன் குளம்	24	28	13
2.	ஓமந்தைக் குளம்	250	80	26
3.	பாண்டியன் குளம்	169	56	12
4.	வேப்பங் குளம்	30	31	15
5.	பெரிய விளாத்திக் குளம்	375	125	42
6.	அரசமுறிப்புக் குளம்	192	70	30
7.	ஆத்தங்கரைப் புதுக்குளம்	192	26	16
8.	பாலநீராவிக் குளம்	60	22	12
9.	முதலியா குளம்	126	50	18
10.	வெள்ளையன் குளம்	85	17	14
11.	கல்லடிக் குளம்	76	32	12
12.	ஆறுமுகத்தான் புதுக்குளம்	75	50	16
13.	ஆத்திமோட்டைக் குளம்	72	20	13
14.	மரையடித்த குளம்	337	30	18
15.	பெரியபுளியங் குளம்	127	111	33
16.	செங்கரத்தை மோட்டை	95	45	16
17.	நறுவிலிக் குளம்	50	20	15
18.	அலியன் குறிசுட்ட குளம்	340	113	64
	மருதமடு.			
19.	காயாங் குளம்	76.4	45	12
20.	கரம்பைக் குளம்	90	31	17
21.	காக்கையன் புளியங் குளம்	70	28	12
22.	குசவ புளியங் குளம்	87	29	14
23.	மருதங் குளம்	100	52	18
24.	மருதோடைக் குளம்	105	41	26
25.	மதவுவைத்த குளம்	87	30	14
26.	மூன்று முறிப்பு	166	56	18
27.	நாவல் குளம்	160	74	20
28.	பாவட்டங் குளம்	92	43	22
29.	வேலர் சின்னக் குளம்	48	25	13
30.	நாம்பன் குளம்			
31.	செட்டியூர் தவசி குளம்	56	23	12
32.	பெரிய விழாத்திக் குளம்	112	60	25
33.	கதிரவேலர் பூவரசங் குளம்	96	53	23
34.	கோழியா குளம்	200	65	58
35.	கொந்தக்காரன் குளம்	128	74	60
36.	கொம்புவைத்த குளம்	524	197	90
37.	கொம்பறத்த மடு	146	40	12
38.	கருநொச்சிக் குளம்	72	25	13
39.	கிழவி குளம்	60	80	12
40.	மணக்கிண்டிக் குளம்	42	24	13
41.	மாதர்பணிக்க மகிழங் குளம்	180	52	22

தொடர்ச்சி... ..

42.	நெடுங் குளம்	600	64	25
43.	நெல்லிக் குளம்	88	23	15
44.	நெல்லிக் குளம்	72	106	27
45.	பக்கிரியூர்	42	24	12
46.	பூதர் குளம்	40		
47.	சின்னவிளாத்திக் குளம்	209	50	13
48.	சின்னக் கிழவி குளம்	75	25	13
49.	வண்ணான் குளம்	95	85	15
50.	வெள்ளையன் குளம்	85	17	14
51.	வேடன் குளம்	184	80	29
52.	தபசியூர்	99	22	13
53.	பத்தினியார் கட்டின குளம்		28	14
54.	துவரங் குளம்		33	12
55.	நெல்வேலிக் குளம்	185	25	15

மகிழங் குளம்

56.	பாக்குச் சொரிந்தான் குளம்	258	87	40
57.	புங்கன் குளம்	240	80	20
58.	இறம்பைக் குளம்	60	26	12
59.	சின்ன மாறா இலுப்பைக் குளம்	99	26	18
60.	சின்னப் புளியங் குளம்	100	31	18
61.	இராமர் புளியங் குளம்	91	20	13
62.	வேடர் மகிழங் குளம்	112	23	15
63.	விளக்கு வைத்த குளம்	45	52	18
64.	பெரிய மாறா இலுப்பைக் குளம்	809	130	31
65.	பனிச்சங் குளம்			
66.	பன்றிக் கெய்த குளம்		44	18
67.	பெரியமடுக்குளம்		40	22
68.	பெரியமடு		37	12
69.	பனிக்க நீராவி	120	51	15
70.	பணிக்கர் குளம்			
71.	மருதமடுக் குளம்	120	37	13
72.	சேனராசன் குளம்		74	13
73.	செல்வராசன் குளம்		150	25
74.	தச்சநாதன் குளம்		45	12
75.	துளவி குளம்	300	100	43

மல்லிகை

76.	பூவரசன் குளம்	80	26	12
77.	அலைகல்லுப் போட்ட குளம்	180	136	52
78.	மல்லிகைக் குளம்	815	192	80
79.	நொச்சிக் குழம்		68	29
80.	சின்னக் குழம்	20	28	17
81.	பரமநாதி குளம்	331	28	17
82.	இளமருதன் குளம்		40	16

பாலமோட்டை

83.	பாலமோட்டை	350	117	60
84.	கோவில் குஞ்சுக் குளம்		148	37
85.	குஞ்சுவிளான் குளம்	128	42	14
86.	நவ்விக் குளம்	222	70	14
87.	நொச்சிக் குளம்	265	36	13
88.	பள்ள பூவரசன் குளம்	110	37	18
89.	பெரிய கிழவி குளம்		60	25
90.	பொடுங்கன் குளம்	72	30	12
91.	புலியடித்த குளம்	97	25	17
92.	உரல் குளம்		100	12
93.	உக்கிளான் குளம்			
94.	வாரியுடையார் இலுப்பைக் குளம்	240	70	20
95.	வெருகல் குளம்	108	83	45
96.	பெரிய இலுப்பைக் குளம்	90	40	15
97.	குஞ்சுக் குளம்	ab		
98.	மூங்கில் குளம்	ab	29	15
99.	தரணி குளம்	ab		
100.	மறவன் குளம்	ab		
101.	வீரகல்லுக் குளம்	ab		

கொந்தக்காரன் குளம்

102.	மதவுவைத்த குளம்	60	25	15

சேமமடு

103.	சம்மளங் குளம்	ab		
104.	பரசங் குளம்	a b	20	13

குளவிசுட்டான்

105.	அம்பலவன் குளம்	36	23	12
106.	ஈட்டிமுறிந்தான்		23	15
107.	குஞ்சுக் குளம்	27		
108.	கந்தரோடை	40	25	12
109.	கற்குளம்		88	34
110.	குளவிசுட்டான் குளம்	252	75	26
111.	குறிசுட்டான் குளம்	60	20	14
112.	குறிஞ்சாக் குளம்	102	54	15
113.	பனைநாட்டின குளம்	64	22	10
114.	பரசன் குளம்	105	46	25
115.	தெகிழ் படர்ந்தான்	90	26	18
116.	உடையார் பட்டி அடைத்த குளம்	108	31	18
117.	உடும்பு பாஞ்சான்	120	32	18
118.	வேலன் குளம்	70	20	18

	மாமடு			
119.	ஈட்டிமுறிந்தான்	90	30	19
120.	படுகாட்டுக்குளம்	80	30	12
121.	மாமடுக் குளம்	170	66	32
122.	வினாசி குளம்	52	19	11
123.	சேனப் புலவு		60	22
124.	பொடுங்கன் குளம்	86	30	12
	மாறா இலுப்பை			
125.	கோட்டன் குளம்		98	70
126.	மாறா இலுப்பைக் குளம்	180	60	25
127.	மகிழ மோட்டை		17	13
	நெடுங்கேணி			
128.	நெடுங்கேணிக் குளம்		150	46
129.	சான் குளம்		18	08
	நெடுங்கேணி (தெற்கு)			
			20	18
130.	இறம்பைக் குளம்	80	21	13
131.	மருதன் குளம்	90	28	13
132.	வெடிகாரன் குளம்			
	ஒலுமடு			
			23	12
133.	ஓட்டைவெளிக் குளம்		27	16
134.	பெரிய படுகாட்டுக் குளம்	90	18	15
135.	வேலடிக்குளம்	80	28	16
136.	திவுகாட்டுக் குளம்	90	30	12
137.	கீரிசுட்ட குளம்	90		

இல.	குளங்களின் பெயர்.	கொள்ளவு.	ஏக்கர்.	விவ.குடும்.
	கிராம அலுவலர் பிரிவு.			
	ஊஞ்சால்கட்டி.			
138.	அரியமடு	365	190	60
139.	மருதன்குளம்	90	18	12
140.	மாவிளங்கன்குளம்	127	40	13
141.	நொச்சிக்குளம்	80	30	19
142.	சின்னக்கோரமோட்டை	85	24	12
143.	படுகாட்டுக்குளம்	80	20	14
144.	பெரியகோரமோட்டை	80	19	12
145.	ஊஞ்சால்கட்டி	390	150	33
	மருதோடை			
146.	மருதோடை	90	31	11
147.	கட்டுப்பூவரசன்குளம்	110	35	17
148.	காஞ்சூரமோட்டை	156	50	19
	பட்டிக்குடியிருப்பு			
149.	அம்பாள்குளம்	80	30	12
150.	இளகந்தக்குளம்	116	38	26
151.	இலுப்பைக்குளம்	265	106	35
152.	கற்குளம்	81	20	11
153.	பாவற்காய்குளம்	80	20	14
154.	வண்ணான்கேணி	120	42	12
155.	துவரன்குளம்	100	40	25
	வெடிவைத்தகல்லு			
156.	கோவில்புளியங்குளம்	80	22	11
157.	கூளாங்குளம்	108	49	17
158.	ஊத்துக்குளம்	120	40	12
159.	வெடிவைத்தகல்லுக்குளம்	105	31	15
	கற்குளம்			
160.	பட்டடைபிரிந்தகுளம்	144	30	12
	அனந்தர்புளியங்குளம்			
161.	அனந்தர்புளியங்குளம்	138	46	24
162.	அலட்டிகுளம்	85	25	19
163.	பெரியபூவரசங்குளம்	340	180	91

தொடர்ச்சி.....

	பரந்தன்			
164.	கரடியான்குளம்	270	44	28
165.	கோடாலிபறிச்சான்	83	29	12
166.	மதியாமடு	405	135	22
167.	மூன்றுமுறிப்பு	55	55	22
168.	சின்னப்பூவரசங்குளம்	216	72	29
169.	சன்னாசதிபரந்தன்	102	54	22
170.	சின்னப்பரந்தன்	70	67	18
171.	துவரநேரி	243	80	26
172.	ஆலங்குளம்	136	41	14
173.	கிடாத்தலைப்பறிச்சான்			
	சின்ன அடம்பன்			
174.	கரப்புக்குத்தி	176	192	40
175.	கச்சல்கொடி		42	16
176.	சடவன்குளம்	183	45	12
177.	சின்ன அடம்பன்	177	59	20
178.	பெரிய அடம்பன்	198	66	51
179.	வண்ணான்குளம்	96	37	20
180.	மரகுத்தி			
181.	குரவிச்சன்குளம்			
	நயினாமடு			
182.	நயினாமடு	200	134	33
183.	நொச்சிக்குளம்	144	48	28
184.	பாண்டியன்குளம்	180	60	12
185.	பெரியமடு	90	16	23
186.	வண்ணான்குளம்	96	37	20
	புளியங்குளம் (வடக்கு)			
187.	ஆனைபூட்டியகுளம்	90	32	13
188.	ஆராச்சிக்குளம்	186	60	15
189.	குண்டிடாமடு	300	90	26
190.	குருக்கள்குளம்	88	28	13
191.	குறிசுட்டகுளம்	159	53	21
192.	புதுக்குளம்			
193.	புளியங்குளம்			
	புளியங்குளம் (தெற்கு)			
194.	பளயவாடிக்குளம்	531	170	26
195.	விளாத்திகுளம்	120	40	18
196.	முறியாக்குளம்	66	22	19

தொடர்ச்சி.. .. ..

197.	பனிக்கன்குளம்	80	29	12
198.	இராமாபுளியங்குளம்	240	70	25
199.	சமளங்குளம்	120	54	16
200.	குறிசுட்டமடு	180	67	21
201.	புளியங்குளம்	180	56	22

கனராயன்குளம்

202.	படுகாட்டுக்குளம்	57	20	12
203.	அம்பாள்குளம்	78	26	13
204.	கட்டையன்குளம்	45	15	12
205.	பாலன்குளம்			
206.	புதுக்குளம்			

கனகராயன்குளம் (வடக்கு)

		72	24	18
207.	கொந்தர்குளம்	200	42	27
208.	கூளாங்குளம்	126	25	17
209.	குஞ்சுக்குளம்	66	30	12
210.	குஞ்சுமுறியாக்குளம்	180	60	12
211.	முதிரங்குளம்	20	20	12
212.	பாலன்குளம்			
213.	ஆலங்குளம்			
214.	வண்ணான்குளம்			

மன்னகுளம்

			63	24
215.	மன்னகுளம்	135	31	15
216.	மதவுவைத்தகுளம்	93	26	12
217.	கொல்லபுளியங்குளம்	80	40	24
218.	கிழவன்குளம்	120	29	17
219.	மருதங்குளம்	96	30	14
220.	மேற்குளம்	105	20	13
221.	புதுக்குளம்	75	185	48
222.	புதுவிளாங்குளம்	405		
223.	பெரியகுளம்			
224.	புற்குளம்			
225.	நல்லவிளான்			
226.	குஞ்சுக்குளம்			

புதுூர்

227.	நாகதாளிக்குளம்		156	
228.	புதுூர்க்குளம்	339		20
229.	பாலப்பாணி			

வன்னி விழா 2001ம் ஆண்டுக்காக நாடாத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி முதற் பரிசைப் பெற்றுக் கொண்டவர்கட்கான தங்கப்பதக்கங்கள் பின்வருவோர் ஞாபகார்த்தமாக வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையத்திற்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

1. முள்ளியவளையைச் சேர்ந்த அமரர் உயர்திரு. செ. குமாரசிங்கம் (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் ஞாபகார்த்தமாக (மண்ணில் 01-10-1929 விண்ணில் 10-04-1980) திருமதி. மங்கையற்கரசி குமாரசிங்கம் குடும்பத்தினரால் (எற்றோபிக்கோ) வழங்கிக் கௌரவிக்கப்பெற்றது

2. மல்லாவி யோகபுரத்தைச் சேர்ந்த அமரர் உயர் திரு. நாகப்பா கணபதிப்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்தமாக லோகன் கணபதி Dr. இராஜேஸ் லோகன் குடும்பத்தினரால் (கனடா) வழங்கிக் கௌரவிக்கப்பெற்றது.

3) குமழமுனையைச் சேர்ந்த திரு கந்தசாமி அவர்களின் செல்வப் புதல்வன் க. கோபாலசிங்கம் அவர்களின் ஞாபகார்த்தமாக திரு. திருமதி. பத்மநாதன் குடும்பத்தினரால் (கனடா) வழங்கிக் கௌரவிக்கப்பெற்றது.

4) மாமூலையைச் சேர்ந்த அமரர் உயர்திரு. ச. பாலசிங்கம் (கிராமசேவை அலுவலர்) அவர்களின் ஞாபகார்த்தமாக (மண்ணில் 11-05-1934 விண்ணில் 30-12-1997) துணைவியார் திருமதி. மகேஸ்வரி பாலசிங்கம் அவர்களும், பேத்தியார் செல்வி சி. கீர்த்திகா அவர்களும் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றது.

5) நாவற்குழியைச் சேர்ந்த அமரர் உயர்திரு. வை. சிறீஸ்கந்தராசா (ஆசிரியர்) அவர்களின் ஞாபகார்த்தமாக (மண்ணில் 26-10-1962 விண்ணில் 26-10-1999) துணைவியார் திருமதி. அம்பிகா சிறீஸ்கந்தராசா அவர்களின் குடும்பத்தினரால் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றது.

6) மல்லாவியைச் சேர்ந்த அமரர் திருமதி. பா. இராஜலக்சுமி அவர்களின் ஞாபகார்த்தமாக (மண்ணில் 07-03-1931 விண்ணில் 19-01-1996) கணவர் திரு. பாலசிங்கம் குடும்பத்தினரால் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றது.

7) வவுனியாவைச் சேர்ந்த அமரர் திரு. ம. அந்தோனிப்பிள்ளை (அப்புத்துரை) அவர்களின் ஞாபகார்த்தமாக (மண்ணில் 03-10-1923 விண்ணில் 22-09-2000) கனடாவில் உள்ள அவரது பிள்ளைகளினால் (அம்பிகா நகைமாடம்) வழங்கிக் கௌரவிக்கப் பெற்றது.

கவிதைப்போட்டியில் வெற்றி பெற்றோர் விபரங்கள்:-

முதலாம் இடம்:-

1) திருமதி. வனிதா இராஜேந்திரன் அவர்கள்.

இரண்டாம் இடம்:-

2) திரு. வே. கணேசலிங்கம் அவர்கள்.

மூன்றாம் இடம்:-

3) திரு. க. இராசநாதன் அவர்கள்.

புலமைப் பரிசில் திட்டம்

(வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்கள்)

வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையம்—கனடா.

அன்புடன் நிதிவழங்க முன்வரும் பெருந்தகையாளர்கட்கு!

எமது பகுதியில் அன்றாட சீவியத்திற்கு எத்தனையோ குடும்பங்கள் கஸ்ரப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதனை நாம் நன்கறிவோம். அதேவேளையில் எத்தனையோ மாணவர்கள் வீட்டிலுள்ள வறுமைநிலை காரணமாக ஆரம்பக் கல்வியையோ அல்லது பல்கலைக்கழகக் கல்வியையோ தொடர முடியாதவர்களாகவும் உள்ளனர். ஆனால் தமிழ்ப் பெற்றோர்களது சதா சிந்தனை தாம் எத்தகைய கஸ்ரங்களை அனுபவித்தாலும் பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டும் என்பதேயாகும். இதனைத் தாங்கள் நன்கறிவீர்கள். சங்கத்தினது தற்போதைய நிதி நிலைமையினையும், நிதி வழங்க முன்வரும் பெருந்தகையாளர்களது பொருளாதார வசதியினையும் கவனத்திற் கொண்டு தற்போது கீழ்வரும் சிறிய திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வருவதன் மூலம் வறிய குடும்பமொன்றின் கல்விச் செலவைக் குறைத்து அவர்களது வருமானத்தை உயர்த்தமுடியும் என்பதோடு, கற்ரோர் எண்ணிக்கையையும் உயர்த்தமுடியுமென நம்புகின்றோம்.

எனவே வெளிநாடுகளில் வாழும் தமிழர்களாகிய நாம் ஓர் வறிய குடும்பம் ஒன்றிற்கு உதவுவதன் மூலம் அவர்களையும் வாழ்வின் முன்னேற்றத்திற்குக் கொண்டுவர முயல்வோமாக!!

1) மிக வருவாய் குறைறைந்த குடும்பத்தைச் சார்ந்த பல்கலைக்கழக புகுமுக மாணவர்கட்கான புலமைப் பரிசில் திட்டம்.

2) மிக வருவாய் குறைந்த குடும்பத்தைச் சார்ந்த பல்கலைக்கழக புகுமுக மாணவர்கட்கான கற்கை நெறிகள் அடிப்படையிலான புலமைப் பரிசில் திட்டம்.

3) மிக வருவாய் குறைந்த குடும்பத்தைச் சார்ந்த பாடசாலை மாணவர்கட்கான புலமைப் பரிசில் திட்டம்.

4) பாடசாலை மாணவர்கட்கான பாடநெறிகள் அல்லது கற்கைத் துறைகள் அடிப்படையிலான புலமைப் பரிசில் திட்டம்.

5) மிக வருவாய் குறைந்த அல்லது பராமரிப்பற்ற 18 வயதுக்குக் குறைவான பிள்ளைகளைப் பராமரிக்குந் திட்டம்.

மனமுவந்து புலமைப்பரிசில்களை வழங்க முன்வரும் பெருந்தகையாளர்களது கவனத்திற்கு:-

1) நீங்கள் விரும்பிய மாவட்டத்தினைத் தெரிவுசெய்யலாம்.
2) நீங்கள் விரும்பிய கிராமத்தினைத் தெரிவுசெய்யலாம்.
3) நீங்கள் விரும்பிய பாடசாலையைத் தெரிவுசெய்யலாம்.
4) நீங்கள் விரும்பிய பாடநெறியைத் தெரிவுசெய்யலாம்.
5) நீங்கள் விரும்பிய துறையைத் தெரிவுசெய்யலாம்.
6) நீங்கள் விரும்பிய பல்கலைக்கழகத்தினைத் தெரிவுசெய்யலாம்.
7) நீங்கள் விரும்பிய கற்கைநெறியைத் தெரிவுசெய்யலாம்.
8) ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்காவது புலமைப் பரிசிலைக் கொடுப்பதற்கு முன்வருதல் வேண்டும்.
9) ஆகக் குறைந்தது மாதாந்தம் இலங்கை ரூபாயில் 1000.00 வரையில் கொடுப்பதற்கு முன்வருல் வேண்டும்.
10) புலமைப் பரிசிலினது பெயரை நிதியீடு செய்பவரே தனது சொந்த விருப்பத்தில் தீர்மானிக்கலாம்.
11) தாங்கள் விரும்புவீர்களாயின் ஒரு வருடத்திற்குரிய முழுப் புலமைப் பரிசில் பணத்தினையும் அல்லது புலமைப் பரிசில் காலத்திற்குரிய முழுப் பணத்தினையும் அல்லது மாதாந்தமாகப் பணத்தினைச் சங்கப் பொருளாளரிடம் சமர்ப்பித்துப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக்கொள்ளளாம்.
12) தங்களது நிதியிலிருந்து புலமைப் பரிசிலினைப் பெறுபவரது விபரங்கள் அனைத்தும் தங்கட்குச் சமர்பிக்கப்படும்.
13) தங்களது புலமைப் பரிசில் நிதி தொடர்பான கணக்குகள் அனைத்தும் தங்களது பார்வைக்காக ஒப்படைக்கப்படும்.
14) தங்கட்கு வசதியீனங்கள் ஏற்படும்போது ஒரு வருடம் முடிந்தபின்னர் ஒரு மாத முன்னறிவித்தல் கொடுத்து புலமைப் பரிசில் கொடுப்பனவை இடைநிறுத்தலாம்.

மேற்படி புலமைப் பரிசில் திட்டத்தில் சேர்ந்து கனடா - வன்னித் தமிழ்ச் சமூக கலாச்சார அமையத்தின் ஊடாக நிதியுதவி செய்ய விரும்பும் பெருந்தகையாளர்களும் அமையத்தினருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

நன்றி சொல்வதானால்......

நன்மையே செய்யவெண்ணி எங்களோடு கைகோர்த்து நின்று தங்களது பொருளையும் பொன்னான நேரத்தையும் வன்னிச் சங்கத்துக்கே தந்து செய்த சேவைகள் அத்தனைக்கும் கலாச்சார அமையத்தினர் தங்களது மனந்திறந்த நன்றியறிதல்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டவர்களாவர்.

அந்த வகையில்:

எமது அழைப்பிதள்களை அன்போடு ஏற்றுத் தங்களது சிரமத்தையும் பாராது விழாவுக்குச் சமூகந் தந்து சிறப்பித்ததில் நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைவதோடு அவர்கட்கு நன்றி கூறக் கடைமைப்பட்டுள்ளோம்.

ஐந்தாவது வருடத்திலும் வன்னிவிழாவைக் கண்டுகளிப்பதன்மூலம் எமது ஈழமக்களது வளர்ச்சிக்கும், அமையத்தினது வளர்ச்சிக்கும் உறுதுணையாகவிருந்து பேராதரவு வழங்கிய தமிழ் மக்களாகிய உங்களுக்கு முதற்கண் நாங்கள் நன்றி கூறக் கடைமைப்பட்டுள்ளோம்.

எமது அமையத்தின் ஐந்தாவது ஆண்டு மலரை வெளியிடுவதற்கு விளம்பரமூலமாக நிதியுதவி வழங்கிய அனைத்து வர்தகப் பெருமக்கட்கும், மலர் வெளியீட்டினைச் செய்வதற்குச் சகல வழிகளிலும் உதவிபுரிந்த விவேகா அச்சு நிறுவனத்தாருக்கும், அட்டைப்படச் சித்திரக் கலைஞர் திரு.யா.மரியநாயகம் அவர்களுக்கும் அட்டை வடிவமைப்பாளர் டிஜி வரைகலை நிலைய அதிபர் திரு. கருணா அவர்கட்கும், மலர் வெளியீட்டுக்கான ஆக்கங்களைத் தந்துதவிய அனைத்துப் பேராளர்கட்கும் எங்களது மனமார்ந்த நன்றியறிதல்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

2001ம் ஆண்டு வன்னி விழாவினைச் சிறப்பு விழாவாக்கிய அனைத்து இயல், இசை, நாடகக் கலைஞர்கட்கும், மேடையமைப்பாளர்கட்கும், ஒலி, ஒளி அமைப்பாளர்கட்கும், வீடியோ படப்பிடிப்பாளர்கட்கும், புகைப்படப்பிடிப்பாளர் Raju அவர்கட்கும் எங்கள் இனிய நன்றிகள் உரித்தாகட்டும்.

எமது சகல போட்டி நிகழ்ச்சிகட்கும் மத்தியஸ்த்தம் வகித்த அனைத்துப் பேராளர்கட்கும், போட்டிகளில் கலந்து சிறப்பித்த போட்டியாளர்கட்கும், போட்டி நிகழ்ச்சிகட்குத் தங்கப்பதக்கங்களைப் பரிசில்களாகத் தந்துதவிய பெருந்தகையர்கட்கும் அமையத்தின் நன்றிகள் உரித்தாகட்டும்.

பத்திரிகைகள் மூலமாக அமையம் தொடர்பான விளம்பரங்களை வெளியிட்ட அனைத்துப் பத்திரிகை ஆசிரியர்கட்கும், வானொலி மூலமாக விளம்பரம் செய்த வானொலி நிறுவன அதிபர்களுக்கும், நிறுவன ஊழியர்களுக்கும், வியாபார ஸ்தலங்களில் எமது விளம்பர அறிவித்தல்களை வைத்து விளம்பரப்படுத்திய உரிமையாளர்கட்கும் என்றென்றும் எங்கள் நன்றிகள் உரித்தாகட்டும்.

நிர்வாகசபைக் கூட்டங்களை நடாத்துவதற்கும், ஏனைய தேவைகட்குமாகச் சேவையடிப்படையில் இடவசதி செய்து தந்த V V TUTORING CENTRE நிறுவனத்தாருக்கும். சகல நிகழ்ச்சிகளையும் தயாரிப்பதற்கு இடவசதிகள் செய்துதந்த உரிமையாளர்கட்கும்,

அமையத்தின் நிர்வாக உறுப்பினர்களுடன் இணைந்து விழாவுக்கான சகல ஒழுங்குகளைச் செய்வதற்கும், நிதியுதவிப்படக்காட்சி, வன்னிவிழா 2001 ஆகியவற்றுக்கான நுளைவுச்சீட்டுக்களை விற்பனை செய்யவும், கோடைகால ஒன்றுகூடலுக்கும் ஒத்துழைப்புத் தந்த முன்னாள் நிர்வாகசபை உறுப்பினர்கட்கும், ஏனைய தொண்டர்கட்கும்,

வன்னிவிழா 2001ற்கான அனைத்து ஆக்கபூர்வமான உதவிகளையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எமக்களித்து விழாவினைச் சிறப்புற வைத்த அனைத்து நெஞ்சங்கட்கும், எமது அமையத்தின் சார்பாக நன்றியறிதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புலமைப்பரிசில்திட்டத்தின் மூலமாக இங்கிருந்து அனுப்பப்படுகின்ற நிதிகளை ஈழமண்ணில் இருந்து கொண்டே உரியமுறையில் அம்மாணவர்கட்கு வழங்குவதற்கு ஆவன செய்து வருகின்ற முல்லைத்தீவு மல்லாவியைச் சேர்ந்த திரு. சி.சுதேசபவன் பொ.சு.உ, திரு.நா.சண்முகம் ஆகியோர்க்கும், மன்னாரைச் சேர்ந்த திரு.ஏ.சூசையப்பு அவர்கட்கும், வவுனியாவைச் சேர்ந்த திரு.ம.அமிர்தலிங்கம், திரு.மா.சிவசேகரம் அவர்கட்கும் முல்லைத்தீவைச் சேர்ந்த திரு ஏ. கே. மகாலிங்கம், திரு. எம். விவேகாந்தன், திரு. எஸ். கிருஸ்ணமூர்த்தி ஆகியோர்க்கும் அமையத்தின் சாப்பாக நன்றியறிதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இறுதி நேரத்திலும் மனம் சலியாது நாங்கள் கேட்டுக்கொண்டதற்கமைய மிகவும் குறுகிய காலத்தில் தட்டச்சு வேலைகளைச் செய்வதற்கு உதவிய திரு த. சிவபாலு, க. தவசீலன், வை. சிவசுந்தரலிங்கம் செல்வன் ச. சஞ்சீபன் செல்வி சி. ஹம்சத்வனி அவர்களுக்கும் அமையத்தின் நன்றிகள் உரித்தாகட்டும்.

இவர்கட்கு மாத்திரமின்றி இங்கு நாங்கள் பெயர் குறிப்பிடமறந்த அனைவருக்கும் எங்கள் அமையத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றியுடன்
நிர்வாகசபை உறுப்பினர்கள் (2001/2002)

39964

SAME DAY SERVICE

S.V.G

துரித பணமாற்று சேவை

வவுனியா, திருகோணமலை, மன்னார் மாவட்டங்களுக்கு காலதாமதமின்றி உடனடியாகப் பணமாற்றுச் சேவை. யாழ்ப்பாணம், கொழும்பு, சென்னை, திருச்சி, லண்டன், சுவிஸ், ஜேர்மனி, பரிஸ் ஆகிய இடங்களுக்கு உடனடியான துரித பணமாற்றுச் சேவை வழங்கப்படுகிறது!!

582 PARLIAMENT STREET, (Wellesley & Parleament), Toronto, Ontario

(416) 975-0723

Fax: (416) 975-9426

Le Corbusier 1887-1965

தவறாத நேரம்

தரமான பாகம்

தரமோ நிரந்தரம்



ராஜாராம்

உணவுச்சேவை

RajahRam CATERERS

589 Middlefield Road #20, Scarborough, On M1V 4Y6

Tel: (416) 299-5200

Ambika Jewellers



தங்க நகை உலகில் ஓர் அதிசயம்

MISSISSAUGA
25 Agnes St. Unit1
Mississauga, ON
(905) 270-6921

SCARBOROUGH
3852 Finch Ave. East
Scarborough, ON
M1T 3T9
(416) 335-1553

SCARBOROUGH
2388 Eglinton Ave. East
(Kennedy & Eglinton)
Scarborough, ON
(416) 751-1364